ஸ்ரீமத்

த்ருதீய ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி

அருளிச்செய்த

மூவ்வாயிரப்படி

குருபரம்பராப்ரபாவம்

புதியதிருத்தமானபதிப்பு.

பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்களில்

ஒருவரான

கோமாண்டூர். அநந்தாசார்யரால்

திருவல்லிக்கேணி

ஸ்ரீவாணீபூஷணம் அச்சுக்கூடத்தில்

பதிபிக்கப்பட்டது.

ப்ரமாதீசஹு சித்திரைமீ. விலை ரூ. 1—8—0.

ரீஜிஸ்டெர்ட் காபிரைட்.

1913.

பதிப்புரை.

ஸத்ஸம்ப்ரதாயஸம்பந்ந ஸதாரியர்காள்!

ஸ்ரிய:பதியான நாராயணன் லோகத்தை உஜ்ஜீவிப்பிக்கைக்காகப் பலமார்க்கங்களைக் காட்டியும், அவைகளிலும் ப்ரபத்திமார்க்கம் சிறந்தது என்பதைக்காட்டியும் அமையாமல், அந்தப்ரபத்தி மார்க்கம் சிறந்ததெனத் தெளிவிக்கும் ஆழ்வார் ஆசார்யர்களை அவதரிப்பித்து, உபகாரம் செய்தருளினன். அந்த உபகாரத்தை நமது நிகமாந்த மஹா தேஸிகாதிகள் ப்ரபந்தஸாரம் முதலான பலக்ரந்தங்களால் அறியும்படி பரமோபகாரத்தைச் செய்திருக்கும் பெருமையை ஸ்ரீமத் த்ருதீயப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர், மூவ்வாயிரப்படி குருபரம்பரை என்னும், க்ரந்தத்தால் மணிப்ரவாள நடையில் அருளிச்செய்தார். இந்தக் குருபரம்பரையானது கிடைப்பது அருமையாய்ச் சில தேஸிகதிவ்யஸூக்திகள் போலே லுப்தமாகாதிருக்கவேணும் என்று ஸத்ஸம்ப்ரதாயக்ரந்தோபந்யாஸகரான ஸ்ரீமான் திருவஹீந்திரபுரம் வித்வான். நரஸிம்ஹாசாரியர் முதலான ஸ்வாமிகளால் நியமிக்கப்பட்ட என்னால் எனது புத்திஶக்திக்கு அநுகுணமாகப் பல ஸ்ரீகோஶங்களைக் கொண்டு பரிஶீலித்துப் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது.

இப்பதிப்பில் ஶ்லோகங்கள் தமிழிலும் (புட்நோட்டுக்களாக்க) கீழே க்ரந்தத்திலும், ஸம்ஸ்க்ருதபதங்களில் அழுத்தி உச்சரிக்க வேண்டிய எழுத்துக்கள் தடித்த எழுத்திலும் அச்சிடப்பட்டு இருக்கும்.

இப்பதிப்பில்நேர்ந்த தவறுகளையாயினும்சீர் திருத்தக்குறைவுகளையாயினும் எவரேனும் எனக்குத் தெரிவிப்பாராயின் அவரைப் பேருதவி செய்தவராகப் பாராட்டச்சித்தனயிருக்கிறேன்.

இப்பதிப்பிற்கு தமிழ்ப்பண்டிதர். ஸ்ரீமான். சே. கிருஷ்ணமாசாரியரும், தமிழ்ப்பண்டிதர், ஸ்ரீமான். வை. மு. கோபாலக்ருஷ்ணமாசாரியரும் செய்த உதவி என்றும் மறக்கற்பாலதன்று.

ப்ரமாதீச ௵
சித்திரை ௴

கே-அ.

விஷயஸூசிகை.

விஷயம்.] குருபரம்பராப்ரபாவம் [பக்கம்.

தனியன்கள் ௧
அவதாரிகை ௨
ப்ரவேஶம் ௩

ஆழ்வார்கள் வைபவம்:—

௧. பொய்கையாழ்வார் வைபவம் ௭
௨. பூதத்தாழ்வார் வைபவம் ... ... ,,
௩. பேயாழ்வார் வைபவம் ... ... ,,
முதலாழ்வார்கள் வைபவங்கள் ௮
௪. திருமழிசையாழ்வார் வைபவம் ௯
௫. நம்மாழ்வார்வைபவம் ௧௨
௬. மதுரகவியாழ்வார் வைபவம் ௧௪
௭. குலசேகராழ்வார் வைபவம் ௧௬
௮. பெரியாழ்வார் வைபவம் ௧௮
௯. ஆண்டாள் வைபவம் ௧௯
௧௦. தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம் ... ௨௨
௧௧. திருப்பாணாழ்வார் வைபவம் ௨௪
௧௨. திருமங்கையாழ்வார் வைபவம் ௨௬

ஆசார்யர்கள் வைபவம்:—

ஆசார்யர்கள் வைபவம் ௨௯
௧. ஸ்ரீமந்நாதமுனிகள் வைபவம் ௩௨
௨. உய்யக்கொண்டார் வைபவம் ௩௭
௩. மணக்கால்நம்பி வைபவம் ௪௧
௪. ஆளவந்தார் வைபவம் ... ... ,,
௫. எம்பெருமானார் வைபவம் ௫௧
௬. திருக்குருகைப்பிரான் பிள்ளான் வைபவம் ... ௬௯
௭. எங்களாழ்வான் நடாதூரம்மாள் வைபவங்கள் ... ௯௯
௮. கிடாம்பி அப்பிள்ளார் வைபவம் ... ௧௦௧
௯. ஸ்ரீமத்வேதாந்ததேஶிகன் வைபம் ... ௧௦௫
௧௦. தேஶிகன் நயினாசார்யர் வைபவங்கள் ... ௧௬௩
௧௧. ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் வைபவம் ... ௧௭௭
௧௨. கடிகாஶதம் அம்மாள் ஆதிவண்ஶடகோபர்ஸ்வாமி" ௧௮௭
௧௩. ஸ்ரீமத்ஆதிவண்ஶடகோபஸ்வாமி வைபவம் ,,

ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாகுரவே நம:

ஸ்ரீமத்த்ருதீயப்ராஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி

அருளிச்செய்த

குருபரம்பராப்ரபாவம்.

தனியன்கள்.

[illegible]
[illegible]

ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்யபூஷணம் |
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம் ||

[illegible]
[illegible]

ஸ்ரீமாந்பர்யாயராமாநுஜயதிந்ருபதிர்ப்ராஹ்மதந்த்ரஸ்வதந்த்ரோ
வேதாந்தாசார்யதிவ்யத்பதநளிநரஸாஸ்வாதலஸச்சஞ்சரீக: |
ஆசார்யாராதித ஸ்ரீஹயவதநஸமாராதநோ ஹஸ்திகாத்ரௌ
யோகீஸாநஸ்ஸஜீயாதநவதிமஹிமா நித்யமத்யத்புதஸ்ரீ: ||

அவதாரிகை.

(க) ஆசார்யாநஸ்மதீயாந்ஶ்ருதிமகுடகுருப்ஸம்யமீந்த்ரப்ரதாரிப், ஸர்வாந்திவ்யாம்ஶ்சஸூரீந் ப்ரதமமபிகுருப் ஸ்ரீவிஶிஷ்டம்ப்ரணம்ய। பூர்வாசார்யைரநேகைர்லிகிதமபிபுராவிஸ்தரம்தேஶிகாநாம், பங்க்தேர்மாஹாத்ம்யமத்யப்ரதிபதநயதஸ்ஸங்க்ரஹால்லிக்யதேத்ர.

ஶ்ரிய:பதியினுடைய பரமகாருணிகதையாலே ஆஶ்ரிதோஜ்ஜீவநார்த்தமாக ப்ரவர்த்திப்பிக்கப்பட்ட ஶாஸ்த்ரப்ரதீபத்தைக்கொண்டு இவ்விருள்தருமாஞாலத்திலுள்ள விவேகிகள் தத்த்வஹிதங்களை ஸதாசார்யமுகமாகத்தெளிந்து, உபாயாநுஷ்டாநம் பண்ணி, அதனால் ஶ்ரிய:பதி திருவுள்ளமுகந்துதருகிற நித்யகைங்கர்யமஹாபுருஷார்த்தத்தை அடையவேண்டுகையாலும், அவ்வர்த்தங்களைத் தெளியஉபதேஶிக்கிறஆசார்யன் ஸத்ஸம்ப்ரதாயஸித்தஸதாசாரநிஷ்டனாயிருக்கவேண்டுகையாலும், அந்தஸம்ப்ரதாயத்துக்கும் ஶாஸ்த்ரமூலத்வஸம்ப்ரதிபத்தி உண்டாயிருக்கவேண்டுகையாலும் முற்பட குருபரம்பராப்ரபாவத்தை அவஶ்யம் அறியவேணும். அதுதன்னிலும், தனக்கு வேண்டினபடி உத்ப்ரேக்ஷாதிகளைப்பண்ணுகிற காவ்யம்போலு மன்றிக்கே, அத்யந்தபக்தியாலேயாதல் ஒரு விஶேஷம் சொல்லவேணுமென்கைக்காகவாதல் ஶாஸ்த்ரஸம்மதியைத் தவிர்ந்ததாகச் சில ஆசார்யவ்ருத்தாந்தங்களைச் சொல்லுகிற க்ரந்தங்கள்போலு மன்றிக்கே, யதார்த்ததர்ஶிகளாய் யதாத்ருஷ்டார்த்தவாதிகளாய் யதாஶாஸ்த்ராநுஷ்டாதாக்களுமான தேஶிகர்களுடைய அநுஷ்டாநத்தை யதாத்ருஷ்டார்த்தவாதிகளான தேஶிகர்களுடைய உபதேஶபரம்பரையாலே அறிந்து, யதாவத்தாக விஸ்த்ருதமாய் நம்மாசார்யரான த்விதீயப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர

(க) 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑌸𑍍𑌮𑌦𑍀𑌯𑌾𑌨𑍍𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌮𑌕𑍁𑌟𑌗𑍁𑌰𑍂𑌨𑍍𑌸𑌂𑌯𑌮𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌾𑌨𑍍, 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑍂𑌰𑍀𑌨𑍍 𑌪𑍍𑌰𑌥𑌮𑌮𑌪𑌿 𑌗𑍁𑌰𑍂𑌨𑍍 𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 । 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍈𑌰𑌨𑍇𑌕𑍈𑌰𑍍𑌲𑌿𑌖𑌿𑌤𑌮𑌪𑌿 𑌪𑍁𑌰𑌾 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌂 𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌨𑌾𑌂, 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑍇𑌰𑍍𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑌨𑌯𑌤𑌸𑍍𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌾𑌲𑍍𑌲𑌿𑌖𑍍𑌯𑌤𑍇𑌽𑌤𑍍𑌰 ॥

சியர்செய்தருளின பன்னீராயிரப்படிகுருபரம்பராப்ரபாவம் (க)"உப தேஶாத்தரிம்புத்வா" என்கிற அதிகாரிகளான மிதஜ்ஞஸாதுக்களு க்கு துர்க்ரஹமாயிருக்கைபாலே, இப்போது அவர்களாலே நியுக்த னுன அடியேனாலே ஸங்க்ரஹிக்கப்படுகிற இக்குருபரம்பராப்ரபாவ த்தைப் பெரியோர்கள் அங்கீகரிக்கக்கடவர்கள்.

ப்ரவேஶம்.

ஸ்ரிய:பதியாய், அவாப்தஸமஸ்தகாமனாய், அநந்த கல்யாண குண பரிபூர்ணனாய், ஆஶ்ரிதபக்ஷபாதியுமான, நிஸ்ஸமாப்பதிகனாய், ஸர்வஸுஹ்ருத்தாய் ஆஶ்ரிதபலப்ரதனாயிருக்கிற புருஷோத்தம ஸ்ரீமந்நாராயணன் அநாதிகர்மவஶ்யர்களான ஜீவாத்மாக்களைத் திருத்தநினைத்தருளி யார்க்கும் எட்டவொண்ணாத இடமான பரம பதத்தைவிட்டு வ்யூஹமான க்ஷீராப்தியில் ஜாகரூகனாய்த் திருப் பள்ளிகொண்டிருக்க, அவன் காட்டின உபாயத்தைப் பலரும் காணு மலிருந்தும் சிலர் கண்டும் உபாயாநுஷ்டாநம் பண்ணாமலிருக்க, உபாயாநுஷ்டாநம் பண்ணினவர்களுக்கு பலத்தைக் கொடுத்தும் அவ்விடம் துஷ்ப்ரவேஶமென்று நினைத்து ஸர்வஸுலபங்களான விபவங்களைச் செய்தருள, அந்த விபவங்களிலும் சிலர் உள்ளபடி அறிந்து உபதேஶித்த உபாயத்தையும் கேட்டு அநுஷ்டிக்கவும் சிலர் ஆஸுரஸ்வபாவத்தாலே உள்ளபடி யறியாமலும் விஶ்வரூபமும் இந்த்ரஜாலமென்று இகழ்ந்திருக்கவும், அங்ஙனமன்றிக்கே பின் புள்ள ஸத்வோத்தரரும் "அன்றென்னைப் புறம்போகப் புணர்த்த தென்செய்வான்" என்று புலப்பிநிற்க, அதுவும் துஷ்கரமென்று நினைத்து அந்தர்யாமியாய்ச் சில ஜ்ஞாநவிகாஸங்களைச் செய்ய, அப் போது சிலர் யோகத்தாலே ஆராதித்தும் சிலர் ஸமிதாதிகளை ஹரி க்கக்கொடுத்த லவித்ராதிகளைக்கொண்டு யாம்பச்சேதநம் பண்ணு மாபோலே அந்த ஜ்ஞாநவிகாஸத்தைக் கொண்டு தேஹாத்மவாதி களாயும் தேவதாந்தரவாதிகளாயும் நிற்க, அதுவும் துஶ்ஶகமென்று நினைத்து (உ) "த்ருஷ்ட ஏவ ஹி நஶ்ஶோகமபநேஷ்யதி ராகவ:" என்றும், "கண்டவர் தம் மனம்வழங்கும கண்ணபுரத்தம்மான்"

(க) "உபதேஶாத்தரிம் புத்வா." (உ) "த்ருஷ்ட ஏவ ஹி நஶ்ஶோகம பநேஷ்யதி ராகவ:"

என்றும் சொல்லுகிறபடியே த்ருஷ்டமாத்ரத்தாலே ஸத்வப்ரதனுனை எம்பெருமான்(க) "ஸுபகஸ் சித்ரகூடோ ஸௌ கிரிராஜோபமோ கிரி:| யஸ்மிந் வஸதி காகுத்ஸ்த;" என்கிறபடியே கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலான திவ்யதேசங்களில் அர்ச்சாரூபமாக எழுந்தருளியிருக்க, அந்தத்திவ்யதேசங்களும் (உ) "யாவதா சித்ர கூடஸ்ய நரஶ் ஶ்ருங்காண்யவேக்ஷதே| கல்யாணாநி ஸமாதத்தே நபாபேகுருதேமந:" என்கிறபடியே ஸத்வப்ரதங்களாயிருக்க, அப்போதும் சில ஸத்வோத்தரர் வந்து ஆஶ்ரயித்தும் அந்த ஸத்வோத்தரரை முன்னிட்டுச்சிலர் உஜ்ஜீவித்தும் பின்பு காலவைஷம்யத்தாலே அஜ்ஞாநாவிவேகதந்த்ராப்ரமாதிகளாலே கலுஷமதிகளாய்ச் சிலர் அந்தத் திவ்யதேசங்களிலும் சென்று உஜ்ஜீவியாமலிருக்க, அதுவும் ஸுகரமன்றென்று நினைத்து ஜநபதக்ராமங்கள் தோறும் அதிஷ்டாநம் பண்ணியிருக்க, அவ்வளவிலும் காலவைஷம்யத்தாலே சென்று அடையாமலிருக்க, ஸாளக்ராமாதி ரூபியாய் க்ருஹங்கள்தோறும் அதிஷ்டாநம் பண்ணியிருக்க, அப்போதும் சிலர் உபேக்ஷித்து நிற்க, பின்பும்,(௩) "ஸம்பவாமியுகே யுகே" என்றும்,(ச)"யதா யதாஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி" என்கிற ஶ்லோகத்திலும்(ரு) "பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி" என்றும், "உயிரளிப்பானெந்நின்ற யோனியுமாய்ப்பிறந்தா யிமையோர்தலைவா" என்றும் சொல்லுகிற விபவங்கள்போலுமன்றிக்கே "பின்னுணர்வணங்குஞ்சோதி திருமூழிக்களத்தானாய்" என்கிறபடியேஸர்வஸுலபனாயும் அர்ச்சகபராதீநனாயும், யாவத்காலபாவியாயும் இருந்துள்ள அர்ச்சாவதாரத்தையும் இந்த ஜீவாத்மாக்கள் உபேக்ஷித்தால் இனி என் செய்யக்கடவோம்?' என்று ஆராய்ந்து (சு) "மாநுஷே சிந்தயாமாஸ ஜந்மபூமிமதாத்மந:" என்கிற தன் அவதாரத்தைக்

(க) "ஸுபகஸ் சித்ரகூடோஸௌ கிரிராஜோபமோ கிரி:| யஸ்மிந் வஸதி காகுத்ஸ்த:." (உ) "யாவதா சித்ரகூடஸ்ய நரஶ் ஶ்ருங்காண்யவேக்ஷதே| கல்யாணாநி ஸமாதத்தே ந பாபே குருதே மந:." (௩) "ஸம்பவாமி யுகே யுகே." (ச) "யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி." (ரு) "பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி." (சு) "மாநுஷே சிந்தயாமாஸ ஜந்மபூமிமதாத்மந:."

காட்டிலும் (க) "கௌந்தேய ப்ரதிஜாநீஹி நமேபக்த:ப்ரணஶ்யதி" என்கிறபடியே ப்ரயோஜநமான உத்கர்ஷத்தை யுடைய பக்தர்களை யும் தேவி பூஷணாயுதங்களையும் அவதரிப்பித்து அவர்களைக் கொண்டு கார்யம் கொள்ளவேணுமென்று நினைத்தருளி, அது தானும் (உ) "விஷ்ணோஸ்ஸஹாயாந்பலிந: ஸ்ருஜத்வம்காமரூபிண:" என்கிறபடியே சில அதிகாரிகள் நியமித்தாற்போலுமன்றிக்கே (ங) "அவதீர்யக்ஷிதௌயூயம் ஸம்ஶ்ரயஶ்ஶாஸநாந்மம" என்றுதானே நியமித்து அவர்களிடத்திலும் (ச) "பூர்வோத்பந்நேஷு பூதேஷு தேஷு தேஷு கலௌப்ரபு: | அநுப்ரவிஶ்ய குருதே யத்ஸமீஹிதமச்யுத:" என்கிறபடியே தானும் அநுப்ரவேஶரூப ஆவிர்பாவ விஶேஷத்தையும் பண்ணி (ரு) "ஸாக்ஷாந் நாராயணோதேவ: க்ருத்வா மர்த்யமயீம்தநும்| மக்நாநுத்தரதேலோகாந்காருண்யாச்சாஸ்த்ர பாணிநா" என்கிறபடியே ஒரு அபிநவாவதாரம்பண்ணினு னென் னும்படி பண்ணுவித்து, தத்வஹிதபுருஷார்த்த ப்ரகாஶகமான வேதாந்தஸித்தாநதத்தைப் பலப்ரபந்தங்களாலும் பலவ்யாக்யாநங் களாலும் நிலைநிறுத்தி, அத்தாலே கர்மவஶ்யர்களான ஜீவாத்மாக் களும் ஸ்வரூபந் தெளிந்து உபாயத்திலேப்ரவர்த்தித்துப்புருஷார்த் தத்தையடைந்து நித்யஸூரிகளோபாதி நித்யாநுபவம்பண்ணிக் கொண்டிருக்கும்படியாகப் பண்ணவேணுமென்று நினைத்தருளி, ஆழ்வார்களையும் ஆசார்யர்களையும் அவதரிப்பித்தான்.

இவ்வர்த்தத்தை ஸங்க்ரஹித்து வங்கிப்புரத்தாச்சி அருளிச் செய்த (சு) "நிர்திஷ்டா மதிநிபுணா தயாகரேண ஸ்ரீரங்காதிஷு பஹுதாமஸாக்ஷமாயாம் | நித்யாஸ்தேஶு ஹகுணஸூரயோவதீர் ணாஸ்ஸம்ஸம்ஸாரேநகுருவசோஹிலங்கநீயம்" என்கிறஶ்லோகத்தை

(க) "കൗന്തേയ പ്രതിജാനീഹി ന മേ ഭക്തഃ പ്രണശ്യതി."
(உ) "വിഷ്ണോസ്സഹായാൻ ബലിനഃ സൃജധ്വം കാമരൂപിണഃ."
(ங) "അവതീര്യ ക്ഷിതൗ യൂയം സംശ്രയധ്വം ശാസനാന്മമ." (ச) "പൂർവോത്പന്നേഷു ഭൂതേഷു തേഷു തേഷു കലൗ പ്രഭുഃ | അനുപ്രവിശ്യ കുരുതേ യത്സമീഹിതമച്യുതഃ."
(ரு) "സാക്ഷാന്നാരായണോ ദേവഃ കൃത്വാ മർത്യമയീം തനും | മഗ്നാനുദ്ധരതേ ലോകാൻ കാരുണ്യാച്ഛാസ്ത്രപാണിനാ." (சு) "നിർദിഷ്ടാ മതിനിപുണാ ദയാകരേണ ശ്രീരംഗാദിഷു ബഹുധാ മഹാക്ഷമായാം | നിത്യാസ്തേ സഗുണസൂരയോവതീർണാഃ സംസാരേ നനു ഗുരുവചോ ഹി ലംഘനീയം."

கருடவாஹநபண்டிதரும் காவ்யரூபமான திவ்யஸூரிசரிதையில் சேர்த்தெழுதினர்.

இவர்களவதாரவிசேஷத்தையும், ப்ரபந்தப்ராமாண்யத்தையும், மற்றுமுள்ள வைபவங்களையும், நம்பிள்ளை செய்தருளின பன்னீராயிரப்படி குருபரம்பராப்ரபாவத்திலும், திருமலை ஸ்ரீநிவாஸாசார்யர் செய்தருளின ப்ரபந்தநிர்வாஹத்திலும் பரமதபங்கம் முதலான தேஶிகதிவ்யஸூக்திகளிலும் பரக்கக்கண்டுகொள்வது.

இவ்வாழ்வார் ஆசார்யர்களுடைய அவதாராதி திவ்யசரித்ரங்களைக் கேட்கும்போது, பகவதவதாராதிகளைப்ரதிபாதிக்கிற ஸ்ரீமத்ராமாயணாதிகளைக்காட்டிலும் விசேஷப்ரதிபத்தி பண்ணிவரும்படி முன்னோர்கள் நடந்துவரக் காணுகின்றோம்; பின்னும் "ஏபாவம் பரமே" என்கிற பாட்டின்படியே வெறுத்திராதே "இலிங்கத்திட்ட புராணத்தீரும்" என்கிறபாட்டின்படியே இக்குருபரம்பராப்ரபாவத்தைக் கொண்டு ஸாம்ப்ரதாயவிரோதிகளான சேதநர்களையும் பெருங்கருணையாலே யதாஶக்தி தெளியும்படி திருத்தவும் ப்ராப்தம்.

ஆழ்வார்களிலே நம்மாழ்வார் ப்ரதாநரேயாகிலும், மற்றையாழ்வார்கள் அவருக்கு அவயவபூதரேயாகிலும், ஆண்டாளும் எம்பெருமானுக்கு திவ்யமஹிஷி யாகையாலே எல்லாவாழ்வார்களுக்கும் உத்தேஶ்யையேயாகிலும், இங்கே அவதாரக்ரமத்தாலே அநுஷ்டாநக்ரமத்தை அறிகைக்காக, அந்தக்ரமங்கள் பொய்கையாழ்வார்முதலாக விவரிக்கப்படுகின்றன. அதுதன்னிலும் முன்பாகவே அவதரித்த மதுரகவிகள் நம்மாழ்வாரை ஆஶ்ரயித்து நடத்திப்போந்தமையைச் சொல்லுகைபாலே பின்பாக ஆய்த்து இத்தனை.

ஆழ்வார்கள், அவதரித்துச் செய்தருளினபடிகள் எங்ஙனே என்னில்:—

ப்ரவேஶம் முற்றிற்று.

பொய்கையாழ்வார் வைபவம்.

(௧) துலாயாம்ஶ்ரவணேஜாதம் காஞ்ச்யாம்காஞ்சநவாரிஜாத் ।
த்வாபரேபாஞ்சஜந்யாம்ஶம் ஸரோயோகிநமாஶ்ரயே.

பாஞ்சஜந்யாம்ஶரான பொய்கையாழ்வார், ப்ரஹ்மநிர்மிதமாய் அயோத்யாதிகளிலும் வைத்து "முத்திதரும் நகரேழில் முக்கியமாங்கச்சி" என்கிறபடியே ஶ்ரேஷ்டதமமான ஸ்ரீகாஞ்சிபுரத்தில், பொய்கைப் புஷ்கரிணியில், ஒரு ஹேமாப்ஜத்தில் த்வாபரயுகத்தில் அ௬௨௯௨—ஆவதான ஸித்தார்த்திவருஷம் ஐப்பசிமாஸம் ஶுக்லபக்ஷம் அஷ்டமீ செவ்வாய்க்கிழமை கூடின திருவோண நக்ஷத்ரத்தில் அவதரித்தார்.

பூதத்தாழ்வார் வைபவம்.

(௨) துலாஶ்ரவிஷ்டாஸம்பூதம் பூதம் கல்லோலமாலிந:।
தீரேபுல்லோத்பலாந்மல்லா புர்யா மீடே கதாம்ஶகம்.

கதாம்ஶரான பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார் அவதரித்த மறுநாள் அவிட்ட நக்ஷத்ரத்தில், திருக்கடன்மல்லையில், மாதவிப்பூவில் அவதரித்தார்.

பேயாழ்வார் வைபவம்.

(௩) "துலாஶதபிஷக்ஜாதம் மயூரபுரிகைரவாத்।
மஹாந்தம் மஹதாக்யாதம் வந்தே ஸ்ரீநந்தகாம்ஶகம்."

---

(௧) [illegible] (௨) [illegible] (௩) [illegible]

நந்தகாம்ஸரான பேயாழ்வார் பூதத்தாழ்வார் அவதரித்த மறுநாள் ஸதய நக்ஷத்ரத்தில் மாமயிலை நகரத்தில் செவ்வல்லிப் பூவில் அவதரித்தார்.

முதலாழ்வார்கள் வைபவம்.

இப்படி இம்மூவரும் அயோநிஜர்களாயவதரித்து, ஜ்ஞாந பக்தி வைராக்யங்களை உலகத்தார் கண்டு தெளியும்படி ப்ரகாஸிப்பித்துக்கொண்டு தனித்தனியேவர்த்தித்திருந்து திவ்யதேஸயாத்ரை செய்துகொண்டு திருக்கோவலூரில் ஒருராத்ரியில் மூவரும்சேர்ந்து ஓரிடைகழியில் தங்கி பரஸ்பரம் விசாரித்துக்கொண்டு அதிஸந்துஷ்டர்களாயிருக்கும்போது, எம்பெருமானும் இவர்கள் சேர்த்தியைப்பார்த்து, இப்போதே கார்யங்கொள்ளவேணுமென்று நினைத்தருளி, ஒருமஹாந்தகாரத்தை முன்னிட்டு வர்ஷத்தைஉண்டாக்கித் தாமும்அவ்விடைகழியிற்சென்று இவர்களை அஸஹ்யமாகநெருக்கியிட, இவர்களும்இதென்ன ஆஸ்சர்யமென்றுதிகைத்து,பொய்கையாழ்வார் ஸூர்யனைவிளக்காக்கிஏற்றிப்பார்க்க,பூதத்தாழ்வாரும் ஜ்ஞாநதீபத்தை ஏற்றிப்பார்க்க, பேயாழ்வாரும் பகல்விளக்காலும் இராவிளக்காலும் இருளற்றபடியால் எம்பெருமானை உள்ளபடிகண்டு புருஷஸூக்தத்தில் பூர்வாநுவாகம்போலன்றிக்கே "திருக்கண்டேன்" என்று தொடங்கி (க) "க்ருஷ்ணாஜிநேந ஸம்வ்ருண்வந் வதூம்வக்ஷஸ்தலாலயாம்" என்கிறபடியே களவுசெய்யிலும் ஒளிக்கவொண்ணாதபடி பிரிவற்றசேர்த்தியையுடைய பெரியபிராட்டியாரோடு பகவத்ஸ்வரூபத்தைக் காண்பிக்க, மூவரும் அந்த பகவத்ஸ்வரூபத்தை அறிந்து அநுபவித்து, அவ்வநுபவத்தைப் பொய்கையாழ்வார் "வையந்தகளியா" என்கிற திருவந்தாதியாலும், பூதத்தாழ்வார் "அன்பேதகளியா" என்கிற இரண்டாந்திருவந்தாதியாலும், பேயாழ்வார் "திருக்கண்டேன்" என்கிற மூன்றாந்திருவந்தாதியாலும் ப்ரகாஸிப்பித்தருளி அந்தத் தேஹளீஸன் திருவடிதொழுது திவ்யதேஸயாத்ரை பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

(க) "க்ருஷ்ணாஜிநேந ஸம்வ்ருண்வந் வதூம் வக்ஷஸ்தலாலயாம்."

திருமழிசையாழ்வார் வைபவம்.

(க). மகாயாம் மகரே மாஸே சக்ராம்ஶம் பார்கவோத்பவம்|
மஹீஸாரபுராதீஶம் பக்திஸாரமஹம் பஜே.

சக்ராம்ஶரான திருமழிசைப்பிரான் முதலாழ்வார்கள் அவதரித்தவர்ஷத்தில்தைமாஸத்தில் க்ருஷ்ணபக்ஷப்ரதமை பாநுவாரம் கூடின மகாநக்ஷத்ரத்தில் "உலகுமழிசையுமுள்ளுணர்ந்து" என்கிறபாட்டின்படியே யிருந்துள்ள மஹீஸாரக்ஷேத்ரத்தில் ப்ருகு மஹர்ஷி தபஶ்சர்யை பண்ணிக்கொண்டிருக்க, அத்தைக் கெடுக்க நினைத்த தேவேந்த்ரனாலே ப்ரேரிக்கப்பட்ட ஒரு தேவஸ்த்ரீயினிடத்தில் மதிமயங்கின ப்ருகுமஹர்ஷிக்குப் புத்ரராயவதரித்தார்.

பின்பு தேவஸ்த்ரீயும் ஸ்வர்க்கத்திலேற, ப்ருகுவும் தபஶ்சர்யாஸக்தராயிருக்க, இந்தஶிஶுவும் ரோதநம்பண்ண, எம்பெருமானும் பிராட்டியோடேவந்து குளிரக்கடாக்ஷித்தருள, அந்தரோதநத்தைக் கேட்ட ஒருதிருவாளனென்கிற வேடன் வந்து இந்த ஶிஶுவைப் பார்த்துத் தனக்குப் பிள்ளை இல்லாமையாலே எடுத்துக்கொண்டு போய்த் தன்பத்நியான பங்கயச்செல்வியார்கையிற் கொடுக்க, அவளும் வந்த்யையாயிருக்கச்செய்தேயும் முலைப்பாலுண்டாய் முலை கொடுக்க, அந்த ஶிஶுவும் ஸ்தந்யாதிகளில் நிராஶமாய் எல்லாரும் ஆஶ்சர்யப்படும்படி அபிவ்ருத்தமாக, அத்தைப்பார்த்துஒருஶூத்ர வ்ருத்தன் தன்பத்நியோடே ஶுத்தமான பாலமுதைக் கொடுத்துக் கொண்டு அந்தஶேஷத்தைப் பத்நியும் தானும் ப்ராஶநம் பண்ண, அவர்களுக்கு ஒரு புத்ரனுண்டாக, அவருக்குக் கணிக்ருஷ்ணரென்று பேரிட்டுவைக்க, அவரும் அநேக வித்யைகளை அதிகரித்திருந்தார்.

இந்த ஆழ்வாரும் அஷ்டமவயஸ்ஸு வந்தவாறே அந்த வேடச்சேரியைவிட்டு ஸகலஶாஸ்த்ரப்ரவீணராய் பாஹ்யமதங்களிலும் ஆந்தரமதங்களிலும் ப்ரவேஶித்து அந்தஸாரங்களையெடுத்துக் களைந்தருளி, இப்படி நானூறு ஸம்வத்ஸரம் சென்றபின்பு "எம்பெருமான் ஶ்ரிய:பதியும் ஸர்வேஶ்வரனுமான நாராயணனே" என்று தெளிவித்துக்கொண்டு அப்படிக்கொத்த ஶ்ரிய:பதியை

(க) 𑌮𑌘𑌾𑌯𑌾𑌂 𑌮𑌕𑌰𑍇 𑌮𑌾𑌸𑍇 𑌚𑌕𑍍𑌰𑌾𑌂𑌶𑌂 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑍋𑌦𑍍𑌭𑌵𑌮𑍍 । 𑌮𑌹𑍀
𑌸𑌾𑌰𑌪𑍁𑌰𑌾𑌧𑍀𑌶𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌾𑌰𑌮𑌹𑌂 𑌭𑌜𑍇.

எழுநூறு ஸம்வத்ஸரம் த்யாநித்து ஆராதித்துக்கொண்டிருக்க; ருத்ரனும் பார்வதியோடே ஆகாஶத்தில் போகும்போது அவன் நிழல் படாமல் ஒதுங்கின இவ்வாழ்வாரைக் கண்டு கிட்டி "உமக்கு வேண்டின வரத்தைக் கேளீர்" என்ன, ஆழ்வாரும் "இந்த ஊசியின் பின்னே நூல்போகும்படி பண்ணக்கடவாய்" என்று பரிஹஸிக்க, ருத்ரனும் குபிதனாய்த் தன்னெற்றிக்கண்ணைத் திறந்து அந்த அக்நியாலேஆழ்வாரைத்தஹிக்கப்பார்க்க,ஆழ்வாரும் தம்திருவடிகளிலே ஒருகண்ணைத் திறந்துவிட, அந்தஅக்நி ருத்ரனை தஹிக்க, ருத்ரனும் பக்நனாய்ப் பார்வதியோடே ஆழ்வாரைத் திருவடிதொழுது க்ஷாமணம் பண்ணிக்கொண்டு பக்திஸாரரென்கிற திருநாமத்தையும் சாத்திக் கைலாஸத்தேறப் போனான்.

பின்பு திருமழிசைப்பிரானும் ஒரு ஏகாந்த ஸ்தலத்தில் யோகஞ்செய்துகொண்டிருக்கும்போது, முதலாழ்வார்கள்மூவரும் திவ்யதேஶ ஸஞ்சாரக்ரமத்தில் அந்தத் திருமழிசைப்பிரானைக் கண்டு மகிழ்ந்து, பரஸ்பரப்ரீதர்களாய்ச் சிலநாள் அவ்விடத்திலே யோகத்திலிருந்து, பேயாழ்வார் திருவவதாரஸ்தலமான மாடமாமயிலைத் திருவல்லிக்கேணியில் எம்பெருமானைத் திருவடிதொழுது திருமழிசைப்பிரானைவிட்டு, மற்றைமூவரும் திவ்யதேஶயாத்ரையாக எழுந்தருளினார்கள்.

பின்பு திருமழிசைப்பிரானும் பொய்கையாழ்வார் அவதாரஸ்தலமான பெருமாள்கோயிலில் சதுர்முகனுக்குச் சொன்னவண்ணஞ்செய்தவனான எம்பெருமானைத் திருவடிதொழுது அவ்விடத்தில் எழுநூறு ஸம்வத்ஸரம் யோகத்திலெழுந்தருளியிருக்கும்போது, கணிக்ருஷ்ணரும் வந்து ஆஶ்ரயித்துத் திருமழிசைப்பிரானுக்குக் கைங்கர்யம் பண்ணிக்கொண்டிருக்க, அவ்விடத்தில் சொன்னவண்ணஞ் செய்த எம்பெருமான் திருவுள்ள முகக்கும்படி திருப்பிண்டிமுதலான கைங்கர்யங்களைச் செய்துகொண்டிருக்கிற ஒருவ்ருத்தையை அவர் கடாக்ஷித்து, "இப்படி நித்யகைங்கர்யம் பண்ணும்படி த்ருடமாயிருக்கக்கடவை" என்று ஒரு கவியாலே அநுக்ரஹித்தருள, அவளும் ப்ராப்தயௌவனையாய்க் கைங்கர்யம் பண்ணிக்கொண்டிருக்க, அத்தைப் பல்லவராயனென்கிறராஜாவும் கேட்டுத் தனக்கும் அப்படி யௌவநம்வரும்படி ஒருகவிபாடச் சொல்லவேணு மென்று சொல்ல, அவனும் கணிக்ருஷ்ணரை ப்ரார்த்திக்க, அவரும் "நாக்கொண்டு மானிடம் பாடேன்" என்று

திருவுள்ளமாய் அது செய்வதில்லையென்ன, ராஜாவும் குபிதனாய், 'ஆகில், என் தேசத்தினின்றும் போகக் கடவீர்' என்ன, கணிக்ருஷ்ணரும் அப்படியே போவேனென்று சொல்லித் திருமழிசைப்பிரான்முன்பே தண்டன்ஸமர்ப்பித்து இச்செய்தியைவிண்ணப்பஞ்செய்ய, திருமழிசைப்பிரானும் அந்த எம்பெருமானிடத்தில் அத்தை விண்ணப்பஞ்செய்து கணிக்ருஷ்ணரோடே புறப்பட்டு எழுந்தருள, சொன்னவண்ணஞ்செய்தஎம்பெருமானும்ஒரு அர்ச்சகனிடத்தில் ஆவேசித்துத் தன்னையும்கூடஎழுந்தருளப்பண்ணும்படிநியமித்தருள, அவர்களும் அப்படியேஎழுந்தருளப்பண்ண, அப்படியே பைந்நாகம்பாய்சுருட்டிக்கொண்டு எழுந்தருளுகிற எம்பெருமானை ஸமஸ்தமானஜநங்களும்பின்தொடர்ந்துபோக, வ்ருக்ஷாதிகளெல்லாம் உறங்கிக்கிடக்க, இந்தவிபரீதவ்ருத்தத்தைக்கண்டு ராஜாவும் ஓரிகைத்தோப்பில் எழுந்தருளுகிற கணிக்ருஷ்ணரைத் திருவடிதொழுது க்ஷாமணம்பண்ணிக்கொண்டு மீண்டு எழுந்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க, கணிக்ருஷ்ணரும் அப்படியே மீண்டு எழுந்தருள, ஆழ்வாரும், பெருமாளும், ஸமஸ்தஜநங்களும் முன்புபோலவே குறைவறக் கச்சிப்பெருநகரில் வாழ்ந்துகொண்டிருக்கிற நாளிலே,

திருமழிசைப்பிரானும் (க) "யோ நர: கும்பகோணேஸ்மிந் க்ஷணார்த்தமபிதிஷ்டதி|கரஸ்தம்தஸ்யவைகுண்டம்கிமுதாந்யாவிபூதய:" என்கிறபடியே அதிசயிதமானதிருக்குடந்தை எம்பெருமானைத் திருவடிதொழத் திருவுள்ளமாய்ப் பெரும்புலியூரென்கிற க்ராமத்திலெழுந்தருளும்போது, வேதாத்யயநம்பண்ணிக்கொண்டிருக்கும் சில ப்ராஹ்மணர்கள் 'ஆழ்வாரை ஶூத்ரனென்று சிலஅதிக்ஷேபங்கள்பண்ணி மற்றொருவழியாலே போகக்கடவை யென்ன, ஆழ்வாரும் அப்படியே எழுந்தருள, ப்ராஹ்மணர்களுக்குப் பாகவதாதிக்ஷேபத்தாலே விட்ட இடம் தெரியாமலிருக்க, பின்பு அந்தக்ராமார்ச்சையான எம்பெருமான் ஆழ்வார்போகிற வீதிக்கு அபிமுகனாயிருக்க, அந்தஆஶ்சர்யத்தை நம்பியார் கண்டு ஶோதித்துச் சில ப்ராஹ்மணர்களுக்குச் சொல்ல, அதிக்ஷேபம் பண்ணின ப்ராஹ்மணர்களும் அத்தைக்கேட்டு ஆழ்வாரிடத்தில் க்ஷாமணம் பண்ணிக்கொண்டிருக்க, ஆழ்வாரும் ஒரு கறுப்புநெல்லைத் தம் நகத்தினாலே

(க) "𑌯𑍋 𑌨𑌰𑌃 𑌕𑍁𑌮𑍍𑌭𑌕𑍋𑌣𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌧𑌮𑌪𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿। 𑌕𑌰𑌸𑍍𑌥𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑌂 𑌕𑌿𑌮𑍁𑌤𑌾𑌨𑍍𑌯𑌾 𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑌃."

ழித்துக் காட்ட, அந்தப்ராஹ்மணர்களும் (க) "க்ருஷ்ணாநாம் வ்ரீஹீணாம் நகநிர்பிந்நம்" என்கிறவாக்கியத்தை அறிந்துகொண்டு போக, அந்த ஊரில் யாகம் பண்ணுகிற ஒரு ப்ராஹ்மணன் இந்த ஆஶ்சர்யத்தைக்கேட்டு யாகபலஸித்தி உண்டாகவேணு மென்று ஆழ்வாரை எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோய் யஜ்ஞஸதஸ்ஸில் உபசரிக்க,சில துர்மதிகள் ஶூத்ரனை யஜ்ஞஸதஸ்ஸில் அழைத்தானென்று பருஷோக்திகளைச் சொல்ல, தீக்ஷிதரும் உள்ளம் நொந்து நிற்க, ஆழ்வாரும் பகவத்பக்தரான தீக்ஷிதருக்கு உள்ளம் குளிரும்படிக்கும் அந்தக் குமதிகளுக்கு உள்ளம் நடுங்கும்படிக்கும் திருமார்பிலே ஜ்வாலாமாலியாய் ஒரு திருவாழியாழ்வானைக் காண்பிக்க, அந்தக் குமதிகளும் உள் நடுங்கித் திருவடிகளிலே விழுந்துநிற்க, தீக்ஷிதரும் உள் மகிழ்ந்து, (உ) "உபஸம்ஹரவிஶ்வாத்மந்" என்கிறபடியே முன்புள்ளபடி ஸேவைஸாதித்தருளவேணு மென்று ப்ரார்த்திக்க, ஆழ்வாரும் முன்புபோலே ப்ரஸந்நராய்'ஸ்ரிய:பதியான நாராயணனே பரப்ரஹ்மம்'என்றும், அவனடியார்களும் யதாதிகாரம் பூஜ்யர்களென்றும் அவர்களுக்குத்தெளிவித்துத் திருக்குடந்தையேற வெழுந்தருளி, ஆராவமுதனைத் திருவடிதொழுது "காவிரிக்கரைக் குடந்தையுள், கிடந்தவாறெழுந்திருந்து பேசு" என்று விண்ணப்பஞ்செய்ய, ஆராவமுதனும் அப்படியேஉத்யோகிக்க, "வாழி கேசனே" என்று ஆழ்வாரும் மங்களாஶாஸநம் செய்தருள, ஆராவமுதனும் அப்படியே உத்தாநஶாயியாயிருக்க, ஆழ்வாரும் அப்படியே த்யாநித்துக்கொண்டு, இரண்டாயிரத்து முந்நூறு ஸம்வத்ஸரம் யோகத்தில் எழுந்தருளியிருந்து, அவ்வநுபவத்தை நான்முகன் திருவந்தாதி திருச்சந்தவிருத்தம் இவைகளாலே ப்ரகாஶிப்பித்தருளினார்.

நம்மாழ்வார் வைபவம்.

(ங) வைஶாகே து விஶாகாயாம் குருகாபுரி காரிஜம் ।
பாண்ட்யதேஶே கலேராதௌ ஶடாரிம் ஸைந்யபம்பஜே.

(க) "க்ருஷ்ணாநாம் வ்ரீஹீணாம் நகநிர்பிந்நம்." (உ) "உபஸம்ஹர விஶ்வாத்மந்." (ங) வைஶாகே து விஶாகாயாம் குருகாபுரி காரிஜம் । பாண்ட்யதேஶே கலேராதௌ ஶடாரிம் ஸைந்யபம்பஜே.

ஸேநேஶாம்ஶரான நம்மாழ்வார் கலியுகாதியில்-சங-ஆவது நாளான ப்ரமாதிவர்ஷத்தில் வையாசி பூர்ணிமை வெள்ளிக்கிழமைகூடின விஶாகாநக்ஷத்ரத்தில் திருக்குருகையில் ஸச்சூத்ரர்களும் பகவத் பக்தர்களுமான காரி உடையநங்கையார்களுக்குப் புத்ரராக அவதரித்து ப்ராக்ருதஶிஶுக்கள் போலே முலையுண்ணாதே அபிவ்ருத்தராயிருக்க; அந்த ஆஶ்சர்யத்தைக் காரியாரும் உடையநங்கையாரும் கண்டு மகிழ்ந்து பத்துநாளுங்கடந்த விரண்டாநாள் "மாறன்" என்று திருநாமம் சாத்திப் பொலிந்துநின்றபிரான் முன்பாக ஸேவிக்கப் பண்ணுவித்துஶேஷாம்ஶமான திருப்புளியாழ்வாரடியிலே தொட்டிலிட்டு வைத்திருக்க, ஆழ்வாரும் பதினாறு திருநக்ஷத்ரம் இவ்வுலகத்தாருக்கு ஊமைபோலவும் குருடன்போலவும் இருக்க, அப்போது ஶ்ரிய:பதியான எம்பெருமானை ஸர்வலோகஜநநியான பெரியபிராட்டியாரும் 'நம்முடைய ப்ரஜைகளுக்கு உய்யும்உபாயத்தைஉபதேஶித்தருளவேணும்' என்று கேட்க, எம்பெருமானும் 'அப்படியே உபதேஶித்தருளக்கடவோம்' என்ன, பின்புஇருவரும்ஸேநைமுதலியாரைப் பார்த்து, "பூலோகத்தில் உம்முடைய அம்ஶரான நம்மாழ்வாருக்கு ஸகலரஹஸ்யங்களையும் உபதேஶித்துவாரும்" என்று அருளிச்செய்ய, ஸேநைமுதலியாரும் அப்படியே பூலோகத்தில்வந்து (க) "ஸேநேஶஸ்ஸ்வய மாகம்ய ப்ரீத்யா ஶ்ரீநகரீம்ஶுபாம்| ஶடகோபாயமுநயே திந்த்ரிணீ மூலவாஸிநே| தாபாதி பூர்வகம் மந்த்ரம் த்வயம் ஶ்லோகாதிகம் க்ரமாத்" என்கிறபடியே திருப்புளியாழ்வாரடியிலே இருக்கிற நம்மாழ்வாருக்குப் பிறர் கண்படாமல் திருவிலச்சினை முதலாக ரஹஸ்யாதிகளையும் ப்ரஸாதித்தருள, நம்மாழ்வாரும் ஶங்கசக்ராங்கிதராயும் அதிதேஜிஷ்டராயும் இருக்க, அந்த ஆஶ்சர்யத்தைத் தந்பாளான காரியாரும் உடையநங்கையாரும் கண்டு இவர் ப்ராக்ருதஶிஶுபோலன்றிக்கே ஶடவாயுவை நிராகரித்தவரென்றும் ஆகையால் ஶடகோபரென்றும் உள்மகிழ்ந்துகொண்டிருந்தார்கள்.

(க) "ஸேநேஶஸ்ஸ்வய மாகம்ய ப்ரீத்யா ஶ்ரீநகரீம்ஶுபாம்| ஶடகோபாயமுநயே திந்த்ரிணீமூலவாஸிநே|| தாபாதி பூர்வகம் மந்த்ரம் த்வயம் ஶ்லோகாதிகம் க்ரமாத்."

மதுரகவியாழ்வார் வைபவம்.

(க) சைத்ரேசித்ராஸமுத்பூதம் பாண்ட்யதேஶேகணாம்ஶகம்।
ஶ்ரீபராங்குஶஸத்பக்தம் மதுரம் கவிமாஶ்ரயே.

குமுதாம்ஶரான மதுரகவியாழ்வார் த்வாபரயுகத்தில்-அகூஙஅஎகூ ஆவதான ஈஶ்வரவர்ஷத்தில் சித்திரைமாஸத்தில் ஶுக்லசதுர்தஶி வெள்ளிக்கிழமைகூடின சித்ராநக்ஷத்ரத்தில் திருக்கோளூரில் ஒருபூர்வஶிகாப்ராஹ்மணருக்குப் புத்ரராயவதரித்துஸ்வஶாகையான ஸாமஶாகை முதலாக ஸகலவேதவேதாங்கங்களையும் அதிகரித்துத் திவ்யதேஶ யாத்ரைசிரகாலமாகப்பண்ணிக்கொண்டு திருவயோத்யையில் இருக்கும்போது ஒருராத்ரியில் திருக்கோளூர் எம்பெருமானை அத்திசையுற்று நோக்கும்போது ஒருமஹாதேஜஸ்ஸைக்கண்டு, இது என்னவென்று திகைத்து, அத்தை ஶோதிக்கத் திருவுள்ளமாய்த் தேஜஸ்ஸைக்கண்ட குறிப்புக்கொண்டு திருநகரியேற எழுந்தருளி, அதற்கும் தென்புறத்தில் போக, அப்போது அந்தத்தேஜஸ்ஸை வடதிசையிற்கண்டு, திருநகரியில்வந்து ஶோதிக்க, திருப்புளியாழ்வாரடியிலே நம்மாழ்வாரையுங்கண்டு, ஆஜாநமாயிருந்ததிவ்யசரித்ரத்தையுங்கேட்டு, இப்படிப்ராக்ருதஸம்பந்தம் அற்றிருக்கிற நம்மாழ்வார்விஷயத்தில் மதுரகவியாழ்வாரும் போரப்ரதிபத்திபண்ணி * "சிறியதின்வயிற்றிலே பெரியதுபிறந்தால்எத்தைத்தின்று எங்கேகிடக்கும்?" என்று விண்ணப்பஞ்செய்ய, நம்மாழ்வாரும்()"அத்தைத்தின்று அங்கேகிடக்கும்" என்று அருளிச்செய்து திருக்கண்களை அமலங்களாக விழித்துக் கடாக்ஷித்தருள,

---

(க) 𑌚𑍈𑌤𑍍𑌰𑍇 𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑍂𑌤𑌂 𑌪𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑌦𑍇𑌶𑍇 𑌗𑌣𑌾𑌂𑌶𑌕𑌂। 𑌶𑍍𑌰𑍀𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌸𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌂 𑌮𑌧𑍁𑌰𑌂 𑌕𑌵𑌿𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇.

* சிறியதின் வயிற்றிலே—அணுஸ்வரூபமான தர்மிபூதஜீவனிடத்தில், பெரியதுபிறந்தால்—விபுஸ்வரூபமான தர்மபூதஜ்ஞாநவிகாஸங்கள் உண்டாயிருந்தால், எத்தைத்தின்று—எதைத்தாரகமாய் அநுபவித்து, எங்கே கிடக்கும்—எவனிடத்தில் ஸாயுஜ்யம் பெற்று இருக்கும். "சித்தின் வயிற்றில் சிறுகுட்டி பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடக்கும்" என்று கேட்டதாகச் சிலக்ரந்தங்களில் எழுதப்பட்டிருக்கிறது. திருமொழி -கக-ஆவதுஶதகத்தில் 'வேம்பின்புழுவேம்பன்றி யுண்ணாது' என்கிற காதாவ்யாக்யாநத்தில்'சிறியதின்வயிற்றிலே பெரியது பிறந்தால்' என்கிறபாடமே க்ரஹிக்கப்பட்டிருக்கிறது.

() அத்தைத்தின்று—அகாரவாச்யனான ப்ராஹ்மத்தை யநுபவித்து, அங்கே கிடக்கும்—அகாரவாச்யனான ப்ராஹ்மத்தினிடத்தில் ஸாயுஜ்யம் பெற்று இருக்கும்.

மதுரகவிகளும் போர உள்மகிழ்ந்து, இப்படி அப்ராக்ருதமான திவ்ய சரித்ரங்களையுடைய தேவரீர் அடியேனுக்குத்தத்வஹித புருஷார்த்தங்களை ப்ரகாஸிப்பிக்கிற விசேஷார்த்தங்களையெல்லாம் ப்ரஸாதித்தருளவேணும் என்று ப்ரார்த்திக்க,

அப்போது ஸ்ரீவைகுண்டமென்கிற கலங்காப்பெருநகரில் வாழ்ந்துகொண்டிருக்கிற ஸ்ரீமந்நாராயணன் தேவி பூஷண ஆயுத பரிஜநங்களோடே பெரியதிருவடிமேலே ஏறியருளி நம்மாழ்வார் முன்பே ஸேவைஸாதித்தருள, நம்மாழ்வாரும் திவ்யாத்மஸ்வரூப திவ்யமங்களவிக்ரஹ திவ்யதேவீபூஷணாயுத திவ்யகுணசேஷ்டிதங்களையும் அநுபவித்து, அவ்வநுபவத்தைப்ரகாஸிப்பிக்கிறஸர்வவேதாந்தஸாரமான திருமந்த்ரார்த்தத்தை நாலு ப்ரபந்தங்களாலேப்ரகாஸிப்பித்தருளத் திருவுள்ளமாய், அது தன்னிலும் ருக்வேதஸார மான திருவிருத்தத்தையும், யஜுர்வேதஸாரமான திருவாசிரியத்தையும், அதர்வவேதஸாரமான பெரியதிருவந்தாதியையும், ஸாமவேதஸாரமான திருவாய்மொழியையும் அருளிச்செய்து, அவைகளைமதுரகவிகளுக்கு ஸார்த்தமாக ஸ்திரப்ரதிஷ்டிதமாகும்படி ப்ரஸாதித்தருள,

மதுரகவிகளும் அவைகளைப்பெற்று, மிக்க வேதியர் வேதத்தினுட்பொருள், நிற்கப்பாடி யென்னெஞ்சுள்நிறுத்தின நம்மாழ்வாரைக்காட்டிலும்தேவுமற்றறியாதவராய், 'திருக்கண்டேன்' என்று நிரூபிக்கப்பட்ட ஸ்ரிய:பதி "நான்முகனைப்படைத்த நாராயணனே" என்று அறிந்து, "இமையோர்தலைவா! மெய்ந்நின்று கேட்டருளாய், 'உன்னாலல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்" என்றருளிச்செய்த அர்த்தத்தை "எண்ணப்பனில், நண்ணித் தென்குருகூர்நம்பியென்னக் கால், அண்ணிக்குமமுதூறும்" என்று பாகவதசேஷத்வபர்யந்தமாகக் காட்டத் திருவுள்ளமாய், ஆழ்வார் தம்மிடத்தில் பண்ணின கடாக்ஷவிசேஷத்தைக் கண்ணிநுண்சிறுத்தாம்பாலே ப்ரகாஸிப்பித்தருளி நிற்க, பொலிந்துநின்றபிரானாலே ப்ரஸாதிக்கப்பட்ட மகிழம்பூமாலையைச் சாத்திக்கொண்டு, வகுளாபரணனென்கிற திருநாமத்தையுடையவராய் ஸ்வப்ரபந்தங்களாலே பாமதங்களுடைய மதத்தை அழித்தவராகையாலே பராங்குஸர் என்கிற திருநாமத்தையுடையவரான நம்மாழ்வார் திருவாய்மொழியருளிச்செய்யும்போது "எத்திறம்" என்று கண்ணன் ஸௌலப்யத்தில் மோஹித்தாற்போலே ஆசார்யபக்திதலையெடுத்து ஆத்மகுணபூர்ணரான மதுரகவிகள்பக்கல் ஈடுபட்டு விசேஷகடாக்ஷம் செய்

தருள, மதுரகவிகளும் ஆழ்வார் அவாவற்று வீடுபெற்ற பின்பு திருநகரியிலே நம்மாழ்வாரை அர்ச்சாரூபமாகத் திருப்ரதிஷ்டை செய்து ஆராதித்துக்கொண்டு நம்மாழ்வார் ப்ரபந்தசதுஷ்டயத்தையும் ப்ரவர்த்திப்பித்தருளினர்

குலசேகராழ்வார் வைபவம்.

(க) கும்பே புநர்வஸூஜாதம் கேரளேகோளபட்டணே।
கௌஸ்துபாம்ஶம் தராதீஶம் குலஶேகரமாஶ்ரயே.

கௌஸ்துபாம்ஶரான குலஶேகராழ்வார் கலியுகத்தில்-உஅ-ஆவதான பராபவவர்ஷத்தில் மாசிமாஸத்தில்ஶுக்லத்வாதஶி வெள்ளிக்கிழமை கூடின புநர்வஸூநக்ஷத்ரத்தில் வஞ்சிக்களம் என்னும் கொல்லிநகரில் த்ருடவ்ரதரென்கிற ராஜாவுக்குப் புத்ராராய் அவதரித்து ஶாஸ்த்ராப்யாஸம் முதலாக தநுர்வேதாதிகளையும் அதிகரித்து "மாற்றலரை வீரங்கெடுத்த செங்கோல் கொல்லிகாவலன்" என்னும்படி ப்ரதிபக்ஷங்களையெல்லாம் ஜயித்து ஸாதுஜநங்களை ரக்ஷித்துக்கொண்டு பகவத்பக்தி மேலிட்டு "உன்னிற்று மற்றொரு தெய்வம் தொழா ளவனையல்லால்" என்றும் "தண்சேறை யெம்பெருமான் தாள்தொழுவார் காண்மி னென்தலைமேலாரே" என்றும் "ஒதிலும் உன்பேரன்றி மற்றேருதாள்" என்றுஞ் சொல்லுகிறபடியே பாகவதபர்யந்தமாக பகவதாராதநத்தைத்தலைக்கட்டிக்கொண்டு கோதற்றஸ்ரீவைஷ்ணவர்களோடே ஸ்ரீமத்ராமாயணபாகவதாதிகளையும் திவ்யதேஶமாஹாத்ம்யங்களையும் காலக்ஷேபம்பண்ணிக்கொண்டிருக்க,

அப்போதொருநாள், ஸ்ரீமத்ராமாயணத்தில் சக்ரவர்த்தித்திருமகனிடத்தில் ருஷிகள்வந்து ஶரணாகதிபண்ண அவனும் அதைத்திருவுள்ளம்பற்றி (உ) "அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம்வாஸீதே ஸலக்ஷ்மணாம்। நஹிப்ரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய ப்ராஹ்மணேப்யோவிஶேஷத:" என்றருளிச்செய்த பெருமையும் கேட்டு பரமபக்திதலை

(க) [Grantha script verse: கும்பே புநர்வஸூஜாதம் கேரளேகோளபட்டணே। கௌஸ்துபாம்ஶம் தராதீஶம் குலஶேகரமாஶ்ரயே.]

(உ) "[Grantha script verse: அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம்வாஸீதே ஸலக்ஷ்மணாம்। நஹிப்ரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய ப்ராஹ்மணேப்யோவிஶேஷத:]"

யெடுத்து அந்தக் கதையை அப்போதுள்ள நடத்தையாக நிஶ்சயித்து (க) "சதுர்தஶ ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீமகர்மணாம்। ஏகஶ்ச ராமோ தர்மாத்மா கதம் யுத்தம் பவிஷ்யதி" என்கிற ஶ்லோகார்த்தத்தைக்கேட்டு உள்ளங்கலங்கி உருவார்சக்கரம் சங்குசுமந்திங்கும்மோ டொருபாடுழல்வானோரடியான் நிற்க, இப்படியாவதே? என்று ஸம்ப்ரமத்துடன் தமக்குள் பெரும்படையைக் கூட்டிக்கொண்டு ஸஹாயார்த்தமாகப் புறப்பட, அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும் இவருடைய பரமபக்தியிலீடுபட்டு, (உ) "தம் த்ருஷ்ட்வா ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம்। பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்தாரம்பரிஷஸ்வஜே" என்கிற ஶ்லோகார்த்தத்தை அவர் செவிப்படும்படி அருளிச்செய்ய, குலஶேகராழ்வாரும் அத்தைக்கேட்டு ஸந்துஷ்டராய் மீண்டு எழுந்தருள, மந்த்ரிகளும் ஸ்ரீவைஷ்ணவர்களிடம் அஸூயையாலே க்ருஹார்ச்சையினுடைய திருவாபரணத்தை ஒளித்துவைத்து ஸ்ரீவைஷ்ணவர்களிடத்தில் பழிசொல்ல, குலஶேகராழ்வாரும் "ஆரங்கெடப் பரனன்பர்கொள்ளார்" என்கிறபடியே, 'ஸ்ரீவைஷ்ணவர்கள் எடுக்கவில்லை' என்று பாம்புக்குடத்தில் தான்கைவைக்க, மந்த்ரிகளும் உள்நடுங்கி அத்திருவாபரணத்தையும் கொடுத்து க்ஷாமணம் பண்ணிக்கொண்டார்கள்.

பின்பு ஆழ்வாரும் ராஜ்யதந்த்ரத்தில் தன் குமாரருக்குப் பட்டாபிஷேகம் பண்ணிவைத்து, அந்த ஸ்ரீவைஷ்ணவர்களோடே யாவரும் வந்தடிவணங்குமரங்கநகர் துயின்றவனைத் திருவடிதொழுது, பகவத்குணங்களை அநுபவித்து, அவ்வநுபவத்தை ஸம்ஸ்க்ருதமான முகுந்தமாலையாலும் செந்தமிழான பெருமாள்திருமொழியாலும் ப்ரகாஶிப்பித்தருளி, பகவத்ப்ரதிபத்தி பாகவதப்ரதிபத்தி பர்யந்தமாகவே இருக்குமென்று அறிவிப்பித்தருளினர்.

(க) "चतुर्दश सहस्राणि रक्षसां भीमकर्मणाम्। एकश्च रामो धर्मात्मा कथं युद्धं भविष्यति." (உ) "तं दृष्ट्वा शत्रुहन्तारं महर्षीणां सुखावहम्। बभूव हृष्टा वैदेही भर्तारं परिषस्वजे."

பெரியாழ்வார் வைபவம்.

(க) ஜ்யேஷ்டே ஸ்வாதிபவம் விஷ்ணு ரதாம்ஸம் தந்விந: புரே |
ப்ரபத்யே ஸ்வஸுரம் விஷ்ணோர் விஷ்ணு சித்தம் புரஸ்ஸிகம்.

ஸ்ரீகருடாம்ஸரான பெரியாழ்வார் ஸ்ரீவில்லிபுத்தூரில் கலியுகத்தில்-சஎ-ஆவதான க்ரோதநவருஷத்தில் ஆனிமாஸத்தில் ஸுக்ல ஏகாதஸீ பாநுவாரம் கூடின ஸ்வாதீநக்ஷத்ரத்தில் ஸப்தபூருஷ ஸுத்தரான ஒரு புரஸ்ஸூட ஸ்ரீவைஷ்ணவருக்குப்புத்ரராயவதரித்து ஸ்வவேதமான யஜுர்வேதாதியாக வேதவேதாங்கங்களை அதிகரித்து ஸாஸ்த்ராப்யாஸங்களாலும் அறிந்து செய்யவேண்டிய கைங்கர்யத்தை (உ) "ஸ்வயமாகதவிஜ்ஞாநா:" என்கிறபடியே ஆஜாநமாய் அறிந்தவராய் அந்தக்கைங்கர்யமும் வடபெருங்கோயிலானுக்கே செய்யவேண்டியதாய்த் திருத்துழாய்ப் புஷ்பங்களைத்திருமாலை சேர்த்து வடபெருங்கோயிலானுக்கே ஸமர்ப்பித்துக் கொண்டிருக்க, அப்போது மதுராபதியான வல்லபதேவன் ஒருதார்மிகனுமே (ங) "வர்ஷார்த்த மஷ்டௌ ப்ரயதேதமாஸாந் ராத்ர்யர்த்த மர்த்தம்திவஸம்யதேத | வார்த்தக்யஹேதோர்வயஸாநவேந பரத்ரஹேதோரிஹஜந்மநாச" என்கிற ஸ்லோகத்தாலே போதிக்கப்பட்டவனுய்த் தனக்குப் புரோஹிதரான செல்வநம்பியைப்பார்த்து "பரமபுருஷார்த்தம் என்?" என்றுகேட்க, புரோஹிதரும் 'வித்வான்களைக் கூட்டிப் பரதத்வநிர்ணயம் பண்ணிவைததால் பரமபுஷார்த்தம் தெரியும்' என்று அருளிச்செய்ய, ராஜாவும் அப்படியே ஸம்மதித்து ஒருவித்யாஸுல்கத்தைக்கட்டிவைத்து வித்வான்களையழைப்பிக்க, அப்போது சில ஸ்ரீவைஷ்ணவர்கள் "ராஜஸமஸ்தாநமாகையாலே பகவத்பாரம்யத்திற்கு என்னதீங்குவருகிறதோ?" என்று உள்நடுங்கி நிற்க, அத்தைக்கண்டு வடபெருங்கோயிலுடையானும் "பரதத்வத்தைப்ரகாஸிப்பித்துக் கிழியை அறுத்துவாரும்" என்று பெரியாழ்வாருக்குஸ்வப்நங்காட்டியருள, பெரியாழ்வாரும் அப்படியே ஸ்ரீமதுரையிலெழுந்தருள, செல்வநம்பியும் தனக்குஸ்வப்நங்காட்டிய

(க) ज्येष्ठे स्वातीभवं विष्णोः रथांशं धन्विनः पुरे । प्रपद्ये श्वशुरं विष्णोः विष्णुचित्तं पुरश्शिखम् ॥ (உ) "स्वयमागतविज्ञानाः" (ங) "वर्षार्थमष्टौ प्रयतेत मासान् रात्र्यर्थमर्धं दिवसं यतेत । वार्धक्यहेतोर्वयसा नवेन परत्र हेतोरिह जन्मना च ॥"

படியைக்கண்டு ராஜாவையும் வித்வான்களையு மழைத்துக்கொண்டு ஆழ்வாரை யெதிர்கொண்டுபோய் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வர, வித்வான்களும் "இவர் என்செய்யப்போகிறார்?" என்று சித்ராங் வேஷிகளாயிருக்க, இவ்வாழ்வாரும் புருஷஸூக்தத்தில் பூர்வோத் தராநுவாகங்களை உபபாதித்துத் ததநுகுணமாக ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களைக்கொண்டு "ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம்" என்று அறுதியிட, வித்யாஶுல்கமும் அறுந்து இவர்முன்பேவிழ, அத்தை ராஜாவும் வித்வான்களும் மற்றஜநங்களும் ப்ரத்யக்ஷமாகக்கண்டு, ஆஶ்சர்யப்பட்டு, வேதாந்தவிழுப்பொருளின் மேலிருந்த விளக்கை விரித்தருளின விஷ்ணுசித்தன் திருவடிகளிலே ப்ரவணராய், ஆழ்வாரை ஆனைமேலேற்றி, ஸகலவாத்யங்களோடும்ஸகலபிருதுகளோடும் திருவீதி வலஞ்செய்யப்பண்ணிக்கொண்டு, "பட்டர்பிரான்" என்று திருநாமம்சாத்தி ஸேவித்துக்கொண்டிருக்க, ஸகலலோகமாதாபிதாக்களான திவ்யதம்பதிகளுடைய பாரம்பத்தை। வெளியிட்டருளின ஆழ்வாரை எம்பெருமானும் தேவீபூஷண ஆயுதபரிஜநங்களோடே பெரிய திருவடிமேல் ஏறியருளி வந்து குளிரக்கடாக்ஷித்தருள, ஆழ்வாரும் ஆகாஶத்தில் அத்திருமேனியைக்கண்டு, ஆனையினின்றும் இறங்கி, அதன்மணிகளையே தாளமாக்கிக்கொண்டு அந்தஸ்ரீமந்நாராயணனுக்கு என்னதீங்குவருகிறதோ? என்று அத்திருமேனிக்கு மங்களாஶாஸநமாய் "பல்லாண்டு பல்லாண்டு" என்றுதொடங்கி மங்களாஶாஸநம்பண்ண, திவ்யதம்பதிகளும் தங்களுடைய திவ்யகுண சேஷ்டிதங்களையும் ப்ரகாஶிப்பிக்க, அத்திருமேனிக்கும் பல்லாண்டு பாடி இவ்வநுபவம் வடபெருங்கோயிலுடையானுடைய அநுக்ரஹமென்று கண்ணனவதாரம் முதலாக இன்புறும் நல்விளையாட்டுக்களையெல்லா முரைத்துக்கொண்டு சில திவ்யதேஶங்களையும் பாடத்திருவுள்ளமாய் "பல்லாண்டு பல்லாண்டு" என்று தொடக்கமான பெரியாழ்வார் திருமொழியாலே அவ்வநுபவங்களையெல்லாம் ப்ரகாஶிப்பித்தருளினர்.

ஆண்டாள் வைபவம்.

(க) ஆஷாடே பூர்வபல்குந்யாம் துலஸீகாநநோத்பவாம்।
பாண்ட்யே விஶ்வம்பராம் கோதாம் வந்தே ஸ்ரீரங்கநாயிகாம்.

(க) ஆஷாடே பூர்வபல்குந்யாம் துலஸீகாநநோத்பவாம்!
பாண்ட்யே விஶ்வம்பராம் கோதாம் வந்தே ஸ்ரீரங்கநாயிகாம்.

பூமிப்பிராட்டி அம்ஶமான ஆண்டாள் கலியுகத்தில்-கூஅ-ஆவதான நளவர்ஷத்தில் ஆடிமாஸத்தில் ஶுக்லசதுர்த்தீ செவ்வாய்க்கிழமைகூடின பூர்வபல்குநீ நக்ஷத்ரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் திருநந்தநவநத்தில் பெரியாழ்வார் திருத்துழாய்க்குப் பாத்திகொத்திக்கொண்டிருக்கும்போது அதினின்றும் ப்ராதுர்பவித்தருள, பெரியாழ்வாரும் ஆஶ்சர்யப்பட்டு அந்தக்கந்யகைக்குக் கோதை என்று திருநாமம் சாத்தி வளர்த்துக் கொண்டிருக்கும்போது,

வடபெருங்கோயிலானுக்குக் கட்டிவைத்ததிருமாலையை ஒருநாள் அந்தக் கோதை எடுத்து சூட்டிக்கொண்டு மற்றுமுண்டான பூஷணங்களையும் பூட்டிக்கொண்டு ஒரு கண்ணாடியில் தம்மைப்பார்த்து “இவ்வழகு எம்பெருமானுக்கு ஒத்திருக்குமோ?” என்று பரீக்ஷித்துப் பலநாளும் இப்படியே பார்த்துக்கொண்டு அந்தமாலையைச்சுருட்டி வைத்துக்கொண்டிருக்க, அதை ஒருநாள் ஆழ்வார் கண்டு “இது பகவதநர்ஹம்” என்று, இனி இப்படிச்செய்ய அடுக்காது என்றும் அருளிச்செய்திருக்க, அன்று இராத்ரியில் வடபெருங்கோயிலுடையானும் “அவள் சூட்டிக்கொடுத்த மாலையேகாணும் நமக்கு உகந்திருக்கும்” என்று ஆழ்வாருக்கு ஸ்வப்நம்காட்டியருள, ஆழ்வாரும் திருத்துழாய்ப்பாத்தியில் ப்ராதுர்பாவத்தாலும் ஸ்வப்நத்தாலும் “பின்னைகொல்? நிலமாமகள்கொல்? திருமகள்கொல்? பிறந்திட்டாள்” என்றுஉகந்தருளி, சூடிக்கொடுத்தநாச்சியார் என்று அழைத்துக்கொண்டிருக்க,

ஆண்டாளும் ப்ராப்தயௌவனையாய்ப்பரபக்தி பரஜ்ஞாந பரம பக்திகளாலுண்டான பகவத்விஷய ப்ராவண்யத்தை உடையவளாய் அந்தப்ராவண்யமடியாக ஸ்ரீக்ருஷ்ணவிரஹாஸஹிஷ்ணுக்களானகோபகந்யகைகள் (க) ‘துஷ்டகாளிய திஷ்டாத்ரக்ருஷ்ணோऽஹ மிதிசாபரா’ இத்யாதிகளிற்படியே க்ருஷ்ணனை அநுகரித்துத் தரித்தாப்போலே இவ்வாண்டாளும் மார்கழிநீராடி நோன்புநோற்றுத் தரித்து அவ்வர்த்தத்தைத்திருப்பாவையாலே ப்ரகாஶிப்பித்தருள, ஆழ்வாரும் (உ) “சிந்தார்ணவகத: பாரங் நாஸஸாதாப்லவோயதா” என்கிறபடி வ்யாகுலராய் நாச்சியாரை அழைத்து ‘நீர்யாருக்கு வாழ்க்கைப்பட உகந்திருக்கிறீர்?’ என்ன, அவளும் “மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்” என்ன, ஆழ்வாரும் பின்னை

(க) “துஷ்டகாளிய திஷ்ட²த்ர க்ருஷ்ணோऽஹமிதி சாபரா.” (உ) “சிந்தார்ணவக³த: பாரம் நாஸஸாத³ப்லவோ யதா².”

என்? என்ன, அவளும் "புள்வாய்பிளந்த மணிவண்ணனுக்கு என்னை
வகுத்திடும்" என்ன, ஆழ்வாரும் 'அவன்எவ்வூரான்?' என்ன, அவளும்
"அவன்ஊரெல்லாம் சொல்லும்" என்ன, ஆழ்வாரும் திவ்யதேஶமா
ஹாத்ம்யங்களை எல்லாம் அருளிச்செய்ய, தென்னாடும் வடநாடும்
தொழநின்ற திருவரங்கத் திருப்பதி வைபவத்தைக் கேட்டருளின
இவ்வாண்டாள் லஜ்ஜாவிஷ்டையாய்ச் சிலமனோரதங்களை அநுப
வித்து, அவ்வநுபவத்தை "தையொருதிங்களும் தரை விளக்கி" என்
று தொடங்கிநாச்சியார் திருமொழியாலே ப்ரகாஶிப்பித்தருளித்திரு
வரங்கச் செல்வனாரிடத்தில் குடிகொண்ட நெஞ்சினளாயிருக்க,
ஆழ்வாரும் இதுகூடும்படி எங்ஙனே! என்றிருக்க, அன்று இராத்
ரியில் திருவரங்கச் செல்வனார் உம்முடைய பெண்ணானகோதை
யை அழைத்துக்கொண்டுவாருமென்று ஸ்வப்நம் காட்டியருள, ஆழ்
வாரும் ஸந்துஷ்டராயிருக்க, கோயிலில் அழகியமணவாளனும்ஸமஸ்
த பிருதுகளோடே ஆண்டாளை அழைத்துக்கொண்டுவரும்படிபரிஜ
நங்களுக்கு ஸ்வப்நம்காட்டியருள, அவர்களும் அப்படியேஸ்ரீவில்லி
புத்தூரேறச்சென்று ஆழ்வாரிடத்தில்அழகியமணவாளன் காட்டின
ஸ்வப்நத்தை விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் உகந்தருளி வடபெ
ருங்கோயிலுடையான் நியமநம்பெற்று ஆண்டாளைத் திருப்பல்லக்
கிலேற்றிக்கொண்டு கோயிலேற எழுந்தருளி அழகியமணவாளன்
திருமண்டபத்தில்நிற்க,

ஆண்டாளும் எல்லாரும் காணும்படி திருமேனிவடிவழகா
லே திருவாபரணங்களுக்கும் அழகுகொடுத்துக்கொண்டு அழகிய
மணவாளன்பக்கற் சென்று அந்தர்பவித்தருள, இத்தைக்கண்டு
ஆழ்வாரும் ஸமஸ்தஜநங்களும் ஆஶ்சர்யப்பட, அழகியமணவாள
னும் நமக்கு ஶ்வஶுரரான பெரியாழ்வாரென்று அருளப்பாடிட்டுத்
திருமாலைமுதலான வரிசைகளையும் ப்ரஸாதித்தருளி, ஸ்ரீவில்லி
புத்தூரேறப் போகும்படி விடைகொடுத்தருள, ஆழ்வாரும் இப்
படியொருவிஶேஷகடாக்ஷம் அழகிய மணவாளன் செய்தருளினா
னென்று உள்மகிழ்ந்து வடபெருங்கோயிலுடையானுக்குக் கைங்
கர்யம்பண்ணுவதாய் மீண்டு எழுந்தருளினார்.

தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம்.

(க) கோதண்டே ஜ்யேஷ்டநக்ஷத்ரே மண்டங்குடிபுரோத்பவம்|
சோளோர்வ்யாம்வநமாலாம்ஶம் பக்தாங்க்ரி ரேணுமாஶ்ரயே.

வநமாலாம்ஶரான தொண்டரடிப்பொடியாழ்வார் கலியுகத்தில் உஅகூ- ஆவதான ப்ரபவஸம்வத்ஸரத்தில் மார்கழிமாஸத்தில் க்ருஷ்ணசதுர்த்தஶீ செவ்வாய்க்கிழமைகூடின கேட்டைநக்ஷத்ரத்தில் திருமண்டங்குடியில் ஒரு புரஶ்சூட ஸ்ரீவைஷ்ணவருக்குப் புத்ரராயவதரிக்க, அவருக்கு விப்ரநாராயணரென்று திருநாமம் சாத்தி ஸ்வவேதமான யஜுர்வேதாதியாய் ஸகலவேதவேதாங்கங்களையும் அதிகரிப்பிக்க, அவரும் ஸர்வஸமர்த்தராய் க்ருதோத்வாஹராய் பகவத்பக்தி மேலிட்டுத்திருவரங்கத்திருப்பதியில் அழகிய மணவாளனைத் திருவடிதொழுதுநிற்க, அழகியமணவாளனும் தமக்குத் திருமாலைக்கைங்கர்யம்பண்ணிக்கொண்டிருக்கும்படி நியமித்தருள, ஸ்ரீவிப்ரநாராயணரும் அழகியமணவாளனுக்குத் திருநந்தநவநஞ்செய்து, திருமாலைகட்டிச் சாத்திக்கொண்டு, ப்ராக்ருதவிஷயத்தில் அதிவிரக்தராய், பகவத்விஷயத்தில் அத்யந்தமநுரக்தராய்த் தம்மை ஆஶ்ரயித்தவர்களையும் தம்மைப்போலே ஆக்கவல்லராய் இருந்துகொண்டிருக்க,

அப்போது பெருமாளைப் பிராட்டியார் பார்த்து, இப்படிக்கொத்த விரக்த பக்தரை ப்ராக்ருதவிஷயம் என்னசெய்யக்கடவது? என்றுவிண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் லீலார்த்தமாகப் புன்முறுவல்செய்து, "இவரை அத்யந்த ப்ராக்ருதவிஷயாஸக்தராகும்படி பண்ணுகிறேன்பார்" என்றருளிச்செய்ய, அப்போது தேவதேவியென்று பேருடையவளான ஒரு தேவஸ்த்ரீ தன் ஸகியோடே ஒருவேஶ்யாரூபமாய்வந்து திருக்கரம்பனூரில் வாஸம்பண்ணிக்கொண்டு விப்ரநாராயணர் திருநந்தநவநத்தருகே ஒரு வ்ருக்ஷச்சாயையிலே நின்றுகொண்டு விலாஸவீக்ஷணம் பண்ணிக்கொண்டிருக்க, விப்ரநாராயணரும் கண்ணெடுத்துப் பாராமலிருக்க, தேவதேவியும் தனணாபரணாதிகளையெல்லாம் ஸகிகையில்கொடுத்துவிட்டு, மலிநவஸ்த்ரதரையாய் வந்து, விப்ரநாராயணரைத் தண்டன்ஸமர்ப்பித்து, மஹாபாபிஷ்டையான அடியேனுக்குத் தேவரீர் ஸேவை

(க) 𑌕𑍋𑌦𑌂𑌡𑍇 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍇 𑌮𑌂𑌡𑌂𑌗𑍁𑌡𑌿𑌪𑍁𑌰𑍋𑌦𑍍𑌭𑌵𑌂।
𑌚𑍋𑌳𑍋𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌂 𑌵𑌨𑌮𑌾𑌲𑌾𑌂𑌶𑌂 𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌰𑍇𑌣𑍁𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇.

யாலே ஸத்வமுண்டாய்க் கைங்கர்யபுத்திமேலிட்டிருக்கிறது, தேவரீர் திருநந்தநவநத்தில் களையெடுத்துக்கொண்டிருக்கிறேன் என்று விண்ணப்பஞ்செய்ய, விப்ரநாராயணரும் அநுமதிபண்ண, தேவதேவியும் அப்படியே ஆறுமாஸம் பூஞ்செடிகளுக்குக் களையெடுத்துத் தண்ணீர்பரிமாறிக்கொண்டிருக்க, ஒருநாள் மஹாவர்ஷமுண்டாக, விப்ரநாராயணரும் பர்ணசாலையிலிருந்துகொண்டு வர்ஷாஹதையான தேவதேவியை உள் புகுரும்படி நியமிக்க, பின்பு தேவதேவியும் உள்புகுர, விப்ரநாராயணரும் பகவல்லீலையாலேப்ராக்ருதவிஷயாஸக்தராய் அன்றுமுதல் இருந்துகொண்டு, திருக்கரம்பனூரில் ஸர்வாபரணபூஷிதையான தேவதேவினுடைய க்ருஹத்தில் அவள் கேட்டஅர்த்தத்தைக் கொடுக்க விரகு இல்லாமையாலே அவ்வாசலிலே தயங்கிநின்று முசித்துக்கிடக்க, அப்போது பெருமாளும் பிராட்டிக்கு அவரைக்காண்பிக்க, பிராட்டியும் அவரை மீட்டுமுன்போல் கைங்கர்யபராக்கும்படிப்ரார்த்திக்க, பெருமாளும தம்ஸந்நிதியில் ஒருதங்கவட்டிலை எடுத்துக்கொண்டுபோய்த் தேவதேவிக்ருஹத்திற் கொடுக்க, அவளும் 'நீர் ஆர்?' என்ன, பெருமாளும் "நான் அழகியமணவாளதாஸன், விப்ரநாராயணர் கொடுத்துவரச்சொன்னார்" என்று சொல்லிப்போக, அவளும வாசலினின்றும்விப்ரநாராயணரை அழைத்துக்கொண்டு முன்புபோலேயிருக்க, விடிவோரை கோயிலில் தங்கவட்டில் இல்லாமையாலே அதிகாரிகள் பரிஜநங்களைத் தண்டிக்க, அவர்களும் அங்கநேக விசாரிக்க, கரம்பனூரில் தேவதேவிக்ருஹத்தில் இருக்கக்கண்டு அதிகாரியும் அவளைக்கேட்க, அவளும் 'விப்ரநாராயணர் கொடுத்தார்' என்ன, அவனும் விப்ரநாராயணரை அழைத்துக்கேட்க, அவரும் 'நான அறியேன்' என்ன, அவ்வளவில் பெருமாளும் ஒரு அர்ச்சகனிடத்தில் ஆவேசித்து "விப்ரநாராயணருக்காகத் தேவதேவிக்கு நாமே கொடுத்தோம் இதுநம்முடைய லீலார்த்தப்ரதிஜ்ஞை" என்றும் "ஒருவரையும் ஸிக்ஷிக்கவேண்டியதில்லை" என்றும் அருளிச்செய்ய, அதிகாரிகளும் தெளிந்து ஆஸ்சர்யப்பட்டுப்போக,

விப்ரநாராயணரும் மாதரார் கயற்கண்ணென்னும் வலையுள்பட்டழுந்திய தம்மை நொந்து அகம்யாகமந ப்ராயஸ்சித்தத்தையும் பண்ணி, "தேவுமற்றறியேன்" என்ற மதுரகவிகள் உள்கருத்தை "அரங்கன் திருமுற்றம்சேறுசெய்தொண்டர்" என்று விவரித்தருளி, அவ்வரங்கனும், சக்ரவர்த்தித் திருமகனும் கண்ணனுமாக அநுபவித்த குலசேகராழ்வார்படியைக்கொண்டு அவ்விருவர்களுக்கும்தீங்கு

வாராதிருக்கும்படிபல்லாண்டுபாடினபெரியாழ்வார் திருவுள்ளக்கருத்தை ஆண்டாள் அறிந்து, அவ்வநுபவத்தைத்தாமநுபவித்து, "செம்மையுடைய திருவரங்கர் தாம்பணித்த மெய்ம்மைப்பெருவார்த்தை விட்டுசித்தர்கேட்டிருப்பர்" என்று பெரியாழ்வார்க்காட்படவேணுமென்று அருளிச்செய்த அர்த்தத்தைத்தெளிந்து, பாகவதஸ்ரீபாத தீர்த்தத்தை ஸ்வீகரித்து அழகியமணவாளன் திருவடிதொழுது நிற்க, அழகிய மணவாளனும் 'தொண்டரடிப்பொடியாழ்வார்' என்று அருளப்பாடிட்டு வரிசைகளும் ப்ரஸாதிக்க, ஆழ்வாரும் அவைகளைப்பெற்றுத் தம்மிடத்தில் அழகியமணவாளன் விசேஷகடாக்ஷம் செய்தருளினபடியாலே "உன்னடியார்க்காட்படுத்தாய் பள்ளியெழுந்தருளாய்" என்று மநோரதித்து அநுபவித்து அவ்வநுபவத்தைத் திருமாலைத் திருப்பள்ளியெழுச்சிகளாலே ப்ரகாசிப்பித்தருள, தேவதேவியும் தன்னுடைய தநங்களையெல்லாம் பெரியபெருமாள் கைங்கர்யத்தில் வ்யயம்பண்ணி பாகவதஸ்ரீபாததீர்த்தத்தாலே பரிசுத்தையாய்ப்போக, தொண்டரடிப் பொடியாழ்வாரும் தம்மிடத்தில் அழகியமணவாளன் செய்தருளின விசேஷகடாக்ஷத்தையும், தெய்வப்பிறவிகளுக்கும் வர்ணாஸ்ரமாநுகுணமாக ப்ராயச்சித்தம்செய்து பாபநிவ்ருத்தி செய்யவேண்டு மர்த்தத்தையும், ஸ்ரீபாததீர்த்தப்ரபாவத்தையும் ப்ரகாசிப்பித்தருளிச் சேதநர்களை உஜ்ஜீவிப்பித்தருளினார்.

திருப்பாணாழ்வார் வைபவம்.

(க) கார்த்திகேரோஹிணீஜாதம் ஸ்ரீபாணம்நிசுளாபுரே|
ஸ்ரீவத்ஸாம்சம்காயகேந்த்ரம் முநிவாஹநமாஸ்ரயே.

ஸ்ரீவத்ஸாம்சரான திருப்பாணாழ்வார் கலியுகத்தில் - ௩சாௗ- ஆவதான துர்மதிவர்ஷத்தில் வ்ருஸ்சிகமாஸத்தில் க்ருஷ்ணதவிதீயை புதன்கிழமைகூடின ரோஹிணீ நக்ஷத்ரத்தில் உறையூரில் ஸஸ்யத்தில் அவதரித்திருக்க, மஹாஸுக்ருதிகளாயும் ஒரு ப்ராரப்த விசேஷத்தாலே சண்டாள ஜந்மிகளாயுமிருக்கிற தம்பதிகள் வயல்நடுவே இந்த சிசுவைக்கண்டு அநபத்யர்களாகையாலே

(க) [Grantha script verse: கார்த்திகே ரோஹிணீஜாதம் ஸ்ரீபாணம் நிசுளாபுரே। ஸ்ரீவத்ஸாம்சம் காயகேந்த்ரம் முநிவாஹநமாஸ்ரயே.]

மகிழ்ந்துஎடுத்துக்கொண்டுபோய் வளர்த்துக்கொண்டிருக்க, அந்தச் ஶிஶுவும்கோக்ஷீரத்தாலே அபிவ்ருத்தமாய்த் தேஜிஷ்டமாயிருக்கக் கண்டு, ஶுத்தமான ஆஹாரத்தை அந்தத் தம்பதிகள் கொடுத்து வளர்க்க, ஆழ்வாரும் பேச்சுத்தொடக்கமாகக் கானம்பண்ணிக்கொண்டு வீணையும் கையுமாய் (க) "நவா ஏவம்விதி கிஞ்ச நாநந்நம்பவதி" என்கிற உபநிஷத்தின்படியே அயோநிஜரான தமக்குச் சண்டாளதம்பதிகள்கொடுத்த ஶுத்தாஹாரம் பாதகம் இல்லாவிடினும் சண்டாளக்ருஹத்தில் வளர்த்தியாலே லோகாநுவர்த்தியாய்த் திருக்காவேரிக் கரையில் பெரியபெருமாள் ஸந்நிதியை நோக்கிக்கொண்டு நம்பாடுவானைப்போலே பலநாளும் எம்பெருமான் புகழ் பாடிக்கொண்டிருக்க, அப்போது பெரியபெருமாள் திருவுள்ளமுவந்து தம்மிடத்தில் பக்தரான லோகஸாரங்கமாமுநிக்கு "திருப்பாணாழ்வாரைஉம்முடையதோளின்மேல்ஏற்றிக்கொண்டுநம்மருகே வரக்கடவீர்" என்றுஸ்வப்நம் காட்டியருள, அவரும் விடிவோரை திருப்பாணாழ்வாரிருக்கிற இடத்தைச்சென்று, பெரியபெருமாள் காட்டின ஸ்வப்நத்தை விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் "ஒட்டவொண்ணாதஜாதியான அடியேனை இப்படிக்குச் செய்யலாமோ?" என்று அங்குள்ளபாமரர்களுக்காக அருளிச்செய்து, "விதிவாய்க்கின்றுவாய்க்குங்கண்டீர்" "அவன்செய்யும்சேமத்தைஎண்ணித்தெளிவுற்றுநிற்கவேண்டும்" என்று திருவுள்ளம்பற்றியருள, லோகஸாரங்கமஹாமுநியும் ஓர் ஆதிவாஹிகரோபாதி திருப்பாணாழ்வாரைத் தந்தோளிலெழுந்தருளப்பண்ணிக்கொண்டு பெரியபெருமாள் முன்பே இறக்கியருள, திருப்பாணாழ்வாரும் ஸ்தநந்தயப்ரஜை முலை தேடிவாய்வைக்குமாபோலே ஶேஷபூதர் இழியுந்துறையான திருவடிகளிலே நெஞ்சம்குடிபுகுந்து, அவ்வழியாய்த் திருமுடியளவும் கண்டுஅநுபவித்து, அவ்வநுபவத்தை அமலனாதிபிரானாலே ப்ரகாஶிப்பித்தருளி, 'ஆஜாநஶுத்தருக்கும் லோகாநுவர்த்தநம்வேணும்' என்றும், 'களவுவெளிப்பட்டபின்புஇடைச்சேரியில் வளர்ந்த கண்ணன் ஸாந்தீபிநியினிடத்தில் வேதாத்யயநம் பண்ணினாப்போலே லோகாநுவர்த்தநம் வேண்டுவதில்லை' என்றும், 'இதுவும்அவதாரவிஶேஷர்களுக்கே தகும்' என்றும் காட்டியருளி, அங்குள்ள சேதநரெல்லாருங்காணப் பெரியபெருமாள் திருமேனியில் அந்தர்ப்பவித்தருளிக் கலங்கின சேதநர்களைத் தெளிவிப்பித்தருளினார்.

(க) "நவா ஏவம்விதி கிஞ்சநாநந்நம்ஸவதி."

திருமங்கையாழ்வார் வைபவம்.

(க) கார்த்திகே க்ருத்திகாஜாதம் சதுஷ்கவிஶிகாமணிம்|
ஷட்ப்ரபந்தக்ருதம் ஶார்ங்க மூர்த்திம் கலியமாஶ்ரயே.

ஶார்ங்காம்ஶரான திருமங்கையாழ்வார் கலியுகத்தில்-௩௯௮-ஆவதான நளவருஷத்தில் வ்ருஶ்சிகமாஸத்தில் பூர்ணிமைவியாழக்கிழமைகூடின கிருத்திகாநக்ஷத்ரத்தில் திருவாலிதிருநகரியில் நீலன் என்கிற ஒரு சதுர்த்தவர்ணஸ்த்தனுக்குப் புத்ரராய் அவதரித்து, ஸ்வகுலவித்யையான தநுஶ்ஶாஸ்த்ராதிகளிலே ஸமர்த்தராய்ச் சோளராஜாவினிடத்தில் ஓரதிகாரத்திலிருந்துகொண்டு, தாளூதுவான், நீர்மேல் நடப்பான், நிழலில் மறைவான், தோலாவழக்கன் என்கிற நாலுமந்த்ரிகளோடே கூடத் தாமும் ஆடல்மாவலவராய், ஶத்ருவை ஜயிக்கையாலே பரகாலனென்கிற திருநாமத்தையுடையவராய்ப் போருகிறகாலத்தில்,

பூம்பம்ஶயாய் ஆம்பலோடையிலேபிறந்திருந்த ஒருபெண்ணை ஒருவைஶ்யன் கண்டு அந்தப்பெண்ணை எடுத்துக் கொண்டுபோய் வளர்த்துப் பருவம்நிறைந்தவாறே "யார்க்கு வாழ்க்கைப்படுத்துவோம்?" என்று நினைத்துக்கொண்டிருக்க, அந்தப்பெண்ணின் பெருமையைச் சிலர் வந்து திருமங்கையாழ்வாருக்கு அறிவிக்க, ஆழ்வாரும் அந்தவைஶ்யரைக்கண்டு 'இப்பெண்பிள்ளையார்?' என்றுகேட்க அவரும் 'குமுதவநத்திற்கண்டு எடுத்தபடியால் குமுதவல்லியார் என்றுபேரிட்டுவளர்த்த என்பெண்பிள்ளை' என்ன, ஆழ்வாரும் 'ஆகில் எனக்கு விவாஹம்பண்ணிக்கொடும்' என்று வஸ்த்ரபூஷணாதிகளைக் கொடுக்க, அவரும் அப்பெண்பிள்ளைஸம்மதியைக்கேட்க, அப்பெண்ணும் 'சக்ராங்கிதனாய்ப்பகவத்பக்தனாய்த்ததீயாராதநம்பண்ணிக்கொண்டிருக்கவேண்டாவோ?' என்ன, ஆழ்வாரும் 'அப்படியே செய்யக்கடவேன்' என்று திருநறையூர்நம்பி ஸந்நிதியில் திருவிலச்சினையை ப்ரார்த்திக்க, நம்பியும் திருவிலச்சினையையும் திருமண்காப்பையும் திருமந்த்ரார்த்தத்தையும் பாமரர்கண்படாமல் ப்ரஸாதித்தருள, ஆழ்வாரும் சக்ராங்கிதராய்க் குமுதவல்லியாரையும் மணம் புணர்ந்து ததீயாராதநமும் பண்ணிக்கொண்டிருக்க, அத்தைச் சோளராஜாவும் 'பஹுத்ரவ்யவ்யயம்பண்ணுகிறார்' என்று தனது சாரர்களாலே

(க) 𑌕𑌾𑌰𑍍𑌤𑌿𑌕𑍇 𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌜𑌾𑌤𑌂 𑌚𑌤𑍁𑌷𑍍𑌕𑌵𑌿𑌶𑌿𑌖𑌾𑌮𑌣𑌿𑌂।
𑌷𑌟𑍍𑌪𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑌕𑍃𑌤𑌂 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌂 𑌕𑌲𑌿𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇.

அறிந்து 'அந்தப்பரகாலனைப்பிடித்துக்கொண்டு வாருங்கள்' என்று சிலரையாஜ்ஞாபிக்க, ஆழ்வாரும் அவர்களை அடித்தோட்டிவிட, பின்னையும் ஸேனையோடே சோளராஜன்வர, அந்த ஸேனையையும் அடித்தோட்டிவிட, ராஜாவும் பரகாலரைப்பார்த்து 'உம்முடைய பராக்ரமத்தாலே ஸந்துஷ்டனானேன்; உமக்கு விப்ரியம் செய்யேன்' என்று ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொடுத்தழைக்க, ஆழ்வாரும் அவன் பக்கல்போக, அவனும் ஒரு தேவாலயத்தில் காவலிட்டுவைக்க, ஆழ்வாரும் ததீயாராதநபங்கத்தாலே வ்யாகுலராய் உபவாஸத்தோடேயிருக்க, பேரருளாளரும் 'நம்கோயிலேறவந்து நம்மருகேயிருக்கிற நிதியைக்கொண்டு காவலைவிடுவித்துக்கொள்ளும்' என்று ஸ்வப்நம் காட்டியருள, ஆழ்வாரும் ராஜபுருஷரோடே 'வ்யயம்பண்ணின தநத்தைக்கொடுத்துவிடுகிறேன்; வாரும்' என்றழைத்துக்கொண்டு பெருமாள்கோயிலேறப்போய்ப் பேரருளாளரைத்திருவடிதொழுது அருகேயிருந்த நிதியையெடுத்து ராஜபுருஷர்கையிற்கொடுத்து அதிகமான த்ரவ்யத்தைத் ததீயாராதநத்தில் உபயோகித்துக்கொண்டிருக்க, அவர்களும் அந்தத்தநத்தை ராஜாபக்கல்வைத்து அச்செய்தியைச் சொல்ல, ராஜாவும் விஸ்மிதனாய் அந்தத்தநத்தை ஆழ்வார் திருவடிகளிலே ஸமர்ப்பித்து அபராதக்ஷாமணம் பண்ணிக்கொண்டுபோக, ஆழ்வாரும் அத்தநங்களைக்கொண்டு ததீயாராதநம் செய்து பின்பு கையிலொன்றுமில்லாமையால் (க) "அஸாதுப்யோர்த்தமாதாய ஸாதுப்யஸ்ஸம் ப்ரயச்சதி" என்கிறபடியே ஆழ்வாரும் மந்த்ரிகளுடனே வழிகட்டி அவைஷ்ணவர்களிடத்திநின்றும் தநத்தைப்பறித்துக்கொண்டுவந்து ததீயாராதநம் பண்ணிக்கொண்டிருக்க, ஒருநாள் அவைஷ்ணவர் அகப்படாமையாலே ஒருவீட்டின்புறக்கடையில்பதுங்கி அங்கேகறவந்தபெண்பிள்ளைபூஷணங்களை அபஹரித்துக்கொண்டுவிட, அவளும் தன் பர்த்தாவினிடத்தில் 'ஸ்ரீமந்நாராயணன் நம்பூஷணத்தை அங்கீகரித்தான்' என்றுசொல்ல, அத்தைக்கேட்டு ஆழ்வாரும் 'வைஷ்ணவதநம்' என்று அத்தைக்கொடுத்துவிட்டு வழிகட்டிப்பார்த்துக்கொண்டுநிற்க, எம்பெருமானும் பிராட்டியும் ஸர்வாபரணபூஷிதர்களாய்த் திருமணம்புணர்ந்து பரிஜநங்களோடே அவைஷ்ணவர்போலே வந்துநிற்க, ஆழ்வாரும் மகிழ்ந்துகொண்டு ஸமஸ்தபூஷணங்களையும் அபஹரித்து ஒருபெட்டியில்வைத்து எடுக்க, அது எடுக்க ஒண்ணாமையாலே மணவாளப்பிள்ளையைப்பார்த்து 'இப்பெட்டியை எடுக்கவொண்ணாதே பண்ணின மந்த்ரத்தைஎனக்குச்

(க) "அஸாதுப்யோர்த்தமாதாய ஸாதுப்யஸ் ஸம்ப்ரயச்சதி."

சொல்லக்கடவை' என்று வாளை உருவிக்கொண்டுகேட்க, மணவாளப்பிள்ளையான எம்பெருமானும் 'நம்கலியா' என்றருளிச்செய்து திருமந்த்ரத்தை அவர் செவியில்சொல்லிப் பெரியபிராட்டியாருமதாமுமாக மற்றுமுள்ள தேவீபூஷணாயுதபரிஜநங்களோடே ஸேவைஸாதித்தருள, ஆழ்வாரும் திவ்ய தம்பதிகளுடைய திருவடிகளிலே ஶரணம்புகுந்து ஸ்வரூபாதிகளை அநுபவித்து அவ்வநுபவத்தைப் பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல் என்கிற ப்ரபந்தங்களாலே ப்ரகாஶிப்பித்தருளிஆசு, மதுரம், சித்ரம், விஸ்தாரம் முதலான சாதுர்யத்தையுடைய திவ்ய கவிதையாலே 'நாலுகவிப்பெருமாள்'என்று ப்ரஸித்தராய்,

திவ்யதேஶயாத்ரை பண்ணிக்கொண்டு, காழிச்சீராமவிண்ணகரத்தில் நாலுகவிப்பெருமாளென்று பிருதூதிக்கொண்டு எழுந்தருளியிருக்கும்போது, ஸம்பந்தமூர்த்தியென்கிற ஒருதமிழ்க்கவிவந்து பிருதுகளை நிர்ப்பந்திக்க, ஆழ்வாரும் "ஒரு குறளாயிரு நிலம்"என்கிறபாட்டைக்கொண்டு அவனைஜயித்து, "ஆலிநாடனருள்மாரியரட்டமுக்கியடையார்சீயம்" என்கிற திருநாமங்களை ப்ரஸித்தமாக்கி, அவனாலே'நாலுகவிப்பெருமாள்'என்றுபஹுமாநம்பண்ணப்பட்டு, திருவரங்கத்திருப்பதியில் அழகியமணவாளனைத்திருவடிதொழுது, மண்டப கோபுராதி கைங்கர்யங்களுக்காக மந்த்ரிகளோடேகூட திருநாகைப்பட்டணத்தில் ஸ்வர்ணமயமான பௌத்தவிக்ரஹத்தை எடுத்துக் கொண்டுவந்து, அத்தையுருக்கித் தங்கமாக்கித் திருமதிள் முதலான கைங்கர்யங்களைச் செய்துகொண்டிருக்க,

ஒரு திருக்கார்த்திகை மஹோத்ஸவத்தில் பெருமாளும்நாச்சிமார்களும் திருமஞ்சநம்கொண்டருளியிருக்கும்போது, திருமங்கையாழ்வார்ஸேவித்துநிற்க, திவ்யதம்பதிகளும்குளிரக்கடாக்ஷித்தருள, ஆழ்வாரும்'திருவாய்மொழிக்கு வேதஸாம்யத்தையும்ப்ரஸாதித்து, திருநகரியினின்றும் நம்மாழ்வாரை எழுந்தருளப்பண்ணி, வேதபாராயணத்தோடு மார்கழிஶுக்ல ஏகாதஶியில் திருவாய் மொழியும் கேட்டருளவேணும்' என்று ப்ரார்த்திக்க,பெருமாளும் அப்படியே திருவுள்ளம்பற்றியருள, ஆழ்வாரும் ஒருபரமபதநாதனைத்திருப்ரதிஷ்டைசெய்து, ஒருபரமபதவாசல் உண்டாக்கி, அந்தஸந்நிதியில் அழகியமணவாளனுக்குத்திருநகரிநம்மாழ்வாரை எழுந்தருளப்பண்ணிவைத்து, திருவத்யயநோத்ஸவத்தைப் பத்துநாளில்நடப்பித்து, அப்படியே ப்ரதிஸம்வத்ஸரம் நடந்துவரும்படிபண்ணிவைக்க, அழகிய

மணவாளனும் குளிரக்கடாக்ஷித்து வரிசைகளையும் ப்ரஸாதிக்க, திருமங்கையாழ்வாரும் அவைகளைப்பெற்று ஸந்துஷ்டராய் அமலனுதிபிரானில் ப்ரதிபாதிக்கிற ப்ரஹ்மாநுபவத்தை(க) "பக்த்யாபரமயாவாபிப்ரபத்த்யாவாமஹாமுநே! ப்ராப்யோஹம் நாந்யதாப்ராப்ய:" என்றும், (உ) "ஶரணம்வ்ரஜ-மோக்ஷயிஷ்யாமி" என்றும்சொல்லுகிறபடியே ஓரஞ்சலிபண்ணிக் கேட்டவர்களுக்கு அல்லது ஶ்ரிய:பதியான எம்பெருமான் கொடானென்றும், அந்த ஶரணாகதிப்ரகாரத்தையும், அப்படி நிஷ்டையுடையவனுக்குக் கைங்கர்யம் பாகவதபர்யந்தமா மென்றும், இவ்வர்த்தங்களையெல்லாம் ஸ்வப்ரபந்தங்களாலே ப்ரகாஶிப்பித்து லோகத்தை உஜ்ஜீவிப்பித்தருளினார்.

ஆழ்வார்கள்வைபவம் முற்றிற்று.

ஆசார்யர்கள் வைபவம்.

பின்பு சிலநாள் கழிந்தவாறே ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களும் காலவைஷம்யத்தாலே லுப்தங்களாய், திருவத்யயநோத்ஸவாதிகளுமில்லாமலிருக்க, எம்பெருமான் "ஆசார்யர்களை அவதரிப்பித்துக் கார்யங்கொள்ளவேணும்" என்றும், அவ்வழியாலே அவிச்சிந்நமாகக் குருபரம்பரையை நடத்துகைக்காக ஸ்ரீமந்நாதமுநிகள் முதலாக ஸ்ரீமத்வேதாந்த தேஶிகனளவாக இருந்துள்ள ஆசார்யர்களை அவதரிப்பித்துக் கார்யங்கொண்டு, பின்பு இச்செல்வம் ஆகல்பமாகக் குறையற்றிருக்குமென்று திருவுள்ளமுகந்தருளினான். ஆகையாலிறே (௩) "நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம்" என்றும், "நாதமுனிகழலே, நாளுந்தொழுதெழுவோம் நமக்கார் நிகர்நானிலத்தே" என்றும், நம்தேஶிகன் அருளிச்செய்தார்.

அவர்கள் அவதாரக்ரமங்கள் எங்ஙனே என்னில்:—

(க) "ஹக்த்யாவாரயாவாவிப்ரவத்த்யாவாமஹாமுநே ப்ராப்யோஹம் நாந்யயாப்ராப்ய:" (உ) "ஶரணம் வ்ரஜ-மொக்ஷயிஷ்யாமி." (௩) "நாதொவஜ்ஞம்ப்ரவ்ருத்தம்."

கஜாநநாம்ஸரான ஸ்ரீமந்நாதமுநிகள் கலியுகத்தில்-௩௯அ௰-ஆவதான ஸோபக்ருத்வர்ஷம் ஆனிமாஸம்ஸுக்லத்ரயோதஸீ புதன் கிழமை கூடின அநூராதாநக்ஷத்ரத்தில் வீரநாராயணபுரம் என்கிற காட்டுமன்னனார்ஸந்நிதியில் அவதரித்தார்.

ஜயத்ஸேநாம்ஸரான உய்யக்கொண்டார்கலி-௩௯௨அ-ஆவதான பராபவவர்ஷத்தில் சித்திரைமாஸம் ஸுக்லப்ரதமை புதன்கிழமை கூடின க்ருத்திகாநக்ஷத்ரத்தில் திருவெள்ளறையில் அவதரித்தார்.

குமுதாம்ஸரான மணக்கால்நம்பி கலி - ௩௯௩௩ - ஆவதான விரோதிக்ருத்வருஷம்மாசிமாஸம் ஸுக்லசதுர்த்தஸீ திங்கட்கிழமை கூடின மகாநக்ஷத்ரத்தில் மணக்காலக்ரஹாரத்தில் அவதரித்தார்.

ஸிஹ்மாநநாம்ஸரான ஆளவந்தார் கலி-௪௦௧அ-ஆவதான தாது வர்ஷம் ஆடிமாஸம் பூர்ணிமை புதன்கிழமைகூடின உத்த்ராஷாடா நக்ஷத்ரத்தில் வீரநாராயணபுரமென்கிற காட்டுமன்னனார்ஸந்நிதியில் அவதரித்தார்.

குமுதாம்ஸரான பெரியநம்பி கலி-௪௦௩௯-ஆவதான ஹேவிளம்பிவருஷம்மார்கழிமாஸம் க்ருஷ்ணசதுர்த்தஸீ புதன்கிழமைகூடின ஜ்யேஷ்டாநக்ஷத்ரத்தில் கோயிலிலே அவதரித்தார்.

ஸுமுகாம்ஸரான பெரியதிருமலைநம்பி கலி-௪௦எ௫-ஆவதான ஸ்ரீமுகவர்ஷம் புரட்டாசிமாஸம் ஸுக்லபஞ்சமீ வெள்ளிக்கிழமை கூடின அநூராதாநக்ஷத்ரத்தில் திருமலையில் அவதரித்தார்.

புண்டரீகாம்ஸரான திருக்கோட்டியூர்நம்பி கலி-௪௦௨௯- ஆவதான ஸர்வஜித்வர்ஷம் வையாசிமாஸம் ஸுக்லப்ரதமை ஸ்திரவாரம் கூடின ரோஹிணீநக்ஷத்ரத்தில் திருக்கோட்டியூரில் அவதரித்தார்.

ஸங்குகர்ணாம்ஸரான திருவரங்கப் பெருமாளரையர் கலியுகத்தில் ௪௦௯௯-ஆவதான பிங்களவர்ஷம் வையாசிமாஸம் க்ருஷ்ணப்ரதமை வெள்ளிக்கிழமை கூடின ஜ்யேஷ்டாநக்ஷத்ரத்தில் கோயிலிலே அவதரித்தார்.

வநமாலாம்ஸரான திருமாலையாண்டான் கலி-௪௦௯௰- ஆவதான ஸர்வதாரிவர்ஷம் மாசிமாஸம் பூர்ணிமை வெள்ளிக்கிழமை கூடின மகாநக்ஷத்ரத்தில் அழகர்திருமலையில் அவதரித்தார்.

ஸ்ரீமச்சேஷாம்ஸபூதரான எம்பெருமானார் கலியுகம்-௪௧௧௯-ஆவதான பிங்களவர்ஷத்தில் சித்திரைமாஸம் ஸுக்லபஞ்சமீ வெள்ளிக்கிழமைகூடின திருவாதிரைநக்ஷத்ரத்தில் ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்தார்.

சண்டாம்ஶரான கிடாம்பியாச்சான் கலி-சகருக-ஆவதான ஹேவிளம்பிவர்ஷம் சித்திரைமாஸம் ஶுக்லத்வாதஶீ வெள்ளிக்கிழமை கூடின ஹஸ்தநக்ஷத்ரத்தில் பெருமாள்கோயிலில் அவதரித்தார்.

ஸர்வநேத்ராம்ஶரான கிடாம்பிராமாநுசப்பிள்ளான் கலி-சஉக 0 ஆவதான ஸர்வதாரிவர்ஷம் ஐப்பசிமாஸம் ஶுக்லபஞ்சமீ திங்கட்கிழமைகூடின பூர்வாஷாடாநக்ஷத்ரத்தில் பெருமாள்கோயிலிலே அவதரித்தார்.

குமுதாக்ஷாம்ஶரான கிடாம்பி ஸ்ரீரங்கராஜர் கலியில்-சஉகரு-ஆவதான ஸ்வபாநுவர்ஷத்தில் பங்குனிமாஸம் ஶுக்லஷஷ்டீ திங்கட்கிழமைகூடின ரோஹிணீநக்ஷத்ரத்தில் பெருமாள்கோயிலிலே அவதரித்தார்.

ப்ரசண்டாம்ஶரான திருக்குருகைப்பிரான் பிள்ளான் கலியுகம் சககூரு-ஆவதான ப்லவவர்ஷம் ஐப்பசிமாஸம்ஶுக்லபஞ்சமீதிங்கட்கிழமைகூடினபூர்வாஷாடாநக்ஷத்ரத்தில் திருமலையில் அவதரித்தார்.

விஜயாம்ஶரான ஸ்ரீவிஷ்ணுசித்தர் என்கிற எங்களாழ்வான் கலி-சஉ0அ - ஆவதான வ்யயவர்ஷம் ஆனிமாஸம் ஶுக்லத்வாதஶீ திங்கட்கிழமைகூடின ஸ்வாதீநக்ஷத்ரத்தில் திருவெள்ளறையில் அவதரித்தார்.

ஸுபத்ராம்ஶரான நடாதூரம்மாள் கலியில்-சஉகூஎ-ஆவதான பார்த்திவவர்ஷம் சித்திரைமாஸம் பூர்ணிமை திங்கட்கிழமைகூடின சித்ராநக்ஷத்ரத்தில் பெருமாள்கோயிலில் அவதரித்தார்.

ஸுப்ரதிஷ்டாம்ஶரான கிடாம்பி அப்பிள்ளார் கலி—சகூஉஉ—ஆவதான விக்ரமவர்ஷம் சித்திரைமாஸம் ஶுக்லபஞ்சமீ வெள்ளிக்கிழமைகூடின திருவாதிரை நக்ஷத்ரத்தில் பெருமாள்கோயிலில் அவதரித்தார்.

ஸ்ரீவேங்கடேஶ கண்டாம்ஶரான ஸ்ரீமத்வேதாந்த தேஶிகன் கலி-சகூஎக-ஆவதான ஶுக்லவர்ஷம் புரட்டாசிமாஸம் ஶுக்லதஶமீ புதவாரம்கூடின திருவோணநக்ஷத்ரத்தில் பெருமாள்கோயிலிலே திருத்தண்காவென்கிற திவ்யதேஶத்திலெழுந்தருளியிருக்கிற தீபப்ரகாஶர்ஸந்நிதி ஸமீபத்தில் அவதரித்தார்.

இவர்களவதரித்துச்செய்தருளினபடிகள் எங்ஙனேயென்னில்:—

ஸ்ரீமந்நாதமுனிகள் வைபவம்.

(க) ஜ்யேஷ்டேநுராதாஸம்பூதம் வீரநாராயணேபுரே |
கஜவக்த்ராம்ஶமாசார்ய மாத்யம் நாதமுநிம்பஜே.

வீரநாராயணபுரத்தில் நித்யவாஸம்பண்ணுகிற ஆஜாநஸித்த ஸ்ரீஶடமர்ஷண குலதிலகராயும் சொட்டைக்குலத்தாரென்று ப்ரஸித்தருமான ஈஸ்வரமுனிகளுக்குக் கலியுகத்தில்–நகூஅடு–ஆவதான ஶோபக்ருத்வர்ஷம் ஆனி அநுராதத்தில் ஒரு குமாரரவதரிக்க, அவருக்கு நாதர் என்று திருநாமம்சாத்தி, வேத வேதாங்கங்களை யெல்லாம் அத்யயநம் பண்ணிவைக்க, அந்த நாதமுனிகளும் பிறவி தொடக்கமாகப்பகவத்பக்திமேலிட்டு, ஸர்வவேதஶாஸ்த்ர ஸமர்த்தராயிருக்க, வங்கிப்புரத்தாச்சியும் அரவிந்தப்பாவையாளென்கிற தம் குமாத்தியை விவாஹம் பண்ணிவைக்க, நாதமுனிகளும் க்ருதோத்வாஹராய் வீரநாராயணபுரத்தெம்பெருமானான மன்னனாரைத் திருவடிதொழுது, அவர்குணங்களிலீடுபட்டு, பகவத்யாநம்பண்ணிக்கொண்டு யோகநிஷ்டராயிருக்க, அவருக்குஒருகுமாரர் அவதரிக்க, அவருக்கு ஈஸ்வரமுனியென்று திருநாமம் சாத்தி, அத்யயநாதிகளையும் யோகாப்யாஸத்தையும் பண்ணிவைத்துத் தாமும் யோகநிஷ்டராயெழுந்தருளி யிருந்தார்,

பின்பு ஒருகால் நாதமுனிகளும் ஸகுடும்பமாய் மன்னனார்திருமுன்பேவந்து ஸேவித்து, ஆஸ்ரிதஸம்ரக்ஷணார்த்தமாகத் தேவரீர் உகந்தருளின திருமதுரைமுதலான திவ்யதேஶங்களிற் சென்று, அங்குள்ள எம்பெருமான்களைத்திருவடிதொழுது வரும்படி நியமித்தருளவேணும் என்று விண்ணப்பஞ்செய்ய, மன்னனாரும் அப்படியே அர்ச்சகமுகேநவிடைகொடுத்தருள, அவர்களும்ஸகுடும்பமாய்ப் புறப்பட்டு, "வடதிசை மதுரை சாளக்கிராமம் வைகுந்தந்துவரையயோத்தி" என்று சொல்லுகிற திவ்யதேஶங்களிற்சென்று, அங்கங்குள்ள தீர்த்தங்களிலே, நீராடி எம்பெருமான்களையும் பணிந்து, தூயபெருநீர்யமுனைக்கரையிலே கோவர்த்தநபுரம்என்கிற க்ராமத்தில் யமுனைத்துறைவர்என்கிற எம்பெருமான் திருவடிதொழுது, அத்யந்தம் ஹ்ருஷ்டராய், அவ்விடத்திலேயே நித்யவாஸம் பண்ணிக்கொண்டு, நாடாதமலர்நாடி நாடோறும் நாரணன்றன் வாடாதமலரடிக்கீழ்

(க) "𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑍇𑌨𑍁𑌰𑌾𑌧𑌾𑌸𑌂𑌭𑍂𑌤𑌂 𑌵𑍀𑌰𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍇𑌪𑍁𑌰𑍇।
𑌗𑌜𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌂𑌶𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌦𑍍𑌯𑌂 𑌨𑌾𑌥𑌮𑍁𑌨𑌿𑌂 𑌭𑌜𑍇॥

வைத்து ஸர்வவிதகைங்கர்யமும் பண்ணிக்கொண்டு ஸகுடும்பமாக (க) "நாயோத்யாயைநராஜ்யாய ஸ்ப்ருஹயேத்யகதாசந" என்று பெருமாளவ்விடத்தை ஸந்தோஷித்தாப்போலே ஸந்தோஷித்து எழுந்தருளியிருக்க,

அப்போது மன்னனாரும் 'நம்முடைய வீரநாராயணபுரம் வந்து காணாய்' என்று நாதமுநிகளுக்கு ஸ்வப்நத்தில் அருளிச்செய்ய, அவ்வர்த்தத்தை யமுனைத்துறைவர் முன்னே சென்று நாதமுநிகள் விண்ணப்பஞ்செய்ய, அவரும் அர்ச்சகமுகேந விடைகொடுத்துத்தீர்த்தப்ரஸாதமும்ப்ரஸாதித்தருள, நாதமுநிகளும் ஸகுடும்பமாக வாராணஸீ வழியாய்ப்புருஷோத்தமத்தேற எழுந்தருளி, ஸ்ரீஜகந்நாதனையுப் திருவடி தொழுது, ஸிஹ்மாத்ரியில் அப்பனையும் ஸேவித்து, (உ) "அஹோ வீர்யமஹோஸௌர்யமஹோபாஹுபராக்ரம: | நாரஸிம்ஹமஹம் வந்தே அஹோபிலமஹாபலம்" என்றுசொல்லப்பட்ட அழகியசிங்கரையும், "பரன்சென்றுசேர் திருவேங்கடமாமலை" என்கிற திருமலையாழ்வாரையும் ஸேவித்து, ஸ்வாமிபுஷ்கரிணியில்நீராடி, வேங்கடமாமலைமேய அப்பனையும் திருவடிதொழுது, கடிகாசலத்தில் அக்காரக்கனி அழகிய சிங்கரையும் ஸேவித்து, (௩) "நகரீணாஞ்சஸர்வாஸாம் புரீகாஞ்சீவிஸிஷ்யதே| கிரீணாஞ்சாபிஸர்வேஷாம்ஸ்ரேஷ்டோஹஸ்திகிரிஸ்ஸ்ம்ருத:" என்கிறபடியே உத்க்ருஷ்டமானகச்சிப்பெருநகரில் பிணியொழித் தமரர்பெருவிசும்பருளும் பேரருளாளனையும் ஸேவித்து, திருவஹீந்திரபுரத்திலும் தெய்வநாயகனைத் தொழுது, திருக்கோவலூரில் ஆழ்வார்கள் நயினாரையும்ஸேவித்து, சிறப்புடைய மறையவர்வாழ்திருவரங்கத்தில் யாவரும்வந்தடிபணியுமரங்கநகர் துயின்ற பெரிய பெருமாளையும் ஸேவித்து, தண்குடந்தைக் கிடந்தமாலை நெடியானையும்ஸேவித்து, அங்குநின்றும் மீண்டு வீரநாராயணபுரத்திலெழுந்தருளிமன்னனாரையும்தண்டன்ஸமர்ப்பித்து நிற்க, மன்னனாரும் (ச) "விதேஸாதாகதம்புத்ரம்ஸமீக்ஷ்யஜநநீயதா" என்கிறபடியே குளிரக்கடாக்ஷித்தருள, அங்குள்ளவர்களும் இந் நாதமுநிகளுக்கு பகவத்பக்திமேலிட்டு இருப்பதையும், மன்னனு

(க) "நாயோத்யாயைநராஜ்யாய ஸ்ப்ருஹயேத்யகதாசந."
(உ) "அஹோவீர்யமஹோஸௌர்யமஹோபாஹுபராக்ரம: நாரஸிம்ஹமஹம்வந்தே அஹோபிலமஹாபலம்." (௩) "நகரீணாஞ்சஸர்வாஸாம் புரீகாஞ்சீவிஸிஷ்யதே| கிரீணாஞ்சாபிஸர்வேஷாம் ஸ்ரேஷ்டோஹஸ்திகிரிஸ்ஸ்ம்ருத:." (ச) "விதேஸாதாகதம்புத்ரம்ஸமீக்ஷ்யஜநநீயதா."

ருக்கு இவரிடத்தில் உகப்புமேலிட்டிருப்பதையும் கண்டு, இவரைக் கொண்டு மன்னனார் கடாக்ஷம்பெறவேணுமென்று இந்நாதமுநிகளை ஆராதித்துக்கொண்டிருக்க, இந்நாதமுநிகளும் மன்னனாருக்குத்திரு மாலைமுதலான கைங்கர்யங்களையும் செய்துகொண்டு ஶாஸ்த்ரங்களையும் ப்ரவர்த்திப்பித்துக்கொண்டிருக்க,

அப்போது சிலதிருநகரிஸ்ரீவைஷ்ணவர்கள் எழுந்தருளி மன்னனாரைஸேவித்து, "ஆராவமுதே" என்கிற திருவாய்மொழியை அநுஸந்தித்துக் குணாநுபவம்பண்ண, அதைக்கண்டு நாதமுநிகளும் 'யோகத்தாலே கண்ணனை அநுபவிக்குமதைக்காட்டிலும், இத்திருவாய்மொழியாலேகுணாநுபவம்பண்ணுகிறஇது இனியதாயிருந்தது' என்று மகிழ்ந்தருளி, அவர்களைத் தண்டன்ஸமர்ப்பித்து, அந்தத் திருவாய்மொழியைக்ரஹித்துத் தாமும்குணாநுபவம்பண்ணி, இது ஆயிரம்பாட்டுடையதாய் இதுபத்துப்பாட்டாய் இதிலும்கண்ணனவதாரத்தைக்கணிசித்துத் திருக்குடந்தை எம்பெருமான்விஷயமாய்க் குருகூர்ச்சடகோபனருளிச்செய்ததாகையாலேஇவ்வாயிரத்தையும் ப்ரஸாதிக்கவேணும் என்று அவர்களைக்கேட்க, அவர்களும் "எங்களுக்குத் திருநகரிஜந்மபூமியாகிலும், சிரகாலமாய்த் திவ்யதேஶயாத்ரை செய்துகொண்டு திருக்குடந்தை ஏறவந்து, ஆராவமுதனைத் தண்டன்ஸமர்ப்பித்து நிற்கும்போது, வாழ்தொல்புகழாரான அங்குள்ளவர்கள், "ஆராவமுதே" என்கிற இத்திருவாய்மொழியை அநுஸந்திக்கக்கேட்டு, அவர்களிடத்தில் பணிந்து, இப்பத்துப்பாட்டுக்களையும் அப்யஸித்தோம் மற்றதறியோம்" என்ன, அவர்களுக்குத் தீர்த்தப்ரஸாதம் ப்ரஸாதிப்பித்து ஸத்கரித்து மன்னனார் நியமநங்கொண்டு சூழ்புனல்குடந்தையைத்தொழுது, "ஆராவமுதே" என்கிறதிருவாய்மொழியாலே அமுதன்திருவடிதொழுது, அங்குள்ள பெரியோர்களையும் திருவாய்மொழி ஆயிரம்ப்ரஸாதிக்கவேணுமென்று ப்ரார்த்திக்க, அவர்களும் "இப்பத்துப் பாட்டுக்களையே அறிவோம் மற்றதறியோம்" என்றவாறே நாதமுநிகளும் திருநகரியேற எழுந்தருளி, ஆழ்வாரையும் பொலிந்துநின்றபிரானையும்திருவடிதொழுது, அங்குள்ள பெரியோர்களையும் ஸேவித்துத் "திருவாய்மொழி ஆயிரமும் ப்ரஸாதிக்கவேணும்" என்ன, அங்குள்ளாரில் பராங்குஶதாஸரென்கிறவர் "இவ்விடத்தில் திருவாய்மொழியென்றுகேட்டதத்தனை போக்கி, லுப்தமாகையாலே அப்யஸித்தறியோம், ஆகிலும் ஆழ்வார்விஷயமான கண்ணிநுண்சிறுத்தாம்பு எங்களுக்கு ஸம்ப்ரதாயாகதமாகையாலே இத்தை அப்யஸித்துப் பன்னீராயிரம்

ஆவ்ருத்திசெய்தீராகில் ஆழ்வாரை ப்ரத்யக்ஷீகரிக்கலாம்' என்றருளிச்செய்ய,

நாதமுநிகளும் அப்ரபந்தத்தை அப்யஸித்துத் திருப்புளியாழ்வாரடியிலே பன்னீராயிரம்ஆவ்ருத்தி அநுஸந்திக்க, அப்போது (க) "ஸகாலஸ்ஸௌம்ய ஸம்ப்ராப்த:" என்கிறபடியே 'இதொருநன்னாளகப்பட்டது' என்று எம்பெருமானும்பிராட்டியும்ஆழ்வாரை நியமிக்க, ஆழ்வாரும் மதுரகவிகளோடே இந்நாதமுநிகள் யோகத்திலெழுந்தருளி 'என்னவேண்டுவது?' என்றுகேட்க, நாதமுநிகளும் 'திருவாய்மொழிமுதலாக விசேஷார்த்தங்களை ப்ரஸாதிக்கவேணும்' என்று ப்ரார்த்திக்க, ஆழ்வாரும் திவ்யதம்பதிகளுடையநியமநப்படிக்கு, இவருக்கு, (உ) "திவ்யந்ததாமி தேசக்ஷு:" என்கிறபடியே திவ்யசக்ஷுஸ்ஸையும் ப்ரஸாதித்துத் திருமந்த்ரத்தையும் திருமந்த்ரார்த்தமான வ்யாஸஸூத்ரததர்த்தங்களையும் திருவாய்மொழிமுதலான நாலாயிரப்ப்ரபந்தங்களையும் மற்றுமுள்ள ரஹஸ்ய ததர்த்தங்களையும் உபதேசித்தருள, இந்நாதமுநிகளும் அவைகளைப்பெற்று க்ருதார்த்தராய் ஆழ்வாரையும் பொலிந்துநின்றபிரான்முதலானஎம்பெருமான்களையும் ஸேவித்து ப்ரபந்தாநுஸந்தாநம் பண்ணிக்கொண்டிருக்க, அங்குள்ள பெரியோர்கள்இந்நாதமுநிகளைத்தண்டன்ஸமர்ப்பித்து, தேவரீர் பக்த்யதிசயத்தாலே ஆழ்வார் ப்ரஸந்நராய்த் திருமந்த்ரத்தையும் திருமந்த்ரார்த்தமான வ்யாஸஸூத்ரதிவ்யப்ரபந்தங்களையும் மற்றுமுள்ள விசேஷார்த்தங்களையும் ப்ரஸாதித்தருளினபடி ஆச்சர்யம் அன்றோ? என்று போரஉகந்து ஒருகதையை அருளிச்செய்தார்கள். அதெங்ஙனேயென்னில்:—

முன்பு திருமங்கையாழ்வார் பெரிய பெருமாளைப்ப்ரார்த்தித்து இந்தஆழ்வாரைத் திருவரங்கத்திருப்பதியில் எழுந்தருளப்பண்ணுவித்து, மார்கழிசுக்லஏகாதசிமுதலாகப்பத்துநாளில் வேதபாராயணத்தோடுதிருவாய்மொழியை அநுஸந்திப்பித்து, அதற்குத்திருவத்யயநோத்ஸவமென்று திருநாமம்சாத்தி, இப்படிக்குப்ரதிஸம்வத்ஸரம் நடந்துவரும்படி பெரியபெருமாள் நியமநம்பெற்றுப் பண்ணுவித்தருளினாரென்றும், பின்பு சிலநாள்கழிந்தவாறே காலவைஷம்யத்தாலே ஆழ்வார்கோயிலுக்கெழுந்தருளாமலும், திவ்யப்ரபந்தங்களும்லுப்தங்களாய் விட்டதென்றும், பெரியோர்கள்சொல்லக்கேட்டிருந்தோம் காண்: என்றருளிச்செய்ய, நாதமுநிகளும் அவர்களைத் தண்டன்ஸமர்ப்பித்து "யானுப்பத்தன்னைத்தான்பாடி" என்கிறபடியே

(க) '𑌸 𑌕𑌾𑌲𑌸𑍍𑌸𑍌𑌮𑍍𑌯 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌃' (உ) '𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌦𑌦𑌾𑌮𑌿 𑌤𑍇 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃'

‘அடியேனைக்கொண்டொருகுறைதீர்த்தான் மற்றொன்றையும்தீர்க்கக் கடவன்’ என்றுப்ரார்த்தித்துக் கோயிலேறஎழுந்தருளி, அழகியமணவாளனுக்குத் திருமங்கையாழ்வார் நியமநப்படிக்குத்திருநகரிக்குத் திருமுகப்பட்டயம்போய் ஆழ்வாரை எழுந்தருளப் பண்ணுவித்து, உபாங்கங்களான இரண்டாயிரங்களை ப்ரதமைமுதல்பத்துநாளிலும், திருவாய்மொழியை ஏகாதஸிமுதல் பத்துநாளிலும், மற்றொராயிரத்தைப்பின்பு ஒருநாளிலும் அநுஸந்திப்பித்து, ஆகஇருபத்தொரு நாளில் திருவத்யயநோத்ஸவத்தை நடப்பித்துத் திருக்குடந்தை ஏறஎழுந்தருளி, ஆராவமுதனையும் தண்டன்ஸமர்ப்பித்து, ஒருநம்மாழ்வாரைத்திருப்ரதிஷ்டைசெய்து, மார்கழிமாஸம்முதலிருபத்தொரு நாளளவிலே ஸங்க்ரமோத்ஸவத்திற்கு விரோதமன்றிக்கேதிருவத்யயநோத்ஸவத்தை நடப்பித்து, ஆராவமுதாழ்வானென்றுதிருநாமம் சாத்தி, இப் ப்ரபந்தங்களை நிலைநிறுத்தினவராகையாலே இஸ்ஸித்தாந்தப்ரவர்த்தகர் ஆராவமுதாழ்வானே என்று போரஉகந்து பணிந்து நிற்க, (க) “ஏஷஸர்வஸ்வபூதோமே பரிஷ்வங்கோஹநூமத:” என்கிறபடி. ஆராவமுதாழ்வானும் குளிரக்கடாக்ஷித்தருள, நாதமுநிகளும்விடைகொண்டு, வீரநாராயணபுரத்தேற வெழுந்தருளி, மன்னனாரையும்ஸேவித்து, “நங்கண்ணன் கண்ணல்லதில்லையோர் கண்ணே” என்கிறபடியே தேவரீர்நியமநத்தாலே இவ்வளவுஸித்தாந்தோத்தாரணம் உண்டாய்த்து; என்று விண்ணப்பஞ்செய்து, பின்னையும்சிலஸ்ரீவைஷ்ணவதர்மங்களையும்நியமித்தருளிநிற்க, மன்னனாரும் குளிரக்கடாக்ஷித்தருளி, (உ) “அத்ரைவ ஸ்ரீரங்கேஸுகமாஸ்வ” என்னும்படி அர்ச்சகமுகேந திருவாய்மலர்ந்தருளி, திருமாலைமுதலானவரிசைகளையும்ப்ரஸாதிக்க, இவரும்பகவந்நியமநத்தைச்சிரஸாவஹித்துக் கீழையகத்தாழ்வான் மேலையகத்தாழ்வான்முதலானவர்களுக்குத் திவ்யப்ரபந்தங்களைத் தேவகாநத்தோடே ஸிக்ஷிப்பித்துச் சிலரைக்கோயிலிலே பெரியபெருமாளுக்குப் பாடும்படி நியமித்தருளி, சிலரைக்கொண்டு மன்னனாருக்குப்பாடுவித்துப், இப்படி வ்யாஸபகவான் வேதங்களை உதாத்தாநுதாத்த ஸ்வரிதப்ரசயங்களோடே ஸிக்ஷித்துவைத்தாப்போலே இத்திவ்யப்ரபந்தங்களையும் திவ்யகாநத்திலே அடைத்து இயலுமிசையுமாக்கிப் பாடுவித்தருள இது லோகத்தில் ப்ரஸித்தமாயிற்று.

(க) “𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌤𑍁 𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌙𑍍𑌗𑍋 𑌹𑌨𑍂𑌮𑌤𑌃”

உ) “𑌅𑌤𑍍𑌰𑍈𑌵 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑍇 𑌸𑍁𑌖𑌮𑌾𑌸𑍍𑌵.”

பின்பு ஒருநாள் அப்படி ப்ரஸித்தமான தேவகானத்தை அப்யஸித்த ஒருதாஸியும் மநுஷ்யகானத்திலே ஸமர்த்தையான ஒரு தாஸியும் கங்கைகொண்டசோழபுரத்தில் அந்தத்தேஸாதிபதியான சோழன்பக்கல்கானம்பண்ண, அவனும்கேட்டு, மநுஷ்யகானஸமர்த்தையான தாஸிக்கு த்யாகம் கொடுத்துத் தேவகானஸமர்த்தையான தாஸியை அநாதரிக்க, அவளும் பக்திமேலிட்டுத் திவ்யதேஸங்கள் தோறும்பாடிக்கொண்டுவந்து மன்னனார்முன்பேஸேவித்துப் பாட, அத்தைக்கேட்டநாதமுநிகளும் அவளைக்கொண்டாடி மாலைதீர்த்தம் ப்ரஸாதிப்பிக்க, அவளும் ராஜாவிடத்தில் "தேவகானத்தில்ஸமர்த்தரான நாதமுநிகளை அழைத்து, நமமைத்தேவகானம்பண்ணச்சொல்லி அதன்வாசியறிவாய்காண்" என்றுசொல்ல, ராஜாவும் நாதமுநிகளை அழைத்துவரவிட, அவரும் தமக்குத்திருவுள்ளமில்லாவிடிலும் சில ஸம்ருத்த்யர்த்தமாக அங்குள்ளாராலேப்ரார்த்திக்கப்பட்டு அவ்விடத்திலெழுந்தருள, ராஜாவும் எதிர்கொண்டுவந்து மர்யாதைபண்ணி 'இவள்பாடுகிற தேவகானவிஸேஷம்என்?' என்ன, நாதமுநிகளும் அவ்விடத்தில் தேவதாதிஷ்டிதமான ஒருஸிலாஸ்தம்பவிஸேஷத்தில் ஒரு தாளத்தைவைத்துத் தேவகானம்பண்ணச்சொல்ல, அந்தஸ்தம்பமுருகிவர தேவகானம் விட்டவாறே அத்தாளத்தை யெடுக்கச் சொல்லி அத்தையெடுக்க ஒண்ணாமையைக்காட்டி, பின்னையும்பாடி எடுத்துக்கொள்ளவிட, பின்பும் ஏககாலத்தில் நானூறுதாளத்தைத்தட்டச் சொல்ல, அந்தஸப்தத்தைக்கேட்டு, 'இத்தாளம் இவ்வளவுபரிமாணமுடையது' என்று அருளிச்செய்ய, ராஜாவுஞ்ஸோதித்து அந்யூநாதிகமாயிருக்கையாலே நாதமுநிகள் திருவடிகளிலேதண்டனிட்டு அநேக ஸந்மாநங்களைப் பண்ணநினைக்க, நாதமுநிகள் நிஸ்ஸ்ப்ருஹராகையாலே அவைகளைத்தவிர்ந்து ராஜாவை ஆஸீர்வதித்து மன்னனார்பக்கல் எழுந்தருளினர். ராஜாவும் அந்தத்தாஸிக்கு மர்யாதைபண்ணி நாதமுநிப்ரப்ருதிகளிடத்திலே ப்ரதிபத்திபண்ணிப்போந்தான்.

உய்யக்கொண்டார் வைபவம்.

பின்பு(க) "ஸரீரம்வஸுவிஜ்ஞானம்வாஸ: கர்மகுணாநஸூந்। குர்வர்த்தந்தாரயேத்யஸ்து ஸஸிஷ்யோநேதரஸ்ஸ்ம்ருத:" என்றுசொல்லுகிறஸிஷ்யகுணபூர்த்தியுடையரான புண்டரீகாக்ஷர் இந்நாதமுநிகள்

(க) "ஶரீரம்வஸுவிஜ்ஞாநம் வாஸ: கர்மகுணாநஸூந் ।
குர்வர்த்தம்தாரயேத்யஸ்து ஸஶிஷ்யோநேதர: ஸ்ம்ருத:."

திருவடிகளிலே ஆஸ்ரயிக்க, பின்னையும் குருகைகாவலப்பன் நம்பி கருணாகரதாஸர் ஏறுதிருவுடையார் திருக்கண்ணமங்கையாண்டான் வானமாதேவியாண்டான் உருப்பட்டூரோச்சான்பிள்ளை ஸோகத்தூராழ்வான் ஆக இவ்வெழுவர்களும் வந்து ஆஸ்ரயிக்க, நாதமுநிகளும் அந்த எண்மர்களுக்கும் மந்த்ரோபதேசாதிபுரஸ்ஸரமாகத் திவ்யப்ரபந்தங்களையும் ஸமஸ்தவிசேஷார்த்தங்களையும் ப்ரஸாதித்தருளி, ந்யாயதத்வமென்கிற சாஸ்த்ரத்தையும் யோகரஹஸ்யத்தையும் அருளிச்செய்து, அநுஷ்டித ப்ரபந்நராகையாலே பலரூப யோகத்திலே எழுந்தருளியிருந்தார்.

பின்பு ஒருகால் இவருடைய யோகவைபவத்தைக்கேட்டு ராஜாவும், தானும் ஸ்த்ரீகளுமாகவந்து மன்னனாரையும் நாதமுநிகளையும் ஸேவித்துப்போக, அப்போது "திருவுடைமன்னரைக்காணில் திருமாலைக்கண்டேனே யென்னும்" என்கிறபடியே நாதமுநிகளும் அவர்களை க்ருஷ்ணனும் கோபிமார்களுமாக நினைத்துப் பின்தொடர்ந்துபோக, குருகைகாவலப்பனுள்ளிட்டார் நாதமுநிகளைத் திருவடிதொழுது, (க)" தக்தாகிலாதிகாரத்வாத் ப்ரஹ்மஜ்ஞாநாக்நி நாமுநி:| வர்த்தமாநஸ்ஸ்ருதேர்மூர்த்திர்நைவஸ்யாத்வேதகிங்கர:" என்றுசொல்லுகிறபடி பகவத்கைங்கர்யங்களையும் பாகவதகைங்கர்யங்களையும் விட்டிருக்கும் அவர்கள்படியோ? தேவரீருக்கென்று விண்ணப்பஞ்செய்ய, அத்தைக்கேட்டு ஒக்குமொக்கும் கைங்கர்யபரர்களான நமக்குத்தகாதென்று அருளிச்செய்து மீளஎழுந்தருளி வேதாந்தப்ரவசநம்பண்ணிக்கொண்டிருக்க, அப்போது வங்கிப்புரத்தாச்சியும் தம்குமாரத்தியாரான அரவிந்தப்பாவையாள் என்கிற நாதமுநிகள் தேவியாரைப் பார்க்கவேணுமென்று அழைத்துக்கொண்டுவரும்படி ஒருவரை அனுப்புவிக்க, அவரும் நாதமுநிகள் திருவடிதொழுது அவ்வர்த்தத்தை விண்ணப்பஞ்செய்ய, நாதமுநிகளும் அப்படியே திருவுள்ளம்பற்றி ஆத்மகுணபூர்ணரான புண்டரீகாக்ஷரையும் கூட அனுப்புவிக்க, அவரும் ஆச்சிதிருமாளிகையில் கொண்டுபோய்விட்டு விடைகேட்க, ஆச்சியும் தீர்த்தப்ரஸாதம் ஸ்வீகரித்துப்போமென்று விடைகொடுக்க, அகத்துள்ளாரில் சிலமுக்குறும்பர் இவர்புரஸ்சிகரென்று திருமுற்றத்தில் முன்னாள் தண்ணீரில் சேர்த்தப்ரஸாதத்தை ஸ்வீகரிக்கும்படி செய்விக்க, அவரும் அத்தைஸ்வீகரித்துத்தன்னை க்ருதார்த்தராகஎண்ணிவிடைகொண்டு

(க) "𑌦𑌗𑍍𑌧𑌾𑌖𑌿𑌲𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌨𑌾 𑌮𑍁𑌨𑌿𑌃। 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌰𑍍𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌨𑍈𑌵 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑌕𑌿𑌙𑍍𑌕𑌰𑌃"

நாதமுநிகள் ஸந்நிதியில் வந்து தண்டன் ஸமர்ப்பிக்க, நாதமுநிகளும் இவருடைய ஸந்தோஷாதிஶயத்தை முகவிகாஸாதிகளாலே கண்டு, இது என்ன? என்று யோகத்தாலே கடாக்ஷித்தருளி, அவை எல்லாம் திருவுள்ளத்தில்கொண்டு போர உகந்து, "உமக்கு மர்யாதைநடந்தது என்?" என்று கேட்டருள, அவரும் அடியேன் பெற்றபேறு "ஞாலத்தில்புத்திரனைப்பெற்றார்நங்கைமீர்நானேமற்றாருமில்லை" என்கிறபடியே "ஸர்வோத்க்ருஷ்டமானது அன்றோ?" என்று விண்ணப்பஞ்செய்ய, நாதமுநிகளும் அதுஎங்ஙனே என்ன? "போனகஞ்செய்தசேடந்தருவரேல் புனிதமன்றே?" என்றும் (௧) "ததுச்சிஷ்டம்ஸபாவநம்" என்றும்சொல்லப்பட்டகலக்கமில்லாத் தண்ணீரில்வைத்த நல்லதோர்சோற்றை ஆச்சிநியமநத்தாலே அடியேன் ஸ்வீகரிக்கும்படி பெற்றபேறென்ன, நாதமுநிகளும் போர உகந்து "நம்மைஉய்யக்கொண்டீர்" என்று ஆலிங்கனம்பண்ணிக்கொண்டு "உமக்குத்தகுந்தபாரிதோஷிகமில்லை" என்று தந்திருவடிகளிரண்டையும் அவர் முடியிலமர்த்தியருள, அவரும் "கோலமாமென் சென்னிக்குன்கமலமன்னகுரைகழலே" என்று ஆழ்வார் ப்ரார்த்தித்தார், அடியேன் பெற்றேன் என்று ஸந்துஷ்டராக, அங்குள்ளார்களும் "இதென்ன ஆஶ்சர்யம்! இந்நாதமுநிகளுக்குப் பெருமாள்படியும் இப்புண்டரீகாக்ஷருக்குப் பிராட்டிபடியும் ஒத்திருந்ததே!" என்று உள்மகிழ்ந்து நாதமுநிகளைத்தண்டன்ஸமர்ப்பித்து, "இவருக்குஉய்யக்கொண்டாரென்றுதிருநாமம்ப்ரஸாதித்தால், இவ்வாத்மகுணத்தைப் பின்னோர்களும்கண்டு உஜ்ஜீவிப்பர்கள்" என்றுப்ரார்த்திக்க, அப்படியே நாதமுநிகளும் ப்ரஸாதித்தருளினர்.

அப்போது சிலர் ஶாஸ்த்ரார்த்தத்தைத் தெளிவிக்கைக்காக (௨) "யாதயாமங்கதரஸம்" என்றும் (௩) "நசபர்யுஷிதம்போஜ்யம்" என்றும் நிஷித்தமாகச்சொல்லப்பட்ட ப்ரஸாதத்தை ஸ்வீகரித்தும் இப்படி கொண்டாடும்படி யாவதே! என்று கேட்க, நாதமுநிகளும் *"ஆபஸ்தம்பதர்மாதிகளை அறியாதார் சோத்யம் ஆஜ்ஞாஸூத்த

---

(௧) "𑌤𑌦𑍁𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌂 𑌪𑌾𑌵𑌨𑌂". (௨) "𑌯𑌾𑌤𑌯𑌾𑌮𑌂 𑌗𑌤𑌰𑌸𑌂," (௩) "𑌨 𑌚 𑌪𑌰𑍍𑌯𑍁𑌷𑌿𑌤𑌂 𑌭𑍋𑌜𑍍𑌯𑌂"

* ஆபஸ்தம்பதர்மோயதா:—(𑌤𑍈𑌲𑌸𑌰𑍍𑌪𑌿𑌷𑍀 𑌤𑍂𑌪𑌯𑍋𑌜𑌯𑍇𑌦𑍁𑌦𑌕𑍇𑌽𑌵𑌧𑌾𑌯 𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌨𑌂 𑌪𑌰𑍍𑌯𑍁𑌷𑌿𑌤𑌮𑌖𑌾𑌦𑍍𑌯𑌾𑌪𑍇𑌯𑌾𑌨𑌾𑌦𑍍𑌯𑌂 𑌶𑍁𑌕𑍍𑌤𑌂 𑌚𑍇𑌤𑌿) தைலஸர்பிஷீ தூபயோஜயேதுதகேவதாய க்ருதாந்நம் பர்யுஷிதமகாத்யமபேயாநாத்யம் ஶுக்தஞ்சேதி. மநுரபி:—([illegible]

மான நம்மாசாரத்திலிட்டாது” என்றருளிச்செய்தார். இவ்வார்த்தைகளையெல்லாம் வங்கிப்புரத்தாச்சியும் கேட்டு, “திருவிலேனென்றும் பெற்றிலேன்” என்றுதம்மையும் தம்பரிஜநங்களையும் நொந்து, நாதமுநிகளையும் அங்குள்ளவர்களையும்போர உகந்து (க) “தர்மேணப்ரஹ்மவித்பாதி தஸபூர்வாந்தஸாவராந் | கந்யாப்ரஹ்மவிதேதத்தா ஸதபூர்வாந்ஸதாவராந்” என்கிறபடியே நந்திருமகளார் ஸம்பந்தத்தாலும் “உகக்குநல்லவரொடுமுழிதந்து” என்கிறபாட்டின்படியே அதுவும் நம்முடையஸம்ருத்தியாகையாலும் “எம்மாபாவியேற்கும் விதிவாய்க்கின்று வாய்க்குங்கண்டீர்” என்னும்படி நமக்கு உய்யும் வகைஉண்டென்றும், ஸந்துஷ்டராய்ப் புண்டரீகாக்ஷரிடத்தேறச்சென்று (உ) “யதிகிஞ்சிததிக்ராந்தய” என்றுக்ஷாமணம்பண்ணிக்கொண்டு அரவிந்தப்பாவையாரையும் நாதமுநிகளோடேசேர்த்துக் கண்டு மகிழ்ந்து க்ருதார்த்தராயெழுந்தருளினர்.

பின்னர் ஒருகால் நாதமுநிகள் குருகைகாவலப்பனுக்கு யோகரஹஸ்யக்ரமத்தைஉபதேஸித்து அநுஷ்டிப்பித்தருளினர். உய்யக்கொண்டாருள்ளிட்டாருக்குத் திருவாய்மொழி முதலானவேதாந்தப்ரவசநம் பண்ணும்படி நியமித்தருளினர்.

பின்பு உய்யக்கொண்டாரும் தர்ஸநார்த்தங்களை ப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்கிற காலத்திலே, இவர் திருவடிகளிலே மணக்கால் நம்பி, திருவல்லிக்கேணிப்பாண்பெருமாளரையர், சேட்டலூர்செண்டலங்காரதாஸர், புண்டரீகாக்ஷதாஸர், கோமடத்துத்திருவிண்ணகரப்பன், உலகப்பெருமாள்நங்கை இவர்கள் ஆஸ்ரயித்தார்கள். இவர்களில்:—

(க) “[illegible] |
[illegible]” (உ) “[illegible].”

[illegible]) அஸூத்ரக்ரதிதம்புஷ்பமஸ்நேஹாக்தந்ததோதநம் அவாலுகயுதம்தோயம்ஸர்வப்ர்பூஷிதம்பவேதிதி

மணக்கால்நம்பி வைபவம்

மணக்கால்நம்பி முன்பே பன்னிரண்டுஸம்வத்ஸரம் ஆசார்ய கைங்கர்யஞ் செய்துகொண்டிருக்க, உய்யக்கொண்டார் தேவிகள் திருநாட்டுக்கெழுந்தருளினார். பின்பு திருமாளிகைக்கைங்கர்யமும் செய்துகொண்டிருக்கும்போது ஒருநாள் ஊர்பெண்பிள்ளைகள் திருக்காவேரியில் குளித்துப் பத்தாந்நம்புஜிக்கப்போக, உய்யக்கொண்டார் பெண்பிள்ளைகளிருவரையும் அழைத்துக்கொண்டு போய்ப் புஜிப்பித்துவரும்போது பெண்பிள்ளைகள் முன்னேவழி தப்பிவந்து ஒருவாய்க்கால்சேறுயிருக்கக்கண்டு திகைத்துநிற்க, தாமும் அங்குவரவந்து அவர்களைத் தம்முதுகிலேஅடியிட்டுப்போகும்படிபண்ணித் தான்குளித்துவருவதற்கு முன்னே உய்யக்கொண்டாரும் இச்செய்தியைக்கேட்டு ப்ரீதராய் இவரும் வந்தடிபணிந்தவாறே தந்திருவடிகளிரண்டையும் அவர்திருமுடியிலமர்த்தியருளி, இது நம்மாசார்யர் நமக்குப்ரஸாதித்தருளினபாரிதோஷிகமென்றருளிச்செய்ய, நம்பியும் "உற்றேனுகந்துபணிசெய்துஉனபாதம், பெற்றேன் ஈதேயின்னம் வேண்டுவதெந்தாய்" என்று விண்ணப்பஞ் செய்ய, உய்யக்கொண்டாரும் உகந்தருளினார்.

ஆளவந்தார் வைபவம்.

(க) ஆஷாடே சோத்தராஷாடாஸம்பூதம்தத்ரவைபுரே।
ஸிம்ஹாநநாம்ஸம்விக்யாதம் ஸ்ரீயாமுநமுநிம்பஜே.

பின்பு நாதமுநிகளும் தம் குமாரரான ஈஸ்வரமுநிகளுக்குக் கலியுகத்தில் - ௪0௧௮- ஆவதான தாதுவர்ஷம் ஆடிமாஸம் உத்தராஷாடாநக்ஷத்ரத்தில் ஒரு குமாரரவதரித்தருள, அவருக்கு யமுநைத்துறைவரென்கிற திருநாமம் சாத்துமென்று ஈஸ்வரமுநிகளுக்கும், திருமந்த்ராதி ஸமஸ்த விசேஷார்த்தங்களையும் ப்ரஸாதியுமென்று உய்யக்கொண்டாருக்கும், யோகரஹஸ்யத்தை ப்ரஸாதியுமென்று குருகைகாவலப்பனுக்கும் நியமித்தருளி யோகத்திலெழுந்தருளியிருந்தார்.

(உ) ஆஷாடே சோத்தராஷாடா ஸம்பூதம் தத்ர வைபுரே।
ஸிம்ஹாநநாம் ஸம்விக்யாதம் ஸ்ரீயாமுநமுநிம் பஜே.

பின்பு ஈஶ்வரமுநிகளும் அந்தக்குமாரருக்குஜாதகர்மத்தையும் பண்ணி யமுநைத்துறைவரென்கிற திருநாமத்தையும் சாத்தினார். பின்பு உய்யக்கொண்டாரும் கோயிலிலே அஸக்தராய் எழுந்தருளி யிருக்கும்போது, தமக்கு நாதமுநிகள் நியமித்த கைங்கர்யத்தை மணக்கால்நம்பிக்கு நியமித்தருளி, 'நான் செய்யப்பெற்றிலேனே' என்று நொந்துநிற்க, நம்பியும் அப்படியே 'நாதமுநிகள் திருப்பேரனார்க்கு அடியேனைக்கொண்டு செய்கிற கைங்கர்யம் தேவரீர்செய்கிற கைங்கர்யமன்றோ?' என்று விண்ணப்பஞ் செய்யஉய்யக்கொண்டாரும் உகந்தருளினார்.

பின்பு ஈஶ்வரமுநிகள் அந்தக்குமாரருக்கு அந்நப்ராசநசௌளங்களைச் செய்து உபநயநஞ்செய்தருளும்போது மணக்கால்நம்பி எழுந்தருளி திருவிலச்சினை ப்ரஸாதித்து திருமந்த்ரத்தையு முபதேஶித்தருளினார்.

பின்பு நாதமுநிகளும் * "குருபுத்ர பௌத்ராதிகளும் வித்யாதாநத்திற்கு ப்ரஶஸ்தபாத்ரங்கள்" என்றும், "ஜ்ஞாநஸந்ததியாலே முற்பட்டவர்களும் குருக்களாக வரணீயர்" என்றுஞ் சொல்லுகிற விஶேஷார்த்தங்களை ப்ரகாஶியாநின்றுகொண்டு, யமுநைத்துறைவரையும் குளிரக்கடாக்ஷித்து மகிழ்ந்தருளினார்.

பின்பு ஒருநாள் நாதமுநிகள் நீராடி எழுந்தருளும்போது, தம் பெண்பிள்ளைகள் வந்து "ஐயரே! இரண்டு வில்லிகளும் ஒரு பெண்ணும் ஒருகுரங்கைக் கொண்டுவந்து நாதமுநிகள் எங்கே?"

---

* இவ்விடத்தில்ஸம்ப்ரதாயாந்தரஸ்த்தர்கள்சிலக்ரந்தங்களில் ஸ்ரீமந்நாதமுநிகள்முந்நூற்றுமுப்பது திருநக்ஷத்ரம்எழுந்தருளியிருந்ததாயும், பின்பு ஈஶ்வரமுநிகளுக்கு ஒருகுமாரர்அவதரிக்கப்போகிறார் அவருக்குயமுநைத்துறைவர்என்று திருநாமம்சாத்தித்திருயந்த்ரமந்த்ரார்த்தாதிகளையும்உபதேஶியும்என்றுஉய்யகொண்டாருக்குநியமித்தருளித் திருநாட்டுக்கெழுந்தருளினதாயும் எழுதியிருக்கிறார்கள். ஸ்ரீமந்நாதமுநிகள் முந்நூற்றுநாற்பது திருநக்ஷத்ரம்எழுந்தருளியிருந்து ஆளவந்தாரின்எட்டாவது திருநக்ஷத்ரத்தில் திருநாட்டுக்கெழுந்தருளினார். ஆகையாலிறேஸம்ப்ரதாயபரிஶுத்திரஹஸ்யத்தில், 'நாதமுநிகள்தம்முடையதிருப்பேரனாரான ஆளவந்தாருக்குத்தாம் உபதேஶியாதேதம்முடையஶிஷ்யர்களை இவருக்கு உபதேஶியுங்கள்என்று ஆஜ்ஞாபித்தது; குருபுத்ரபௌத்ராதிகளும் வித்யாதாநத்திற்குப்ரஶஸ்தபாத்ரங்களென்றும்,ஜ்ஞாநஸந்ததியாலே முற்பட்டவர்களும் குருக்களாக ஆதரணீயரென்றும் ஆகாங்க்ஷயன்றிக்கே...ப்ரதிஷ்டிதமாகாதென்றும் தெளிவித்தபடி' என்று நம்தேஶிகன் அருளிச்செய்தார்.

என்று கேட்க, நாங்களும் நீராடி வருவரென்று சொன்னோம்; "சடக்கென வரச் சொல்லீரென்று சொல்லிப்போனார்கள்" என்ன, நாதமுநிகளும் "எங்கேறப்போனார்கள்" என்ன "தென்றிசை யேறப்போனார்கள்" என்றார்கள் அதைக்கேட்டு 'இருவராய்வந்தா ரென்முன்னே நின்றார். என்னும்படி நீங்கள் கண்டுமகிழ்ந்தீர்கள்; நான் காணப்பெற்றிலேனே" என்று நொந்து "காணுமாறருளாய்க்காகுத்தா" என்றுபுலம்பி, அத்திசையைநோக்கிச்சென்றுகங்கைகொண்டசோழபுரத்தருகேவந்து, "இப்படி வில்லிகளைக் கண்டீர்களோ?" என்று கேட்க, அவர்களும் "இத்திசையேபோனார்கள்" என்றவாறே அவ்விடம் தேடிப்போக, அங்கு அழகியசிங்கராய் ஸேவைஸாதித்தருள, அவ்வளவிலும்(க) 'த்ருஷ்டஏவஹிநஸ்ஸோகமபநேஷ்யதிராகவ:' என்கிறசக்ரவர்த்தித்திருமகன் நம்மிடம் தேடிவந்தும் காணப்பெற்றிலேன்! என்று மூர்ச்சித்துக்கிடக்க, அப்போது பிராட்டியோடும் இளைய பெருமாளோடும் திருவடியோடும் கலந்து சக்ரவர்த்தித் திருமகன் ஸேவைஸாதித்தருள, "என் னமுதனைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக்காணாவே" என்னும்படி அவன் திருவடிதொழுது திருநாட்டுக்கெழுந்தருளினார். இச்செய்தியைக் குருகைகாவலப்பனுள்ளிட்டார் கேட்டு வ்யாகுலப்பட்டு ஈஸ்வரமுநிகளைத் தேற்றி அவரைக்கொண்டு நாதமுநிகளுடைய திவ்யவிக்ரஹத்தை ப்ரஹ்மமேத விதியாலே ஸம்ஸ்கரிப்பித்து, வீரநாராயணபுரத்தேற வெழுந்தருளி மற்றும் சரமகைங்கர்யங்களையெல்லாம் பரக்கச் செய்தருளினார்கள். நாதமுநிகள் திருநக்ஷத்ரம் ஆனி அநூராதை.

பின்பு குருகைகாவலப்பனும் நாதமுநிகள் நியமனப்படிக்கு யோகக்ரமத்திலெழுந்தருளியிருந்தார்.

பின்பு உய்யக்கொண்டாரும் நாதமுநிகள் திருநாட்டுக்கெழுந்தருளினாரென்று கேட்டு ஸோகார்த்தராய்த் தேறி ஸ்ரீசூர்ணபரிபாலநஞ்செய்தருளி முதலிகளுக்கு விசேஷார்த்தங்களை அருளிச்செய்துகொண் டிருக்கும்போது, திருக்கண்ணமங்கையாண்டான் ஒருஜபகால விசேஷத்தில் ப்ராக்ருதாபிமாநத்தாலே இரண்டு நாய்களுக்கும் இரண்டு மநுஷ்யர்களுக்கும் தேஹநாஸத்தைக்கண்டு, "அப்ராக்ருதநித்ய ஸம்பந்தியான எம்பெருமான் நிற்க, நாமும் ந்யஸ்தபாரனானபின்பு இனியொன்றும் செய்யவேண்டுவதில்லை" என்று ஆஹாரநித்ராதிகளையும்ஸந்த்யாவந்தநாதிகைங்கர்யங்களையும் விட்டுக்

(க) "த்ருஷ்ட ஏவ ஹி ந ஶோகம் அபநேஷ்யதி ராகவ:"

கேவலம் பகவத்த்யாநத்தை அநுஷ்டித்துக்கொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினரென்று கேட்டருளி, பொரவுகந்து, "ஆஹாரநித்ராதிகளை அங்கீகரித்தவர்களுக்கு ஸந்த்யாதிகைங்கர்யங்கள் அவஶ்யகர்தவ்யங்களென்று அநுஷ்டித்த நம்நாதமுநிகளையும் அதிஶயித்தார் திருக்கண்ணமங்கையாண்டான்" என்று அருளிச்செய்து, திருநாட்டுக்கெழுந்தருளினர். உய்யக்கொண்டார் திருநக்ஷத்ரம் சித்திரையில் க்ருத்திகை.

பின்பு மணக்கால்நம்பி முதலானவர்கள் மிகவும் ஶோகார்த்தர்களாய்த் தாங்களே தேறிநிற்க, நம்பியும் உய்யக்கொண்டாருக்குச் சரமகைங்கர்யங்களை யெல்லாஞ் செய்தருளி, மற்றுமுள்ள முதலிகளையும் கூட்டிக்கொண்டு, வேதாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

பின்பு யமுனைத்துறைவர் அத்யயநம் பண்ணுகிறக்ரமத்தைக் கண்டு இரண்டாந்தரம் சொல்லவேண்டாதபடி இருக்கிறது என்ன ஆஶ்சர்யம் என்று அனைவரும் ஆநந்திப்பர்கள். இவருக்குத் திருக்கல்யாணமுஞ் செய்தருளி ஈஶ்வரமுநிகளும் திருநாட்டுக்கெழுந்தருள, யமுனைத்துறைவரும் அவருக்கு ப்ரஹ்மமேதம் முதலான சரமகைங்கர்யங்களை எல்லாஞ் செய்தருளினர்,

அநந்தரம் யமுனைத் துறைவரும் மஹாபாஷ்ய பட்டருடனே ஶாஸ்த்ராப்யாஸம் பண்ணுகிறகாலத்தில், ராஜாவின்பக்கல் ஆஸ்தானபண்டிதனை ஆக்கியாழ்வானுக்கு வித்வான்களெல்லாரும் கப்பங்கொடுத்துப் போருகையாலே மஹாபாஷ்யபட்டர்பக்கல் கப்பத்திற்குத் தாவுவந்தவாறே அவரும் முசித்துக்கிடக்க, யமுனைத்துறைவர் இதென்னவென்றுகேட்க, அவரும் இச்செய்தியைச் சொல்ல, அத்தைக்கேட்டருளி அந்தப்பத்ரத்தைக் கிழித்துவிட்டு (க)"நவயம்கவயஸ்துகேவலம் நவயம்கேவலதந்த்ரபாரகா:। அபிதுப்ரதிவாதிவாரண ப்ரகடாடோப விபாடநக்ஷமா:" என்கிறஶ்லோகத்தை அருளிச்செய்து எழுதி அனுப்பியருளினர்.

ஆக்கியாழ்வானும் ராஜாவுக்கு அறிவிப்பிக்க, ராஜாவும் யமுனைத்துறைவரை வரும்படி ஶாஸநம்வரவிட்டான். அந்த ராஜஶாஸநத்தையும் யமுனைத்துறைவர் கிழித்துவிட்டார். அத்தை ராஜா கேட்டுக் கோபித்துக்கொள்ள, ராஜபத்நியான திருவரங்கத்தம்மை

(க) "நவயம்கவயஸ்து கேவலம் நவயம் கேவலதந்த்ரபாரகா: அபிதுப்ரதிவாதிவாரண ப்ரகடாடோபவிபாடநக்ஷமா:"

யும் "யோக்யர்கள்பக்கல் செய்யவேண்டியதைச் செய்தால், அவர்களும் வருவர்கள், இல்லாவிடில், வரமாட்டார்கள்" என்ன, ராஜனும் தண்டிகைமுதலானவரிசைகளை அனுப்பிஅழைத்துவரவிட, யமுனைத்துறைவரும் அந்தத்தண்டிகையிலேறி ராஜஸ்தலத்தில் (க) ஆஶைலாத்ரிகந்யாசரண கிஸலயந்யாஸதந்யோபகண்டா தாரக்ஷோணீத ஸீதாமுககமலஸமுல்லாஸஹேதோஶ்ச ஸேதோ:। ஆசப்ராச்யப்ரதீச்யக்ஷிதிதர யுகளாதர்கசந்த்ராவதம்ஸாத் மீமாம்ஸாஶாஸ்த்ரயுக்மஶ்ரமம்ருதிதமநா ம்ருக்யதாம்மாத்ருஶோந்ய:" என்கிற ஶ்லோகத்தைச்சொல்லிப்பிருதுகூறிவைக்க, ஆக்கியாழ்வானும் அதைக்கேட்டு அதிகுபிதனாய் "இவருடன் தர்க்கிக்கவேண்டும்" என்ன, அரசனும் அதை யமுனைத்துறைவருக்குச் சொல்ல, யமுனைத்துறைவரும் "மத்யஸ்தர்முன்பாகவே வாதம்பண்ணவேண்டும்" என்றருளிச்செய்ய, மஹிபதியும் அவ்வாறே வித்வான்களை அழைப்பித்து ஒரு வாதஸ்தாநத்தில் கூட்ட, ராஜபத்நியும் ராஜாவைப்பார்த்து "முன்பு நமக்கு ஶைவவைஷ்ணவத்தில் விவாதம்வந்தவாறே நான்பண்ணின ப்ரதிஜ்ஞைக்குப்பகவதநுகூல்யமிருந்து இப்போது யமுனைத்துறைவர் எழுந்தருளினர்: ஆகையால் இருவருக்கும் ஜயாபஜயங்களில் என்செய்யக்கடவது?" என்ன, ராஜனும் "ஜயித்தவருக்கு நாம்அர்த்தராஜ்யம் கொடுத்து, தோற்றவரும் ஆள்செய்யும்படி பண்ணக்கடவது" என்ன,

அவ்வளவில், ஆக்கியாழ்வானும் யமுனைத்துறைவரைப் பார்த்து "உம்முடைய ஸத்வாதத்தை அஸத்வாதமாக்கக்கடவேன் உம்முடைய அஸத்வாதத்தை ஸத்வாதமாக்கக்கடவேன்" என்ன, யமுனைத்துறைவரும் அவனைப்பார்த்து (க) "ராஜாயம் ஸார்வபௌம:, ராஜபத்நீயம்பதிவ்ரதா" த்வம்மாதாநவந்த்யா, என்கிற மூன்றுவார்த்தை அருளிச்செய்ய, ஆக்கியாழ்வானும் உத்தரஞ் சொல்லமாட்டாதே இருந்தான். பின்பு வேதாந்தத்தில் அர்த்தவிசாரத்திலும்

(க) "आशैलादद्रिकन्याचरणकिसलयन्यासधन्योपकण्ठादारक्षोनीतसीतामुखकमलसमुल्लासहेतोश्च सेतोः। आ च प्राच्यप्रतीच्यक्षितिधरयुगलादर्कचन्द्रावतंसान्मीमांसाशास्त्रयुग्मश्रमविमलमना मृग्यतां मादृशोऽन्यः॥" (क) "राजायं सार्वभौमः, राजपत्नीयं पतिव्रता, त्वन्माता न वन्ध्या."

உத்தரஞ்சொல்ல ஸமர்த்தனல்லாமையாலே கீழ்ப்பட்டு அதோமுக னாயிருக்க, ராஜபத்நியான திருவரங்கத்தம்மையும் 'என்னை ஆளவந் திரோ!' என்று விண்ணப்பஞ்செய்து திருவடிதொழுது ராஜாவுட னே யமுனைத்துறைவரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு தம் மணிமாடமாளிகையிலே புகுந்தாள்.

ராஜாவும் அவருக்கு ஆளவந்தாரென்று திருநாமம் ஸமர்ப் பித்து அர்த்தராஜ்யத்தையும் கொடுத்து ஆக்கியாழ்வானையும் ஆள் செய்யச்சொல்ல, ஆளவந்தாரும் அவன்ப்ராஸிதவ்ருத்தவித்வானுகை யாலே ஆள்செய்யவேண்டுவதில்லையென்றருளிச்செய்து பதநீஸஹி தராய் ராஜபோகத்தில் ஸுகமாகஎழுந்தருளியிருந்தார். இப்படி யிருக்க நெடுங்காலம் கழிந்தவாறே சொட்டைநம்பி, தெய்வத்துக் கரசுநம்பி, பிள்ளையரசுநம்பி, திருவரங்கப்பெருமாள் என்று நான்கு குமாரர்கள் அவதரித்தார்கள்.

அநந்தரம் இந்தவ்ருத்தாந்தத்தை மணக்கால்நம்பியும் கேட் டருளி ஆளவந்தாரைக் காணவேணுமென்ற பேராசையோடே எழுந்தருள, அவ்விடம் ராஜபதமாய் கட்டுங்காவலுமாயிருக்கை யாலே ஆளவந்தாரைக்காணமாட்டாதே திருமடைப்பள்ளியில் கைங்கர்யபரரைநோக்கி "ஆளவந்தார் விரும்பியமுதுசெய்யும் கறி யமுதென்னை?" என்றுகேட்க, அவரும் தூதுளையென்று சொல்ல, நம்பியும் அன்றுமுதல் ஆறுமாஸம் தூதுளை இட்டுநடத்திப்போக, அவ்வளவிலும் பாஹாநஸிகருக்கு நம்பிஸ்வரூபம்தெரியாமையாலே ஆளவந்தாருக்கு அறிவியாமலிருக்க, நம்பியும் ஒருநாள் தவிர்ந்தார். ஆளவந்தாரும் "தூதுளையில்லையோ?" என்ன, பாஹாநஸிகரும் 'ஒரு வ்ருத்தர் நாள்தோறும் தூதுளையிட்டுநிற்பர், இன்றுதவிர்ந்தது என் னவோ?' என்று விண்ணப்பஞ்செய்ய, ஆளவந்தாரும் விஸ்மயப் பட்டு "இனி அவர்வந்தவாறேநம்மிடத்தில்வரும்படிசொல்லுங்கள்" என்ன, அவர்களும் மறுநாள் நம்பியைக்கண்டு இச்செய்தியைவிண் ணப்பஞ்செய்து ஆளவந்தார்பக்கல் எழுந்தருளப் பண்ணிவைக்க, ஆளவந்தாரும் நம்பியைக்கண்டு ப்ரத்யுத்தாநாபிவாதநபூர்வகமாகத் திருவடிதொழுது ஆஸநமிட்டு "பண்டிவரைக் கண்டறிவ தெவ்வூரில் யாமென்றே பயில்கின்றாளால்" என்கிறபடியே ஸந்தித்த ராய் "நம்பக்கல் விரும்பிவந்த உமக்கு என்னவேண்டுவது?" என்று கேட்க, நம்பியும் "நமக்கு வேண்டுவதொன்றுமில்லை" என்றும் "உம் முடைய பிதாமஹதநத்தை என்பக்கனின்றும் கைக்கொள்ளக்கட

வீர்" என்றும் "அதுகைக்கொள்ளுகைக்கு ஏகாந்தமாகச்சிலதூரம் போகவேண்டும்" என்றும் "அதுகொள்ளுமளவும் நித்யமாக உம்முடையபக்கல் நான் வந்துபோரும்படி அப்பணியிட வேண்டும்" என்றும் அருளிச்செய்ய, ஆளவந்தாரும் அப்படியே கட்டளையிட, நம்பியும் அன்றுமுதல் கீதார்த்தத்தைப் பதினெட்டுநாளில் அருளிச்செய்ய, ஆளவந்தாருக்கும் ஒருநாளைக்கொருநாள் ஆர்த்திபிறந்து "அவ்வஸ்துவை ஸாக்ஷாத்கரிக்க உபாயமில்லையோ?" என்ன, நம்பியும் "சரமஶ்லோகத்தை மெய்ம்மைப்பெருவார்த்தையாகையாலே ஏகாந்தத்தில் உபதேஶித்து ஆர்த்தத்தையும் தெளிவித்துப்பரமபுருஷார்த்தமான கைங்கர்யத்தையிப்ப்ரபத்தியாகிறஉபாயத்தை அநுஷ்டித்துப்ப்ரார்த்தித்தாலல்லது ஆஶ்ரிதகல்பகனை எம்பெருமான் தரயாட்டான் காணும்" என்றருளிச்செய்ய, ஆளவந்தாரும் நெல்லுக்குப் பால்கட்டப்பால்கட்டத் தலைவணங்குமாபோலே ஶாணுகதி நெஞ்சில்படப்பட ஶரண்யவிஷயப்ராவண்யாதிஶயம் பெற்றவராய் நம்பியை முன்னமே கைக்கொண்ட ஆசார்யரென்று அறிந்தவராய் இஸ்ஸம்ஸாரத்தில் ருசியில்லாதவராய் இருக்கக் கண்டு, அவரைக்கூட்டிக்கொண்டு (க) "தஸ்மாத்ரங்கம் மஹாபுண்யம் கோநஸேவேத புத்திமாந்" என்கிறபடியே ஜ்ஞாநப்ரதமாயும் நமன் தமரால் ஆராயப்பட்டறியாததுமான திருவரங்கத்திருப்பதியில் நம்பியுமெழுந்தருளி, பெரியபெருமாளைத் திருவடிதொழப்பண்ணி "உம்முடைய பூர்விகர்கள் தேடிவைத்தமஹாநிதி இது" என்றுகாட்டியருள, ஆளவந்தாரும் பெரியபெருமாள் முடிவில்லதோரெழில் நீலமேனியையும் அமலனாதிபிரான்படியே ஸேவித்து, "பழுதேபலபகலும் போயினவென்றஞ்சி, யழுதே னரவணைமேற்கண்டு தொழுதேன்" என்கிறபடியே கண்ணும்கண்ணீருமாய் அநுபவித்து நம்பிதிருவடிகளிலேதம்குமாரர்கள நால்வர்களையும் ஆஶ்ரயிப்பித்து, உபதேஶித்த பாசுரத்தைக்கொண்டு திருவாரமார்பனை திருவரங்கத்தம்மான் திருக்கமலபாதங்களிலே "புகலொன்றில்லாவடியே னுன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்கிறபடியே ஆத்மஸமர்ப்பணம்பண்ணியருளி, இவ்வர்த்தத்தைக்கண்டு எல்லாரும் உஜ்ஜீவிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, ஸ்ரீப்ரபதநமான சதுஶ்ஶ்லோகியையும் பகவத்ப்ரபதநமான ஸ்தோத்ரரத்நத்தையும், ஆகமப்ராமாண்யத்தையும், ஆத்மஸித்தி ஸம்வித்ஸித்தி ஈஶ்வரஸித்தி என்கிற ஸித்தித்ரயத்தையும், கீதார்த்

(க) "தஸ்மாத்ரங்கம் மஹாபுண்யம் கோநஸேவேத புத்திமாந்."

தஸங்க்ரஹத்தையும் அருளிச்செய்து துர்யாஶ்ரமத்தையும் ஸ்வீகரித்தருளினார்.

அப்போது ஆளவந்தார்திருவடிகளிலே பெரியநம்பி, திருக்கோட்டியூர்நம்பி, ஆளவந்தாராழ்வான், பெரிய திருமலைநம்பி, திருமாலையாண்டான், தெய்வவாரியாண்டான், வானமாமலையாண்டான் ஈஶாண்டான், திருமோகூரப்பன், திருமோகூர்நின்றான், தெய்வப்பெருமாள், மாறனேரிநம்பி, திருக்குருகூர்தாஸர், ஈங்கச்சோளாண்டான், ராஜபத்நியான திருவரங்கத்தம்மை, * திருக்கச்சிநம்பி, ஆகிய இப்பதினறுவர்களும் ஆஶ்ரயித்தார்கள்.

அப்போது மணக்கால்நம்பியும் ஆளவந்தாருடைய ஜ்ஞாந பக்தி வைராக்கியாநுஷ்டாநங்களைப்பார்த்து உகந்தருளி "குருகைகாவலப்பனிடத்தில் ஒரு ரஹஸ்யவிஶேஷத்தைவைத்து உமக்கு ப்ரஸாதிக்கும்படி நாதமுநிகள் நியமநமாகையால், அங்கேறப்போய் அத்தையும்கைக்கொள்ளீர்" என்றருளிச்செய்ய, ஆளவந்தாரும் "அறியாக்காலத்துள்ளே" என்கிறபடியே அடியேனை ஆட்கொண்டு திருமந்த்ரத்தை உபதேஶித்து 'சங்மசங்மாந்தரங்காத்தடியார்களைக்கொண்டுபோய்' என்கிறபடியே 'நிலைபொருந்துங்காலந்தேடி விஶேஷார்த்தங்களையெல்லாம் ப்ரஸாதித்தருளின தேவரீர் நியமநமே அடியேனுக்குக்கைங்கர்யம்" என்று அவர் திருவடிதொழுது தர்ஶந ப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்க,

அப்போது மணக்கால்நம்பி திருவடிகளிலே ஆஶ்ரயித்த ஆளவந்தார் சொட்டைநம்பி, தெய்வத்துக்கரசுநம்பி, பிள்ளையரசுநம்பி, திருவரங்கப்பெருமாள், சிறுப்பிள்ளையுடையார்பிள்ளை, திருமாலிருஞ்சோலைதாஸர், வங்கிப்புரத்தாச்சி, அரசுநம்பி என்கிற ஒன்பது திருநாமங்களில் திருவரங்கப்பெருமாள், ஆளவந்தார் திருவடிகளிலே அதிப்ரவணராய் ஆளவந்தாரருளிச்செய்கிற விஶேஷார்த்தங்களையெல்லாம் நெஞ்சிற்கொண்டு எப்போதும் ப்ரபந்தத்தையும் அதனுடைய அர்த்தத்தையும் கேட்பதும் சொல்வதுமாயிருக்கக்கண்டு, "இவர் ஆளவந்தாராழ்வார்" என்று எல்லாருமருளிச்செய்ய, ஆளவந்தாரும் இவருடைய திவ்யப்ரபந்தத்தில் இயலோடுமிசையோடும் பாடுகிற ஸாமர்த்யத்தைக்கண்டு, நாதமுநிகள் நியமநப்படிக்குக் கீழை

---

* திருக்கச்சிநம்பிகளுக்கு பெரியநம்பிஸந்நிதியில் பஞ்சஸம்ஸ்காராதிகள் உண்டாயிருந்தாலும் ஆளவந்தார்ஸந்நிதியில் சில விஶேஷார்த்தங்கள் ப்ராப்தங்களானபடியால் இங்கு சேர்க்கப்பட்டார்.

யகத்தாழ்வான் மேலையகத்தாழ்வானோபாதி அழகியமணவாளனுக்குப்ரபந்தங்களைப்பாடும்படி நியமித்தருள, ஆளவந்தாராழ்வாரும் அப்படியே பாவராக தாளங்கள் பொருந்தின திவ்ய ப்ரபந்தத்தை அழகியமணவாளனுக்குப்பாடிவரக்கண்டு இவர் திருவரங்கப்பெருமாளரையர் என்று அருளிச்செய்தார்

பின்பு மணக்கால் நம்பியும் ஆளவந்தாரைப்பார்த்து, 'இனிமேலும் உம்மைப்போலே ஒருதர்ஸநப்ரவர்த்தகரை உண்டாக்கக் கடவீர்' என்று அருளிச்செய்து, ஆசார்யன் திருவடிகளை த்யாநித்துக்கொண்டு திருநாட்டுக் கெழுந்தருளினார். மணக்கால் நம்பி திருநக்ஷத்ரம் மாசிமாஸத்தில் மகம். மணக்கால்நம்பிக்கு ப்ரஹ்மமேதாதிசரமகைங்கர்யங்களை யெல்லாம் ஆசுநம்பியைக்கொண்டு நடப்பிவைத்தருளினார்கள். வங்கிப்புரத்தாச்சியும் (க) "நிர்திஷ்டா மதுரிபுணாதயாகரேண ஸ்ரீரங்காதிஷ்ட பஹுதாமஸக்ஷமாயாம்| நித்யாஸ்தேஶுபகுணஸம்ப்ரயோவதீர்ணஸ் ஸம்ஸாரேநகுருவசோஹிலங்கநீயம்" என்கிறஶ்லோகத்தாலே நம்பி திருவுள்ளக்கருத்தை ப்ரகாஶிப்பித்தருளினார்.

பின்பு ஆளவந்தாரும் முதலிகளுடனே வீரநாராயணபுரத்தில் குருகைகாவலப்பன் யோகம் செய்துகொண்டிருக்கிற இடத்தில் யோகபங்கபயத்தாலே பின்புறத்தில்நிற்க, அப்பனும் "சொட்டைக்குலத்தாருண்டோ?" என்று கேட்டருள, "அடியேன் யமுனைத்துறைவன்" என்று விண்ணப்பஞ்செய்து திருவடிதொழுது "அடியேன் சுவர்ப்புறத்தே இருக்கச்செய்தேயும் இப்படி அறியும்படி எங்ஙனே?" என்றுகேட்க, குருகைகாவலப்பனும் "நங்கண்ணன் சொட்டைக்குலத்துத் தெய்வம் ஆகையாலே குலமகனைக்கண்டு திரும்பிப்பார்த்தருளினார். அதுகண்டு நானுமறிந்தேன்காணும்" என்றருளிச்செய்ய, ஆளவந்தாரும் பேராஉகந்து (உ) "ஸ்தோஷ்யாமி: குலதநம் குலதைவதந்தத்" என்கிறபடியே பேராசைப்பட்டு "அடியேனுக்கு அந்தயோகாஹஸ்யத்தை ப்ரஸாதித்தருளவேணும்" என்று ப்ரார்த்தித்துக்கிடக்க, குருகைகாவலப்பனும் முடிபிடித்தெடுத்து "நம்முடையதேஹாவஸாநத்தில் சொல்லுகிறோம்" என்

(க) "நிர்திஷ்டாயஸிவணாதயாகரேண ஸ்ரீரங்காதிஷ்டவஹயாஸக்ஷமாயாம் | நித்யாஸ்தேஶுபகுணஸம்ப்ரயோவதீர்ணஸ் ஸம்ஸாரேநகுருவசோஹிலங்கநீயம்."(உ) "ஸ்தோஷ்யாமிந: குலதநம் குலதைவதம் தத்."

றும், "அந்தஸமயமும் வருகிறபுஷ்யமாஸத்தில் புஷ்யயோகத்தில் அபிஜின்முஹூர்த்தத்தில் வரப்போகிறது" என்றும், அருளிச் செய்து ஸ்ரீமுகமும் கொடுத்தருளினர். ஆளவந்தாரும் அந்த ஸ்ரீமுகத்தைக்கொண்டு கோயிலேற எழுந்தருளினர்.

பின்பு திருவத்யயநோத்ஸவத்தில் திருவரங்கப்பெருமாளரையர் "கெடுமிடராயவெல்லாம்" என்கிறதிருவாய்மொழியை அபிநயத்துடனே பாடுகிறபோது, "கடல் ஞாலஞ்செய்தேன்" என்கிற திருவாய்மொழியின்படியேதன்னுடம்புமறந்து பாடுகிற இவர், 'ஆளவந்தார் திருமுகத்தைப்பார்த்து' "நடமினோ நமர்களுள்ளீர்" என்று பல்கால் பாடியருள, ஆளவந்தாரும் இதைக்கேட்டருளி, இதுவும் நம்மாழ்வார் நியமநமென்றறிந்து, திருவநந்தபுரத்தேற வெழுந்தருளி, அந்த எம்பெருமானிடத்திலீடுபட்டுச் சிலநாள் கழிந்தவாறே குருகைகாவலப்பன் ஸ்ரீமுகத்தைப்பார்க்க, அதுவும் அதிக்ரமித்தபடியால் ஸோகார்த்தராய் மீண்டு கோயிலேற எழுந்தருளி, ஆசார்ய விஸ்லேஷத்தாலே நோவுபட்ட தெய்வவாரியாண்டானைத் தேற்றியருளி, 'ஸதாசார்யகடாக்ஷத்தாலே ந்யஸ்தபாரனை ப்ரபந்நனுக்கு ஆசார்யநியமநமே கைங்கர்யமென்று துணிவுவேண்டாவோ?' என்றருளிச்செய்ய, முதலிகளும் கேட்டு, "இந்த ஆண்டானாலே பரமார்த்தத்தைத் தெளிந்தோம்" என்று உகந்தருளினர்கள்.

பின்பு தர்ஸநப்ரவசநம் பண்ணிக்கொண்டு 'இத்தர்ஸநத்திற்குப் ப்ரவர்த்தகராய் ஒருவர் உண்டாகவேணும்' என்று பெரியபெருமாளை ஆளவந்தார் ப்ரார்த்தித்துக்கொண்டிருக்க, முன்பு ஒருகால் திருவாய்மொழிக்கு அர்த்தம்ஸாதிக்கிறகாலத்தில் "ஒழிவில்காலமெல்லாம்" என்கிற திருவாய்மொழி யர்த்தத்தைக்கேட்டுப் பெரிய திருமலைநம்பி திருமலையேறப்போக ஆசைப்பட, அதை ஆளவந்தாரும்கண்டு, "இவ்வர்த்தங்களையெல்லாம் இவர்நெஞ்சிற்கொண்டாலல்லது இவ்வளவு ஆசையுண்டாகாது" என்றுபோரஉகந்து, "இத்தர்ஸநம் இவர்முகமாகத்தழைக்கும்படி பெரியபெருமாள் திருவுள்ளம்" என்றருளிச்செய்து ஸ்ரீபாததீர்த்தம் ப்ரஸாதித்தருள, பெரிய திருமலைநம்பியும் தன் பிதாவான தெய்வத்துக்கரசுநம்பியோடே இரண்டு உடன்பிறந்தார்களையும் அழைத்துக்கொண்டுபோய்த் திருமலையிலே திருவேங்கடமுடையானுக்கு ஸர்வவிதகைங்கர்யமும் செய்து கொண்டிருக்க.

அப்போது ஸ்ரீபெரும்பூதூர் ஆஸூரிகேஸவப்பெருமாளும் மதுரமங்கலம் கமலநயநபட்டரும் இவர் உடன்பிறந்தவர்களை விவா

ஹார்த்தமாகக் கேட்க, "உங்களுக்குத் திருவிலச்சினைமந்த்ரோபதேசாதிகள் இல்லையே" என்றுச்சொல்ல, "அவைகளையும் ப்ரஸாதித்தருளவேணும்" என்றுகேட்க, நம்பியும் அவர்களுக்குத் திருவிலச்சினைமந்த்ரோபதேசாதிகளையும் ப்ரஸாதித்தருளி, கேஸவப்பெருமாளுக்கு பூமிப்பிராட்டியாரென்கிற உடன்பிறந்தாளையும் கமலநயநபட்டருக்குப் பெரியபிராட்டியாரென்கிறஉடன்பிறந்தாளையும்வாழ்க்கைப்படுத்தி(ஸீ) நுஸ்யஸ் நங்கர்சக்ரவர்த்திக்கு அநுக்ரஹித்தாப்போலேஇவர்களுக்கும் ஸத்புத்ராருண்டாகும்படி அநுக்ரஹித்தருளினார்.

எம்பெருமானார் வைபவம்.

(க) சைத்ரார்த்ராஸம்பவம்விஷ்ணோர் தர்ஸநஸ்தாபநோத்ஸுகம்।
துண்டீரமண்டலேஸேஷ மூர்த்திம்ராமாநுஜம்பஜே.

பின்பு அவர்களும் தங்கள் தங்கள் ஊரிலேவாழ்கிறகாலத்தில், எம்பெருமான் வேதாந்தஸூத்ரத்திற்கு ஸ்ரீபாஷ்ய முகத்தாலே ஸமீசீநார்த்தங்களைத் தெளிவிக்கைக்காகத் திருவநந்தாழ்வானை ஸ்ரீ பெரும்பூதூரில் ஆஸூரிகுலதிலகரான கேஸவஸோமயாஜிகளுக்கு க்கலி-சசககூ-ஆவதான பிங்களவர்ஷம் சித்திரைமாஸம்திருவாதிரை நக்ஷத்ரத்தில் குமாரராய் அவதரிப்பித்தான்.

இச்செய்தியைப் பெரியதிருமலைநம்பியும் கேட்டருளி, ஸ்ரீபெரும்பூதூரேறவெழுந்தருளிக் கேஸவஸோமயாஜியாரையுங் கண்டு மகிழ்ந்து, அந்தஸிஸுவையும் குளிரக்கடாக்ஷித்தருளி, அந்தஸிஸுவின்முகவொளியைப் பார்த்து, (உ) "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" என்கிறபடியாயிரேஇருப்பது, ஆகையால்'இளையபெருமாள் திருநாமமேதகும்' என்று இராமாநுசனென்றுதிருநாமம்சாத்தி, ரக்ஷார்த்தமாகத்திருவிலச்சினையும் ப்ரஸாதித்து, இளையாழ்வாரென்றும் கொண்டாடித் திருமலையேறஎழுந்தருளினார்.

கேஸவஸோமயாஜியாரும் அவருக்கு ஜாதகர்மாதிகளை யதாகாலத்தில் அநுஷ்டித்து உபநயநாநந்தரம் ஸாங்கோபாங்கமாக அத்யயநத்தைப் பண்ணிவைக்க, இளையாழ்வாரும் ஷோடஸவார்ஷிக

(க) [Grantha script verse — same as above]
(உ) "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:"

ரானவாறே க்ருஹஸ்தாஶ்ரமத்தையும் அங்கீகரித்தருளி, "பெருமாள் கோயிலிலே யாதவப்ரகாஶனென்பானொருவன் ஏகதண்டிஸந்ந்யாஸியாய் பூர்வபக்ஷம்வாசிப்பிக்கிறான்" என்றுகேட்டருளி, அங்கேறவெழுந்தருளி, அவன்பக்கல் பூர்வபக்ஷம்வாசிக்கத்தொடங்கினார்.

மதுரமங்கலத்தில் கமலநயநபட்டருக்கு க்ரோதநஸம்வத்ஸரத்தில் மகரபூர்ணிமை ஸோமவாரம் கூடின புநர்வஸுநக்ஷத்ரத்தில் ஒரு குமாராவதரிக்கப் பெரியதிருமலைநம்பியும் அங்கேறவெழுந்தருளி அந்தஶிஶுவைக் குளிரக்கடாக்ஷித்தருளிக் கோவிந்தபட்டரென்று திருநாமம் ப்ரஸாதித்து, ரக்ஷார்த்தமாகத் திருவிலச்சினையும் ப்ரஸாதித்தருளித் திருமலையேறவெழுந்தருளினார்.

கமலநயநபட்டரும்யதாகாலத்தில் அவருக்கு ஜாதகர்மாதிகளையும் வேதாத்யயநத்தையும் ஶாஸ்த்ராப்யாஸத்தையும் க்ருஹஸ்தாஶ்ரமப்ராப்தியையும் பண்ணிவைத்தருள, கோவிந்தபட்டரும் இளையாழ்வார் வாசிக்கிற க்ரமத்தைக்கேட்டுத் தாமும் அங்கேறப்போய் வாசிக்கத்தொடங்கினார்.

யாதவப்ரகாஶனும் (க) "ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம" என்கிற ஶ்ருதிக்கு அஸங்கதார்த்தத்தைக் கல்பித்துச்சொல்ல, இளையாழ்வாரும் அத்தைப்பரிஹரித்துக் குணநிரூபணம் பண்ணியருளினார்.

பின்பு ஒருநாள் அப்யஞ்சநஸமயத்தில் (உ) "தஸ்யயதாகப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்கிற உபநிஷத்திற்கு அபார்த்தத்தைச் சொல்ல, அத்தைக்கேட்டு இளையாழ்வாரும் கண்ணீர்விட, அது நெருப்புப்போல் அவன் தொடையைச்சுட, அவனும் பதறி இவரைப்பார்த்து "துக்கமாவானென்?" என்ன, இவரும் "யதார்த்தத்தைச் சொல்லி, இப்படியிருக்க அபார்த்தத்தைச் சொல்லத்தகுமோ?" என்ன, யாதவப்ரகாஶனும் "நான்சொன்னபடி கேட்கில் வாசித்திரும், இல்லாவிடில்போம்" என்ன, இவரும் கலங்கிநிற்க, அவனும் சில அந்தரங்கரை ஏகாந்தத்தில் அழைத்து "இந்த இளையாழ்வாராலே நம்முடையமதம்நஶிக்கும்படி இருக்கிறது; ஆகையால், இன்றுமுதல் அவருக்கு இஷ்டமானபடி நடந்துகொண்டு கங்காயாத்ரைசெய்து அவரை வஞ்சித்துக்கங்கையிலே தள்ளக்கடவோம்" என்று நிஶ்சயித்து, இளையாழ்வாரை "நீர் சொன்ன அர்த்தம் ஸமீசீநமாயிருந்தது" என்று ப்ரலோபித்துக்கொண்டு சிலநாள்கழிந்தவாறே கங்காயாத்ரை பண்ணிப்போக, பஹுதூரம்போன பின்பு

(க) "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம." (உ) "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ."

ஒருநாள் ஒருமஹாடவியிலே பௌளசார்த்தமாக இளையாழ்வார் நின்றவாறே, கோவிந்தபட்டரும் இவர்களுடையதுராலோசனையை அறிவித்து அகன்றுபோகச்சொல்லித் தாமொருவருமேபோந்தார்.

இளையாழ்வாரும் வழியைவிட்டு ஒருமரத்தடியில் நின்றுபார்க்க, அவ்விடமும் மஹாடவியாயிருக்க, 'ஆவாரார்துணை'என்று பக்கம் நோக்கிநிற்க, பேரருளாளனும் பெருந்தேவியாரும் வில்லியும் வில்லிச்சியுமாய் வந்துநிற்க, அவர்களை "நீங்கள் எங்கேறப்போகிறீர்கள்" என்று இளையாழ்வார் கேட்க, அவர்களும் "காஞ்சீபுரத்தேறப்போகிறோம்"என்றவாறே, (க)"குருஷ்வமாமநுசரம்" என்கிறபடியே 'என்னையும் அங்கு சேர்க்கக்கடவீர்கள்' என்ன, அவர்களும் முன்னேபோக, இளையாழ்வாரும் பின்சென்றவாறே, அந்தவில்லியை'இங்குத்தண்ணீருண்டோ?' என்று வில்லிச்சிகேட்க, வில்லியும் 'அருகே இருக்கிறது'என்றுஒருகிணற்றைக்காட்ட, இளையாழ்வாரும் அதுகேட்டு "நமக்குப்பரமோபகாரிகளான இவர்களுக்கு நாம்தண்ணீர் கொடுக்கவேண்டுமென்ற இதுவும் ஒரு விலக்ஷணவ்ருத்தாந்தமாயிருக்கிறது" என்று நிஸ்சயித்து அந்தக்கிணற்றிலே இறங்கி அவர்களுக்குத் தண்ணீர் எடுத்துக்கொடுக்க, அவர்களும் பானம் பண்ணி "இதுவே புண்யகோடி விமாநங்காணும்' என்று சொல்லி அந்தர்த்தாநயாகப்போய்விட்டார்கள். இளையாழ்வாரும் கரையேறி கீழ்வானம்வெளுத்தமையையும் அருகேபுண்யகோடிவிமாநத்தையும் கண்டு 'இதென்ன ஆஸ்சர்யமென்றுமகிழ்ந்து' கணையாழிகண்டபிராட்டிபோலே ஸந்தோஷித்து, 'எத்திறம்'என்று ஆழ்வார் மோஹித்தாப்போலே இவரொருவருமே பேரருளாளனென்றும்"எம்மாபாவியேற்கும் விதிவாய்க்கின்றுவாய்க் குங்கண்டீர்" என்று மோஹித்துக்கிடந்து, பின்பு தானே தேறி, நித்யகர்மாநுஷ்டாநங்களை அங்கருகே இருந்த ஒருதடாகத்தில் செய்தருளி, அதிஸந்துஷ்டராய் ராஜமார்க்கத்தாலே கோயிலேற எழுந்தருளி, பேரருளாளனையும் பெருந்தேவியாரையும் திருவடிதொழுது, ஆநந்தபரிதராய், நாடோறும் அந்தச்சாலைக்கிணற்றினின்றும் திருமஞ்சநங்கொண்டு வந்து ஸமர்ப்பிவித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

அங்கே யாதவப்ரகாஸனும் இளையாழ்வாரைத்தேடிக்காணமல் காட்டிலே நஸித்திருப்பரென்று உள்மகிழ்ந்து,கோவிந்தபட்டரைப் பார்த்து 'இளையாழ்வாருக்கு என்னதீங்குவருகிறதோ?' என்று

(க)"குருஷ்வமாமநுசரம்."

சொல்லி ப்ரலோபித்து, வித்யார்த்திகளோடே கங்காதீரத்தைச் சென்று மாகஸ்நாநம்பண்ணி நிற்க, ஒருநாள் கோவிந்தபட்டர் ஸ்நாநம்பண்ணச்செய்தே ஒருலிங்கம் வந்து கைசேரும்படிபண்ணி யாதவப்ரகாஶனும் 'இதென்ன ஆஶ்சர்யம்? கோவிந்தபட்டரே! உம்மிடத்தில் ஶிவப்ரஸாதம் இருந்தபடி' என்றும், இனி 'இதுவே உமக்கு ஆராத்யதேவதை என்றும் சொல்லிச் சில க்ஷுத்ரமந்த்ரத்தை ஜபிக்க, கோவிந்தபட்டரும் துஸ்ஸங்கத்தாலே ப்ராந்தராய் அத்தை அங்கீகரித்திருக்க, அன்றுமுதல் அவரை உள்ளங்கைகொணர்ந்தநாயனாரென்று அழைக்கத்தொடங்கினார்கள். யாதவப்ரகாஶனும் மீண்டு வரும்போது உள்ளங்கைகொணர்ந்த நாயனாரும் 'இந்தலிங்கத்தை ஒருஸ்தலத்திலே ப்ரதிஷ்டிப்பித்து வருகிறேன்' என்ன, அவனும் அப்படியேசெய்யுமென்று யார்க்கத்திலனுப்பிவிட்டுப் பெருமாள் கோயிலேறப் போந்தான். பின்பு உள்ளங்கைகொணர்ந்தநாயனாரும் மதுரமங்கலத்திலே அந்தலிங்கத்தை ப்ரதிஷ்டிப்பித்துப் பூஜித்து நிற்க, காளஹஸ்திநாதன் இவர்ஸ்வப்நத்திலேவந்து நீர் நம்பக்கல் வந்துநிற்கவேணுமென்று சொல்லித் தன் ஸ்தானத்தார் ஸ்வப்நத்திலும் அவரை அழைத்துக்கொண்டு வாருங்களென்று ப்ரேரிக்க, அப்படியே ஸ்தாநத்தாரும் மதுரமங்கலத்தில் வந்து பஹுமதி பண்ணி அழைத்துக்கொண்டுபோய் ஸ்தாநநிர்வாஹகராய் வைக்க இவரும் அங்கேயே பூஜித்துக்கொண்டிருந்தார்.

யாதவப்ரகாஶனும் இளையாழ்வாரைப் பெருமாள்கோயிலிலே கண்டு மிகவும் ஸந்தோஷித்து "உம்மைக்காட்டில்பறிகொடுத்தோ மென்றுநிர்வேதப்பட்டிருந்தேன், இங்குக்கண்டபின்பு ஸந்தோஷ முண்டாயிற்று, நீர்வந்தப்ரகாரமென்?" என்றுகேட்க, இளையாழ்வாரும் வில்லிவ்ருத்தாந்தத்தை அடங்கச்சொல்ல, அவனும் "இவர்ப்ரபாவம் ஸர்வாதிஶயிதமாயிருந்தது" என்று போரப்ரீதனாய் ஸ்வகோஷ்டியிலே சேர்த்துக்கொண்டு வாசிப்பித்துநிற்க,

இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் பெருமாள்கோயிலினின்றும் புறப்பட்டுக் கோயிலேறச்சென்று நம்பெருமாளைத் திருவடிதொழுது ஆளவந்தார் திருவடிகளிலே ஸேவித்துநிற்க, ஆளவந்தாரும் 'பெருமாள்கோயிலிலே என்னவிஶேஷம்?' என்றுகேட்டருள, அவர்களும் எல்லாரும் ஆஶ்சர்யப்படும்படியாய் இளையாழ்வார்பக்கல் பேரருளாளன் வில்லி வ்யாஜேந விஶேஷகடாக்ஷம் பண்ணிப்போந்ததை ஸவிஸ்தரமாகவிண்ணப்பஞ்செய்து யாதவப்ரகாஶவ்ருத்தாந்தத்தையும் இப்போது இளையாழ்வார் அவன்பக்கலிலே வாசிக்கிறாரென்றும்

விண்ணப்பஞ்செய்ய, ஆளவந்தாரும் கேட்டருளி 'பெரியபெருமாளிடத்தில் பண்ணினப்ரபத்தி ஸபலமாயிற்று "ஒழிவில்காலமெல்லாம்" என்கிற திருவாய்மொழியிலே ஏற்பட்ட பெரியதிருமலைநம்பியைக்கொண்டு திருவேங்கட முடையானும் இத்தர்சனத்தை நிலைநிறுத்தும்படி பண்ணியருளினார். பேரருளாளனும் (க) "அக்ரத:ப்ரயயௌராம:" என்கிறபடியே தானும்பிராட்டியும் முன்னடந்து(உ) "குருஷ்வமாமநுசரம்" என்றுப்ரார்த்தித்தஇளையாழ்வாரைத் திருவுள்ளம்பற்றித் தானேவழிநடத்தித் தம்மிருவரையும் திருவடிதொழுது (ந)"பத்ரம்புஷ்பம்பலம்தோயம்" என்கிறபடியே அவர்கொடுத்த தண்ணீரமுதையும்அமுதுசெய்து உள்குளிர்ந்து திருவுள்ளம்பற்றித் திருமஞ்சனகைங்கர்யத்தையும்நித்யமாகத் திருவுள்ளம்பற்றியருளினார். தத்காலாநுபாவ்யமான விபவம்போலன்றிக்கே பின்னானார்வணங்கும்சோதியானகோயில்திருமலைபெருமாள்கோயிலெம்பெருமான்கள் மூவரும் இளையாழ்வாரிடத்தில் விசேஷ கடாக்ஷம்பண்ணியிருப்பதால், இவரே ஸித்தாந்த நிர்வாஹகராவர்" என்று போரவுகந்து "பல்லாண்டுபல்லாண்டு" என்றுபெரியபெருமாளைமங்களாசாஸநஞ்செய்தருள, முதலிகளும்கேட்டு விசேஷார்த்தங்களை நெஞ்சிற்கொண்டிருக்க, ஆளவந்தாரும் நம்பெருமாளிடத்தில் விண்ணப்பஞ்செய்து இளையாழ்வாரைக் கடாக்ஷித்தருளுகைக்காக முதலிகளோடே திருக்கோவலூர்வழியாகப் பெருமாள்கோயிலேறஎழுந்தருளி, எதிர்கொண்டுவந்த திருக்கச்சிநம்பியையும் ஸந்தோஷித்து,பேரருளாளன்எதிரே அனுப்பிவைத்த ஸ்ரீஸடகோபனையும்தண்டன்ஸமர்ப்பித்துச்சிரஸாவஹித்துத் தீர்த்த ப்ரஸாதம் ஸ்வீகரித்தருளி,கோயிலேற வெழுந்தருளி அர்த்திதார்த்தபரிதாநதீக்ஷிதரான பேரருளாளரையும் பெருந்தேவியாரையும் திருவடிதொழுது, ப்ரதக்ஷிணமாகஎழுந்தருளி, கரியமாணிக்கத்தாழ்வாரைஸேவித்து, சக்ரவர்த்தித்திருமகனையும் திருவடிதொழுது, வழிதிகைத்து,உள்நடுங்கி'ஆவாரார்துணை' என்றுரக்ஷகனைத்தேடின இளையாழ்வாருக்கு (ச) "தாஸாமாவிரபூச்சௌரி:" என்கிறபடியே கண்காணத்தோன்றி (ரு) "பயம்த்யஜதபத்ரம்வ:" என்னுமாப்போலே ஸர்வபயநிவ்ருத்திபுரஸ்ஸரமாக ஸர்வபலப்ரதனான தேவரீரே வாழ்வித்தருளினபடி

(க) "अग्रतः प्रययौ रामः." (உ) "कुरुष्व मामनुचरम्." (ந) "पत्रं पुष्पं फलं तोयम्." (ச) "तासामाविरभूच्छौरिः." (ரு) "भयं त्यजत भद्रं वः."

யாலே இளையாழ்வாரென்கிற திருநாமம் யதார்த்தமாயிற்று. இனிமேலும்(க) "ஸக்ருதேவ" என்கிற ஸ்லோகத்தின்படியே ரக்ஷித்தருளவேணும் என்று ப்ரார்த்தித்துநிற்க, அப்போது யாதவப்ரகாஶனும் வித்யார்த்திகளோடே பெருமாளை ஸேவித்து ப்ரதக்ஷிணம்பண்ண, ஆளவந்தாரும் இளையாழ்வார் ஆர்? என்றுகேட்க, அங்குள்ளாரும் அவரென்று ஒருவரை நிர்த்தேஶித்துக்காட்ட, ஆளவந்தாரும் தன் தாமரைக்கண்களால் குளிரநோக்கியருளி, (உ) "யஸ்யப்ரஸாதகலயா பதிரஶ்ஶ்ருணோதி பங்கு: ப்ராதாவதி ஜவேநசவக்தி மூக:- அந்த: ப்ரபஶ்யதி ஸுதம்லபதேச வந்த்யா தந்தேவமேவ வரதம் ஶரணங்கதோஸ்மி" என்று பேரருளாளன் திருவடிகளிலே "இளையாழ்வார் இந்தஸித்தாந்த நிர்வாஹகராகவேணும்" என்று ப்ரபத்திபண்ணி, இளையாழ்வாரைக்கண்டு நாம்வார்த்தைசொன்னால் பூர்வபக்ஷம் வாசிக்கிறதற்கு விரோதமாம் என்று திருவுள்ளம்பற்றி மீண்டு முதலிகளும்தாமுமாகக் கோயிலேறவெழுந்தருளினார்.

பின்பு யாதவப்ரகாஶனும் வேதாந்தம்சொல்லிக்கொண்டிருக்கச் செய்தே, அந்தத்தேஶாதிபதியினுடைய பிள்ளையை ப்ரஹ்மரக்ஷஸ்ஸு பிடித்து மிகவும்பீடிக்க, ராஜாவும் பஹுமந்த்ரவாதிகளைக் கொண்டுபார்த்து அதுதீராமல் பின்னையும் யாதவப்ரகாஶன் மஹாமாந்த்ரிகனென்றுகேட்டு அவனை அழைப்பிக்கும்படிச்சிலரையனுப்புவிக்க, அவர்களும் அந்த வ்ருத்தாந்தத்தை அங்கேபோய் ஸவிஸ்தாரமாகச்சொல்ல, யாதவப்ரகாஶனும் "அந்தப்ரஹ்மரக்ஷஸ்ஸைநான் போகச்சொன்னேனென்றுசொல்லுங்கள்" என்று சொல்லிப்போகவிட, அவர்களும் அப்படியேசொல்ல, ப்ரஹ்மரக்ஷஸ்ஸும் "யாதவப்ரகாஶனை நான்போகச்சொன்னேனென்றுசொல்லுங்கள்" என்ன, அத்தையும் யாதவப்ரகாஶனுக்கு அறிவிக்க, அவனும் வித்யார்த்திகளோடே ராஜக்ருஹத்தில் மந்த்ரஜபம்பண்ணிக்கொண்டு ப்ரஹ்மரக்ஷஸ்ஸின்ஸமீபத்திலேவந்துநிற்க, அதுவும் முடக்கினகாலைநீட்டி "நான்உன்மந்த்ரத்திற்குப் பயப்படுவேனோ? நீ உன்ஜந்மமும் என் ஜந்மமும் அறியமாட்டாய்" என்றுசொல்ல, அவனும் "உனக்குத் தெரியுமாகில்ஜந்மவ்ருத்தாந்தத்தைச்சொல்லாய்" என்ன, அதுவும்

(க) "ஸக்ருதேவ." (உ) "யஸ்ய ப்ரஸாதகலயா பதிரஶ்ஶ்ருணோதி பங்கு: ப்ராதாவதி ஜவேந சவக்தி மூக: | அந்த: ப்ரபஶ்யதி ஸுதம் லபதே ச வந்த்யா தம் தேவமேவ வரதம் ஶரணம் கதோஸ்மி."

கோயில்பெரியோர்கள் திருமலைக்கு எழுந்தருளும்போது ஸ்ரீமது ராந்தகத்தில்ஏரிகரையில் ஒருபுற்றில் உடும்பாயிருந்தாய், அவர்கள் நீராடி அமுதுசெய்தருளினவிடத்தில் சிந்தின ப்ரஸாதத்தையும் தீர்த்தத்தையும் ஸ்வீகரித்தாய்,அத்தாலே உனக்கு ப்ராஹ்மணஜந் மமும் சிலவித்யையும் உண்டாயிற்று. என்னுடைய ஜந்மம்ப்ராஹ் மணவர்ணத்திலே உண்டாய் யாகம்பண்ணி அதிலே மந்த்ரலோபம் வந்து அத்தாலே ப்ரஹ்மரக்ஷஸ்ஸானேன் என்றுசொல்ல, அவனும் 'நீயாருக்குப்போவது?' என்ன, அதுவும் 'உன்பக்கல்வாசிக்கிற இளை யாழ்வார் கடாக்ஷித்தருளி என்னைப்போகச்சொன்னால் நான் போ கிறதன்றிக்கே என்பாபமும்போகும்' என்றுசொல்லி,இளையாழ்வார் திருவடிகளில் விழுந்து துடிக்க,யாதவப்ராகாஶனும்இளையாழ்வாரைப் பார்த்து'அத்தைப்போகச்சொல்லீர்' என்ன, அவரும்அந்த 'ரக்ஷஸ் ஸைப்பார்த்து அருகேயிருந்தஒருவ்ருக்ஷத்தைமுறித்து அடையாள மாகக்காட்டிப் போகக்கடவாய்' என்றருளிச்செய்ய, அந்தரக்ஷஸ் ஸும் அந்தவ்ருக்ஷத்தை முறித்துக்கொண்டுபோய்விட்டது. அத் தைப்பார்த்து யாதவப்ராகாஶனும் அத்யாஶ்சர்யப்பட்டு, இளையாழ் வாரையும் ஸந்தோஷித்து மீண்டு தன்மடமேறப் போனான்.

பின்புயாதவப்ராகாஶன்(க)"ஸர்வம்கல்விதம்ப்ருஹ்ம"(உ)"ஸதே வஸோம்யேதம்" என்கிற உபநிஷத்திற்கு அத்வைதபரமாகஅர்த்தம் சொல்ல,இளையாழ்வாரும்அத்தைநிராகரித்துவிஶிஷ்டாத்வைதபரமா கஸமஞ்ஜஸமான அர்த்தத்தை உபபாதிக்க, அவனும் அதிகுபிதனாய் "இன்றுதொடங்கிஉமக்குத்தகுமிடம் தேடிப்போய்வாசியும்" என்று சொல்ல, இளையாழ்வாரும் மீண்டு திருமாளிகையில்வந்து, திருத்தா யாரிடத்தில் இச்செய்தியைச்சொல்ல, அந்தத்தாயாரும் "பேரரு ளாளனுக்குக் கைங்கர்யம் பண்ணிக்கொண்டிரும்" என்று நியமித்த ருள, இளையாழ்வாரும் அப்படியே இருந்தார்.

அவ்வளவிலே, ஆளவந்தார் திருமேனியில் நோவுசாத்தி யெழுந்தருளியிருக்க, திருவரங்கப்பெருமாளரையரைமுன்னிட்டுப் பெரியநம்பியும் திருக்கோட்டியூர்நம்பியும் ஆளவந்தார் ஸ்ரீபாதத் திலே தண்டன்ஸமர்ப்பித்து, "அடியோங்களுக்குத் தஞ்சமாயிருப் பது ஒரு அர்த்த விஶேஷத்தை ப்ரஸாதித்தருளவேணும்" என்று விண்ணப்பஞ்செய்ய, ஆளவந்தாரும் அவர்களைத்திருவுள்ளமுகந்து "உங்களுக்குத்தஞ்சமாயிருப்பது இதுவே" என்று அருளிச்செய் தார். அதுஎங்ஙனேஎன்னில்:—"ஸதாசார்யகடாக்ஷத்தாலேநயஸ்த

(க)"ஸர்வம் க²ல்வித³ம் ப்³ரஹ்ம." (உ)"ஸதே³வ ஸோம்யேத³ம்."

பார்களான உங்களுக்கு அறியவேண்டியது, ஆசார்யபரம்பரையிலே க்ருதஜ்ஞதாஜ்ஞாநம்; செய்யவேண்டியது, ஆஜ்ஞாநுஜ்ஞாரூபமான பகவத்கைங்கர்யம்; இதுபாகவதாசார்ய கைங்கர்யபர்யந்தமாயிருக்கும். அறிவிப்பிக்க வேண்டியது, பரமபுருஷார்த்தோபாயமான ப்ரபத்தியை அநுஷ்டிக்கவேணுமென்றும், அநுஷ்டித்தபின்பு முன்சொன்ன க்ருதஜ்ஞதையும் கைங்கர்யமும் தேஹாவஸாநத்தளவும் வேணுமென்றும்" இப்படி அர்த்தவிசேஷங்களை ஆளவந்தாரும் அருளிச்செய்ய, முதலிகளும் கேட்டுத் தெளிந்தார்கள்.

பின்பு பெருமாள்கோயிலினின்றும் ஸ்ரீவைஷ்ணவர்கள் கோயிலேறவந்து, நம்பெருமாளைத் திருவடிதொழுது, ஆளவந்தார்பக்கல் ஸேவித்து நிற்க, அவர்களை "இளையாழ்வார் என் செய்கிறார்?" என்று கேட்டருள, அவர்களும் "யாதவப்ரகாசனைவிட்டுப் பேரருளாளனுக்குத் திருமஞ்சநகைங்கர்யம் செய்கிறார்" என்றுவிண்ணப்பஞ்செய்ய, அத்தைக்கேட்டருளி, "பேரருளாளர் நம்முடைய ப்ரபத்தியை ஸபலமாக்கினார்" என்று உகந்தருளி, "இளையாழ்வாரையழைத்துக்கொண்டுவாரும்" என்று பெரியநம்பிக்கு நியமித்தருள, அவரும் அப்படியே பெருமாள்கோயிலேறஎழுந்தருளி, பெருந்தேவியாரையும் பேரருளாளரையும் திருவடிதொழுது, ஆளவந்தாருளிச்செய்த சதுஶ்ஶ்லோகியையும் ஸ்தோத்ரரத்நத்தையும் அநுஸந்தித்துக்கொண்டு, இளையாழ்வார் சாலைக்கிணற்றினின்றும் திருமஞ்சநம் கொண்டுவருகிறவழியிலே நிற்க, (க) "ப்ரஹ்மாஶிவஶ்ஶதமக: பரமஸ்வராடித்யேதேபியஸ்யமஹிமார்ணவவிப்ருஷஸ்தே" என்கிற ஶ்லோகத்தை இளையாழ்வார் கேட்டு, "இது ஆர் அருளிச்செயல்?" என்று பெரியநம்பியைக்கேட்க, "ஆளவந்தார் திவ்யஸூக்தி" என்று பெரியநம்பியும் அருளிச்செய்ய, "அப்படிக்கொத்த மஹாநுபாவரை அடியேன் ஸேவிக்கவேணும்" என்ன, பெரியநம்பியும் "எனக்கூடவாரும்" என்ன, இவரும் திருமஞ்சநத்தைப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து விடைகொண்டு பெரியநம்பியுடனே கோயிலேற எழுந்தருளினார்.

அங்கு, ஆளவந்தாருக்கு மிகவும் திருமேனி தளர்ந்திருக்க, ஆளவந்தாரும் முதலிகளுமாய்ப்பெரியபெருமாளை ஸேவித்துநிற்க, பெரியபெருமாளும் "நம்பெரியவீடு சோக்கடவீர்" என்று அர்ச்சகமுகேந அருளிச்செய்து திருமாலை தீர்த்தம முதலானவைகளை

(க) "ப்ரஹ்மா ஶிவஶ்ஶதமக: பரமஸ்வராட் இத்யேதேபி யஸ்ய மஹிமார்ணவ விப்ருஷஸ்தே."

ப்ரஸாதிக்க, ஆளவந்தாரும் க்ஷாமணம்பண்ணிக்கொண்டு மடமேற வெழுந்தருளி ஒரு குறையுள்ளவர்போல் கண்ணீர் விட்டருள, முதலிகளும் "இதென்ன?" என்று திகைத்து "திருவுள்ளத்தி லென்னகுறை?" என்றுகேட்க, ஆளவந்தாரும் "இனியென்னகுறை யெழுமையுமே?" என்றிருக்கச்செய்தேயும், இளையாழ்வாரைக் காணு தகுறையொன்றுண்டு; என்றும், அதுவுமன்றிக்கே வ்யாஸஸூத்ரத் திற்கு வ்யாஹதபாஷ்யமும்செய்து, அவ்வர்த்தங்களில் ஸம்ஶயம் தீரும்படி ஈஶ்வரேஶ்வரிகளான இவ்யதம்பதிகளுடைய பாரம்யத் தைப்பரக்கச்சொன்ன பராஶரருடைய திருநாமத்தையும், வேதாந்த ஸாரமான திருமந்த்ரத்தில் சொல்லுகிற ஸ்வரூபோபாயபுருஷார் த்தங்களை விஶதமாகக்காட்டுகிற திருவாய்மொழியை அருளிச்செய் த நம்மாழ்வார் திருநாமத்தையும், இரண்டுபிள்ளைகளுக்குச் சாத்தி, அவர்களுடைய நிர்வாஹத்தையும் பண்ணும்படி செய்விக்கவேணு ம்" என்றும், "அதுசெய்யப்பெற்றிலேனே!" என்றும் அருளிச்செய்து மூன்றுவிரல்களைமுடக்க, அவ்வளவில் முதலிகளும் "அப்படியே பெரியபெருமாள் தலைக்கட்டக்கடவர், இப்போது செய்ய அடுப்பது என்?" என்ன, ஆளவந்தாரும் "இன்றுதினத்தில் அபிஜிந்முஹூர்த் தத்தில் பெரியவீடுசேரும்படி பெரியபெருமாள்நியமநம்; ஆகையால், பாகவத ஸ்ரீபாததீர்த்தங்கொள்ளவேணடுவது" என்றருளிச்செய்ய, முதலிகளும் "இங்குள்ளவர்களெல்லாரும் தேவரீர் திருவடிஸம்பந்தம் பெற்றவர்களேயல்லது, வேறில்லையே" என்று விண்ணப்பஞ்செய்ய, ஆகில், 'நம்நாதமுநிகள் உய்யக்கொண்டார் திருமுடியிலேபாரிதோஷி கமாகத் திருவடிகளை யமர்த்தியருளும்போது, உய்யக்கொண்டா ரும் இரண்டுதிருவடிநிலைகளை நாதமுநிகள் திருவடிகளிலே ஸமர்ப் பித்து, பரதாழ்வானைப்போலன்றிக்கே, நாதமுநிகள் இருக்கச்செய் தேயும் ஆராதித்துக்கொண்டுவந்து, தம் அந்திமதஶையிலே, நம்மா சார்யரான மணக்கால்நம்பிக்கு ப்ரஸாதித்தருளினார். நம்பியும் அந் தத்திருவடிநிலைகளை நமக்குப்ரஸாதித்திருக்கையாலே அந்தத்திரு வடிநிலையை ஆராதித்துத் தீர்த்தங்கொள்ளவேணும்" என்று அரு ளிச்செய்ய, அப்படியே முதலிகளும் செய்வித்து, "அடியோங் களுக்குத் தேவரீர்தீர்த்தமும் திருவடிநிலையும் ப்ரஸாதித்தருள வேணும்" என்று ப்ரார்த்திக்க, அப்படியே ஆளவந்தாரும் திருவுள் ளம்பற்றி ப்ரஸாதித்தருள, அவ்வளவில் நிர்யாணஸமயமும் கிட்டி னவாறே, விதிஶோதிதமான உபநிஷதநுஸந்தாநமும், நாதமுநிகள் நியமநப்படிக்குத் திருவாய்மொழி யநுஸந்தாநமும் முதலிகள்

செய்து கொண்டிருக்க, ஆளவந்தாரும் நாதமுநிகள் திருவடிநிலையைத்தந்திருமுடியிலொற்றிக்கொண்டும், ஆசார்யர்களுடைய திருவடிகளைத்யாநித்துக்கொண்டும்,த்வயாநுஸந்தாநத்தோடேநிற்க, ப்ரஹ்மரந்த்ரம்திறந்தவாறே "சூழ்விசும்பணிமுகில்" என்கிற திருவாய்மொழியைஸேவிக்க, திருநாட்டுக்கெழுந்தருளினர்.

திருவரங்கப்பெருமாளரையர்முதலானமுதலிகள் வேரற்றமரம்போல்விழுந்து துடித்துத் தாங்களேதேறி யதிஸம்ஸ்காரவித்யுக்தப்ரகாரத்தாலே வைதிகங்களையும்ஸ்ரீசூர்ணபரிபாலநத்தையும்பிள்ளையரசுநம்பியைக்கொண்டு செய்வித்து, பெரியபெருமாள் ப்ரஸாதித்த திருமாலைமுதலானவைகளைச்சாத்தி, ப்ரஹ்மரதத்திலெழுந்தருளப்பண்ணி, பெரியதிரளோடே திருக்கரம்பன்துறையில் திருப்பள்ளிபடுத்திக்கொண்டிருக்க,

அப்போது பெரியநம்பியும் இளையாழ்வாருடனே இந்தஸ்ரீவைஷ்ணவகோஷ்டியைக்கண்டு, "இதென்ன?" என்றுகேட்க, அவர்களும் "ஆளவந்தார் திருநாட்டுக்கெழுந்தருளினர்" என்றுசொல்ல, அதைக்கேட்டுஅவர்களும் ஸோகித்து மூர்ச்சையடைந்துஇளையாழ்வார்மிகவும்ப்ரலாபிக்க,பெரியநம்பி தேற்றிஅழைத்துக்கொண்டுஆளவந்தாருடைய திவ்யவிக்ரஹத்தை ஸேவிக்கப்பண்ண, இளையாழ்வாரும்தண்டன்ஸமர்ப்பித்துஆபாதமஸ்தகம்ஸேவிக்குமளவில், மூன்றுவிரல்கள் முடங்கியிருக்க,இளையாழ்வாரும் "இப்படிக்கு முன்னமேஉண்டோ?" என்றுகேட்க, அவர்களும் ஆளவந்தாரருளிச்செய்தமூன்றுஅபிப்ராயங்களையும்நடந்நடத்தையையும் பாக்கஅருளிச்செய்ய,இளையாழ்வாரும் "ஆளவந்தார் கடாக்ஷவிஷயனை அடியேனைக்கொண்டு அந்த மூன்று கைங்கர்யங்களையும் போருளாளன் நிறைவேற்றக்கடவன்" என்று விண்ணப்பஞ்செய்ய, அந்தமூன்றுவிரல்கள் நிமிர்ந்து திருமுகமும்மலர்ந்துவர,திருவரங்கப்பெருமாளரையர்முதலானவெல்லாரும் "இவரே இத்தர்ஸநநிர்வாஹகராவர்" என்று போரஉகந்தருளி, ஆளவந்தாரைத் திருப்பள்ளிபடுத்த, இளையாழ்வாரும் அவப்ருதஸ்நாநம்பண்ணிப்பெரியநம்பியைத்தண்டன்ஸமர்ப்பித்து நம்பெருமாளைஸேவியாமல் வெறுத்துக்கொண்டு பெருமாள்கோயிலேற எழுந்தருளினர்.

ஆளவந்தாருடையஅபிப்ராயங்களாவன:- (க)வேதாந்தஸாரமானவ்யாஸஸூத்ரத்திற்கு விஸிஷ்டாத்வைதபரமாக அவ்யாஹதபாஷ்

யம்பண்ணுகை. (உ) திவ்யதம்பதிகளுடையபாரம்யத்தைதஸர்வவ்யாப் திபூர்வகமாகப் பரக்கச்சொல்லுகிற ஸ்ரீவிஷ்ணு புராணத்திற்கு ப்ரவர்த்தகரான பராஸரருடைய திருநாமத்தை ஒருவருக்குச்சாத்துகை. (ங) அவ்வர்த்தங்களையெல்லாம் பொதிந்து கொண்டிருக்கிற திருமந்த்ரத்தில் சொல்லுகிற ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களை விஸதமாகக்காட்டுகிற திருவாய்மொழியை யருளிச்செய்த நம்மாழ்வார்திருநாமத்தை ஒருவருக்குச்சாத்துகை. என்று ஆளவந்தாருடைய அபிப்ராய நிரூபணம்.

பின்பு ஆளவந்தாருடைய சரமகைங்கர்யங்களையெல்லாம்கோயிலிலே செய்தருளினார்கள். ஆளவந்தார் திருநக்ஷத்ரம் ஆடியில் உத்தராடம்.

பின்பு ஒருநாள் திருக்கச்சிநம்பி பேருளாளனுக்குக் கைங்கர்யம் பண்ணுகிறபடியையும் பேருளாளன் நம்பிவிஷயத்தில் க்ருபைபண்ணுகிறபடியையுங் கண்டு, ஒருநாள் கைங்கர்யம்பண்ணுகிற அவஸரத்தில் பேருளாளன் திருவுள்ளமலர்த்தியையுங் கண்டு, நம்மிடத்தில் விஸேஷகடாக்ஷம் பண்ணியருளின ஆளவந்தார் திருவடிகளாகையாலே (க) "அத்யந்தபக்தியுக்தாநாம் நைவஸாஸ்த்ரம்நசக்ரம:" என்கிற ஸாமாந்யோக்தியின்படியே ஓரபிஸந்திபிறந்து நம்பி கோயில் ப்ரதக்ஷிணமாக எழுந்தருளும்போது இளையாழ்வார் தம் திருமாளிகைக்கழைத்துக்கொண்டுபோய் ஓராஸநமிட்டு ஸாஷ்டாங்கமாய்த்தண்டன் ஸமர்ப்பிக்கப்போக, நம்பியும் "நம் ஆளவந்தார் ஸ்ரீபாதம் இப்படிக்குவர்ணாஸ்ரமதர்மங்களை அதிக்ரமிக்கக்கூடுமோ? நாதமுநிகளும் ஒருகாலத்தில் ராஜாவைப் பின்செல்லப்போக, உய்யக்கொண்டாரும் 'இப்படிக்குஸாஸ்த்ராதிலங்கநம்கூடுமோ?' என்று தடுக்க, நாதமுநிகளும் ஸாஸ்த்ராதிலங்கநம்கூடாதென்று மீண்டெழுந்தருளினார். திருக்கண்ணமங்கையாண்டானும் ஆஹாரநித்ராதிகளை த்யஜித்தவராகையாலே ஸந்த்யாதிகைங்கர்யங்களையும்விட்டாரத்தனை. ஸந்த்யாதிகைங்கர்யங்களுக்காக ஆஹாராதிதேஹதர்மங்களை அங்கீகரித்திருக்கிற தேவரீர்களுக்கு சாஸ்த்ராதிலங்கநம் கூடாது" என்று அருளிச்செய்ய, அத்தைக்கேட்டு இளையாழ்வாரும் தெளிந்து "ஆகிலும், சில நினைவுகளை நினைத்திருக்கிறேன்; அவையெவையென்று பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்து அவரருளிச்செய்த அர்த்தத்தை அடியேனுக்கு அருளிச்செய்யவேணும்" என்றுவிண்ணப்பஞ்செய்ய, நம்பியும் அப்படியே திருவுள்ளம்பற்றியெழுந்தரு

(க) "அத்யந்தபக்தியுக்தாநாம் நைவஸாஸ்த்ரம் நசக்ரம:"

ளினர். இளையாழ்வாரும் சிலதூரம் பின்சென்று திரும்பிவரும் போது தேவியாரும் வர்ணாந்தரஸ்திரீருந்த இடமென்று அந்தஸ்தலத்தைநன்றாக ஶுத்திபண்ணித்தானும்ஸ்நாநம் பண்ணியிருக்க இளையாழ்வாரும் "இதென்ன?" என்றுகேட்க, தேவியாரும் தான் நினைத்துச்செய்தபடியை விண்ணப்பஞ்செய்ய, இளையாழ்வாரும் "உசிதகைங்கர்யமறியும்படியான ஸத்களத்ரத்தைப் பெற்றிலோமே" என்று நொந்து பேரருளாளன் திருவடிதொழுது க்ஷாமணம்பண்ணிக் கொண்டருளினர்.

பின்புநம்பியும் கச்சிவாய்த்தான் திருமண்டபத்திலெழுந்தருளியிருக்கிற பேரருளாளன்ஸந்நிதியில், இளையாழ்வார் விண்ணப்பத்தை ஒருகால் விண்ணப்பஞ் செய்ய, பேரருளாளரும் (க) ஸ்ரீமானான நாமே பரதத்வம். (உ) நம்முடைய மதம் பேதம். (ங)ப்ரபத்தியே உபாயம். (ச) அந்திமஸ்ம்ருதி ஆவஶ்யகமன்று. (ரு) தேஹாவஸாநத்தில்மோக்ஷம். (சா) பெரியநம்பி திருவடிகளிலே ஆஶ்ரயிப்பது என்று ஆறுவார்த்தைகளை அருளிச்செய்ய, நம்பியும் இளையாழ்வாரையழைத்து இவ்வார்த்தையருளிச்செய்ய, இளையாழ்வாரும் பேரப்ரீதராய் "நமக்கு இது ஓர் நன்னாளாயிற்று" என்று உள்மகிழ்ந்து பேரருளாளன் திருவடிதொழுது நம்பிபக்கலிலும் (க) "யஸ்ய மித்ரம்பகவத்பக்தம் நிஷாதம்ஶ்வபசம் ததா- வீக்ஷதே ஜாதிஸாமாந்யாத்ஸயாதி நரகம்நர:" இத்யாதிகளின்படியே வரும் அபராதங்கள் புகுராமல் ஶாஸ்த்ராதிலங்கநமும்பண்ணாமல் மிகவும் க்ருதஜ்ஞதை தோற்றும்படி ப்ரபத்தி பண்ணிக்கொண்டிருந்தார்.

பெரியநம்பி எம்பெருமானாரை அங்கீகரித்தல்.

அநந்தரம்கோயிலிலே ஆளவந்தார் திருவடிகளிலே ஆஶ்ரயித்த முதலிகளெல்லாரும் "ஆளவந்தார் விஶேஷகடாக்ஷம் பெற்றிருக்கிற இளையாழ்வாரை இத்தர்ஶநத்திற்குப்ரவர்த்தகராகும்படிசெய்தருளி அழைத்துக்கொண்டு வரவேணும்" என்று பெரியநம்பி ஸந்நிதியில் விண்ணப்பஞ்செய்ய, பெரியநம்பியும் அப்போதே புறப்பட்டுத் தேவிகளோடேகூடப்பெருமாள்கோயிலேற வெழுந்தருளச்செய்தே ஸ்ரீமதுராந்தகத்தில் ஏரிகாத்தபெருமாள் ஸந்நிதியிலே யெழுந்தருளியிருந்தவளவில் இளையாழ்வாரும் பேரருளாளன் நியமநப்படிக்கு

(க) "யஸ்ய மித்ரம் பகவத்பக்தம் நிஷாதம் ஶ்வபசம் ததா। வீக்ஷதே ஜாதிஸாமாந்யாத் ஸ யாதி நரகம் நர:."

பெரியநம்பி திருவடிகளிலே ஆஶ்ரயிப்பதாகக் கோயிலேற வெழுந்தருளி, ஸ்ரீமதுராந்தகத்தில் பெரியநம்பியெழுந்தருளியிருக்கக்கண்டு, "எண்ணினபலம் எதிரேவந்துவாய்த்தது" என்று ஆநந்த நிர்பரராய்ப் பெரியநம்பியைத்தண்டன்ஸமர்ப்பித்து, பேரருளாளன் நியமநத்தையும்விண்ணப்பஞ்செய்து, (க)" ஶிஷ்யஸ்தேஹம் ஶாதிமாந்த்வாம் ப்ரபந்நம்" என்கிறபடியே "அடியேனுக்கு ஹிதோபதேஶஞ்செய்தருளவேணும்" என்று ப்ரார்த்திக்க, "பெரியநம்பியும் பேரருளாளன் ஸந்நிதியில்செய்கிறோம்" என்ன, இளையாழ்வாரும் "காலம்போக்க வேண்டா; ஆளவந்தார்பக்கல்கண்டது அமையாதோ?" என்றுவிண்ணப்பஞ்செய்ய, பெரியநம்பியும் ஏரிகாத்தபெருமாள்ஸந்நிதியில் திருமகிழமரத்தடியிலேபஞ்சஸம்ஸ்காரத்தையும் மற்றும்ஸர்வமந்த்ரோபதேஶத்தையும் த்வயார்த்தத்தையும்ப்ரஸாதித்தருளிஏரிகாத்தபெருமாளையும் ஸேவித்துப் பெருமாள்கோயிலேற எழுந்தருளினார். இளையாழ்வாரும் தம்திருமாளிகையிலே பெரியநம்பியை எழுந்தருளப்பண்ணிவைத்துக்கொண்டு ஆராதநோபயுக்த த்ரவ்யங்களையும் ஸமர்ப்பித்து ஆராதித்துக்கொண்டிருக்க, பெரியநம்பியும் வ்யாஸஸூத்ரார்த்தத்தையும் திருவாய்மொழியொழிந்தமூவாயிரங்களையும் திருமாலை முதலாகப்ரஸாதித்தருளினார்.

ஒருநாள் இளையாழ்வாருக்குஎண்ணெய்க்காப்புச்சாத்துகிறஸ்ரீவைஷ்ணவர் இளைத்திருக்கையாலே தேவிகளை அழைத்து அவருக்கு அபூபாதிகளைக் கொடுக்கச்சொல்ல, தேவிகளும் "அல்பமாகிலும் இல்லை" என்ன, தேவிகளை ஒருகார்யத்திலேவிட்டு உள்புகுந்து பாண்டத்தைப் பார்க்க அபூபங்களிருக்கக்கண்டு தாமே ப்ரஸாதித்துத் தேவிகளையுமழைத்துக் கோபித்துவிட்டருளினார்.

பின்பு ஒருநாள் இளையாழ்வார் கார்யவஶத்தாலே ஸ்ரீபெரும்பூதூரேறஎழுந்தருள, தேவிகளும் கிணற்றின்கரையிலே பெரியநம்பி தேவிகளோடே ஒருதோண்டிவ்யாஜத்தாலேசண்டைப்பட, அத்தைப்பெரியநம்பிகேட்டருளித்தம்முடைய தேவிகளைக்கோபித்து இளையாழ்வாருக்கும் அறிவியாமல் தேவிகளுடன் கோயிலேறஎழுந்தருளினார். இளையாழ்வாரும் இச்செய்தியைகேட்டுத் தம்தேவிகளை மிகவும் கோபித்துப் பிறந்தவகம்போய்வாவென்றனுப்பியருளினார்.

பின்பு ஒருபாகவதனை "இகழநினைத்து இருந்த இடம்ஶோதித்தம் பண்ணிஸ்நாநம்பண்ணியும்,பசித்தார்க்கு ஊணிருக்க இல்லையென்று

(க) "ஶிஷ்யஸ்தேஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்."

சொல்லியும்” “ஆசார்யபத்நியை இகழ்நினைத்துச் சண்டையும்பண் ணினஇவள் நமக்குத் தர்மபத்நியாகாள்” என்று அவளை த்யஜித்து துர்யாஶ்ரமஸ்வீகாரம் நியமித்தருளவேணுமென்று பேரருளாளன் ஸந்நிதியில் ப்ரார்த்திக்க, பேரருளாளனும் அப்படியே நியமித்தருள, இளையாழ்வாரும் பூர்வம் உபதிஷ்டமந்த்ரத்தைக்கொண்டு ஆஶ்ரமஸ் வீகாரம்பண்ணியருள, பேரருளாளனும் அர்ச்சகமுகேந “யதிரா ஜன்” என்று திருநாமம் ப்ரஸாதித்தருளினர்.

நடாதூராழ்வானுதியர் எம்பெருமானாரை ஆஶ்ரயித்தல்.

பின்பு யதிராஜரும் பெரியதிருமலைநம்பிஸந்நிதிக்கு ஒரு ஸ்ரீ வைஷ்ணவரை அனுப்பி கோவிந்தபட்டரை காளஹஸ்தியினின்றும் விடுவித்துத் தேவரீர் திருவடிகளுக்கு ஆட்படுத்திக்கொள்ளவேண் டாவோ? என்று விண்ணப்பஞ்செய்து போகவிட்டார். நடாதூராழ் வானும் பின்பு ஸ்ரீவத்ஸசிஹ்நமிஶ்ரரென்கிற கூரத்தாழ்வானும்முத லியாண்டானும் யதிராஜர் திருவடிகளிலே ஆஶ்ரயித்தார்கள்.

எம்பெருமானாரை யாதவப்ரகாஶன் ஆஶ்ரயித்து உஜ்ஜீவித்தல்.

பின்புயாதவப்ரகாஶன்தாயார் இளையாழ்வாருடையப்ரபாவத்தை க்கண்டு யாதவனும் ராமாநுஜன் திருவடிகளிலே ஆஶ்ரயித்தால் நன் ருயிருக்கும் என்றுநினைக்க, அப்போது “அதுவேநல்லதுநல்லது” என்கிறஉபஶ்ருதியைக்கேட்டு யாதவப்ரகாஶனுக்கும் இச்செய் தியைச்சொல்ல, யாதவப்ரகாஶனும் ‘யான்ஶிகாயஜ்ஞோபவீதத்யா கம்பண்ணினதற்குப்ராயஶ்சித்தமாகபூப்ரதக்ஷிணம் வேண்டாவோ?” என்று விசாரித்துக்கொண்டிருக்க, ராத்ரி ஸ்வப்நத்தில் “நம்ராமாநு ஜனை ஒருப்ரதக்ஷிணம்பண்ணினால் அமையும்”. என்றுபேரருளாளன் அருளிச்செய்ய, பின்பு யாதவனும் திருக்கச்சிநம்பியுடனே “என் நினைவைப் பெருமாளிடத்தில் கேட்டுச்சொல்லவேணும்” என்ன, நம்பியும் அப்படியேகேட்டு, “இராமாநுசனை ப்ரதக்ஷிணம்பண்ணி னல் பூப்ரதக்ஷிணதுல்யமாம்” என்று அருளிச்செய்ய, அதைக்கேட்டு உள்மகிழ்ந்து ராமாநுஜனைப்ரதக்ஷிணம்பண்ணித் தண்டன்ஸமர்ப்பி த்துஇவ்வர்த்தங்களையெல்லாம்விண்ணப்பஞ்செய்து“ அடியேனுக்கு த்ரிதண்டதாரணம்பண்ணிவைத்தருளவேணும்” என்றுப்ரார்த்திக்க, இராமாநுசனும் ஆஶ்சர்யப்பட்டு உகந்தருளி ப்ராயஶ்சித்த பூர்வக மாக யாதவனுக்கு த்ரிதண்டகாஷாயாதிகளையும் ப்ரஸாதித்தருளி, கோவிந்த ஜீயரென்று திருநாமம் ப்ரஸாதித்து, யதிதர்மஸமுச்சய மென்று ஒரு க்ரந்தம்செய்யும்படிநியமித்தருள, அவரும் அப்படியே செய்ய, அந்தக்ரந்தத்தையும் திருக்கண்சாத்தி உகந்தருளினர்.

பின்பு இவ்வ்ருத்தாந்தத்தைக் கோயிலிலே ஆளவந்தார் திருவடிகளெல்லாரும் கேட்டருளித் திருவரங்கப்பெருமாளரையரைப் பேரருளாளனைப் ப்ரார்த்தித்து ராமாநுஜனை எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவரவேணும் என்று விண்ணப்பஞ்செய்ய, திருவரங்கப்பெருமாளரையரும் பெருமாள் கோயிலேற வெழுந்தருளி, பேரருளாளன் திருவடிதொழுது, "என்னெஞ்சமேயான்" இத்யாதிபாட்டுக்களைத் தேவகாநத்திலேறிட்டுப்பாட, பேரருளாளனும் தீர்த்தப்ரஸாதாதிகளையும் ப்ரஸாதித்து "உமக்கு என்னவேண்டுவது?" என்று அர்ச்சகமுகேந கேட்டருள, அரையரும் "இந்த ராமாநுஜனைப் ப்ரஸாதித்தருளவேணும்" என்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் ராமாநுஜனையழைத்து "திருவரங்கப்பெருமாளரையருடனே போரும்" என்றருளிச்செய்ய இராமாநுசனும் அப்படியே பேரருளாளன் திருவடிதொழுது கூரத்தாழ்வான் முதலான முதலிகளைக்கொண்டு தம் திருவாராதநமான பேரருளாளரை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வரும்படிசெய்து வைத்து அரையருடனே கோயிலேற எழுந்தருளும்போது திருக்கச்சிநம்பி முதலானவர்களும் வழிவிட்டு மீண்டுபோக, நல்குலவ்ருத்தங்களையுடைய பெண்கள் பிறந்தகம் விட்டுப் புக்ககம்புகுமாப்போலே மகிழ்ந்துகொண்டெழுந்தருளினார்.

கோயிலிலே அநந்தகொத்துபரிஜநங்களும் ஸ்ரீவைஷ்ணவர்களுடனே திருமாலை திருப்பரியட்டம் முதலான வரிசைகளையும் கொண்டு ஸகலவாத்யங்களோடே திருக்காவேரிக்கரையில் எதிர்கொள்ள, ராமாநுஜனும் தண்டன்ஸமர்ப்பித்துப் பெரியபெருமாள் நியமித்தருளின திருமாலை முதலானவைகளைச் சிரஸாவஹித்துத் திருவீதிப்ரதக்ஷிணமாய் உள்ளேபுகுந்து ஸேவாக்ரமமாக ஸ்ரீரங்கநாச்சியாரையும் அழகியமணவாளனையும் திருவடிதொழுது திருமணத்தூணருகேசென்று பெரியபெருமாளை அமலனாதிபிரான்படியே ஸேவித்துக்கொண்டிருக்க, பெருமாளும் தீர்த்தம் முதலானவைகளை ப்ரஸாதித்து "உபயவிபூத்யைஸ்வர்யத்தையெல்லாம் ஆராய்ந்து நடத்தும்" என்று அருளிச்செய்து "நம்உடையவர்" என்றும் அர்ச்சகமுகேந அருளப்பாடிட்டருள, உடையவரும் 'நாயன்தே' என்று நியமநத்தைச்சிரஸாவஹித்து (க) "அத்ரபரத்ரசாபிநித்யம்யதீயசரணௌ ஶரணம்மதீயம்" என்கிறபடியே "பெரியநம்பி திருவடிகளே நமக்கு உபயவிபூத்யைஸ்வர்யத்தையும் கொடுத்ததுகள்" என்று உள்மகிழ்ந்து கோயில் திருவாராதநம் முதலான ஸமஸ்தமஹோத்ஸவங்களுக்கும்

(க) "அத்ர பரத்ர சாபி நித்யம் யதீயசரணௌ ஶரணம் மதீயம்."

வேண்டினவையெல்லாம் குறைவற நடத்தும்படி அகளங்கநாட்டாழ்வானையும் ஸிஷ்யனாக்கிக் கோயிலுக்கு மேல்காவலாகவைத்து அவனைக்கொண்டு ஸமஸ்தோத்யோகங்களையும்நடத்தியருளினார்.

எம்பாரைத் திருத்திய விவரம்.

அக்காலத்திலேமுன்பு பெரியதிருமலைநம்பிஸந்நிதிக்குப்போயிருந்த ஸ்ரீவைஷ்ணவர்வந்து உடையவர்திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்துத்தேவரீர் நியமனப்படிக்குப்பெரியதிருமலைநம்பிஸந்நிதியில்விண்ணப்பஞ்செய்தேன் "நம்பியும்முதலிகளோடு அடியேனையுங்கூட்டிக்கொண்டுகாளஹஸ்திக்கெழுந்தருளி அவ்விடத்தில்தீர்த்தபத்ரபுஷ்பாதிகளை ஸங்க்ரஹித்து அங்கேஸிவபூஜைபண்ணிக்கொண்டிருக்கிற உள்ளங்கைகொணர்ந்தநாயனாரைச்சிலலௌகிகவார்த்தைகளாலேதிருத்தியருள, அவ்வளவிலும் உத்தரம்சொல்லிப்போய்ஒருமரத்திலேறிப் பத்ரமெடுக்கும்போது நம்பியும் 'தேவுமெப்பொருளும்படைக்க" என்கிறபாட்டில் "பூவும்பூசனையுந் தருமே" என்கிற வாக்யத்திற்கு ஸாஸ்த்ரோபந்யாஸபூர்வகமாகமுதலிகளுக்குஅர்த்தமருளிச்செய்ய, அத்தைக்கேட்டு "தகாது தகாது" என்றுசொல்லிக்கொண்டு லிங்கத்தையும் ருத்ராக்ஷத்தையும் அறுத்துஎறிந்துப்போகட்டுநம்பிதிருவடிகளிலே விழுந்து "உபயவிபூத்யைஸ்வர்யத்திற்கும்முடி சூடிநிற்க, முடைத்தலைகொண்டிருக்குமவனைப்பூஜித்தேனே" என்றுபுலம்பி "இவ்வாத்மாவைஉஜ்ஜீவிப்பிக்கவேணும்" என்றுஎழுந்திராமலிருக்க, நம்பியும்அவரைஎடுத்துப்பல்படிஸாந்த்வவாதநம்பண்ண, "அந்தஸ்தாநத்தாரும்நீர்இப்படிக்குச்செய்யலாமோ?" என்ன, இவரும் இறவுகோல்மோதிரம்முதலானவைகளையும்போகட்டு, "மந்த்ரவாதிபக்கலிருக்கிறஎனக்குப் பிஸாசத்தின்பயமுண்டோ? உங்களுக்கும்எனக்கும்பசையற்றது;" என்றுசொல்லிப்போகட்டு, நம்பிதிருவடிகளிலே நிற்க, நம்பியும்திருமலைஏறவெழுந்தருளி, இவருக்குவபநாதிகளையும் செய்வித்துப் பஞ்சஸம்ஸ்காரங்களையும்ப்ரஸாதித்துப் பெரியாழ்வார்திருமொழிமுதலாய்த் திவ்யப்ரபந்தங்களையும் ப்ரஸாதித்தருளி, காடுசென்றுபோனகட்டுடைப்பிள்ளையைக்கண்டு மகிழ்ந்தருளினார்." என்றுவிண்ணப்பஞ்செய்ய, உடையவரும் அந்த ஸ்ரீவைஷ்ணவரிடத்தில் மிகவும் க்ருபைசெய்தருளினார்.

ஸ்ரீபாஷ்யகாரர்

திருக்கோட்டியூர்நம்பிபக்கல் ரஹஸ்யார்த்தம் ஶிக்ஷித்தல்.

பின்பு பெரியநம்பியும் உடையவரைத் திருக்கோட்டியூர்நம்பி பக்கல் திருமந்த்ரார்த்தத்தையும் சரமஶ்லோகார்த்தத்தையும் கேட்கும்படி நியமித்தருள, உடையவரும் திருக்கோட்டியூரிற்சென்று நம்பிதிருவடிகளிலே அவ்வர்த்தத்தைவிண்ணப்பஞ்செய்ய, நம்பியும் "இம்மந்த்ரார்த்தகௌரவம் எல்லாருக்கும் தெரியவேணும்" என்று "இனியொருகால் போய்வாரும்" என்று அருளிச்செய்ய, உடையவரும் அப்படியே கோயிலுக்கெழுந்தருளி பின்னும்ஸப்ததஶவாரம் கதாகதிபண்ணிக்கொண்டும் பலமகைகூடாமையாலே நிர்விண்ணரா யிருக்க, அப்போது நம்பியும் கோயிலுக்கெழுந்தருளி நமபெருமாளை மங்களாஶாஸநம் செய்துகொண்டிருக்க, அங்குள்ள முதலிகளும் "இப்படிக்கு உடையவர்விஷயத்தில் பரீக்ஷைபண்ணவேணுமோ?" என்று விண்ணப்பஞ்செய்ய, அத்தைத் திருவுள்ளத்திற்கொண்டு திருக்கோட்டியூரேற எழுந்தருளி, "ராமாநுஜனை அழைத்துவாரும்" என்று ஒரு ஸ்ரீவைஷ்ணவரை அனுப்புவிக்க, உடையவரும் கேட்டு உகந்து கூரத்தாழ்வானையும் நடாதூராழ்வானையும் முதலியாண்டானையும் கூட்டிக்கொண்டு திருக்கோட்டியூரிற்சென்று அவர்களை ஓரிடத்தில்வைத்துத் தாமொருவருமே சென்று நம்பிதிருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்துநிற்க, நம்பியும் "இவ்வர்த்தத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டா" என்று நியமித்தருளித் திருமந்த்ரார்த்தத்தையும் சரமஶ்லோகார்த்தத்தையும் பரக்கப்ரஸாதித்தருள, உடையவரும் க்ருதார்த்தராய் அன்றுமற்றுநாள் தெற்காழ்வான்திருவோலக்கத்தில் அந்த ரஹஸ்யார்த்தத்தை எல்லாருக்கும் ப்ரஸாதித்தருள, இச்செய்தியை நம்பி கேட்டருளி, "ஒருவருக்கும் சொல்லவேண்டாவென்று நாம் சொல்லியிருக்க, அத்தையும் மறுத்த உமக்குப்பலம்என்?" என்று கேட்க, உடையவரும் "ஆசார்யநியமநத்தைமறுத்த அடியேனுக்குநரகமேபலம்" என்றுவிண்ணப்பஞ்செய்ய, நம்பியும் "இப்படி அறிந்து செய்ய அடுக்குமோ?" என்றுகேட்டருள, (க) "மமைவமரணம் பூயாந் மாபூத்வம்ஶவிநாஶநம் - இதி புத்த்யாவிநிஶ்சித்யராகவாயந்ய வேதயத்" என்று சொன்ன இளையபெருமாளவதாரமாகையாலே, உடையவரும் "அடியேனொருவனுமே நரகம்போவது, இவ்வர்த்தத்தைக்கேட்ட ஆத்மகோடிகளெல்லாரும் உஜ்ஜீவிப்பர்களே" என்று

(க) "𑌮𑌮𑍈𑌵 𑌮𑌰𑌣𑌂 𑌭𑍂𑌯𑌾𑌨𑍍𑌮𑌾 𑌭𑍂𑌦𑍍𑌵𑌂𑌶𑌵𑌿𑌨𑌾𑌶𑌨𑌂 । 𑌇𑌤𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌯 𑌰𑌾𑌘𑌵𑌾𑌯 𑌨𑍍𑌯𑌵𑍇𑌦𑌯𑌤𑍍."

விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் உடையவருடைய உள்கருத்துக்குப் போரஉகந்து,தாமதுபெற்றிலோமென்று தம்மைநொந்து, "இன்று முதல்இத்தர்ஶநத்தை ராமாநுஜஸித்தாந்தமென்னக்கடவது,உமக்கு ஆஜ்ஞாதிலங்கநதோஷம் இல்லை" என்று அருளிச்செய்து போர உகந்தருளினர்.

பின்பு அங்குள்ளவர்களெல்லாரும் "இவ்வர்த்தத்தை அருளிச்செய்த எம்பெருமானரோ?" என்றுஉடையவர் திருவடிகளிலே ஸேவித்து நிற்க,நம்பியும் "இது,எம்பெருமானர்தர்ஶநமென்று பேர்பெற்றிருக்கக்கடவது" என்று அருளிச்செய்தார்.

ஸ்ரீபாஷ்யகாரர் திருவரங்கப்பெருமாளரையர்பக்கல் திருவாய்மொழி ஓதி நல்வார்த்தை கேட்டல்.

எம்பெருமானரும் நம்பி திருவடிதொழுது விடைகொண்டு முதலிகளுடனே கோயிலேற எழுந்தருளிப்பெரியநம்பிதிருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து நிற்க நம்பியும் "திருவரங்கப்பெருமாளரையர்பக்கல் திருவாய்மொழியுமோதி சில விஶேஷங்களான நல்வார்த்தைகளையும் கேளும்" என்று அருளிச்செய்ய, எம்பெருமானரும் அன்றுமுதலாக ஆறுமாஸம் திருவரங்கப்பெருமாளரையருக்கு ஸர்வவிதகைங்கர்யங்களையும் செய்து அநுவர்த்திக்க,ஒருநாள் மஞ்சள்காப்புக்கைங்கர்யத்தில் அரையரும் மிகவும் திருவுள்ள முகந்து "பீதகவாடைப்பிரானர் பிரமகுருவாகிவந்து" என்கிறபடியே உறங்கும்பெருமாளே உலாவும் பெருமாளாகவந்த ஸதாசார்யன் பக்கல் மந்த்ரார்த்தையும் ஆர்த்தஶிக்ஷையையும்பெற்று எம்பெருமான் சரமஶ்லோகத்திலருளிச்செய்த உபாயத்தை அநுஷ்டித்து (க)"அத்ரபரத்ராபி" என்கிறபடியே ஆசார்யன்பக்கல் மஹாவிஶ்வாஸமிருந்தால்(உ) "தஸ்யமுக்தி:கரேஸ்திதா" என்கிறபடியே பரமபுருஷார்த்தம்கைபுகுரும்;இது "நம்ஆளவந்தார் அருளிச்செய்த நல்வார்த்தை" என்றருளிச்செய்து, இதற்கு மதுரகவிகள் நடத்திப்போந்த கண்ணிநுண்சிறுத்தாம்பின்அர்த்தத்தையும், "தென்குருகூர்நகர்நம்பிக்கு அன்பனாய் மதுரகவிசொன்னசொல் நம்புவார்பதிவைகுந்தம்" என்றருளிச்செய்து ஸ்வரூபோபாயபுருஷார்த்தங்களைவிஶதமாகக்காட்டுகிற திருவாய்மொழியையும்உபதேஶித்தருள, அவைகளைக்ரஹித்தருளி அரையர் திருவடிதொழுது விடைகொண்டுபெரியநம்பிஸ்ரீபாதத்திலே தண்டன் ஸமர்ப்பித்துநிற்க,

---

(க)"அத்ர பரத்ராபி." (உ)"தஸ்ய முக்தி: கரே ஸ்திதா."

ஸ்ரீபாஷ்யகாரர்

திருமாலையாண்டான்பக்கல் திருவாய்மொழிகேட்டல்.

நம்பியும் "திருமாலையாண்டான்பக்கல் திருவாய்மொழிக்கு அர்த்தங்கேட்டுவாரும்" என்று நியமித்தருள எம்பெருமானாரும் திருமாலையாண்டான் திருவடிதொழுது திருவாய்மொழிக்கு அர்த்தங் கேட்டுக்கொண்டிருக்க, "அறியாக்காலத்துள்ளே" என்கிற பாட்டுக்கு ஒருபடியாக அர்த்தம் அருளிச்செய்ய, எம்பெருமானாரும் ஒருபடியாய் க்ருதஜ்ஞதைதோற்றும்படி ஒருயோஜனைசெய்து, "இதுவும்இப்பாட்டுக்கு ஒக்கிருக்குமோ?" என்று விண்ணப்பஞ் செய்ய, ஆண்டானும் உள்மகிழ்ந்து, அவ்வர்த்தத்தைத்திருக்கோட்டியூர்நம்பியும் பெரியநம்பியும் முதலிகளுடனே இருக்கும்போது, அங்கேறஎழுந்தருளிவிண்ணப்பஞ்செய்ய, அவர்களும "நம் ஆளவந்தார் பக்கல் இவ்வர்த்தத்தைக்கேட்டிருந்தோம்" என்று அருளிச்செய்து "ஆளவந்தார்பரிபூர்ணகடாக்ஷவிஷயரானஎம்பெருமானார் நம்பிடத்தில விசேஷார்த்தங்களைத்தெளியுமதுவும் ஸாந்தீபிநியிடத்தில்கண்ணன் வித்யாக்ரஹணத்தோடு துல்யமாம்" என்றருளிச்செய்ய, ஆண்டானும் "அதுஒக்கும்" என்று உகந்தருள, அதந்திரளோடே பெரியநம்பியும் எம்பெருமானார்மடமேறஎழுந்தருளிக் குளிரக்கடாக்ஷித்துப் போந்தார். பின்பு திருமாலையாண்டானும் திருவாய்மொழி அர்த்தத்தைச் சாத்தியருளினர்.

பின்பு ப்ரணதார்த்திஹரரென்கிற கிடாம்பியாச்சான் தனக்குப் பித்ருஸஹோதரியான பெரியதிருமலைநம்பிதேவிகளைப் பார்க்கைக்காகத் திருமலையிற்சென்று நம்பி திருமாளிகையில்சிலநாளிருக்க, அப்போது பெரியதிருமலைநம்பிக்கு ஒருகுமாரருண்டாக, அவருக்குப் பிள்ளைஎன்று திருநாமம்சாத்தினர்.

திருக்குருகைப்பிரான்பிள்ளான் வைபவம்.

(௧) துலாயாம்வேங்கடாத்ரௌது பூர்வாஷாடாஸமுத்பவம்।
குருகேசம் ப்ரசண்டாம்சம் வந்தே ஸ்ரீசைலபூர்ணஜம்.

பின்புபெரியதிருமலைநம்பிக்குக்கலியுகத்தில்-௪௧௯௩- ஆவதான ப்லவவர்ஷத்தில் ஐப்பசிமாஸம் பூர்வாஷாடாநக்ஷத்ரத்தில் ப்ரசண்டாம்சராக இரண்டாங்குமாரரவதரிக்க அவருக்குப்பிள்ளானென்று

---

(௧) 𑌤𑍁𑌲𑌾𑌯𑌾𑌂 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌾𑌦𑍍𑌰𑍌 𑌤𑍁 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌷𑌾𑌢𑌾𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌂।
𑌗𑍁𑌰𑍁𑌕𑍇𑌶𑌂 𑌪𑍍𑌰𑌚𑌣𑍍𑌡𑌾𑌂𑌶𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑌪𑍂𑌰𑍍𑌣𑌜𑌂.

திருநாமஞ்சாத்தியருளினார். அந்தப்பிள்ளானும் நம்பி காலக்ஷேபம் பண்ணிக்கொண்டிருக்கும்போது இவ்வப்ரபந்தங்களில் ஏதேனுமொருபாட்டிற்கு அர்த்தமருளிச்செய்தால் அத்தையுற்றுக்கேட்கவும் கேவலபாலர்கள்போலே அழுவதும்சிரிப்பதுமின்றியேஎப்போதுமொருதெளிவுடையதாய் நிற்கவும் கண்டு, நம்பியும் "இதுவும் ஓராஶ்சர்யகரமாயிருப்பதே"என்றுபோர உகந்து"நம்முடையபூமிப்பிராட்டியாரிடத்தில் பிறந்த இளையாழ்வார்போல் காணும்" என்று நெஞ்சிற்கொண்டிருக்க, இவைகளையெல்லாம் அங்குள்ளாரறிந்து "இதென்ன?"என்றுதிகைக்க,கிடாம்பியாச்சானும் தான் அத்யயநாதிகளைப் பண்ணிக்கொண்டு பிள்ளான்நாள்தோறும் அபிவ்ருத்தராய்ச் செய்கிறஅக்ஷராப்யாஸம்முதலானவித்யாக்ரஹணத்தையும்திவ்யப்ரபந்தாபிமாநத்தையுங்கண்டு"இதென்ன?"என்று உள்மகிழ்ந்துநிற்க,

பின்புஒருநாள் கோயில்ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமலையேறஎழுந்தருளித்திருமலையப்பனைத் திருவடிதொழுது,நம்பிதிருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்துநிற்க, "கோயில்வ்ருத்தாந்தமென்?" என்றுநம்பியும் கேட்டருள, அவர்களும்எம்பெருமானார் ப்ரபாவத்தைப் பரக்க விண்ணப்பஞ்செய்ய,நம்பியும் கேட்டு உகந்து"நம் ஆளவந்தார்நியமநம்பலித்தது"என்றுபோரஉகந்து இப்படிக்கு நிறைவேற்றினதிருமலையப்பனைத் திருவடிதொழுது(க)"ப்ரூஹி ஸௌம்ய புந: புந:" என்கிறபடியே "இன்னும்சொல்லும்இன்னும்சொல்லும்"என்றுகோயில் ஸ்ரீவைஷ்ணவர்களைக்கேட்க, அவர்களும் அந்தவைபவத்தைத் திரும்பவும்சொல்ல, இவைகளைக்கேட்டுப்பிள்ளானும்(உ)"பாலாஅபிக்ரீடமாநாக்ருஹத்வாரேஷு ஸங்கஶ:-ராமாபிஷ்டவஸம்யுக்தாஶ்சக்ருரேவம்விதா:கதா:"என்கிறபடியேஎம்பெருமானார் வைபவத்தையேபகலிடத்திலும் பல்காலமும் சொல்லித்திரிய,இத்தைக்கண்டு நம்பியும் உள்மகிழ்ந்து, பிள்ளானுக்குத் திருக்கல்யாணம் பண்ணிவைத்து, (ங) "கதாத்ரக்ஷ்யாமஹே ராமம்"என்கிறபடியே எம்பெருமானார் திருவடிகளிலே ஆஶ்ரயிக்கவேணும்என்றுத்வரைப்பட்டிருக்கிறகிடாம்பியாச்சானோடே பிள்ளானையுங்கூட்டி அனுப்பித்து,எம்பெருமானாருக்கும் திருமலைஅப்பனைத்திருவடிதொழவருப்படி நியமித்தருள, ஆச்சானும் பிள்ளானுடனே பெருமாள்கோயிலேறவந்துபோருளாளன்

(க) "ப்ரூஹி ஸௌம்ய புந: புந:" (உ) "பாலா அபி க்ரீடமாநா க்ருஹத்வாரேஷு ஸங்கஶ: | ராமாபிஷ்டவஸம்யுக்தாஶ் சக்ருரேவம்விதா: கதா:" (ங) "கதா த்ரக்ஷ்யாமஹே ராமம்."

திருவடிதொழுது, இவ்வர்த்தங்களையெல்லாம் தம்தாயாருக்கும் அறிவித்துக் கோயிலேறப்போய்ப் பெரியபெருமாளை ஸேவித்து எம்பெருமானார் திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து விழுந்துகிடக்க, எம்பெருமானாரும் "இதென்ன?" என்றுகேட்க, ஆச்சானும் பெரியதிருமலைநம்பிஸந்நிதியில் நடந்த வ்ருத்தாந்தங்களையெல்லாம் விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானாரும் பெரியதிருமலைநம்பி திருவுள்ளத்துகப்பைக்கேட்டு உள்மகிழ்ந்து, ஆச்சானை முடிபிடித்தெடுத்துப் போரவுகந்தருளி, "இவரோ பிள்ளான்?" என்றுகேட்க, பிள்ளானும் "அடியேன்" என்று திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்துநிற்க, எம்பெருமானாரும் தந்தாமரைக்கண்களை அமலங்களாக விழித்து, குளிரநோக்கியருளி, "நம்மிடத்தில் ஆளவந்தாரும் நம்பியும் செய்தருளின கடாக்ஷவிசேஷம் உமக்குஸ்வதஸ்ஸித்தமாயிருக்கும்" என்றுபோரவுகந்தருளி, ஆச்சானுக்கு ஸமஸ்தவிசேஷார்த்தங்களையும் ப்ரஸாதித்தருளினார். ஆச்சானும் அநிதரஸாதாரணமாக எம்பெருமானார் திருமேனிப்பரிவராய்ப்போந்தார்.

பின்புபெரியநம்பியும் திருக்கோட்டியூர்நம்பியுடனே எழுந்தருளியிருக்கும்போது "கோயிலிலே எம்பெருமானார் மாதுகரத்தில் ஒருவன் துர்புத்தியாலே விஷத்தைக் கலந்துகொடுக்கக்கண்டு உபவாஸத்தோடே எழுந்தருளியிருக்கிறார்" என்று கேட்டருளி, பெரியநம்பியும் பரபரப்புடனே நம்பியையும் கூட்டிக்கொண்டு எழுந்தருளச்செய்தே மத்யாஹ்நகாலத்தில் திருக்காவேரியிலெழுந்தருள, எம்பெருமானாரும் முதலிகளோடே எதிர்கொண்டுபோய் பெரியநம்பியைத் தண்டன்ஸமர்ப்பிக்க, நம்பியும்முடிபிடித்தெடுத்துக் குளிரக்கடாக்ஷித்தருள, "திருக்கோட்டியூர்நம்பிபக்கல்தண்டன் ஸமர்ப்பித்துக்கொண்டிருக்க, நம்பியும் 'அமையும், எழுந்திரும்' என்றுசொல்லாமலிருக்க, கிடாம்பியாச்சானும் "இதென்ன? ஆசார்யஶிஷ்யக்ரமந்தான்; உயிர்முடியுமளவும்பரீக்ஷைபண்ண அடுக்குமோ?" என்றுஎம்பெருமானாரைவாரியெடுத்துக்கொண்டு கண்ணீர்மல்கநிற்க, திருக்கோட்டியூர்நம்பியும், "உம்மை அன்றோ தேடுகின்றோம்? இவர் திருமேனிக்குப்பரிவரான நீரேமாதுகரத்தைஶோதித்து ஸமாபநம் பண்ணுவிக்கக்கடவீர்" என்றுநியமித்தருள, கிடாம்பியாச்சானும் அப்படியேபண்ணிக்கொண்டுவர, எம்பெருமானாரும் திருவுள்ளம்பற்றியெழுந்தருளியிருந்தார்.

எம்பெருமானாரை யஜ்ஞமூர்த்தி ஆஸ்ரயித்தல்.

அப்போது யஜ்ஞமூர்த்தியென்கிற ஒருவித்வான் திக்விஜயம் பண்ணிக்கொண்டு கோயிலேறவந்து உடையவரைப்பார்த்து, "இப்போது உம்முடைய ஸித்தாந்தத்தை நிர்வஹித்தீராகில், உமக்கு நான் ஸிஷ்யனாகக்கடவேன்" என்றும், "இல்லாவிட்டால், எனக்கு நீர்ஸிஷ்யராகவேண்டும்" என்றுஞ்சொல்ல, எம்பெருமானாரும் அப்படியே திருவுள்ளம்பற்றிப் பதினெட்டுநாள் எல்லைபிட்டுப்பதினேழு நாளும் யஜ்ஞமூர்த்தியுக்தி ப்ரபலமாயிருக்கக்கண்டு, தம்பேருளாளனை ஆராதித்து "இந்தத்தர்ஸநம் அடியேனைத்தோற்றித் தோற்கக்கடவதோ?" என்று தாம் அமுதுசெய்யாமல் கண்வளர்ந்தருள, பேரருளாளனும் "ஆளவந்தார் அருளிச்செயல்களைமறந்தீரோ?" என்று ஸ்வப்நத்திலருளிச்செய்ய, எம்பெருமானாரும் விடிந்தவாறே அவ்வர்த்தங்களையெல்லாம் நெஞ்சிற்கொண்டு, வேதாந்தத்தில் யஜ்ஞமூர்த்தியை ஜயித்து அவருக்கு ப்ராயஸ்சித்தபுரஸ்ஸரமாக ஸிகா யஜ்ஞோபவீதஸஹிததுரீயாஸ்ரமத்தையும்பஞ்சஸம்ஸ்காரங்களையும் ப்ரஸாதித்தருளி, பேருளாளன் ஸ்வப்நத்தாலே அவருக்கு அருளாளப்பெருமாளெம்பெருமானாரென்று திருநாமம் ப்ரஸாதித்துத்திவ்ய ப்ரபந்தம்முதலான விஸேஷார்த்தங்களையும் ப்ரஸாதித்தருளினார்.

அநந்தாழ்வார் வைபவம்.

பின்பு ஒருநாள் "ஒழிவில்காலமெல்லாம்" என்கிற திருவாய்மொழியில் ஆளவந்தார் திருவுள்ளத்தை அருளிச்செய்ய, அநந்தாழ்வான் "அந்தக்கைங்கர்யத்தை நடத்துகிறேன்" என்று திருமலையில் திருநந்தநவநம்செய்து திருமலையப்பனுக்கும் புஷ்பகைங்கர்யம்செய்துகொண்டிருந்தார்.

திருமலைநம்பிபக்கல் எம்பெருமானார் ஸ்ரீமத்ராமாயணம்கேட்டல்.

பின்பு எம்பெருமானார் பெரியதிருமலைநம்பி நியமநப்படிக்குத் திருமலையேறவெழுந்தருளும்போது பெருமாள் கோயிலிலே சில ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆஸ்ரயிக்க, அவர்களையும் அழைத்துக்கொண்டு திருமலை அடிவாரத்திலெழுந்தருள, அவ்விடத்தில் முப்பது திருநாமங்களாஸ்ரயிக்க, அவர்களை அங்கீகரித்துப் பின்பு அநந்தாழ்வான் திருமலைஇறங்கி உடையவரை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு போக, திருவேங்கடமுடையான் அமுதுசெய்தருளினப்ரஸாதத்தை ஒருஸ்ரீவைஷ்ணவர்கையில் கொடுத்து "எம்பெருமானாருக்கு எதிர்கொண்டு தீர்த்தப்ரஸாதங்கொடுத்து வாரும்" என்று திருமலைநம்பி

நியமித்தருள, அவரும் எதிர்கொண்டுபோய்க் கொடுக்க,எம்பெருமானாரும் அத்தை ஸ்வீகரித்துக் கோயிலருகேஎழுந்தருள,அநந்தகொத்துபரிஜநமும் திருமாலைமுதலானவைகளையெடுத்துக்கொண்டு எதிரேவந்து ஸத்கரிக்கும்படி செய்வித்துத் தாமும் முன்பாக எழுந்தருள, உடையவரும் நம்பி திருவடிகளிலேவிழுந்து "அடியேனை இவ்வண்ணமாக்கும்படி ரக்ஷார்த்தமாகத் திருவிலச்சினையும் ப்ரஸாதித்து,ஆளவந்தார்நியமநப்படிக்கு அபிவ்ருத்தமாகும்படிபகவத்ப்ரபத்திசெய்தருளின தேவரீர்திருவடிகளைத் தொழும்படி இப்போதன்றோ? வாய்த்தது" என்றுஉள்மகிழ்ந்துநிற்க, நம்பியும்வாரியணைத்து"நம்ஆளவந்தார்திருவுள்ளத்தை நம் அப்பன்தலைக்கட்டினான்" என்றுதிருவுள்ளமுகந்து திருமாலைமுதலானவைகளையும் ப்ரஸாதித்தருள, எம்பெருமானாரும் பெரியதிருவீதி ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி ஸ்வாமிபுஷ்கரிணியுல்நீராடி ஞானப்பிரானையும் திருவேங்கடமுடையானையும் திருவடிதொழுது மூன்றுநாள் எழுந்தருளியிருந்து திருமலையினின்றுமிறங்கி அந்தப்பெரியதிருமலைநம்பி ஸந்நிதியில் ஒரு ஸம்வத்ஸரம் ஸ்ரீமத்ராமாயணார்த்தத்தைக் கேட்டுக்கொண்டெழுந்தருளியிருந்து ஸ்ரீமத்ராமாயணம் சாத்தினவாறே,

---

திருமலைநம்பியும் தம்குமாரர்களை உடையவர் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்து,பிள்ளானுடைய ஆஜாநஸித்தமான ஸத்வ்ருத்தாந்தத்தையும் அருளிச்செய்து "உம்முடைய விசேஷகடாக்ஷத்திற்கு இது நல்லபாத்ரம்" என்று பிள்ளானைக் காட்டிக்கொடுத்தருள,எம்பெருமானாரும் அப்படியே திருவுள்ளம்பற்றி அங்கீகரித்துப் பஞ்சஸம்ஸ்காரம் முதலாக ஸரஹஸ்தவிசேஷார்த்தங்களையும் ப்ரஸாதித்தருளி,

எம்பார் வைபவம்.

"கோவிந்தப்பெருமாளையும் அடியேனுக்குக் கொடுத்தருளவேணும்" என்று நம்பியைக்கேட்டு உதகதாராபூர்வகமாக வாங்கிக்கொண்டு கோயிலேறப்போவதாகப் பெருமாள்கோயிலேற வெழுந்தருள, கோவிந்தப்பெருமாளிடத்தில் வைவர்ண்யத்தைக்கண்டு, "நம்பியை ஸேவித்துவாரும்" என்ன, அவரும் அப்படியே போக, நம்பியும் முகம்கொடாமலிருக்க, நிராசராய்த்தெளிந்து உடையவர் திருவடிகளிலே ஸேவித்துநிற்க, எம்பெருமானாரும் அத்திரளோடே கோயிலேற வெழுந்தருளினார்.

பின்பு ஒருநாள் கோவிந்தப்பெருமாளுடைய விஷயவிரக்தியைப் பஹுவாகப்பார்த்தருளி, துரீயாஸ்ரமத்தைப் பண்ணுவித்தருளி, தந்திருநாமத்தில் ஆத்யந்தக்ரஹணம்பண்ணி "எம்பார்" என்று திருநாமம்ப்ரஸாதித்தருளினார்.

பிறகு எம்பெருமானார் கூரத்தாழ்வான், நடாதூராழ்வான், முதலியாண்டான், எம்பார் முதலான முதலிகளையும் கூட்டிக்கொண்டு ஸ்வரூபோபாயபுருஷார்த்தங்களை ப்ரதிபாதிக்கிற திருமந்த்ரத்தினுடைய அர்த்தங்களைப் பூர்வபக்ஷப்ரதிக்ஷேபபுரஸ்ஸரமாக ஸித்தாந்தஸ்தாபநம்பண்ணும்படி விஸிஷ்டாத்வைதபரமாக வேதவ்யாஸர் செய்தருளின ஸூத்ரத்திற்குப் பாதிதார்த்தங்களைக் கற்பித்த ஸங்கராதிகள் போலன்றிக்கே அபாதிதார்த்தங்களை அவ்யாஹதமாக எல்லாருமறிந்து உஜ்ஜீவிக்கும்படி ஒருபாஷ்யம் செய்தருளவேணும் என்று நிஸ்சயித்து, வேதார்த்த ஸங்க்ரஹம், வேதாந்தஸாரம், வேதாந்ததீபம் என்கிறக்ரந்தங்களையும்செய்தருளிப் பின்புஸ்ரீபாஷ்யத்தையும் செய்தருளி ஆளவந்தாருடைய ப்ரதமமான திருவுள்ளத்தைநிறைவேற்றினார்.

பின்பு ஒருகால் ஒருபங்குனிஉத்திரத்திருநாளில் பெருமாளும் நாச்சியாரும் திருமஞ்சனங்கொண்டருளி ஒருசேர்த்தியிலெழுந்தருளியிருக்கும்போது "தாம்பண்ணின பரஸமர்ப்பணத்தைத் திருவுள்ளம்பற்றின திவ்யதம்பதிகள் தமக்கு அபயப்ரதானம்பண்ணின திருமுகப்பாசுரத்தை யெல்லாருமறிந்து உஜ்ஜீவிக்கவேணும்" என்று திருவுள்ளம்பற்றி கத்யத்ரயத்தை அருளிச்செய்தார். இப்படிபாஷ்யாதிகளாலே உபாயத்தைஅறிந்து கத்யத்ரயத்தாலே அநுஷ்டித்தவனுக்குப் புருஷார்த்தமான கைங்கர்யங்களை இங்கு இருந்தகாலமெல்லாம க்ரமமாக நடத்துகைக்காக நித்யக்ரந்தத்தையும் அருளிச்செய்தார்.

பின்பு ஸ்ரீபாஷ்யாதிக்ரந்தங்களில் அத்யந்தவைஸத்யமும் பாகவதப்ராவண்யமும் அநுஷ்டாநவைலக்ஷண்யமும் பிள்ளானிடத்தில் அதிஸயித்திருக்க, அத்தைக்கண்டு எம்பெருமானாரும் போர உகந்தருளினார்.

பின்பு கூரத்தாழ்வான் நடாதூராழ்வான் முதலான முதலிகளோடே எம்பெருமானாரும் பரமதங்களை ஜயித்துக் கொண்டு திருக்குடந்தை முதலாக அழகர் திருமலையிலும், திருப்புல்லாணியிலும் எம்பெருமான் திருவடிதொழுது திருவணையாடித்

திருநகரியில் ஆழ்வாரையும் பொலிந்துநின்றபிரான் முதலான எம்பெருமான்களையும் திருவடிதொழுது திருக்குறங்குடியில் பெருங்கூட்டத்துமுதலிகளோடே நீராடி அநுஷ்டாநம் செய்துகொண்டிருக்க, அந்தத்திவ்யதேசத்தெம்பெருமானான திருக்குறுங்குடிநம்பியும் ஒருஸ்ரீவைஷ்ணவரூபமாய்வந்து உடையவரைப்பார்த்து "எம்பெருமான் ராமக்ருஷ்ணாதிரூபேண அவதரித்துத்திருத்தவும் திருந்தாத இச்சேதநர்களையும் திருத்தும்படியானமந்த்ரம் உமக்குஇருக்கிறது; ஆகையால் அந்தமந்த்ரத்தை எனக்குச்சொல்லவேணும்" என்ன, உடையவரும் அந்த ஸ்ரீவைஷ்ணவருக்குப் பஞ்சஸம்ஸ்காரபுரஸ்ஸரமாகத் திருமந்த்ரத்தைஉபதேசித்து ஸ்ரீவைஷ்ணவநம்பியென்று திருநாமமும் திருமண்காப்பும் ப்ரஸாதித்தருள, அந்தஸ்ரீவைஷ்ணவரும் அவைகளைப் பெற்றுக்கொண்டு அந்தர்த்தாநமாய்ப் போக, உடையவரும் முதலிகளும் "இதென்ன ஆஸ்சர்யம்?" என்று திருக்குறுங்குடிநம்பி திருவடிதொழுது ஆபாதமஸ்தகம் நம்பியை ஸேவித்துநிற்க, தாமிட்டதிருமண்காப்பு நம்பி திருநெற்றியிலே இருக்கக்கண்டு ஸரணாகதிகத்யத்தாலே க்ஷாமணம்பண்ணிக்கொள்ள நம்பியும் உகந்தருளி உடையவரைக்குளிரக்கடாக்ஷித்தருளினார்.

பின்புஉடையவரும்திருவண்பரிசாரம்முதலாகத் திவ்யதேசங்களில் எம்பெருமான் திருவடிதொழுது அங்கங்குள்ள குத்ருஷ்டிகளையும்ஜயித்து ஸரஸ்வதீபீடத்தேறஎழுந்தருள,ஸரஸ்வதியும் எதிர்கொண்டு அழைத்து "ஸங்கராதிகள் போலன்றிக்கேயதார்த்தத்தைக்கொண்டு பாஷ்யம் பண்ணினவராகையாலே அந்தப்பாஷ்யத்திற்கு "ஸ்ரீபாஷ்யம்"என்றும் உமக்கு"ஸ்ரீபாஷ்யகாரர்"என்றும்திருநாமம் சாத்தினேம்" என்றுசொல்லிஅந்தஸ்ரீபாஷ்யத்தைஸிரஸாவஹித்துத்தனக்கு ஆராதநமான ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவரையும் அந்தப் பாஷ்யத்தையும் உடையவர்கையில் கொடுக்க,உடையவரும் மஹாதநத்தைப் பெற்று ஸந்தோஷத்தோடே மடமேற எழுந்தருளியிருந்து அங்குள்ளகுத்ருஷ்டிகளையும் ஜயிக்க, அத்தேசத்தின்ராஜாகேட்டுஉடையவர் திருவடிகளிலே ஆஸ்ரயிக்க, குத்ருஷ்டிகள் அபிசாரஹோமத்தைப்பண்ண, அதுவும் அவர்களுக்கே தீங்காய்முடிய, அவர்களும் உடையவர் திருவடிகளிலே ஆஸ்ரயிக்க,உடையவரும் அங்குநின்றும் புறப்பட்டு வடதிசைமதுரைமுதலான திவ்யதேசங்களில் எம்பெருமான் திருவடிதொழுது கங்கையில் நீராடி ஸ்ரீபுருஷோத்தமத்திலும் ஸ்ரீகூர்மத்திலும்,ஸிம்ஹாத்ரியிலும், அஹோபிலத்திலும் எம்

பெருமான் திருவடிதொழுது அங்கங்குள்ள குத்ருஷ்டிகளையும் ஜயித்துத்திருமலையேற எழுந்தருளினர்.

அப்போது ஸைவர் வந்து திருவேங்கடமுடையானை "எங்கள் நாயனர்" என்று பெரியதிருமலைநம்பியோடே வழக்கிட்டுக்கொண்டிருக்க, அவ்வளவில் உடையவரும் பெருங்கூட்டத்துமுதலிகளோடே சென்று அவர்களை விலக்க, அவர்களும் "வைஷ்ணவசிஹ்நமும் ஸைவசிஹ்நமும் இல்லாமையாலும், ஒருபடியாலிரண்டு சிஹ்நமும் இருக்கிறபடியாலும் பொதுவாகவேண்டும்" என்ன, உடையவரும் "திருவாழிதிருச்சங்குகளையும்திருமார்வுநாச்சியாரையும் த்ரிஸூலடமருகங்களையும்பண்ணிவைத்துத்திருக்காப்புசேர்த்துப்ராத:காலத்தில்ஸோதித்தறிந்துகொள்ளுவோம்" என்ன, அவர்களும் அப்படியே இசைந்தவாறே, அப்படியே செய்துவைத்துத்திருக்காப்புசேர்த்துக் காவலிட்டுவைத்து,ப்ராத:காலத்தில் இருவருமாய்வந்து ஸோதிக்குமளவில், த்ரிஸூலடமருகங்களைமுறித்துக்காற்கடைக்கொண்டுதிருவாழிதிருச்சங்குகளையும் திருமார்வுநாச்சியாரையும் தரித்துக்கொண்டிருக்கக்கண்டு,உடையவரும்அந்தஸைவர்களையும் ஓட்டிவிட்டுத் திருவேங்கடமுடையானுக்குத் திருவாராதநம் முதலானவைகளை முன்புபோலேநடத்த, பெரியதிருமலைநம்பியும் உடையவரைப்போர உகந்தருளி, பிள்ளானையும் குளிரக்கடாக்ஷித்தருளி, பிள்ளை திருமலைநம்பியைநிறுத்திக்கொண்டு விடைகொடுக்க,உடையவரும்நம்பி திருவடிதொழுது பெருமாள்கோயில் முதலாகஉள்ளஎம்பெருமான் திருவடிதொழுது கோயிலேறவெழுந்தருளி ஸமஸ்தவிஸேஷார்த்தங்களையும் ப்ரஸாதித்துக்கொண் டெழுந்தருளியிருந்தார்.

பட்டர் வைபம்.

பின்பு ஒருநாள் கூரத்தாழ்வான் வர்ஷாப்ரதிபந்தகத்தாலே உபவாஸத்துடனே இருக்க, அப்போது பெரியபெருமாள் அமுதுசெய்து திருச்சின்னம்பரிமாற, அவர்தேவிகள்கேட்டு இப்படிபக்தர் பட்டினியேயிருக்க,நீர்என்செய்கிறீர்? என்ன,பெருமாளும் உத்தமநம்பிக்கு ஸ்வப்நத்தில் ஆழ்வானுக்கு ப்ரஸாதம்கொடுக்கும்படி நியமித்தருள, அவரும்அப்படியேகொடுக்க, ஆழ்வானும்எதிரேசென்று 'மஹாப்ரஸாதம்'என்று அங்கீகரித்துத் தேவிகளுக்குங்கொடுத்துத் தாமும் அமுதுசெய்ய,அதுமுதல் ஆழ்வான்தேவிகளுக்குக் கர்ப்பம்

தரித்து இரண்டுகுமாரர்களவதரிக்க, எம்பெருமானுரும் அஸாதாரணமான ஆசார்யபக்தியுடைய ஆழ்வானுக்குப் பெரியபெருமாள் கடாக்ஷத்தாலே உத்பந்நர்களான இருவர்களில் ஜ்யேஷ்டகுமாரருக்கு எம்பாரைக்கொண்டு பராஶரபட்டர் என்று திருநாமத்தை ப்ரஸாதிக்கும்படி செய்தருளி ஆளவந்தாருடைய த்விதீயாபிப்ராயத்தை நிறைவேற்றினுர்

பின்பு எம்பார்ஸந்நிதியில் திருமந்த்ராதிகளைப்பெற்று அபிவ்ருத்தரான பட்டரை அழைத்து ஸஹஸ்ரநாமபாஷ்யம்பண்ணும்படி நியமித்தருள, பட்டரும் அப்படியேசெய்ய, அத்தையே பாஷ்யமென்று காலக்ஷேபத்தில்வைக்கும்படி நியமித்தருளினுர்.

பின்பு ஒருகால் திவ்யப்ரபந்தார்த்தங்களை மநநம் பண்ணிக்கொண்டு எம்பெருமானுர் மடத்திற்குள்ளே உலாத்திக்கொண்டிருக்க,பிள்ளானும் அவ்வாசல்திறவுகோல்வழியாய்ப்பார்த்து, எம்பெருமானுர்அபிநயக்ரமமாக உலாத்திக்கொண்டிருக்குமதையறிந்து இப்போது "திருமாலிருஞ்சோலைமலையென்றேனென்ன" என்கிற "திருவாய்மொழி அர்த்தாநுஸந்தாநமோ ?" என்று விண்ணப்பஞ்செய்ய,எம்பெருமானுரும் கேட்டு "இதென்ன?"என்று திகைத்து, 'நம் பிள்ளானே?' என்றுகேட்க, அவரும் "அடியேன்" என்றுவிண்ணப்பஞ்செய்ய, வாசல்திறந்துவிட்டுப் பிள்ளானை வாரியெடுத்துஉச்சிமோந்து, பெரியநம்பிமுதலானபெருங்கூட்டத்தில் ஆழ்வான்முதலானமுதலிகளும்கேட்கும்படி இவ்வாஶ்சர்யத்தையருளிச்செய்து, இவர் ஆஜாநஸித்தமான ஸத்வ்ருத்தங்களையும் ப்ரபந்தப்ராவண்யத்தையும் கேட்டதுமன்றியில் பாஷ்யாதிகளிலே இவருடையவைஶத்யத்தையும், பாகவதபாரதந்த்ர்யத்தையும் இப்போது நாம் ப்ரபந்தார்த்தமநநம்பண்ண அதன்சுவடு அறிந்தபடியையும் பார்த்தால் "நம்நியமநப்படிக்கு விஶேஷகடாக்ஷபாத்ரர் இவரேயாவர்" என்று போரஉகந்தருளி, அந்தப்பெருங்கூட்டத்தில் பிள்ளானை ஜ்ஞாநபுத்ரராக ஸ்வீகரித்தருளி, அவருக்கு "திருக்குருகைப்பிரான்பிள்ளான்" என்று ஆழ்வாருடையதிருநாமத்தையும் ப்ரஸாதித்து, ஆளவந்தாருடைய த்ருதீயாபிப்ராயத்தை நிறைவேற்றியருளினுர்.

பின்பு பிள்ளானையழைத்து "ஆழ்வார்கள் அருளிச்செயல்களையும்திருமந்த்ரம்முதலான வேதாந்தஸம்ப்ரதாயத்தையும்(க)"நாதேந பஜ்ஞம் ப்ரவ்ருத்தம்" என்னும்படி நம்மாழ்வாரிடத்தில் பெற்று

(க) "நாயொவஜ௲ஂ ஶுவ்ருத்தம்."

அவைகளை விச்சின்னகுருபரம்பரையாலே நிலைநிறுத்தின நாதமுனிகள் திருவம்சத்தில் பிறவித்தவர்களாலும் ஆளவந்தாருடைய நியமனத்தைத்தலைக்கட்டின பெரியதிருமலைநம்பிகுமாரராகையாலும், ஆஜாநஸித்தமானப்ரபந்தப்ராவண்யத்தையுடையவராகையாலும் முன்னோர்கள் கடாக்ஷவிசேஷத்திற்குப்பாத்ரபூதராய் இப்போது திருவாய்மொழியில் அர்த்தாநுஸந்தாநக்ரமத்தை யறிந்தீர். நாலாயிரத்தில் ப்ரதாநமான இந்தத்திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படிவ்யாக்யாநம் பண்ணும்'' என்றுநியமித்தருள, பிள்ளானும் திருமந்த்ரார்த்தமான வ்யாஸஸூத்ரார்த்தத்தைத் தொண்டர்க்கமுதுண்ணலாம்படி எல்லாருக்கும் அதிகரிக்கலானபாஷையாலே நம்மாழ்வாரருளிச்செய்ததாகையால் அந்தஸூத்ரபாஷ்யத்திற்கு உடையவர்செய்தருளின மங்களமே த்ரமிடவேதாந்தபாஷ்யத்திற்கும் மங்களமாகக்கடவது என்றுநினைத்து, ஆறாயிரப்படி வ்யாக்யாநத்தைச்செய்தருளி ஸமர்ப்பிக்க, உடையவரும் அதைக் கடாக்ஷித்துப் போரஉகந்தருளி, "உமக்கு ஆளவந்தார்நியமநத்தாலே திருக்குருகைப்பிரான்பிள்ளான் என்றுதிருநாமம்ப்ரஸாதித்தது ஸார்த்தமாயிற்று'' என்று அருளிச்செய்து அந்தவ்யாக்யாநத்தையே "பகவத்விஷயம்'' என்று திருநாமம் சாத்தி "தாம் செய்த ஸூத்ரபாஷ்யத்தைப்போலே காலக்ஷேபத்தில்வைக்கக்கடவது'' என்று எம்பெருமானார்நியமித்தருள, பெரியநம்பிமுதலானபெரியோர்களும் அப்படியே திருவுள்ளம்பற்றி உகந்தருளினார்கள்.

பின்பு இவ்வ்ருத்தாந்தங்களையெல்லாம் கோயில் ஸ்ரீவைஷ்ணவர்கள் பெரியதிருமலைநம்பி ஸந்நிதியில் விண்ணப்பஞ்செய்ய, நம்பியும் கேட்டுப் போரஉகந்தருளி, ஆளவந்தார் நியமநம் தலைக்கட்டித் திதென்று உள்மகிழ்ந்தருளினார்.

இவ்வர்த்தங்களையெல்லாம் ஸங்க்ரஹித்து (க) "அபாதிதார்த்தைரநபாயவாசாம் தத்வ்யாஸஸூத்ரஸ்யயதார்த்தபாஷ்யம்- க்ருத்வாயதீந்த்ரோதுரியாமுநார்ய மநோரதம்பூரிதவாந்ஸஆத்யம்॥ பட்டாரகந் தஞ்சபராசராக்யங் க்ருத்வா க்ருதந்தேந ஸஹஸ்ரநாம்நாம்-பாஷ்யம்

(க) "அபாதிதார்த்தைரநபாயவாசாம் தத்வ்யாஸஸூத்ரஸ்ய யதார்த்தபாஷ்யம் । க்ருத்வா யதீந்த்ரோ துரியாமுநார்ய மநோரதம் பூரிதவாந் ஸ ஆத்யம் ॥ பட்டாரகம் தஞ்ச பராசராக்யம் க்ருத்வா க்ருதம் தேந ஸஹஸ்ரநாம்நாம் । பாஷ்யம்

(க)“ப்ரதிஷ்டாப்யசயாமுநார்யமநோரதம்பூரிதவாந்த்விதீயம் ॥ பிள்ளாநபிக்யக்குருகேஶ்வராக்யங் க்ருத்வாக்ருதந்தேநசஷட்ஸஹஸ்ரம் பாஷ்யம் ப்ரதிஷ்டாப்யஸயாமுநார்யமநோரதம் பூரிதவாந்த்ருதீயம்” என்று வடுகநம்பி யதிராஜவிபவத்தில் அருளிச்செய்தார்.

பின்பு திருக்கோட்டியூர்நம்பி திருநாட்டுக்கெழுந்தருளினாரென்று கேட்டு உடையவரும் ஸ்ரீசூர்ணபரிபாலநம் முதலானவைகளைச்செய்தருளினார். திருக்கோட்டியூர்நம்பி திருநக்ஷத்ரம், வைகாசி மாஸத்தில் ரோஹிணீ.

பின்பு திருமாலையாண்டான் திருநாட்டுக் கெழுந்தருளினாரென்றுகேட்டு உடையவரும் ஸ்ரீசூர்ணபரிபாலநம முதலானவைகளைச்செய்தருளினார். திருமாலையாண்டான் திருநக்ஷத்ரம், மாசிமாஸத்தில் மகம்.

பின்பு ஒருநாள் திருவரங்கப்பெருமாளரையர் திருநாட்டுக்கெழுந்தருள, அவருக்குப் பௌத்ரரான சொட்டையம்மாளைக்கொண்டு ஸ்ரீசூர்ணபரிபாலநம் முதலான கைங்கர்யங்களையெல்லாம் பண்ணுவித்தருளினார். திருவரங்கப்பெருமாளரையர் திருநக்ஷத்ரம் வைகாசி மாஸத்தில் கேட்டை.

பின்பு உடையவர்வைபவங்களையெல்லாம் கேட்டு மதாந்தரஸ்தவித்வான்களெல்லாரும் இந்த்ராமாநுஜஸித்தாந்தத்தைஜயிக்கும்படியான ஶக்தியில்லாமையாலே, சோழனைக்கொண்டு வஞ்சிக்கும்படி அவனுக்குத் துர்ப்போதநம் பண்ணிவைத்தார்கள்.

பின்புகூரத்தாழ்வான் நடாதூராழ்வான்முதலானமுதலிகளோடேஉடையவர்காலக்ஷேபஞ்செய்துகொண்டிருக்கிறகாலத்தில், சோழராஜாவும் வித்வான்களையழைத்து (உ)“ஶிவாத்பரதரம்நாஸ்தி” என்றெழுதச்சொல்லித்தண்டிக்க,சிலர் அர்த்தகாமங்களடியாகஎழுதிட்டார்கள்.சிலர் அவனுக்கு அஞ்சிஎழுத்திட்டார்கள்.இத்தைநாலூரான்கண்டு “எம்பெருமானார்எழுத்திட்டாலன்றோப்ரயோஜநமுண்டாவது?இவர்களெழுத்திட்டாலென்னப்ரயோஜநம்?” என்ன,சோழனும்எம்பெருமானாரை அழைத்துக்கொண்டுவரும்படிசிலமநுஷ்யரை

(க) “𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌯𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌰𑍍𑌯𑌮𑌨𑍋𑌰𑌥𑌂𑌪𑍂𑌰𑌿𑌤𑌵𑌾𑌨𑍍𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂॥𑌪𑌿𑌳𑍍𑌳𑌾𑌨𑌭𑌿𑌖𑍍𑌯𑌂 𑌕𑍁𑌰𑍁𑌕𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌖𑍍𑌯𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌕𑍃𑌤𑌂 𑌤𑍇𑌨𑌷𑌟𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 । 𑌭𑌾𑌷𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌯 𑌸𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌰𑍍𑌯𑌮𑌨𑍋𑌰𑌥𑌂 𑌪𑍂𑌰𑌿𑌤𑌵𑌾𑌨𑍍 𑌤𑍃𑌤𑍀𑌯𑌂.” (உ) “𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑌰𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿.”

யனுப்பிக்க, அவர்களும் அங்கேற அழைக்கப்போக, அந்தவ்ருத்தாந்தத்தை மாத்யாஹ்நிகஸ்நாநார்த்தமாகப் போகும்போது கேட்டு முதலியாண்டான்நீராடி வர, நடாதூராழ்வான் முன்னமே அந்தவ்ருத்தாந்தத்தை வந்து சொல்லக்கேட்டு "நீரன்றோப்ரியபாகிநேயர்?" என்று போரஉகந்து கூரத்தாழ்வான் உடையவருடைய த்ரிதண்டகாஷாயாதிகளைத் தரித்துக்கொண்டு அந்தமநுஷ்யரோடே போக, பெரியநம்பியும் கூடஎழுந்தருளினர். பின்பு நடாதூராழ்வான் முதலியாண்டான் திருக்குருகைப்பிரான்பிள்ளான் முதலானவர்கள் "தேவரீர் இங்கிருக்கவொண்ணாது" என்று உடையவருக்கு வெள்ளைச்சாத்தி மேல்நாட்டுக்கெழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோக, ஒருநாள் மலையடிவாரத்தில் திருமலைநல்லானுடைய ஸிஷ்யரான சிலவேடரிருக்குமிடத்தில் எம்பெருமானாரும்முதலிகளுடனே மழையில் நனைந்தெழுந்தருள, அவர்களும் எம்பெருமானாரென்று அறிந்து, அவர்களுக்குப் புதுவஸ்த்ரம் ஸமர்ப்பித்து, நெருப்பும் இந்தநமும் கொண்டு குளிர் போகக்காய்ச்சுவித்து "திருமலைநல்லான், தம் திருவடிகளான அடியோங்களுக்கு எம்பெருமானர் திருவடிகளை ஸரணம் என்று உபதேஸித்திருக்கையாலே அடியோங்களை அநுக்ரஹித்தளருளவேணும்" என்றுப்ரார்த்தித்துத் தேனும் தினைக்கதிரும் கொண்டுவந்து ஸமர்ப்பிக்க, அத்தை வறுத்திடித்துத்தேனிற்கலந்து பேரருளாளனுக்கு அமுதுசெய்யப்பண்ணித் தாமும் முதலிகளும் அமுதுசெய்து, வேடர்களுக்கும்ப்ரஸாதித்து அவர்களைப்போரஉகந்தருளி, நல்லானென்கிற காளமேகம் நடுக்காட்டில் வர்ஷித்தது என்று அருளிச்செய்து அன்று ராத்ரி கண்வளர்ந்தருளினர்.

பின்பு ஒரு ஸ்ரீவைஷ்ணவரைக் கோவிலுக்குப் போகவிட்டருளினர். அந்த வேடர்களும் எம்பெருமானரை முதலிகளுடனே மேனாட்டில் எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோய் ஒருக்ராமத்தில் ஒரு ப்ராஹ்மணக்ரஹத்தில் விட்டுச் சில த்ரவ்யங்களைக்கொடுத்து வேண்டினபதார்த்தங்களைக் கொடுக்கும்படி சொல்லிப்போனர்கள். அங்கே சிலர்வந்து ஆஸ்ரயிக்க எம்பெருமானரும் த்ரிதண்டகாஷாயாதிகளைஸம்பாதித்துப் பேரருளாளன்ஸந்நிதியில் வைத்துமுன்போலேதரித்தருளி ஆஸ்ரயித்தவர்களுக்குப் பஞ்சஸம்ஸ்காராதிகளைப்ரஸாதித்தருளி அங்குநின்றும்புறப்பட்டு ஸாலக்ராமத்தில் சிலர்கள்வந்து ஆஸ்ரயிக்க அவர்களுக்கு பஞ்சஸம்ஸ்காராதிகளை ப்ரஸாதித்து "இன்றுமுதலாகஇவ்வூர் ஸாளக்ராமமென்னக்கடவது" என்றுஉடையவர் அருளிச்செய்து, அங்கே வடுகநம்பிக்குத் தர்ஸநார்த்தங்களை

ப்ரஸாதித்துக்கொண்டு சிங்கர்கோயிலிலே சிலநாளெழுந்தருளியிருந்து, விஷ்ணுவைஷ்ணவத்வேஷியான சோழன் க்ரிமிகண்டனைப் நசிக்கும்படி அபிசாரகர்மத்தை அர்ச்சகரைக்கொண்டு பண்ணுவித்துத் தொண்டனூரேற வெழுந்தருளினார்.

அங்கு அதிபதியானவிடலதேவராயன்மகள் ப்ரஹ்மராக்ஷஸாவிஷ்டையாயிருக்க, ஒருவராலும்தீர்க்கவொண்ணாமையாலே ராயனும் துஃகிதனாயிருக்கதொண்டனூர்நம்பியும் அங்கேறச்சென்று "நம்மாசார்யர் எம்பெருமானாரெழுந்தருளினால்அவர்கடாக்ஷத்தாலேஇக்காட்டேரி போய்விடும்" என்று ப்ரஹ்மரக்ஷஸ்ஸின்கதையையும்ஸவிஸ்தாரமாகச் சொல்ல, "அவனும் இக்காட்டேரியை விடுவிக்கில் அவர் திருவடிகளில் ஆஶ்ரயிக்கக்கடவேன்" என்ன, தொண்டனூர் நம்பியும் எம்பெருமானாரை ஸ்ரீவைஷ்ணவஸம்ருத்த்யர்த்தமாக அவன் க்ருஹத்திலெழுந்தருளப்பண்ணி ஸ்ரீபாததீர்த்தத்தையும் அவன் புத்ரிக்கு ப்ரஸாதிக்க, அந்தப்பெண்ணும் தெளிந்து உடையவரை ஸேவிக்க, விடலதேவராயனும் ஆஶ்சர்யப்பட்டு உடையவர் திருவடிகளிலே ஆஶ்ரயிக்க,அவனுக்கு விஷ்ணுவர்த்தநாராயணனென்று திருநாமம் ப்ரஸாதித்தருளினார்.

பின்பு அந்தராஜாவின் குருக்கள் பன்னீராயிரம் க்ஷபணர்கள் வந்து ஏககாலத்தில் வாதம்பண்ண, உடையவரும் ஒருமண்டபத்தில் திரையை வளைத்துக்கொண்டு ஸஹஸ்ரபணாமண்டலமுடைய திருவநந்தாழ்வானைப்போலே ப்ரத்யுத்தரமருளிச்செய்து, அவர்களைஜயித்துக் கல்செக்கிலே காணமாடுவித்தார். அவர்களிற் சிலர் ஆஶ்ரயிக்க அவர்களையும் திருத்தியருளினார்.

அக்காலத்தில் 'நித்யமாகத் திருமண்காப்புச் சாத்துகைக்குத் திருமண் பெற்றிலோமே?' என்று சிந்தித்துக்கொண்டு உடையவர் திருக்கண்வளர்ந்தருள, அன்றுஇராத்திரியில் திருநாராயணப்பெருமாள் ஸ்வப்நத்திலெழுந்தருளி, "யதுகிரியில் கல்யாணஸரஸ்ஸின் தென் மேலைமூலையிலே திருமகிழ்மரத்திற்குத் தென்பக்கத்தில் பெரியதிருத்துழாயின்கீழே பெரியபுற்றுக்குள்ளே இருக்கிறோம்; திருமண்ணும் ஸரஸ்ஸிற்கு வடமேலைமூலையில் பெரியதிருவடியாலே ஶ்வேதத்வீபத்தினின்றுங்கொண்டுவந்து நிக்ஷேபிக்கப்பட்டு அக்ஷயமாயிராநின்றது. உமக்கு அடையாளமாக இவ்விடம் தொடங்கிநாமிருக்கும்புற்றளவாக முறிததிட்டதிருத்துழாய்கண்டுவாரீர்" என்றருளிச்செய்ய, உடையவரும் எழுந்திருந்து திகைத்து முதலிகளுக்கு அருளிச்

செய்ய, விஷ்ணுவர்த்தநநாராயணனும் அத்தைக்கேட்டுக் காடு வெட்டிவைத்து உடையவர் பின்னே ஸேவித்துக் கொண்டுபோக, உடையவரும் வேதபுஷ்கரிணியில் நீராடி காஷாயத்தைத்தரித்தருளி அவ்விடம் தொடங்கி முறித்திட்ட திருத்துழாய்க்குறியாகக்கல்யாண ஸரஸ்ஸின் கரையிலெழுந்தருளித் திருத்துழாய்மரத்தைக் கண்டு ஸேவித்து மண்காப்பை நீக்கிப் புற்றினுள்ளே பார்க்க, அங்கு ஒரு கோயில் தோன்ற, அதற்குள்ளே கலியுகம்-சஉ00-க்கு ஸரியானஸம்வத்ஸரம் பங்குனிமாஸம் கவர்ஷம்-கαஉக-ஆவதானபஹுதாந்யஸம்வத்ஸரம் பங்குனிமாஸம் ஶுக்லசதுர்த்தஸீ குருவாரம் கூடின புநர்வஸுநக்ஷத்ரத்தில் திரு நாராயணப் பெருமாளையும் கண்டு அத்யாநந்தத்துடனே திருவடி தொழுது ராஜாவை யழைத்து ஸேவிக்கப்பண்ணி ஸகல மங்கள வாத்யங்களோடே பாலமுதாலே திருமஞ்சநம் பண்ணிவைத்துக் கல்யாணஸரஸ்ஸின் வடமேலை மூலையிலே திருமண் காப்பையுங் கண்டு அங்கீகரித்துக் கோயிலும் ஊரங்குடிவந்து ஸ்ரீபாஞ்சராத் ரஸம்ஹிதையாலே தேவராஜபட்டரைக்கொண்டு ப்ரோக்ஷணபுர ஸ்ஸரமாகத் திருவாராதநம்பண்ணுவித்தருளி, ஒரு நாயகத்திருவாய் மொழியைத் திருநாராயணப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து அந்தத் திவ்யதேஶத்திற்குத் திருநாராயணபுரமென்று திருநாமம்சாத்திஉத் ஸவபேரத்தைத் தேடிக்கொண்டிருக்க, திருநாராயணனும் ஸ்வப் நத்திலெழுந்தருளி, "நம்முடைய உத்ஸவபேரமான ராமப்ரியன் டில்லியிலே துருஷ்கராஜக்ருஹத்திலிருக்கிறார்" என்றருளிச்செய்ய உடையவரும் எழுந்திருந்து உள்மகிழ்ந்து சில முதலிகளுடனே டில்லிபுரத்திலெழுந்தருள, அந்தத் துருஷ்கராஜாவும் உடைய வரைக்கண்டு தேஜோவிஶேஷத்தாலே ஆஶ்சர்யப்பட்டுப் பஹு மதிபண்ணி "என்னவேணும்?" என்றுகேட்க, உடையவரும் "எங் கள் குலதெய்வமான ராமப்ரியரைக் கொடுக்கவேணும்" என்ன, அவ னும் கொள்ளைகொண்டுவைத்த விக்ரஹஶாலையைக் காட்டி எடுத் துக்கொள்ளச் சொல்ல, உடையவரும் அவ்விடம் ஶோதித்துக் காணாமையாலே விசாரிக்க, "அந்த ராஜபுத்ரியாலே பூஜிக்கப்பட் டுக்கொண்டிருக்கிறார்" என்று அறிந்துராஜாவுக்கும் அறிவிக்க, ராஜா வும் எடுத்துக்கொள்ளும் என்ன, உடையவரும்ராமப்ரியரைக்கண்டு "வருகவருகவருகவிங்கே" என்று விண்ணப்பஞ்செய்ய, ராமப்ரி யரும் எல்லாரும் காணும்படி பொற்சதங்கைஶப்திக்கக் குதித்து உடையவர்மடியிலே எழுந்தருளியிருக்க, உடையவரும் "என்னு டையசெல்வப்பிள்ளையோ?" என்று எடுத்து அணைத்துக்கொண்டரு

ளினார். அன்றுமுதல் செல்வப்பிள்ளையென்று திருநாமமாயிற்று. இத்தைக்கண்டு டில்லிபுராராஜாவும் அத்யாஶ்சர்யப்பட்டுச்செல்வப் பிள்ளையை யெழுந்தருளுவித்துக்கொடுக்க, உடையவரும் எழுந்தரு ளப்பண்ணிக்கொண்டுவரச்செய்தே உறங்கியிருந்ததுருஷ்கராஜபுத்ரி யும் செல்வப்பிள்ளையைவிட்டுப் பிழைக்கமாட்டேன் என்ன, ராஜா வும் செல்வப்பிள்ளையைக் கொண்டுவரும்படி மநுஷ்யரை அனுப்பிக் க, உடையவரும் ஓரகம்யஸ்தலத்தில் மறைந்திருந்து செல்வப்பிள்ளை யை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டுவர, அவ்விடத்திலுள்ளவர் கள் 'அடியோங்களுக்கு ஒருபாரிதோஷிகம்வேணும்' என்ன, உடைய வரும் செல்வப்பிள்ளையை யாதவாத்ரியிலே திருநாராயணனுடனே சேர்த்து ப்ரதிஷ்டிப்பித்து நித்யோத்ஸவாதிமஹோத்ஸவங்களை நடப்பித்து ஸங்கடஸமயத்தில் ஸஹாயம்பண்ணின அந்தச்சண்டா ளர்களுக்குத் திருக்குலத்தாரென்கிறபேரையும் ப்ரஸாதித்துத்திருத் தேர்முதல் தீர்த்தோத்ஸவத்தளவும் கல்யாணதீர்த்தஸ்நாநமும் பக வத்ஸந்நிதியில் ப்ரதக்ஷிணமும் தீர்த்தபரிக்ரஹமும்பண்ணும்படி ஒரு மர்யாதை நடப்பித்தருளினார். துருஷ்கராஜபுத்ரியும் பிரிந்திருக்க மாட்டாதே திருநாராயணபுரத்தில்வந்து செல்வப்பிள்ளையைஸே வித்து அந்தர்த்தாநகதையானாள்.

அநந்தரம் உடையவரும் பத்மகிரியில் பௌத்தஸமயங்களை ஜயித்து, அவர்களைக்கல்காணத்தில் அரைப்பித்துத் திருநாராயணன் ஸந்நிதியில் பன்னிரண்டு ஸம்வத்ஸரம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தர்ஶனார்த்தம் ப்ரஸாதித்துக்கொண்டிருக்கிற நாளையிலே, ஒருஸ்ரீ வைஷ்ணவர் கோயிலின்றும்வந்து உடையவர் திருவடிகளிலேதண் டன்ஸமர்ப்பித்து "முன்பு சோழராஜமநுஷ்யர் கூரத்தாழ்வானை யும் பெரியநம்பியையும் அழைத்துக்கொண்டுபோக, சோழனும் (க) "ஶிவாத்பரதரம்நாஸ்தி" என்று ஓலைப்புறத்தில்கையெழுத்திடச் சொன்னான்; ஆழ்வானும் அநேகப்ரமாணங்களைஉபந்யஸித்துநீசொன் னது அப்ரமாண மென்றருளிச்செய்ய, சோழனும் கையெழுத்திட வேணுமென்று நிர்ப்பந்திக்க, ஆழ்வானும் (உ) "த்ரோணமஸ்திதத: பரம்" என்று கையெழுத்திட்டார். சோழனும் இந்தப் பரிஹாஸத் தாலே குபிதனாய், இவர்களுக்கு நேத்ரோத்பாடநம் பண்ணிவைத் தான். பின்பு பெரியநம்பி கோயில்வழியிலே திருக்கண்வேதனை யாலே திருநாட்டுக்கெழுந்தருளினார். கூரத்தாழ்வான் கோயிலிலே

(க) "ஶிவாத்பரதரம்நாஸ்தி." (உ) "த்ரோணமஸ்திதத:பரம்."

எழுந்தருளியிருக்கிறார்." என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் மிகவும் க்லேஸித்து "கூரத்தாழ்வான் இருக்கப்பெற்றோமே!" என்று தேறி, பெரியநம்பிக்கு ஸ்ரீசூர்ணபரிபாலநம் செய்தருளினர். பெரிய நம்பி திருநக்ஷத்ரம், மார்கழியில் கேட்டை.

பின்பு சிறியாண்டானைக் கோயிலேறப்போய் ஆழ்வானைத் தேற்றிவைக்கும்படி நியமிக்க, சிறியாண்டானும் அப்படியேகோயிலேறப் போய் ஆழ்வானைத்தேற்றி உடையவர் நியமநத்தையும் உடையவர் திக்விஜய வ்ருத்தாந்தத்தையும் விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வானும் அத்யந்தஸந்தோஷத்தோடே இருக்க, அவ்வளவில் 'சோழனும்கழுத்திலே புழுத்துப்புரண்டான்' என்றுகேட்டுச் சிறியாண்டானும் நிர்ணயத்தையறிந்து, அம்மங்கியம்மாளுடனே திருநாராயணபுரத்திற்கெழுந்தருள, உடையவர் திருக்கல்யாணஸரஸ்ஸில் முதலிகளோடே அநுஷ்டாநம்செய்துகொண்டிருக்கச்செய்தே தண்டன்ஸமர்ப்பித்து "சோழன் புழுத்துப்புரண்டான்" என்றுவிண்ணப்பஞ்செய்ய, உடையவரும் கேட்டு உகந்து இவர்களை ஸந்தோஷித்து இப்போது "இக்கல்யாணஸரஸ்ஸை அங்வர்த்தமாகக்கண்டோம்" என்று அருளிச்செய்து, திருமலையில் அழகியசிங்கரையும் திருநாராயணனையும் செல்வப்பிள்ளையையும் திருவடிதொழுது, தீர்த்தப்ரஸாதாதிகளையும் ஸ்வீகரித்து, அங்குச் சிலரைத் திருநாராயணனுக்குக் கைங்கர்யம் பண்ணும்படி நியமித்துக் கோயிலுக்குப் புறப்பட்டருள, அவர்களும் "பிரிந்திருக்கமாட்டோம்" என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் தம்மைப்போலே ஒரு ஸிலாவிக்ரஹத்தை யுண்டாக்கிவைத்து அதிலேதிவ்யஸக்தியையும்ஏறிட்டு "இத்தைக்கொண்டுதரியுங்கோள்" என்றருளிச்செய்ய, அவர்களும் ஸந்துஷ்டராக, உடையவரும் புறப்பட்டுக் கோயிலேறவெழுந்தருள, ஊராரெல்லாருமெதிர்கொண்டுவந்துஸேவிக்க, அவர்களையு முகந்து, நம்பெருமாளைத் திருவடிதொழுது தீர்த்தம் திருமாலை முதலானவைகளையும் பெற்று, கூரத்தாழ்வான் திருமாளிகையிலெழுந்தருள, ஆழ்வானும் திருவடிகளிலே ஸேவித்துநிற்க, உடையவரும் "உமக்கு இப்படி த்ருஷ்டிபோவதோ?" என்று க்லேஸித்துப் பின்பு தெளிந்து தம் மடத்திலெழுந்தருளியிருந்தார்.

அப்போது திருவத்யயநோத்ஸவத்திற்குத் திருநகரியினின்றும் ஆழ்வார் கோயிலேற எழுந்தருளாமலிருக்க, உடையவரும் கோயிலிலே ஒருநம்மாழ்வாரைத் திருப்ரதிஷ்டைசெய்து திருவத்யய

நோத்ஸவத்தை ஸ்ரீமந்நாதமுநிகள் நியமநப்படிக்கு நம்பெருமாளுக்குப் பண்ணுவித்தருளும்போது, கூரத்தாழ்வானிடத்தில் ஆசார்ய பக்தியைத்தெளிந்து திருவரங்கத்தமுதனார் ஆழ்வார்விஷயமாய் மதுரகவிகளருளிச்செய்த கண்ணிநுண்சிறுத்தாம்பி னர்த்தத்தை யேறிட்டு ஒருபாட்டுக்குப் பத்துப்பாட்டுக்களாயிருக்கும்படி உடையவர்விஷயமாய் ஒருநூற்றந்தாதியருளிச்செய்து உடையவர் திருவடிகளிலேஸமர்ப்பிக்க, அழகியமணவாளனும் அத்தைப்ரபந்தத்திலே சேர்க்கும்படி அர்ச்சகமுகேந திருவாய்மலர்ந்தருள, அத்தைஉடையவர் திருவுள்ளம்பற்றி அந்தநூற்றந்தாதியை இயற்பாஆயிரத்தின் முடிவில்சேர்த்து நான்கு விபாகமுள்ளநாலாயிரங்களைப் பாட்டுக்களாலேயும் நாலாயிரங்களாக்கி, இயற்பாஅநுஸந்தாநத்தை அமுதனாருக்குநியமித்தருளித் திருவத்யயநோத்ஸவத்தை முடித்து "பல்லாண்டுபல்லாண்டு" என்று மங்களாஶாஸநம் செய்தருள, அத்தைக் கண்டு பிள்ளானும் (க) 'ஸர்வதேஶதஶாகாலேஷு" என்கிறஸ்லோகத்தை அருளிச்செய்ய, முதலியாண்டானும் (உ) "ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞாப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா" என்கிற ஸ்லோகத்தை அருளிச்செய்ய, உடையவரும் (ங) "ஸ்ரீமந் ஸ்ரீரங்க ஶ்ரியமநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய" என்றுநம்பெருமாளை ப்ரார்த்திக்க, அங்குள்ளவர்களும் "ப்ரபந்தத்தின்முடிவில் இம்மூன்று மங்களங்களையும் அநுஸந்திக்க வேணும்" என்ன, உடையவரும் அப்படியே திருவுள்ளம்பற்றிக் கோயிலிலே மற்றையாழ்வார்களையும் சில ஆசார்யர்களையும் ஆண்டாளையும் திருப்ரதிஷ்டைசெய்துவைத்தருளினார்.

பின்பு திருக்குடந்தையில் ஆராவமுதாழ்வான் திருவடிதொழுது மற்றையாழ்வாராசார்யர்களையும் ஆண்டாளையும் ப்ரதிஷ்டிப்பித்துத் திருநறையூர் முதலான திவ்யதேஶங்களிலே ஆழ்வார்களையும் ஆண்டாளையும் திருப்ரதிஷ்டைசெய்து, திருவத்யயநோத்ஸவம்நடக்கும் படிக்கும் நியமித்தருளி, திருநகரியில் ஆழ்வாரைத் திருவடிதொழுது முதலிகளுடனே ப்ரபந்தாநுஸந்தாநம்பண்ணும்போது, உடையவர் முதலிகளைப்பார்த்து "ஆழ்வார்களில் ப்ரதாநரான நம்மாழ்வார்விஷயமான (ச) "மாதாபிதா" என்கிற ஸ்லோகத்தை அநுஸந்தித்து ப்ரபந்தத்தை அநுஸந்தித்தால் ஆழ்வார்களனைவரையும் அநுஸந்தித்

(க) "ஸர்வதேஶதஶாகாலேஷ்வ." (உ) "ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா." (ங) "ஸ்ரீமந் ஸ்ரீரங்கஶ்ரியமநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய." (ச) "மாதாபிதா."

தானும்" என்று அருளிச்செய்ய, பிள்ளானும் ஆழ்வார்களை ஒருகோவையாக்கி (க)"பூதம்ஸரஶ்ச" என்கிற ஶ்லோகத்தை விண்ணப்பஞ்செய்து (உ)"யோநித்யமச்யுத" என்கிற ஶ்லோகத்தையும் நியமித்தருளவேணுமென்ன, உடையவரும் (ங)"லக்ஷ்மீநாதஸமாரம்பாம்" (ச)"யோநித்யமச்யுத" (ரு)"மாதாபிதா" (சு) "பூதம்ஸரஶ்ச" என்கிற ஶ்லோகசதுஷ்டயத்தையும் அநுஸந்தித்து ப்ரபந்தாநுஸந்தாநம் பண்ணும்படி நியமித்தருளி, அங்குள்ள திவ்யதேஶங்களிலும் ஆழ்வார் திருப்ரதிஷ்டை முதலானவைகளையும் செய்துவைத்துக் கோயிலேற எழுந்தருளினர்.

பின்பு பெரியதிருமலைநம்பி திருநாட்டுக்கெழுந்தருள, பிள்ளை திருமலைநம்பியும் அந்தக்கைங்கர்யங்களைச்செய்து கோயிலேறவந்து உடையவர்ஸந்நிதியில் விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் ஸ்ரீசூர்ண பரிபாலநம் முதலியவைகளைச்செய்தருளினர். பெரியதிருமலைநம்பி திருநக்ஷத்ரம், புரட்டாசி அநூராதம்.

பின்பு சித்ரகூடமழிந்து அந்தஎம்பெருமான் கீழைத்திருப்பதியிலெழுந்தருளினரென்று சிலர் வந்து விண்ணப்பஞ்செய்ய, உடையவர்கேட்டு அத்திருப்பதியேற எழுந்தருளி, ஸ்ரீகோவிந்தராஜனையும் ப்ரதிஷ்டிப்பித்து, ஆழ்வார்களும் "திருவேங்கடமாமலை யொன்றுமே தொழ" என்று திருமலையையே விரும்புகையாலே திருமலையடிவாரத்திலேயே ஆழ்வாராசார்யர்களையும் ஆண்டாளையும் திருப்ரதிஷ்டை செய்துவைத்துத் திருவத்யயநோத்ஸவமும் நடக்கும்படி நியமித்துத் திருவேங்கடமுடையானைத் திருவடிதொழுது, பெருமாள்கோயிலேறவெழுந்தருளிக் கூரத்தாழ்வானை வரதராஜஸ்தவம் செய்யும்படி நியமிக்க, ஆழ்வானும் அப்படியே செய்து (எ)"நேத்ரஸாத்குருகரீஶஸதாபே" என்று ஜ்ஞாநசக்ஷுஸ்ஸை அபேக்ஷித்தபடியையுங் கண்டு, உடையவர் "இப்படிக்குச் செய்யலாமோ?" என்று ஆழ்வானை வெறுத்துப் பேருளாளன் திருவடிதொழுது நிற்க, ஆழ்வானும் பேருளாளன் சாத்திக்கொண்டிருக்கிற திவ்யாபரணங்களிவையிவையென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் க்ருதார்த்தராய் அந்தஸந்நிதியில் ஆழ்வாராசார்யர்களையும் ஆண்டாளையும் திருப்ரதிஷ்டை செய்துவைத்து மற்றுமங்குள்ள திவ்யதேஶங்களில் ஆழ்வா

(க) "𑌭𑍂𑌤𑌂 𑌸𑌰𑌶𑍍𑌚." (உ) "𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌚𑍍𑌯𑍁𑌤." (ங) "𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌥 𑌸𑌮𑌾𑌰𑌂𑌭𑌾𑌂." (ச) "𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌚𑍍𑌯𑍁𑌤." (ரு) "𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾." (சு) "𑌭𑍂𑌤𑌂 𑌸𑌰𑌶𑍍𑌚." (எ) "𑌨𑍇𑌤𑍍𑌰𑌸𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌕𑌰𑍀𑌶 𑌸𑌤𑌾𑌪𑍇."

ராசார்யர்களையும்ஆண்டாளையும் ப்ரதிஷ்டிப்பித்துத்திருவத்யயனோத்ஸவம்நடக்கும்படி நியமித்தருளி ஸ்ரீமதுராந்தகத்தில் ஏரிகாத்த பெருமாள் திருவடிதொழுது கோயிலேறவெழுந்தருளி முதலிகளுடனே பாஷ்யப்ரவசநம்நாலாயிர திவ்யப்ரபந்தவ்யாக்யாநங்களோடே ப்ரவர்த்திப்பித்துக்கொண்டெழுந்தருளியிருந்தார்.

பின்பு ஸ்ரீபாதத்துமுதலிகளுக்கு நாலாயிரவ்யாக்யாநமருளிச் செய்யும்போது "நாறுநறும்பொழில்" என்கிறபாட்டு ப்ரஸ்துதமாக "ஆண்டாள் ப்ரார்த்தனையை நாம் தலைக்கட்டவேணும்" என்றுபுறப்பட்டுத் திருமாலிருஞ்சோலைமலையேறவெழுந்தருளி நூறுதடா நிறைந்தவெண்ணெயும் நூறுதடாநிறைந்தஅக்காரவடிசிலும் அழகர்க்கமுதுசெய்வித்தருளி, ஸ்ரீவில்லிபுத்தூரில் வடபெருங்கோயிலுடையானையும் ஆண்டாளையும் திருவடிதொழுது, ஆண்டாள்திருவுள்ளமுகந்து ப்ரஸாதித்தவரிசைகளையும்பெற்று, திருநகரியில் ஆழ்வாரையும் திருவடிதொழுது,கோயிலேறவெழுந்தருளித்தர்ஶநார்த்தங்களை ப்ரஸாதித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

பின்பு உடையவரும்தம்ஸ்ரீபாதத்தில்ஆஶ்ரயித்திருக்கிற முதலிகள் அஸங்க்யேயர்களாகையாலே அவர்களில் ஒருநிபந்தநம்செய்தருளவேணுமென்று திருவுள்ளம்பற்றி, எழுபத்துநாலுதிருவாழி திருச்சங்குகளைத் திருப்ரதிஷ்டைசெய்து நான்கு ஸ்ரீபாஷ்யஸ்ரீகோஶங்களை யேறியருளப்பண்ணி, அவைகளையும் தம் நியமநத்தினாலே திருக்குருகைப்பிரான்பிள்ளான் செய்தருளினபகவத்விஷயமான ஆறாயிரப்படியுடனே தம்திருவாராதநமான பேரருளாளன் ஸந்நிதியில் ஸமர்ப்பித்து, முதலிகளையழைத்தருளி, எழுபத்துநாலு திருநாமங்களுக்குத் திருவாழிதிருச்சங்குகளையும், அவர்களில்நால்வருக்கு ஸ்ரீபாஷ்ய ஸ்ரீகோஶங்களையும், அவர்களில்ஒருவரான திருக்குருகைப்பிரான்பிள்ளானுக்குப் பகவத்விஷயமான ஆறாயிரப்படியையும் ப்ரஸாதித்தருளி, பின்னோர்களுக்குத் திருவிலச்சினைமுதலாக உபயவேதாந்தம் முதலானவைகளையும் ப்ரஸாதிக்கும்படி நியமித்தருளி, எழுபத்துநால்வருக்குஸிம்ஹாஸநாதிபத்யமும், அதிலும் நால்வருக்கு ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸநாதிபத்யமும், அதிலும் ஒருவருக்கு உபயவேதாந்தாதிபத்யமும் பிருதாக ப்ரஸாதித்தருளினர்.

இவர்கள் அன்றியும் எழுநூறுசீயர்களும், பன்னீராயிரம்ஏகாந்திகளும் திருமஞ்சநம் முதலானவைகள் செய்யும் அநேககைங்கர்யபரர்களும், பின்னும் அநேக ஸ்ரீவைஷ்ணவர்களும் உடையவர்நிய

மநப்படிக்குத் தந்தம் கைங்கர்யத்தைப் பண்ணிக்கொண்டிருப்பர்கள். அதிலும் முன்பாக ஆஸ்ரயித்தவர்களாயும் வயஸாஜ்யேஷ்டர்களாயுமிருந்துள்ள கூரத்தாழ்வான், நடாதூராழ்வான், முதலியாண்டான், கிடாம்பியாச்சான், எம்பார்முதலானமுதலிகளும், பின்புஜ்ஞாநபுத்ரராகஸ்வீகரித்து ஆளவந்தார் நியமநத்தாலே திருக்குருகைப்பிரான்பிள்ளானென்கிற திருநாமம்ப்ரஸாதித்து அவரைக்கொண்டுபகவத்விஷயமான ஆறாயிரப்படியையும் செய்துவைத்து அத்தைப் பாஷ்யத்தோடொக்கப் பகவத்விஷயமாகக் காலக்ஷேபத்தில்நடத்தும்படி நியமித்தருளி, அவருக்கு உபயவேதாந்தாதிபத்யத்தையும் உடையவர்ப்ரஸாதித்தருளினபடியாலே பூர்வம் ஸ்வீக்ருதர்களாயும்ஜ்யேஷ்டர்களாயும் இருந்துள்ள தத்தபுத்ரர்கள் பின்பாகஜநித்த ஔரஸன்கைபார்த்து அவனை அநுவர்த்தித்து நடக்கவேண்டுமாபோலே திருக்குருகைப்பிரான்பிள்ளானை மேன்மையுள்ளவராக நினைத்து அவருக்குத் தாங்கள் கீழ்ப்பட்டிருந்தவர்களாகத் தந்தம்கைங்கர்யங்களைநடத்த, உடையவரும் ஶாஸ்த்ராநுமதமாயும் தம்திருவுள்ளத்திற்கு உகந்ததாயும் அவர்கள் இருந்தபடியைக்கண்டு போர உகந்தருளினார்.

இவ்வர்த்தங்களை ஸங்க்ரஹித்து (க) "பிதாமஹஸ்யாபிபிதாமஹஸ்ய ஸூதம் வரேண்யம் ஶடகோபஸூநோ: - ஸஹஸ்ரஷட்ஸங்க்யகபாஷ்யகாரம் ஶடாரிநாமாநமஹம் ப்ரபத்யே ॥ வித்யாதாயதி ஸார்வபௌமஜலதேஶ்சந்த்ரோபமத்வேநய: ஸ்ரீபாஷ்யேண யதந்வயாத்ஸவிதிதா: ஸ்ரீவிஷ்ணுசித்தாதய:- வ்யாக்யாம் பாஷ்யக்ருதாஜ்ஞயோபநிஷதாம் யோத்ராமிடநாம்வ்யதாத் பூர்வம் தம் குருகேஶ்வரம் குருவரம்காருண்ய பூர்ணம்பஜே ॥ ஜ்ஞாநாத்மஜோயதி பதேரபி பாதுகேதிஸ்ரீகூரநாதமுகதேஶிகபூஜிதோய:-"

(க) "पितामहस्यापि पितामहस्य सूनुं वरेण्यं शठकोपसूनोः। सहस्रषट्संख्यकभाष्यकारं शठारिनामानमहं प्रपद्ये॥ विद्यादायदि सार्वभौमजलधेश्चन्द्रोपमत्वेन यः श्रीभाष्येण यदन्वयात्स विदिताः श्रीविष्णुचित्तादयः। व्याख्यां भाष्यकृदाज्ञयोपनिषदां यो द्राविडानां व्यधात् पूर्वं तं कुरुकेश्वरं गुरुवरं कारुण्यपूर्णं भजे॥ ज्ञानात्मजो यदि पदेरपि पादुकेति श्रीकूरनाथमुखदेशिकपूजितो यः॥

(க)வ்யாக்யாதவாந் ஶடாரிஶேபாஶ்சரமப்ரபந்தம் வந்தேயதேஶிகமஹாம்குருஶேகஶ்வரந்தம்॥ யத்பர்யாப்தகலாக்யாதோய திராஜாப்தி சந்த்ரமா:- குஶலம்தீயதாம்மேமஸௌ குருசேகஶ்வரதேஶிக:" என்றுமுன்னோர்கள் அருளிச்செய்தார்கள்.

திவ்யதேஶயாத்ரையெழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவர்களும் அங்கங்குள்ளவர்கள் "உடையவர் எழுந்தருளியிருக்கிறபடியென்?" என்றுகேட்க, (உ) "ராமாநுஜஸ்ஸப்தஶதைர்யதீநாம் பீடைஶ்சதுஸ்ஸப்ததிபிஸ்ஸமேத:-ஏகாந்தி பிர்த்வாதஶபிஸ்ஸஹஸ்ரைஶ் ஸ்ரீரங்க ஆஸ்தே யதிஸார்வபௌம:॥ நாநாவிதேச கைங்கர்யே நியதைர் பஹுபிர்ஜநை:- அந்யைரபியுதோபாதி யதிராஜாகுருத்தம:" என்று அருளிச்செய்தார்கள். அவர்கள் பிரிவு எங்ஙனே என்னில்:—

க. திருக்குருகைப் பிரான்பிள்ளான்.
கூரத்தாழ்வான்.
நடாதூராழ்வான்.
எங்களாழ்வான்.
ரு. தெற்காழ்வான்.
இளையாழ்வான்.
கோமடத்தாழ்வான்.
சேட்டலூராழ்வான்
வேதாந்தியாழ்வான்
கO. அநந்தாழ்வான்
நடுவிலாழ்வான்
மிளகாழ்வான்
நெய்யுண்டாழ்வான்
உக்கலாழ்வான்
கரு. திருக்கோவலூராழ்வான்
திருமோகூராழ்வான்
கோயிலாழ்வான்
அருணபுரத்தாழ்வான்
கணியனூர்சிறியாழ்வான்
உO. திருமலைநல்லான்

(க) வ்யாவ்யாதவாநு ஶஂஶிவொஶ்ஶூஜஹு௱வஂயஂ வநெயெஷஶிகஊஹாஂக௱ஂகெஶவஂதஂ ॥ யதுய௺வகஜாவ்யாதொ யதிராஜாஶிவஂஊ௺ஊஃ। க௱ஶயஂதீயதாஂஶெஉவஸௌக௱௱கெஶவஶெஷிகஃ." (உ) "ராஊநுஜஸ்வஶதெதய௺தீநாஂ வீடெெஶ்ஶஹ௱ஸவதிஹிஸஃெஊதஃ। ஏகாஂதிஹிஃ௺உஶஹிஸஹஸெஹஶ்ரீரஂ஗ஆஸெஷ யதிஸாவ௺ஹௌஊஃ॥ நாநாவியெவகெஂகயெ௺நியதெஶவ௺ஹுஹிஜ௺நெஃ। அநெஷ்ஶவியுதொஹாதி யதிராஜொ஗ுரு௫தஊஃ."

கிடாம்பியாச்சான்
வங்கிப்புரத்தாச்சான்
ஈச்சம்பாடியாச்சான்
கொங்கிலாச்சான்
௨௫. திருக்கண்ணபுரத்தாச்சன்
எச்சான்
சிறியகோவிந்தப்பெருமாள்
வீரவல்லிப்பெருமாள்
கிடாம்பிப்பெருமாள்
௩௦. அம்மங்கிப்பெருமாள்
ஆஸுரிப்பெருமாள்
பிள்ளையப்பன்
பிள்ளைதிருமலைநம்பி
வங்கிப்புரத்துநம்பி
௩௫. சொட்டைநம்பி
முடும்பைநம்பி
பராங்குஶநம்பி
திருக்குறுங்குடிநம்பி
தொண்டனூர்நம்பி
௪௦. அருணபுரத்துநம்பி
மருதூர்நம்பி
மழையூர்நம்பி
வடுகநம்பி
குரவிநம்பி
௪௫. புண்டரீகாக்ஷர்
முதலியாண்டான்
கந்தாடையாண்டான்
மாருதியாண்டான்
மதுரையாண்டான்
௫௦. ஈயுண்ணியாண்டான்
சோமாசியாண்டான்
சீயாண்டான்
ஈசாண்டான்
பெரியாண்டான்
௫௫. சிறியாண்டான்
அம்மங்கியாண்டான்
ஆளவந்தாராண்டான்
ஸுந்தரத்தோளுடையார்
உக்கலம்மாள்
௬௦. பருத்திக்கொல்லையம்மாள்
சொட்டையம்மாள்
முடும்பையம்மாள்
வைத்தமாநிதியார்
பராஶரபட்டர்
௬௫. சீராமப்பிள்ளைபட்டர்
சிறுப்பள்ளிதேவராஜபட்டர்
பிள்ளையுறந்தையுடையார் [யர்
பிள்ளைத்திருவாய்மொழியரை
பிள்ளைராஜமஹேந்த்ரப்பெரு
௭௦. அதிகாரிப்பிள்ளை [மாளரையர்
திருநகரிப்பிள்ளை
கொமாண்டூர்பிள்ளை
அநந்தஸோமயாஜியார்
௭௪. காஞ்சிஸோமயாஜியார்.

ஆக ஸிம்ஹாஸநாதிபதிகள் எழுபத்திநால்வர். அவர்களில்:—திருக்குருகைப்பிரான்பிள்ளான் நடாதூராழ்வான் கிடாம்பியாச்சான் முதலியாண்டான் இவர்கள்நால்வரும் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸநாதிபதிகள். அவர்களிலும் திருக்குருகைப்பிரான்பிள்ளான் ஸ்ரீபாஷ்யபகவத்விஷயஉபயஸிம்ஹாஸநாதிபதி. பின்பு சீயர்கள்:—எம்பார், அருளாளப்பெருமாளெம்பெருமானார், ஸ்ரீரங்கநாராயணசீயர்

குலசேகரசீயர், ஆள்கொண்டிவல்லிசீயர், பட்டம்பள்ளிசீயர், ஈச்சம்பாடிசீயர், இவர்கள்முதலான சீயர்கள் எழுநூற்றுவர். அலங்காரவேங்கடவர், நம்பிகுருந்தேவர், இவர்கள் முதலான ஏகாந்திகள் பன்னீராயிரவர்.

தூயமுனிவேழ்வான் முதலான கைங்கர்யபரர்களும், திருவரங்கமாயோன் முதலான காவலதிகாரிகளும், ஜ்ஞானபக்திபலங்களுடையநத்தத்துமுதலிகள்முதலானவர்களும், பிள்ளையுறங்காவலிதாஸர் முதலானசாத்தாதவைஷ்ணவர்களும், திருவநந்தபுரத்தம்மைமுதலான ஜ்ஞாநபக்தி வைராக்யங்களுடைய அம்மைகளும் உடையவர்திருவடிகளிலே ப்ரவணராய் தந்தம் கைங்கர்யத்தில் தத்பரராயிருப்பர்கள்.

அநந்தரம் இப்படிமுதலிகளுடனே உடையவர் வாழ்ந்துகொண்டிருக்கிறகாலத்தில், (௧)“ஸம்ஸேவிதஸ்ஸம்யமி ஸப்தஶத்யா பீடைஶ்சதுஸ்ஸப்ததிபிஸ்ஸமேதை:- அந்யைரநந்தைரபி விஷ்ணுபக்தை: ஸ்ரீரங்க ஆஸ்தே யதிஸார்வபௌம:” என்றும் சிலர் அநுஸந்திப்பர்கள்.

கூரத்தாழ்வான் வைபவம்.

பின்பு ஒருநாள் கூரத்தாழ்வான் பெரியபெருமாள் திருவடிதொழுது“இப்போதே தன்னுடைச்சோதியை அடையும்படிபண்ணவேணும்” என்று ப்ரார்த்திக்க,பெரியபெருமாளும் அப்படியே திருவுள்ளம்பற்றித் திருமாலைமுதலானவைகளை ப்ரஸாதிக்க,ஆழ்வானும் அச்செய்தியை உடையவர்ஸந்நிதியில் விண்ணப்பஞ் செய்து திருவடிதொழுது ஸ்ரீபாததீர்த்தம் ப்ரஸாதித்தருளவேணும் என்று ப்ரார்த்திக்க, உடையவரும் அத்தைக்கேட்டு நிர்வேதப்பட்டு “நானிருக்கச்செய்தே நீர் பெரியபெருமாளிடத்தில் இப்படிக்குப்ப்ரார்த்திக்கலாமோ?” என்று கேட்டருள, ஆழ்வானும் “அடியேனுக்குத் தன்னுடைச்சோதியினின்றும் எதிர்கொண்டு வந்து தேவரீரை யெழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோவது ஸ்வரூபமன்றோ?” என்ன,முதலிகளும் இத்தைக்கேட்டு ஆஸ்சர்யப்

---

(௧) “𑌸𑌂𑌸𑌵𑌿𑌤𑌸𑍍𑌸𑌂𑌯𑌮𑌿𑌸𑌪𑍍𑌤𑌶𑌤𑍍𑌯𑌾 𑌪𑍀𑌠𑍈𑌶𑍍𑌚𑌤𑍁𑌸𑍍𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌭𑌿𑌸𑍍𑌸𑌮𑍇𑌤𑍈𑌃 । 𑌅𑌨𑍍𑌯𑍈𑌰𑌨𑌨𑍍𑌤𑍈𑌰𑌪𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌕𑍍𑌤𑍈𑌃 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗 𑌆𑌸𑍍𑌤𑍇 𑌯𑌤𑌿𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌃.”

பட்டிருக்க,உடையவரும் போரஉகந்தருளி, "இனி, நாம் செய்வதென்?" என்று துணிந்து ஸ்ரீபாததீர்த்தம் ப்ரஸாதித்தருள, ஆழ்வானும் உடையவர் திருவடிகளை த்யானித்துக்கொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினர். கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம், தைமாஸத்தில் ஹஸ்தம்.

பின்பு உடையவரும் ஆழ்வானுக்கு ஸ்ரீமந்நாதமுநிகள் நியமித்தருளினபடியே ஸ்ரீசூர்ண பரிபாலநம்முதலாக த்வாதஸாஹக்ருத்யத்தையும் பட்டரைக்கொண்டு செய்துவைத்து அநந்தரம் கௌதமாதிகள்சொன்ன ப்ராயஸ்சித்தரூபமான ஸம்ஹிதாபாராயணத்தில் திருவாய்மொழியையும் ப்ரதாநமாக அநுஸந்தித்து நூற்றந்தாதியைக்கொண்டு இயல்நடத்தும்படிக்கும் நியமித்தருளி,அப்போது நம்மாழ்வாருக்கு ஸம்பாவநாரூபமாக ஓரடைக்காய்ஸமர்ப்பிக்கும்படி நியமித்தருள, முதலிகளும் அந்தப்படிக்கு ஆழ்வானுக்குத் திருவத்யயநத்தையும் நடப்பிவித்து ஆழ்வாருக்கும் எம்பெருமானுருக்கும் ஸம்பாவநாரூபமாக அடைக்காய்ஸமர்ப்பிக்க, உடையவரும் அத்தைத் திருவுள்ளம்பற்றியருளி, இனிமேலும் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருநாட்டுக்கெழுந்தருளினுல்இப்படிக்குத் திருவத்யயநாதிகளை நடப்பிக்கும்படி நியமித்தருளினர்.

பின்பு உடையவர் நியமநப்படிக்குக் கோயிற்றிருமலைபெருமாள்கோயில்முதலான திவ்யதேஸங்களிலும் மற்றும்பெரியோர்களெழுந்தருளியிருக்கிற திவ்யதேஸங்களிலும் ஸ்வரூபோபாயபுருஷார்த்தங்களை பாஷ்யாதிகளிலே தெளிந்து கத்யத்தில் சொன்ன ப்ரபத்தியைஅநுஷ்டித்து,நித்யத்தில்சொன்ன நிஷ்டையுடையவர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஸமூஹத்தைக் கண்டு"பொலிகபொலிகபொலிக போயிற்று வல்லுயர்ச்சாபம்" என்கிறபடியே ஸ்ரிய:பதியான எம்பெருமான் "கலியுகமொன்றுமின்றிக்கே தன்னடியார்க்கருள் செய்யும்" என்னும்படி "இவ்வுலகத்தைத் திருத்தியருளின ஸ்ரீபகவத்ராமாநுஜவைபவம் உண்டானபடியென்?" என்று சிலர் ஆநந்தபாஷ்பங்களைப் பெருக்க, அப்போது(க) "ஸ்ரீமத்ரங்கபதிஸ்ச வேங்கடபதிஸ் ஸ்ரீவாரணாத்ரே:பதிஸ் ஸ்ரீயத்வத்ரிபதிஸ்ச கேசநததா திவ்யஸ்தலா தீஸ்வரா: - ஆசார்யஸ்ஸஹ

(க) "ஸ்ரீமத்ரங்கபதிஸ்ச வேங்கடபதிஸ் ஸ்ரீவாரணாத்ரே:பதிஸ் ஸ்ரீயத்வத்ரிபதிஸ்ச கேசநததா திவ்யஸ்தலாதீஸ்வரா: । ஆசார்யஸ்ஸஹ

(க)யாமுநோமுநிவர: ஸ்ரீஸைலபூர்ணஸ்ததா ஸ்ரீராமாநுஜஸம்யமீந்த்ரகுரவே தாத்ருக்ப்ரஸாதம் தது:" என்று நடாதூராழ்வான் அருளிச்செய்தார்.

பெரியபெருமாள் அநுக்ரஹமாவது:—உபயவிபூத்யைஸ்வர்யத்தையும் கொடுத்து உடையவரென்று திருநாமம்ப்ரஸாதித்தது முதலானவைகள்.

திருவேங்கடமுடையான் அநுக்ரஹமாவது:—தாம் திருவாழிதிருச்சங்குகளைத் திருவுள்ளபற்றி விரோதிகளை வெல்லும்படியான ஏற்றத்தைப்ரஸாதித்தது முதலானவைகள்.

பேரருளாளன் அநுக்ரஹமாவது:—வில்லியும் வில்லிச்சியுமாய் நடுக்காட்டிற்சென்று அழைத்துக்கொண்டுவந்து அவர்கையாலே தண்ணீரமுது திருவுள்ளம்பற்றி ஆறுவார்த்தை அருளிச்செய்து உபகரித்தது முதலானவைகள்.

திருநாராயணன் அநுக்ரஹமாவது:—ஸ்வப்நத்தில் தானிருக்கிறபடியைச் சொல்லி, பாஷ்யாதிகளில் ப்ரகாஸிப்பித்தது போலன்றிக்கே, பிறர்பலரும் தொழுதேற்றும்படி தன்னைப்ரதிஷ்டிப்பித்து வைத்தது முதலானவைகள்.

பின்னும் சில எம்பெருமான்கள் அநுக்ரஹமாவது:—ஸ்ரீமதுராந்தகத்தில் ஏரிகாத்தபெருமாள் பகவத்ஸம்பந்தம் முதலானவைகளைஉண்டாக்கியதும், திருக்குறுங்குடிநம்பி அவைஷ்ணவனுக்கு மந்த்ரோபதேஸாதிகள் கூடாதென்று எல்லாருமறியும்படி பண்ணினதும், அழகரும் ஆண்டாள்ப்ரார்த்தனையைத்தலைக்கட்டும்படி செய்துவைத்துக்கொண்டதும் இவைமுதலானவைகள்.

ஆளவந்தார் அநுக்ரஹமாவது:—முன்னமே பெரியதிருமலைநம்பிக்கு நியமித்துப் பின்பு (உ) "தம்தேவமேவவரதம் ஸரணம்கதோऽஸ்மி" என்று தாமேகண்டு பேரருளாளன் திருவடிகளில் ப்ரபத்தி பண்ணினதும், யாதவனைவிட்டாரென்றுகேட்டு ஸித்தாந்த நிர்வாஹகராம்படி பெரியபெருமாள்திருவடியில் ப்ரபத்தி பண்ணியும் மூன்று மநோரதங்களை நிறைவேற்றும்படி நியமித்தருளினதும் முதலானவைகள்.

(க) யாமுநோமுநிவர: ஸ்ரீஸைலபூர்ணஸ்ததா ஸ்ரீராமாநுஜஸம்யமீந்த்ரகுரவே தாத்ருக்ப்ரஸாதம் தது:." (உ) "தம்தேவ மேவ வரதம் ஸரணம் கதோऽஸ்மி."

பெரியதிருமலைநம்பி அநுக்ரஹமாவது:—பூமிப்பிராட்டியாரென்கிற உடன்பிறந்தாளிடத்தில் உண்டானவரை "ஆமுதல்வனிவன்" என்று கடாக்ஷித்தருளி, ரக்ஷார்த்தமாகத் திருவிலச்சினையும் ப்ரஸாதித்தது முதலானவைகள்.

ததா:—என்றது பெரியநம்பி முதலான ஆசார்யர்கள் செய்தருளின அநுக்ரஹவிஶேஷம். ஆக, இவர்களுடைய அநுக்ரஹவிஶேஷங்களாலே உடையவர் இவ்விருள்தரு மாஞாலத்தில் ஆழங்கால்பட்டிருக்கிற சேதநர்களில் ஸ்வரூபோபாயபுருஷார்த்தங்களைத் தெளிந்து உபாயத்தை அநுஷ்டித்து வர்ணாஶ்ரம ஆசாரங்களை அநுவர்த்திக்குமவர்களுக்கே பரமபுருஷார்த்தம் உண்டாகுமென்று அறுதியிட்டு, அவர்களைத்திருத்தியருளி ஈஶ்வரேஶ்வரிகளான திவ்யதம்பதிகளுடையதிருவுள்ளம் உகக்கும்படி பண்ணினாராயிற்று. இத்தால் ஸ்ரீமத்ராமாநுஜன் திருவடிகளிலே ஆஶ்ரயித்தவர்களே பெரிய பிராட்டியாரை உபாயோபேயமாக ஶரணமடைந்து, அவள் உகப்பாலே பகவத்ப்ரபத்தியும் ஸித்தித்து (க) "ஜகத்ஸமஸ்தம்யதபாங்கஸம்ஶ்ரயம்" என்றும்(உ) "யஸ்யாவீக்ஷ்யமுகம்ததிங்கிதபராதீநோவிதத்தேகிலம்" என்றும் சொல்லுகிறபடியே முக்தைஶ்வர்யத்தை எம்பெருமானும் அவள் சொன்னபடி கொடுத்தருள்வன் என்றதாயிற்று.

ஆகையாலிறே "அங்கயல்பாய்வயல் தென்னரங்கனணியாகமொன்றும், பங்கயமாமலர்ப்பாவையைப்போற்றுதும் பத்தியெல்லாந், தங்கிய தென்னத்தழைத்தநெஞ்சேநந்தலைமிசையே,பொங்கியகீர்த்திராமாநுசனடிப்பூமன்னவே" என்றும் (ங) "ராமாநுஜாங்க்ரிஶரணோஸ்மிகுலப்ரதீபஸ் த்வாஸீத்ஸயாமுநமுநேஸ்ஸசநாதவம்ஶ்ய: - வம்ஶ்ய: பராங்குஶமுநேஸ்ஸசஸோபிதேவ்யா தாஸஸ்தவேதி வரதாஸ்மிதவேக்ஷணீய:" என்றும் திருவரங்கத்தமுதனாரும்ஆழ்வானும் அருளிச்செய்தகாதாஶ்லோகங்களைக் கேட்டு உடையவரும் உகந்தருளினர்.

(க) [illegible] (உ) [illegible] (ங) [illegible]

பின்பு சிலநாள் கழிந்தவாறே, உடையவரும் பெரியபெருமாள் திருவடிதொழுது, மேல்வீடுபெறும்படி நியமித்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க, பெரியபெருமாளும் அப்படியே திருவுள்ளம்பற்றித் திருமாலைமுதலானவைகளையும் ப்ரஸாதித்தருள, உடையவரும் ஸ்ரீ ரஸாவஹித்துப் பிள்ளான்முதலான முதலிகளோடே மடமேறஎழுந்தருள, முதலிகளும்இவ்வர்த்தத்தை அறிந்து, உடையவருடைய விஶ்லேஷத்தைஸஹியாமல் தேஹத்யாகம் பண்ணுமவர்களாயிருக்கக்கண்டு உடையவரும் பிள்ளான் முதலானமுதலிகளை அழைத்தருளி "என்னுடைய வியோகத்தில் தேஹத்யாகம் பண்ணினருளராகில் ஆளவந்தார் ஸ்ரீபாதமே என்னோட்டவர்களுக்கு ஸம்பந்தமில்லை" என்றருளிச்செய்ய, அவர்களுமதத்தைக் கேட்டுமிகவும்ஶோகார்த்தாளாய் "இனிஎங்களுக்குச் செய்யஅடுப்பதென்?" என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் ஒருவன்ப்ரபந்நனால் அவனுடைய ஆத்மயாத்ரை பகவததீநையாகையாலே அதில் இவனுக்கு அந்வயமில்லை. உண்டென்றிருந்தானாகில் ஆத்மஸமர்ப்பணம் பொய்யாமித்தனை. தேஹயாத்ரை கர்மாதீநையாகையாலே இவனதற்குக் கரையவேண்டா. கரைந்தானாகில் நாஸ்திகனுமித்தனை. ஆகையால் உபயயாத்ரையுங்கொண்டு இவனுக்குக்கார்யமில்லை. ஆனால் மநோவாக்காயங்களாகிற த்ரிவித கரணங்களையுங் கொண்டு வேண்டிற்றுச்செய்து திரியஅமையுமோ? என்னில்; அது இவனுக்குஸ்வரூபமன்று. உபாயாம்ஶத்தில் அந்வயமில்லாவிட்டால் ப்ராப்யமானகைங்கர்யத்தில் இவற்றை அந்வயிப்பிக்குமித்தனை. அது இவனுக்கு இங்கிருந்தநாள் பண்ணுங்கைங்கர்யம் அஞ்சு உண்டு. அவைபாவன:—ஸ்ரீபாஷ்யத்தை வாசித்துப்ரவர்த்திப்பித்தல். அதற்குயோக்யதை இல்லையாகில், அருளிச்செயலைக் கேட்டுப்ரவர்த்திப்பித்தல். அதற்குயோக்யதை இல்லையாகில் உகந்தருளின திவ்யதேஶங்களுக்கு அமுதுபடி, சாத்துப்படி, திருவிளக்கு, திருமாலைகளை உண்டாக்கல். அதற்குயோக்யதை இல்லையாகில், த்வயத்தினுடைய அர்த்தாநுஸந்தானம் பண்ணுதல். அதற்கு யோக்யதை இல்லையாகில், என்னுடையவனென்று அபிமானிப்பான் ஒரு ஸ்ரீவைஷ்ணவனுடைய அபிமானத்தில் ஒதுங்கி வர்த்தித்தல் செய்யலாம். இத்யாதி ஶாஸ்த்ரநியமநாதிகாரத்தில் சொல்லுகிறபடியே அருளிச்செய்ய, முதலிகளும்கேட்டுத்தெளிந்துநிற்க, அப்போது கலிபுருஷன் உடையவர் முன்பேவந்து "கலியுங்கெடுங்கண்டு கொண்மின்" என்கிறபடியே, "நம்மை இந்நாட்

டினின்றும் ஒட்டிவிட்ட உம்முடையஸித்தாந்தத்தை எப்படியாகி லுங்குலைக்கக்கடவேன்?" என்றுசொல்ல, உடையவரும் "இஸ்ஸித்தாந்தத்திற்குப்பெரியபெருமாள்ப்ரவர்த்தகராகையாலே ஒருதீங்கும் வாராமல் (க) "யதாயதாஹிதர்மஸ்ய க்லாநிர்பவதி" என்றும்(உ) "ஸாக்ஷாந்நாராயணோதேவ:" இத்யாதிகளிலும்சொல்லுகிறபடியே நிலைநிறுத்திக்கொள்ளக்கடவன்" என்று ப்ரபத்திபண்ணி, பின்பு திருமேனியில்நோவுசாத்தியிருக்கும்போது பிள்ளான், ஆழ்வான், ஆச்சான், ஆண்டான் இவர்களுடைய ஆர்த்தியைக்கண்டு "நாம் முன்புசொன்னது அமையாதோ?" என்றுஅருளிச்செய்ய, கிடாம்பியாச்சானும் "இத்திருமேனி நோவுபடவுங்கண்டு அடியோங்கள் எங்ஙனே உஜ்ஜீவிப்பது" என்றும், திருக்குருகைப்பிரான்பிள்ளானும் "ஆழ்வார்களோபாதி திவ்யமங்கள விக்ரஹப்ரதிஷ்டையை நியமித்தருளவேணும்" என்றும், முதலியாண்டானும் "இப்படி இல்லாவிடில் ஸித்தாந்தம் குலையும்" என்றும்விண்ணப்பஞ்செய்ய எம்பெருமானாரும் அப்படியே மூன்றுவிக்ரஹங்களைப் பண்ணிவைத்து ஆலிங்கநம்செய்தருளி கோயிலிலும், ஸ்ரீபெரும்பூதூரிலும், திருநாராயணபுரத்தில்முன்னமேஸிலாமயமான திவ்யவிக்ரஹத்தைப் ப்ரஸாதித்திருப்பதால் அவ்விடத்திலும் ப்ரதிஷ்டிப்பிக்கும்படி நியமித்து ஆச்சான், பிள்ளான், ஆண்டான்மூவர்களுக்கும் ப்ரஸாதித்தருள, நடாதூராழ்வானும் "நம்பேருளாளர் பண்ணினகுற்றம் எங்ஙனேயோ?" என்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும்போரஉகந்தருளி, உம்மை "கூரத்தாழ்வான் முன்னமேப்ரியபாகிநேயர் என்று சொன்னது மிகவும்தகும்." என்றருளிச்செய்ய, நடாதூராழ்வானும் "திவ்யதேஸங்கள்தோறும் இப்படிக்கு நியமித்தருளவேணும்" என்று ப்ரார்த்திக்க, உடையவரும் அப்படியே நியமித்தருளினர்.

பின்பு முதலிகளை அழைத்துத் திருக்குருகைப்பிரான்பிள்ளான்கையில் காட்டிக்கொடுத்து "இஸ்ஸித்தாந்தத்தைப் பரக்கப்ரவர்த்திப்பிக்கக்கடவது" என்றுஅருளிச்செய்து, ஆளவந்தார்பாதுகைகளில்ஸ்ரீபாததீர்த்தங்கொண்டு தாமமுதுசெய்து முதலிகளுக்கும் ப்ரஸாதித்தருள, முதலிகளும் உடையவர் ஸ்ரீபாததீர்த்தத்தையும் திருவடிநிலையையும் ப்ரார்த்திக்க, உடையவரும் அப்படியே ப்ரஸாதித்தருளினர். பின்பு கோயிலநந்தகொத்து பரிஜநங்களும்

(க) "யதா³யதா³ஹிய⁴ர்மஸ்ய க்³லாநிர்ப⁴வதி." (உ) "ஸாக்ஷாந்நாராயணோதே³வ:."

வந்து"இனிஎன்செய்யக்கடவோம்?"என்றுஸேவித்துநிற்க, உடையவரும் "நம்முடைய ஜ்ஞாநபுத்ரரான பிள்ளானிருக்க உங்களுக்குக்குறையுண்டோ? பெரியபெருமாள் கைங்கர்யங்களைக்குறைவற நடத்திப்போருங்கோள்" என்று அருளிச்செய்து, பிள்ளானையும் கிடாம்பியாச்சானையும் அழைத்தருளிச் சிலவிஶேஷார்த்தங்களை அருளிச்செய்து,(க)"விஶேஷேண துஸுக்ரீவோ ஹநூமத்யர்தமுக்தவாந்- ஸஹிதஸ்மிந் ஹரிஶ்ரேஷ்டே நிஶ்சிதார்தோர்த ஸாதநே" என்கிறபடியே திருவடிவிஷயத்தில் மஹாராஜர் கார்யநிஶ்சயம்பண்ண, பெருமாளும் அங்குளீயகத்தையும் ப்ரஸாதித்து விஶேஷார்த்தங்களை அருளிச்செய்தாற்போலேஉடையவரும் காலதத்வமுள்ளத்தனையும் இந்தஸித்தாந்தம்அவ்யாஹதமாய்ப்போருகைக்காக அவர்கள் திருமுடியில் தந்திருவடிகளை அமர்த்தியருளி "இந்தஸித்தாந்தம் உங்கள்முகமாக நிலைநிற்கும்படி பெரியபெருமாள் திருவுள்ளம்பற்றியிருப்பதால் அதற்கநுகுணமாக ஸத்பாத்ரத்தில் விநியோகித்துப்போருங்கோள்" என்று அருளிச்செய்து, தம்திருவாராதநமான பேரருளாளரையும் ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவரையும் பிள்ளானுக்குப்ரஸாதித்துக் குளிரக்கடாக்ஷித்தருளி, கோயிலுக்குநேரே பிள்ளான்மடியில் திருமுடியும் கிடாம்பியாச்சான் மடியில் திருவடிகளுமாய்க்கண்வளர்ந்தருள,நடாதூராழ்வான்,எம்பார், முதலியாண்டான் ப்ரப்ருதிகளான முதலிகளும் சீயர்களும், மற்றும்ஏகாந்திகளும் ப்ரஹ்மவல்லி முதலான உபநிஷதநுஸந்தாநத்தையும் "சூழ்விசும்பணிமுகில்"முதலான திருவாய்மொழியநுஸந்தாநத்தையும் நடத்த, கைங்கர்யபரர்களும் ஸகலவாத்யங்களுடனே திருச்சங்குப்பரிமாற, பெரியநம்பிதிருவடிகளை த்யானித்துக்கொண்டிருக்கச்செய்தே ப்ரஹ்மரந்த்ரம்திறந்து திருநாட்டுக்கெழுந்தருளினர். எம்பெருமானுர் திருநக்ஷத்ரம், சித்திரைஆதிரை.

பின்பு பிள்ளான் முதலான முதலிகளும் முசித்துக்கிடந்து பெருமிடறுசெய்து ஶோகித்துத் தாங்களேதேறிப் பிள்ளானைக்கொண்டு சரமகைங்கர்யங்களையெல்லாம் ஆளவந்தாருக்கு நடந்தாற்போலே நடப்பித்து உடையவர்நியமநப்படிக்குத் திருவத்யயநத்தையும் நடப்பித்துத் தீர்த்தம் ஸ்வீகரித்துப் பிள்ளான்பக்கல் உடையவர்நியமநப்படிக்கு முதலிகளெல்லாரும் விஶேஷ ப்ரதி

(க) "விஶேஷேண து ஸுக்ரீவோ ஹநூமத்யர்தமுக்தவாந் । ஸ ஹி தஸ்மிந் ஹரிஶ்ரேஷ்டே நிஶ்சிதார்தோ(அ)ர்த ஸாதநே."

பத்திபண்ண,பிள்ளானும் உடையவர்நியமநப்படிக்கு முதலிகளைத் தேற்றிக்கொண்டு ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டெழுந் தருளியிருந்தார்.

பின்பு உடையவர்நியமநப்படிக்குப் பிள்ளானும் கோயிலிலே உடையவரை ஒரு மூலபேரத்தோடேசேர்த்து ப்ரதிஷ்டிப்பித்து ஆராதித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார். முதலியாண்டானும் ஸ்ரீபெரும்பூதூரில் உடையவரை திருப்ரதிஷ்டைசெய்து வைத்தார். கிடாம்பிஆச்சானும் நல்லான்முதலான சில முதலிகளோடே திருநாராயணபுரத்தில் உடையவர்நியமநப்படிக்கு ஆழ்வார் ஆசார்யர்களையும் ஆண்டாளையும் திருப்ரதிஷ்டைசெய்வித்துத் தமக்குப்ரஸாதித்த உடையவர் திவ்யமங்களவிக்ரஹத்தை அவ்விடத்திலிருந்த மூலபேரத்தோடே சேர்த்துப்ரதிஷ்டிப்பித்துத் திருவத்யயநோத்ஸவம் முதலானவைகளை நடப்பித்தருளினர். நடாதூராழ்வானும் பெருமாள்கோயிலில் உடையவர் திப்ரதிஷ்டைசெய்துவைத்தார். பிள்ளைதிருமலைநம்பியும் கீழைத் திருப்பதியில் பெரியதிருமலைநம்பியையும் திருப்ரதிஷ்டைசெய்வித்து அவ்விடத்திலும்,திருமலையில் திருமாலை ப்ரஸாதம் திருவுள்ளம்பற்றின இடத்திலும், திருவேங்கடமுடையான் ஸந்நிதியிலும் உடையவர் திருப்ரதிஷ்டை செய்வித்தார். மற்றும்அங்கங்குள்ள திவ்யதேசங்களில் அங்கங்குள்ளவர்களும் உடையவரை திருப்ரதிஷ்டை செய்வித்தார்கள்.

கிடாம்பி ஆச்சான் ராமாநுஜப்பிள்ளான் வைபவங்கள்.

பின்பு திருக்குருகைப்பிரான்பிள்ளானும் உடையவர்நியமநப்படிக்கு எங்களாழ்வான் முதலான முதலிகளுக்கு ஸ்ரீபாஷ்யபகவத்விஷயங்களையும் மற்றும் விசேஷார்த்தங்களையும் ப்ரஸாதித்துக்கொண்டு ஸித்தாந்த ப்ரவசநம்பண்ணிக்கொண்டு இருக்கிற காலத்தில், பரமாஸ்திகாக்ரேஸராராய், யதிராஜமாஹாநஸிகரான கிடாம்பியாச்சானும் உடையவர் நியமநப்படிக்குப் பாஷ்யாதிப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்கும்போது, தமக்கொருகுமாரரவதரிக்க, அவருக்கு ராமாநுஜப்பிள்ளான் என்று திருநாமம்சாத்தி உடையவர் தமக்கு ப்ரஸாதித்தருளின அர்த்தங்களையெல்லாம் அவருக்குப்ரஸாதித்துத் தர்சநப்ரவர்த்தகராக்கியருளி திருநாட்டுக்கெழுந்தருளினர். பின்பு அவர் சரமகைங்கர்யங்களையெல்லாம் ராமாநுஜப்பிள்ளானைக்கொண்டு எங்களாழ்வான் முதலான

வர்கள் நடப்பித்தார்கள். கிடாம்பிஆச்சான் திருநக்ஷத்ரம், சித்திரையில் ஹஸ்தம்.

கிடாம்பி ராமாநுஜப்பிள்ளான் ஸ்ரீரங்கராஜர் வைபவங்கள்.

பின்பு ராமாநுஜப்பிள்ளானும் பாஷ்யாதிப்ரவசநம்பண்ணிக் கொண்டிருக்க, தமக்கொரு குமாரர் அவதரிக்க, அவருக்கு ஸ்ரீரங்கராஜரென்று திருநாமம்சாத்தித் தமக்கு ஆச்சான் ப்ரஸாதித்தருளின அர்த்தங்களையெல்லாம் ப்ரஸாதித்தருளி திருநாட்டுக்கெழுந்தருளினர். இராமாநுசப்பிள்ளான் திருநக்ஷத்ரம், ஐப்பசி பூராடம்.

திருக்குருகைப்பிரான்பிள்ளான் எங்களாழ்வான் வைபவங்கள்.

திருக்குருகைப்பிரான்பிள்ளானும் உடையவர்நியமநப்படிக்கு ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டிருந்து, நாலாயிரப்ரபந்தங்களை அந்தஅந்தப்ரபந்தங்களுக்கு அநுகுணமாகத் தனியன்களைச் சேர்த்து அநுஸந்திக்கும்படி நியமித்தருளி, எங்களாழ்வானுக்கு ஏகாந்தத்தில சிலவிஶேஷார்த்தங்களை அருளிச்செய்து, தீர்த்தமும் ப்ரஸாதித்து, தாமும் உடையவர் ஸ்ரீபாததீர்த்தம் ஸ்வீகரித்து திருநாட்டுக்கெழுந்தருளினர். பின்பு பிள்ளான் சரமகைங்கர்யங்களையெல்லாம் ஔரஸபுத்ரரான புண்டரீகாக்ஷரைக்கொண்டு எங்களாழ்வான் முதலான முதலிகளெல்லாரும் உடையவர் நியமநப்படிக்குப் பரக்க நடத்திப்போந்தார்கள். பிள்ளான் திருநக்ஷத்ரம், ஐப்பசி பூராடம்.

எங்களாழ்வான் நடாதூரம்மாள் வைபவங்கள்.

(க) சைத்ரேசித்ரோத்பவம்காஞ்ச்யாம் தேவராஜகுரோஸ்ஸுதம்।
ஸுபுத்ராம்ஶம்குருத்தம்ஸம் வாத்ஸ்யம்வரதமாஶ்ரயே.

பின்பு எங்களாழ்வானும் உபயவேதாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்க, உடையவருக்கு ப்ரியபாகிநேயருமாய் பாஷ்யஸிம்ஹாஸநாதிபதியுமான நடாதூராழ்வான் குமாரரான தேவராஜப்பெருமாளுக்குக் கலியுகத்தில் - சஉளஎ - ஆவதான பார்த்திவ வர்ஷம் சித்திரைமாஸம் சித்ராநக்ஷத்ரத்தில் ஸுபுத்ராம்ஶரான ஒரு குமாரரவதரிக்க, அவருக்கு வரதாசார்யரென்று திருநாமம் சாத்தி வேதவேதாங்கங்களான ஸகல ஶாஸ்த்ரங்களையும் அப்ப

(க) चैत्रे चित्रोद्भवं काञ्च्यां देवराजगुरोस्सुतम्।
सुपुत्रांशं गुरूत्तंसं वात्स्यं वरदमाश्रये॥

ஸிப்பித்து எல்லாராலும் நடாதூரம்மாளென்று கொண்டாடப்பட்டிருக்க, அந்த நடாதூரம்மாளும் தமக்குப்பிதாவான தேவராஜப்பெருமாளிடத்தில் மந்த்ரமந்த்ரார்த்தங்களைப் பெற்றபின்பு ஸ்ரீபாஷ்யத்தைக் கேட்க யத்நப்பட, தேவராஜப் பெருமாளும் இவருடைய ஸாமர்த்யத்தையும் பித்ருத்வாபிமாநத்தாலே நிர்பயத்தையுங்கண்டு தினவு கெடச்சொல்லும் திருவெள்ளறைச் சோழியரான எங்களாழ்வான்பக்கல் பிள்ளான்ப்ரஸாதித்தருளின விஶேஷார்த்தங்களோடே பாஷ்யாதிகளை அதிகரிக்கும்படி நியமித்தருள, அம்மாளும் அப்படியே எங்களாழ்வான்பக்கல்போய்த்தண்டன்ஸமர்ப்பித்துத் தேவராஜப்பெருமாள்நியமநத்தை விண்ணப்பஞ்செய்ய, எங்களாழ்வானும் உடையவர் நியமநப்படிக்குத்தமக்குப்பிள்ளான் ப்ரஸாதித்தருளின அர்த்தங்களையெல்லாம் இவர் முகமாகப்ரகாஶிக்குமென்றுபோரஉகந்தருளி, "நமக்குப்புத்ரத்வத்தையும் ஶிஷ்யத்வத்தையும் வஹிக்கிறோம் என்று நீர் ப்ரதிஜ்ஞைபண்ணிக்கொடுத்தீராகில் நாம்சொல்லுகிறோம்" என்றும் "ஸ்ரீபாஷ்ய ஸ்ரீகோஶத்தைக் கொண்டுவாரும்" என்றும் அருளிச்செய்ய, அம்மாளும் அவ்வர்த்தத்தைப் பிதாவினிடத்திற்சொல்ல, அவரும் அப்படியே அப்யநுஜ்ஞைபண்ண, அம்மாளும் ஸ்ரீகோஶத்தைக் கொண்டுபோய் அப்படியே ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொடுக்க, எங்களாழ்வானும் ஸ்ரீபாஷ்யாதிகளை ஆக்ஷேபஸமாதாநங்களோடேப்ரதிஷ்டிதமாகும்படி ப்ரஸாதித்தருளினார். பின்பு, அம்மாளும் ஸ்ரீபாஷ்யாதிகளை ப்ரவசநம்பண்ணிக்கொண்டிருக்கும்போது, அவருக்கு ஆசார்யபக்தி கரைபுரண்டிருக்கிறபடியைக்கண்டு, எங்களாழ்வானும் தமக்குப்பிள்ளான் ப்ரஸாதித்த அர்த்தவிஶேஷங்களையெல்லாம்ப்ரஸாதித்து, (க)"வர்ணாஶ்ரமாசாரவதா புருஷேணபர: புமாந் - விஷ்ணு ராராத்யதேபந்தா நாந்யஸ்தத்தோஷகாரக:" என்றும் சொல்லுகிறபடியே, "உடையவர் செய்தருளின நித்யத்திற்சொன்ன பாரமைகாந்த்ய முடையவர்கள் உத்தேஶ்யர்கள்" என்றும், "அந்நிஷ்டை பெறுகைக்காகக்கத்யத்திற்சொன்ன உபாயாநுஷ்டாநம் வேண்டும்" என்றும், "அவ்வர்த்தம் தெளிகைக்காக ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யாதிகளை அதிகரிக்கவேண்டும்" என்றும், "இவ்வளவு ஜ்ஞாநபூர்த்தி இல்லாதாருக்கு ஓராசார்யனைத் திருவடிதொழுதால் இவனுடைய ஆத்மபரத்தை ஆசார்யன் எம்

(க) "𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌚𑌾𑌰𑌵𑌤𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣 𑌪𑌰𑌃 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑌾𑌰𑌾𑌧𑍍𑌯𑌤𑍇 𑌪𑌨𑍍𑌥𑌾 𑌨𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑍋𑌷𑌕𑌾𑌰𑌕𑌃."

பெருமான் திருவடிகளிலே ஸமர்ப்பித்து இவனைநிர்பானுக்குவன்" என்றும் அருளிச்செய்து, "இவ்வர்த்தங்களை எல்லாம் நல்லபாத்ரத்தில் விநியோகிக்கும்படி நம்பிள்ளான் நியமநம்" என்றும் அருளிச்செய்து திருநாட்டுக்கெழுந்தருள, அம்மாளும் ஆசார்யன் உபதேஶிக்கும்போது ப்ரதிவாதம்பண்ணுமையாகிற ஶிஷ்யத்வத்தை முன்னமே நடத்தினவராகையாலே, அப்போது சரமகைங்கர்யங்களையெல்லாம் ஜநகபிதாவுக்குப்போலேயாக்கச்செய்தருளிப் புத்ரத்வத்தையும் நிறைவேற்றினர். எங்களாழ்வான் திருநக்ஷத்ரம், ஆனிமாஸத்தில் ஸ்வாதி.

கிடாம்பி அப்பிள்ளார் வைபவம்.

(க) சைத்ரார்த்ராஸம்பவம்காஞ்ச்யாம் ரங்கராஜகுரோஸ்ஸுதம்
ஸுப்ரதிஷ்டாம்ஶமாத்ரேயம் ராமாநுஜகுரும்பஜே.

பின்பு ஸ்ரீரங்கராஜரும் தமக்கு ராமாநுஜப்பிள்ளான் ப்ரஸாதித்த அர்த்தங்களையெல்லாம் ப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்க, அப்போது கலி-௪௩௨௨-ஆவதான விக்ரமவர்ஷம் சித்திரைமாஸம் திருவாதிரை நக்ஷத்ரத்தில் ஸுப்ரதிஷ்டாம்ஶரான ஒரு குமாரரவதரிக்க, அவருக்கு ஸ்வாசார்யரான ராமாநுஜப்பிள்ளான் திருநாமத்தை ப்ரஸாதிக்க, அவரும் பால்யமே தொடங்கிசதுரராய் ஸகலவித்யாபாரங்கதராயிருக்க, இத்தைக்கண்டு "அப்பிள்ளானேஇவர்" என்று பெரியோர்கள் அருளிச்செய்ய, அன்றுமுதல் அப்பிள்ளாரென்று திருநாமமாயிற்று. பின்பு ஒருகுமாரதியவதரிக்க, அவளுக்குத்தோதாரம்மனென்று திருநாமம்சாத்தினர். பின்பு ஸ்ரீரங்கராஜரும் அப்பிள்ளாருக்குத் திருமந்த்ரார்த்தங்களை ப்ரஸாதித்தருளி திருநாட்டுக்கெழுந்தருளினர். ஸ்ரீரங்கராஜர் திருநக்ஷத்ரம், பங்குனி ரோஹிணி. பின்பு கிடாம்பி அப்பிள்ளாரும் ஶப்ததர்க்கமீமாம்ஸாதிஸகல ஶாஸ்த்ரங்களையும் அதிகரித்தவராகையாலே வேதாந்தார்த்தாந்வயாபேக்ஷையுடனே எழுந்தருளியிருந்தார்.

நடாதூரம்மாள் கிடாம்பி அப்பிள்ளார் வைபவங்கள்.

பின்பு, நடாதூரம்மாளும் எங்களாழ்வான் அநுக்ரஹவிஶேஷத்தாலே அதிப்ரபுத்தராய்த் தத்வஸாரம் முதலான க்ரந்தங்

(க) 𑌚𑍈𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌾𑌸𑌂𑌭𑌵𑌂 𑌕𑌾𑌞𑍍𑌚𑍍𑌯𑌾𑌂 𑌰𑌙𑍍𑌗𑌰𑌾𑌜𑌗𑍁𑌰𑍋𑌸𑍍𑌸𑍁
𑌤𑌂। 𑌸𑍁𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌂𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌯𑌂 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌗𑍁𑌰𑍁𑌂 𑌭𑌜𑍇.

களைச்செய்தருளி, ஸ்ரீபாஷ்யம், ஆறாயிரப்படி முதலான தர்ஸநார்த்தங்களையும் ப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்கிறகாலத்திலே தம்மிடத்தில் ஸ்ரீபாஷ்யாதிகளை அதிகரிக்கைக்காக அப்பிள்ளார் முதலான சில முதலிகள் வந்தாஸ்ரயிக்க, அந்தக்கிடாம்பி அப்பிள்ளாருக்கும் ஸுதர்ஸநாசார்யருக்கும், நடுவிலாழ்வானுக்கும் ஸ்ரீபாஷ்யம், ஆறாயிரப்படி, முதலானவைகளை ப்ரஸாதித்துக்கொண்டு பேரருளாளன் ஸந்நிதியில் கச்சிவாய்த்தான் மண்டபத்தினருகே நித்யமாக ஸ்ரீபாஷ்யாதிப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்க, அப்போது வடக்குத் திருவீதிப்பிள்ளை முதலானவர்கள் அம்மாள் திருவடிகளிலே ஆஸ்ரயித்து ஸ்ரீபாஷ்யம் முதலானவைகளை அதிகரித்தார்கள். பின்பு, ஒருநாள் நித்யமாக இவ்விடத்திலேயே காலக்ஷேபம்பண்ணுவதற்கு அதிஸயம் உண்டோ?என்று சிலர்கேட்க, அம்மாளும் (க)“பரம்தத்த்வம்ஸ்ரீமாநஹமபிசபேதோமமமதம் ப்ரபத்திஸ்தூபாயஸ்சரமஸமயேநஸ்ம்ருதிரபி- ஸரீராந்தேமோக்ஷா குருரபிமஹாபூர்ண இதிதா நவாதீதர்தாந்ஷட்வரத இஹபூர்ணுபதுபுரா” என்கிற ஸ்லோகத்தையருளிச்செய்தார்.

பின்பு ஸுதர்ஸநாசார்யரும் அம்மாள் ஸ்ரீபாஷ்யோபந்யாஸத்தைப்பட்டோலையிலேறி யருளப்பண்ணினர். அத்தை அம்மாளும் கடாக்ஷித்து இது ஸ்ருதப்ரகாஸிகையென்றும் இத்தைச்சோதித்து ப்ரவர்த்திப்பிக்கக் கடவீரென்றும் அருளிச்செய்து அப்பிள்ளார் முதலான முதலிகளோடே ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீமத்வேதாந்த தேஸிகாவதாரப்ரகாரம்.

பின்பு இப்படிப்ரஸித்தரான நடாதூரம்மாள் திருவடிகளிலே ஆஸ்ரயித்து ஸ்ரீபாஷ்யாதிகளையும் அதிகரித்துப் பரமைகாந்திநிஷ்டையை யுடையவராயும், உடையவருடைய பரிபூர்ணகடாக்ஷவிஸேஷம் திருக்குருகைப்பிரான்பிள்ளான்முகமாயும் கிடாம்பிஆச்சான்முகமாயும் இரண்டுவழியாய் ப்ரவஹித்துவந்து, அப்பிள்ளாராகிற மஹாதடாகத்தில் மடுத்து, ஸமஸ்தமான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் புஜித்துவாழும்படி பலங்களைஉண்டுபண்ணுகிற ஒருபெருங்கழனியில் பாய்ந்து, உடையவர்கடாக்ஷம் ஸார்த்தமாகுமென்று

(க) “[Grantha script verse — illegible]”

பெரியோர்களனைவரும் மகிழும்படி வைபவத்தை உடையவராயுமிருந்துள்ள அப்பிள்ளார்பக்கல் (௧) "கஇதிப்ரஹ்மணோநாமதேநதத்ராஞ்சிதோ ஹரி:- தஸ்மாத்காஞ்சீதிவிக்யாதாபுரீபுண்யவிவர்திநீ" என்றும் "நாரணனுக்கிடந்தான் தடஞ்சூழ்ந்தழகாயகச்சி" என்றும் சொல்லுகிறபடியே அயோத்யாதிகளிலும் ப்ரஸித்தக்ஷேத்ரமான பெருமாள்கோயிலில் திருத்தண்கா என்கிற திவ்யதேசத்தில் தீபப்ரகாசர்ஸந்நிதி ஸமீபத்தில் நித்யவாஸம் பண்ணிக்கொண்டிருக்கிறவராயும், ஸிம்ஹாஸநாதிபதியாயும், தூப்புல்குலமணியாயுமிருந்துள்ள அநந்தஸோமயாஜியார்குமாரரான புண்டரீகாக்ஷதீக்ஷிதர் எழுந்தருளித் தேவரீர் உடன்பிறந்தவளான தோதாரம்மனை ஸகலவேதவேதாங்கஸமர்த்தராயும் நம்முடையகுமாரருமான அநந்தஸூரிக்குக் கந்யகாதாநம்பண்ணவேணும் என்று ப்ரார்த்திக்க, அப்பிள்ளாரும் அப்படியே திருவுள்ளம்பற்றி விவாஹம்பண்ணிக்கொடுக்க, அநந்தஸூரியும் (௨) "தயாஸராஜர்ஷிஸுதாபிராமயா" என்கிறபடியேஸஹதர்மசாரிணியான இந்தத்தோதாரம்மனோடே பஞ்சகாலபராயணராய்ப் பகவத்பாகவதாசார்யாராதநம் பண்ணிக்கொண்டுஸுகோத்தரராயெழுந்தருளியிருந்தார்.

பின்பு (௩) "வேங்கடாத்ரிஸமம்ஸ்தாநம் நபூதம் நபவிஷ்யதி- மாயாவீ பரமாநந்த: த்யக்த்வா வைகுண்டமுத்தமம் ॥ ஸ்வாமிபுஷ்கரிணீதீரேரமயா ஸஹமோததே- கமலாயுகேது ஸம்ப்ராப்தே விஶேஷாத் வேங்கடாசல: ॥ ப்ரக்யாதோஹ்யதிகம் பூமௌ பவிஷ்யதி நஸம்ஶய: - ஸாந்நித்யமதிகம்தத்ர கரிஷ்யதிரமாபதி: ॥ கலிதோஷபரீதாநாம் நராணாம்பாபகர்மணாம் - வேங்கடேஶாத்பரோ தேவோநாஸ்த்யந்யச்சரணம்புவி" "திண்கைம்மா துயர்தீர்த்தவன்

---

(௧) [illegible] (௨) [illegible] (௩) [illegible]

திருவேங்கடம்' 'வேதப்பொருளே யென்வேங்கடவா' 'வேதியர் முழுவேதத்தமுதத்தை'(௧)'ஶ்ருதிஶிரஸிவிதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீ நிவாஸே" இத்யாதிகளில் சொல்லுகிற ப்ரஸித்தியுடையஉபயவிபூதி நிர்வாஹகனை திருவேங்கடமுடையான், தம் திருவாழி திருச்சங்குகளை(௨) 'மாபைஷ்டபுத்ரபத்ரந்தேஶங்கசக்ரௌததாமிதே-தாப்யாம் கச்சபுரீம் திவ்யாம்தௌதேஶத்ரூந்ஹநிஷ்யத:" என்றருளிச்செய்து தொண்டமான் சக்ரவர்த்திக்குக் கொடுக்கையாலே தான் அழகு அழிந்திருக்க அவைகளைத் தரித்துவித்து எல்லாரும்அநுபவிக்கும்படி தம் ஸ்வரூபாதிகளை ப்ரகாஶிப்பித்த உபகாரத்திற்கு ப்ரத்யுபகாரமாக அநந்தாமாநுஜஸித்தாந்தத்தைப்பணிப்பித்தருள வேணும் என்றுதிருவுள்ளம்பற்றி அதுதானும்(௩) "யஸ்யநாதேந தைத்யாநாம் பலஹாநிரஜாயத" என்றும் (௪) "ஸகோஷோதார்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநிவ்யதாரயத்" என்றும் சொல்லுமாபோலே (௫) "டாகிந்யஶ்சபிஶாசாஶ்சஅஸுராப்ரஹ்மராக்ஷஸா:-நஶ்யந்திகண்டாகோஷேண" என்றும்(௬) "கண்டாநாதாதிபாவேதா:" என்றும் சொல்லுகிறபடியே ப்ரஸித்தமான திருமணியாழ்வாரை அவதரிப்பித்து, அவரைக்கொண்டு செய்யவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி அந்த அநந்தாசார்யர் ஸ்வப்நத்தில் "உமக்குஸந்தாநம்தருகிறோம் நம்மைத்திருவடிதொழவாரும்" என்ன, அநந்தாசார்யரும்ப்ரபாதத்தில் இத்தைத்தேவிகளுக்கு அறிவிக்க, தோதாரம்மனும் "அடியேன் ஸ்வப்நத்தில் திருமலையேறவந்தால் உமக்கு ஸந்தாநம்தருகிறோம்" என்று ஒரு ஸுமங்கலிஸ்த்ரீ சொன்னதாக விண்ணப்பஞ்செய்ய, இருவரும் அத்யாஶ்சர்யப்பட்டுப் பலம் கைபுகுந்ததாகநிஶ்சயித்துத் தாமும் தேவிகளும் திருமலையேற எழுந்தருளித் திருவேங்கடமுடையானைத் திருவடிதொழுது அன்றுராத்ரியில் ஶயித்துக்கொண்டிருக்க, அப்போதுஸ்வப்நத்தில் திருவேங்கடமுடையான் ஒரு பாலகனைப் இருவருக்குந்தோற்றி. கோயிலி

---

(௧) "𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌿𑌰𑌸𑌿𑌵𑌿𑌦𑍀𑌪𑍍𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑍇." (௨) "𑌮𑌾 𑌭𑍈𑌷𑍍𑌟 𑌪𑍁𑌤𑍍𑌰 𑌭𑌦𑍍𑌰𑌂 𑌤𑍇 𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑍌 𑌦𑌦𑌾𑌮𑌿 𑌤𑍇। 𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌗𑌚𑍍𑌛𑌪𑍁𑌰𑍀𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌤𑍌 𑌤𑍇 𑌶𑌤𑍍𑌰𑍂𑌨𑍍 𑌹𑌨𑌿𑌷𑍍𑌯𑌤𑌃." (௩) "𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌦𑍇𑌨 𑌦𑍈𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌬𑌲𑌹𑌾𑌨𑌿𑌰𑌜𑌾𑌯𑌤." (௪) "𑌸 𑌘𑍋𑌷𑍋 𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑌿 𑌵𑍍𑌯𑌦𑌾𑌰𑌯𑌤𑍍." (௫) "𑌡𑌾𑌕𑌿𑌨𑍍𑌯𑌶𑍍𑌚 𑌪𑌿𑌶𑌾𑌚𑌾𑌶𑍍𑌚 𑌅𑌸𑍁𑌰𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌃। 𑌨𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌘𑌣𑍍𑌟𑌾𑌘𑍋𑌷𑍇𑌣." (௬) "𑌘𑌣𑍍𑌟𑌾𑌨𑌾𑌦𑌾𑌧𑌿𑌪𑌾𑌵𑍇𑌦𑌾𑌃."

னின்றும்புறப்பட்டு எதிரேசென்று, "அத்யத்புதமாயிருப்பா ளொருபுத்ரனைத்தந்தோம் கைக்கொள்ளும்" என்று ஒருதிருமணி யை ப்ரஸாதிக்க, இவரும் (க) "லப்த்வாதநமிவாதந:" என்கிறபடி யே பூர்ண மநோரதராய் அத்தை வாங்கிக்கொண்டு தேவிகள் கையிற் கொடுக்க, அவளும்அத்தைவிழுங்கினதாக ஸ்வப்நம்கண்டு விடிவோரை இச்செய்தியை தேவிகளுக்கு அருளிச்செய்ய, அவளும் அப்படியே ஸ்வப்நம் கண்டதாக விண்ணப்பஞ்செய்ய, இருவரும் பூர்ணமநோரதர்களாய்த் தங்கள் அபிமதர்களோடே இவ்வாஶ்சர்யத்தைச் சொல்லிக்கொண் டிருக்கும்போது திரு வேங்கடமுடையான் திருவாராதந ஸமயத்தில் திருமணியாழ்வார் இல்லாமையாலே கோயிலதிகாரிக ளெல்லாருங்கூடி அர்ச்சகரிடத் தில் அதிஶங்கையாலே ஶிக்ஷைபண்ணுவதாக இருக்க, அந்தக்கூட் டத்தில் சிலர் அந்தத்தம்பதிகளுடைய ஸ்வப்நவ்ருத்தத்தைச் சொல்ல, அதிகாரிகளும் அதில் ப்ரத்யயங்கொள்ளாமலிருக்க, திரு மலைஜீயரும் அக்கூட்டத்தில் சடக்கெனவந்து தமக்கு இப்படித் திருமணியாழ்வாரைத் தம்பதிகளுக்குக்கொடுத்ததாக ஸ்வப்நம் காட்டினபடியைச் சொல்ல, அப்போதுஅந்தத்தம்பதிகளை அழைத் துக்கேட்க, அவர்களும் அப்படியே சொல்ல, எல்லாரும் ஆஶ்சர் யப்பட்டுத் திருவேங்கடமுடையான்திவ்யசேஷ்டிதத்தாலுண்டான தம்பதிகளுடைய பாக்யவிஶேஷத்தைக் கொண்டாடிக்கொண் டிருக்க, அநந்தாசார்யரும் தேவிகளுடனே திருவேங்கடமுடை யான் திருவடிதொழுது விடைகொண்டு பெருமாள்கோயிலேற எழுந்தருளினர்.

ஸ்ரீமத்வேதாந்ததேஶிகன் வைபவம்.

(உ) நபஸ்யமாஸிஶ்ரோணாயா மநந்தார்யகுரூத்பவம்।
ஸ்ரீவேங்கடேஶ கண்டாம்ஶம் வேதாந்தகுருமாஶ்ரயே.

பின்பு அந்த ஸ்வப்நதிநம்முதலாகத் தோதாரம்மனும் திரு வயிறுவாய்த்து நெடுங்காலம் கர்பத்தைத் தரித்துக்கொண்டிருந் தாள். பின்பு ப்ருஶ்நிகர்பரைப் போலவும் (ங) "அயம்குக்ஷௌஸ முத்பந்ந:ஶக்தேர்கர்பஸ்ஸநாதந: தஸ்யதே-ஸமாத்வாதஶதஸ்யேஹவே தாநப்யஸ்யதோகதா:" என்கிறபடியே பராஶரபகவானைப்போலவும்

(க) "லப்த்வா தநமிவாதந:" (உ) "நபஸ்யமாஸி ஶ்ரோணாயாமநந்தார்யகுரூத்பவம்। ஸ்ரீவேங்கடேஶகண்டாம்ஶம் வேதாந்தகுருமாஶ்ரயே." (ங) "அயம்குக்ஷௌஸமுத்பந்ந: ஶக்தேர்கர்பஸ்ஸநாதந: தஸ்யதே ஸமா த்வாதஶ தஸ்யேஹ வேதாநப்யஸ்யதோகதா:."

லோகவைலக்ஷண்யம் தோற்றும்படி பன்னிரண்டுவர்ஷம் கர்பதாரணம் பண்ணுவித்துக் கலியுகத்தில் - சஙஎக - ஆவதான ஶுக்ல வர்ஷத்தில் புரட்டாசி மாஸத்தில் ஶுக்லதஶமீ புதன்கிழமை கூடின திருவோணநக்ஷத்ரத்தில் விஶ்வாமித்ரகுலதிலகரான அநந்த ஸூரிகளுக்குத் தோதாரம்மனிடத்தில் திருவேங்கடமுடையான் தம் திருமணியாழ்வாரைக் குமாரராக அவதரிப்பித்தான்.

இவருடைய அவதாரத்தைக்குறித்து ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன் பெரியபெருமாள்முன்பே ப்ரமாணமாக அறுதியிட்ட ஸப்ததிரத்நமாலிகையிலும் தாம் அருளிச்செய்த ஸங்கல்பஸூர்யோதயத்திலும் ஆஸூரப்ரக்ருதிகளும் ஸத்வோந்மேஷமுண்டானபோது (க)"தம்மந்யேராகவம்வீரம் நாராயணமநாமயம்" என்கிற கணக்காய் பரோக்ஷப்ரஶம்ஸை பண்ணுகிற க்ரந்தங்களிலும் பரக்கக் கண்டுகொள்வது.

(உ)"பாத்ரபதமாஸகதவிஷ்ணுவிமலர்க்ஷேவேங்கடமஹீத்ரபதிதீர்த்தநக்ஷத்ரே- ப்ராதுரபவஜ்ஜகதிதைத்யரிபுகண்டா ஹந்தகவிதார்கிகம்ருகேந்த்ரகுருமூர்த்யா" என்று ஸப்ததிரத்நமாலிகையில் அண்ணன் அருளிச்செய்தார். (ரு) "வித்ராஸிநீ விபுதவைரிவரூதிநீநாம் பத்மாஸநேந பரிசார விதௌப்ரயுக்தா - உத்ப்ரேக்ஷ்யதே புதஜநைருபபத்திபூம்நா கண்டாஹரேஸ்ஸ மஜநிஷ்டயதாத்மநேதி" என்று தாமே ஸங்கல்பஸூர்யோதயத்தில் அருளிச்செய்தார். (ச)"கண்டாம்ஶ ஏவாகமயோகராரயோ நோசேத்ததுக்தம் நிகமாந்தபாவம் - மந்த்ரார்த்த மப்யத்ரவதந்தமேநம் கதம்ஸாங்கீபஹூமாநயேத தம்" என்று எறும்பி அப்பாவாலே ஒரு ஸமயத்தில் சொல்லப்பட்டது.

(க) "𑌤𑌂𑌮𑌨𑍍𑌯𑍇 𑌰𑌾𑌘𑌵𑌂 𑌵𑍀𑌰𑌂 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌮𑌨𑌾𑌮𑌯𑌮𑍍." (உ) "𑌭𑌾𑌦𑍍𑌰𑌪𑌦𑌮𑌾𑌸𑌗𑌤𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌵𑌿𑌮𑌲𑌰𑍍𑌕𑍍𑌷𑍇 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌮𑌹𑍀𑌧𑍍𑌰𑌪𑌤𑌿𑌤𑍀𑌰𑍍𑌥𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍇। 𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑌭𑌵𑌜𑍍𑌜𑌗𑌤𑌿 𑌦𑍈𑌤𑍍𑌯𑌰𑌿𑌪𑍁𑌘𑌣𑍍𑌟𑌾 𑌹𑌨𑍍𑌤 𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌮𑍃𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌗𑍁𑌰𑍁𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑌾." (ரு) "𑌵𑌿𑌦𑍍𑌰𑌾𑌸𑌿𑌨𑍀 𑌵𑌿𑌬𑍁𑌧𑌵𑍈𑌰𑌿𑌵𑌰𑍂𑌥𑌿𑌨𑍀𑌨𑌾𑌂 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑍇𑌨 𑌪𑌰𑌿𑌚𑌾𑌰𑌵𑌿𑌧𑍌 𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾। 𑌉𑌤𑍍𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 𑌬𑍁𑌧𑌜𑌨𑍈𑌰𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌭𑍂𑌮𑍍𑌨𑌾 𑌘𑌣𑍍𑌟𑌾 𑌹𑌰𑍇𑌸𑍍𑌸𑌮𑌜𑌨𑌿𑌷𑍍𑌟𑌯𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑍇𑌤𑌿." (ச) "𑌘𑌣𑍍𑌟𑌾𑌂𑌶 𑌏𑌵𑌾𑌗𑌮𑌯𑍋𑌰𑍍𑌗𑍁𑌰𑍂𑌣𑌾𑌂 𑌨𑍋𑌚𑍇𑌤𑍍𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌭𑌾𑌵𑌮𑍍। 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌮𑌪𑍍𑌯𑌤𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑌮𑍇𑌨𑌂 𑌕𑌥𑌂𑌸𑌾𑌙𑍍𑌗𑍀𑌬𑌹𑍁𑌮𑌾𑌨𑌯𑍇𑌤 𑌤𑌮𑍍."

பின்பு அப்படி அவதரித்த குமாரருக்கு அநந்தாசார்யரும் ஜாதகர்மம் செய்தருளிப் பத்துநாளும் கடந்த விரண்டாநாளைத் திசையுஞ் சபமரங்கோடித்துத் திருவேங்கட முடையானுடைய தீர்த்தோத்ஸவத்தில் அவதரிக்கையாலே "திருவேங்கடமுடையான்" என்று திருநாமம் சாத்தி அந்நப்ராஶநத்தையும் அப்த பூர்த்யுத்ஸவத்தையும் செய்தருளிப் பெருந்தேவியாரைமுன்னிட்டுப் பேருளாளரை ஸேவிக்கப் பண்ணுவிக்க, பேருளாளரும் "நம்மிராமாநுசனைப்போலே தர்ஶநப்ரவர்த்தக ராகக்கடவீர்" என்று அர்ச்சகமுகேந திருவாய்மலர்ந்தருளிக் குளிரக்கடாக்ஷித்துத் தீர்த்தம் முதலானவைகளை ப்ரஸாதித்தருளினர். இவ்வர்த்தத்தை "அன்றே அடைக்கலங்கொண்ட நம்மத்திகிரித்திருமால்" என்று தாமே அருளிச்செய்தார்.

அம்மாள் அப்பிள்ளார் தேஶிகன் வைபவங்கள்.

பின்பு த்ருதீய வர்ஷத்தில் சௌளத்தையும் பஞ்சமவர்ஷத்தில் அக்ஷராரம்பத்தையும் பண்ணுவித்து வாசிப்பித்துக் கொண்டிருக்கிற காலத்தில் அந்தத் தூப்புற்பிள்ளையும் ஒருநாள் தமக்கு மாதுலரான கிடாம்பி அப்பிள்ளாரோடே நடாதூரம்மாள் காலக்ஷேப கோஷ்டியிற்சென்று ஸேவித்து நிற்க, அம்மாளும் அவரைக் குளிரக்கடாக்ஷித்தருள, வடக்குத்திருவீதிப் பிள்ளையும் "அஞ்சுடர்போன்றிவரார்கொல்? என்ன" என்கிறபடியே அதிதேஜிஷ்டரான இவரைப்பார்த்து "இவர் ஆர்?" என்றுகேட்க, அங்குள்ளவர்களும் "அப்பிள்ளார் பாகிநேயரான தூப்புற்பிள்ளை" என்றருளிச்செய்து இவருடைய ஸ்வப்நக்ருத கண்டாதாநாஸ்வாதந* த்வாதஶவர்ஷகர்பதாரணாக்ஷராப்யாஸ பாடவாதிகளையும் பரக்க அருளிச்செய்ய, அம்மாளும் "காலக்ஷேபத்தில் விட்ட இடம் என்?" என்று முதலிகளைக் கேட்க, முதலிகளும் தூப்புற்பிள்ளை ப்ரபாவசிந்தநத்தால் விஸ்மிதர்களாய் விட்ட இடம் தெரியாமையாலே மௌநித்வத்தை அடைந்துநிற்க, அப்போது பாலரான தூப்புற்பிள்ளையும் "விட்டஇடம் இது அன்றோ?" என்று அப்போது நடந்த உபந்யாஸவாக்யத்தைப் பரக்க விண்ணப்பஞ்செய்ய, அம்மாளும் விஸ்மயப்பட்டு இவரை எடுத்தணைத்து உச்சிமோந்து போரஉகந்தருளி புலஸ்த்யபகவான் பராஶரரை அநுக்ஹித்தருளினாற்போலே(௧) "ப்ரதிஷ்டாபிதவேதாந்த: ப்ரதிக்ஷிப்த பஹிர்மத:-பூயாஸ்த்ரைவித்யமாந்யஸ்த்வம் பூரிகல்யாணபாஜநம்"

(௧) "ப்ரதிஷ்டாபிதவேதாந்த: ப்ரதிக்ஷிப்தபஹிர்மத:। பூயாஸ்த்ரைவித்யமாந்யஸ்த்வம் பூரிகல்யாணபாஜநம்."

என்று அநுக்ரஹித்தருளி, "இதுவும் ஓர் அவதாரவிஶேஷம்" என்றும், "உடையவர் நியமநப்படிக்கு ஸ்ரீபாஷ்யாதிகளை ஸத்பாத்ரத்தில் விநியோகிக்கும்படி பிள்ளான் நியமநம்" என்றும், "எங்களாழ்வான் அடியேனுக்கு நியமித்தருளினபடியாலே, அந்த ஸத்பாத்ரம் ஸ்வப்நகண்டா வ்ருத்தாந்தாதிகளாலே இந்தத் தூப்புற்பிள்ளையே என்று உடையவர் திருவுள்ளக்கருத்தாயிருக்கும்" என்றும், ஆகையாலே "இவரை ஶிக்ஷிக்கநான்பெற்றிலேனே!" என்றும் "நீரேஇவருக்குஆச்சான் வழியாய்வந்த திருமந்த்ர மந்த்ரார்த்தங்களையும் பிள்ளான்வழியாய்வந்த ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயங்களையும், உடையவர் திருவுள்ளமுகக்கும்படி ஸாமாந்யஶாஸ்த்ரங்களுடனே ப்ரஸாதியும்" என்றும்அருளிச்செய்து அப்பிள்ளார் திருக்கையில்கொடுத்தருளினர். ஆகையாலிறே தூப்புற்பிள்ளையும் க்ரந்தோபக்ரமத்தில் (க) "ஸ்ரீமத்ப்யாம்ஸ்யாதஸாவித்யநுபதி வரதாசார்ய ராமாநுஜாப்யாம் ஸம்யக்த்ருஷ்டேந" இத்யாதிகளை அருளிச்செய்தார்.

பின்பு, அம்மாளும் திருநாட்டுக்கெழுந்தருள அப்பிள்ளார் ஸௌதர்ஶநபட்டர் வடக்குத்திருவீதிப்பிள்ளைமுதலானமுதலிகளும் ஔரஸபுத்ரரான தேவராஜப்பெருமாளைக்கொண்டுசரமகைங்கர்யங்களையெல்லாம் பரக்கநடத்திப்போந்தார்கள். நடாதூரம்மாள் திருநக்ஷத்ரம், சித்திரைமாஸம் சித்திரை.

கிடாம்பிஅப்பிள்ளார் வேதாந்ததேஶிகன் வைபவங்கள்.

பின்பு தூப்புற்பிள்ளைக்கு உபநயநம்செய்தருளி அத்யயநம் பண்ணுவிக்கும்போது ஆளவந்தாருக்குப்போலே இவருக்கும் மேதையிருக்கும்படியைக்கண்டு அநந்தாசார்யரும் உகந்தருளி ஸாங்கமாகஅத்யயநத்தையும்பண்ணுவித்தருள(உ) "ஜடாவர்ணசர்சாத்யநேகப்ரகார த்ரயீலக்ஷணோச்சாரணேவ்யாஸகல்ப:- ததாகல்பஸூத்ரப்ரயோகாத்யபிஜ்ஞோ ஜயத்யந்வஹம் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர:" என்னும்படி தூப்புற்பிள்ளையும் வேதாத்யநாதிகளில் அதிநிபுணராய் எழுந்தருளியிருந்தார். பின்பு அப்பிள்ளாரும் தூப்புற்பிள்ளைக்கு ஶப்ததர்க்கமீமாம்ஸாதி ஸாமாந்யஶாஸ்த்ரங்களையும் அதிகரிப்பித்துத் திருமந்த்ர மந்த்ரார்த்தங்களையும் ஸ்ரீபாஷ்யபக

(க) "𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌾𑌦𑌵𑌿𑌦𑍍𑌯𑌨𑍁𑌪𑌤𑌿𑌵𑌰𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌰𑍁𑌷𑍍𑌟𑍇𑌨." (உ) "𑌜𑌟𑌾𑌵𑌰𑍍𑌣𑌚𑌰𑍍𑌚𑌾𑌦𑍍𑌯𑌨𑍇𑌕𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌤𑍍𑌰𑌯𑍀𑌲𑌕𑍍𑌷𑌣𑍋𑌚𑍍𑌚𑌾𑌰𑌣𑍇𑌵𑍍𑌯𑌾𑌸𑌕𑌲𑍍𑌪𑌃 𑌤𑌥𑌾𑌕𑌲𑍍𑌪𑌸𑍂𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌾𑌦𑍍𑌯𑌭𑌿𑌜𑍍𑌞𑍋 𑌜𑌯𑌤𑍍𑌯𑌨𑍍𑌵𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌃."

வத்விஷயங்களையும் ஸமஸ்தவிஶேஷார்த்தங்களோடே கூட ப்ரஸாதித்தருள (க)“ஜ்யோதிஶ்சந்தஶ்ஶப்தஶாஸ்த்ரப்ரவீண: காவ்யஶ்ரேணீரூபகாலங்க்ருதிஜ்ஞ: - மீமாம்ஸாயாம்ப்ரஹ்ம கர்மாநுகாயாம் ஸ்ரஷ்டாஸாக்ஷாத்ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர:॥ ஸாங்க்யேயோகே பாட்டதந்த்ரேகுருக்தே ஶைவேஜைநேஶாங்கரேபாஸ்கரேச- ஶாஸ்த்ரேபௌத்தேயாதவே கர்விதாநாம் ப்ரத்யாக்யாதாஸர்வதந்த்ரஸ்வதந்த்ர:॥ பரத்வாஜஶாண்டில்யஹாரீதமுக்ய ஸ்ம்ருதிஸ்தோமஸம்ரக்ஷணார்த்தநிர்ணீதிதக்ஷ: - புராணாகமாதிஷ்வஸாதாரணஶ்ரீ ஸ்ஸூக்தோபபாதிலோகேஷ்வநந்தார்யஸூரே:” என்றும்சொல்லுகிறபடியே ஶ்ருதி ஸ்மிருதீதிஹாஸபுராணாதி ஸாரதர்ஶியாய் ஸாமாந்யஶாஸ்த்ரத்திலும் அத்விதீயராய் விஶேஷஶாஸ்த்ரத்திலும் அத்யந்தஸமர்த்தராய் திருமந்த்ரார்த்தாதிகளில் நாதமுநிகள், ஆளவந்தார், உடையவர்,பிள்ளான், ஆச்சான்முதலான முன்னோர்களெல்லாரும் இவரிடத்தில் முக்யாதிஷ்டாநம் பண்ணினார்களென்னும்யடி அத்யந்த வைஶத்யமுடையவராய்(உ)“ஆசார்யத்வோபயுக்தா முநிகணகதிதாதேஶிகைஸ்ஸ்வேநசோக்தாஸ் ஸர்வேபத்ராகுணாஸ்ஸ்யுஸ்ஸமுதிதவிபவாஸ்ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரே-ஶிஷ்யத்வேசோபயுக்தா அபிசகுணகணா: கூரநாதேயதர்ஸ்யுர் நாந்யத்ராசார்யவர்கே கதிசநஹிகுணா:ப்ராயஶஸ்தத்ரத்ருஷ்டா:” என்னும்படி ஆத்மகுண

(க) “𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌶𑍍𑌛𑌨𑍍𑌦𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌵𑍀𑌣𑌃 𑌕𑌾𑌵𑍍𑌯𑌶𑍍𑌰𑍇𑌣𑍀𑌰𑍂𑌪𑌕𑌾𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌿𑌜𑍍𑌞𑌃। 𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌾𑌯𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌗𑌾𑌯𑌾𑌂 𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌃॥ 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑍇 𑌯𑍋𑌗𑍇 𑌭𑌾𑌟𑍍𑌟𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍇 𑌗𑍁𑌰𑍂𑌕𑍍𑌤𑍇 𑌶𑍈𑌵𑍇 𑌜𑍈𑌨𑍇 𑌶𑌾𑌙𑍍𑌕𑌰𑍇 𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑍇 𑌚 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌬𑍌𑌦𑍍𑌧𑍇 𑌯𑌾𑌦𑌵𑍇 𑌗𑌰𑍍𑌵𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌃॥ 𑌭𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌶𑌾𑌣𑍍𑌡𑌿𑌲𑍍𑌯𑌹𑌾𑌰𑍀𑌤𑌮𑍁𑌖𑍍𑌯𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑍍𑌤𑍋𑌮𑌸𑌂𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌥𑌨𑌿𑌰𑍍𑌣𑍀𑌤𑌿𑌦𑌕𑍍𑌷𑌃। 𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌗𑌮𑌾𑌦𑌿𑌷𑍍𑌵𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌶𑍍𑌰𑍀𑌸𑍍𑌵𑌸𑍂𑌕𑍍𑌤𑍋𑌪𑌪𑌾𑌦𑍀 𑌲𑍋𑌕𑍇𑌷𑍍𑌵𑌨𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌯𑌸𑍂𑌰𑍇𑌃॥”

(உ)“𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌤𑍍𑌵𑍋𑌪𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌮𑍁𑌨𑌿𑌗𑌣𑌕𑌥𑌿𑌤𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑍈𑌸𑍍𑌸𑍍𑌵𑍇𑌨𑌚𑍋𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌭𑌦𑍍𑌰𑌾 𑌗𑍁𑌣𑌾𑌸𑍍𑌸𑍍𑌯𑍁𑌸𑍍𑌸𑌮𑍁𑌦𑌿𑌤𑌵𑌿𑌭𑌵𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍇। 𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌚𑍋𑌪𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌅𑌪𑌿𑌚𑌗𑍁𑌣𑌗𑌣𑌾𑌃 𑌕𑍂𑌰𑌨𑌾𑌥𑍇𑌯𑌦𑌰𑍍𑌶𑍍𑌯𑍁𑌰𑍍 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌰𑍍𑌗𑍇 𑌕𑌤𑌿𑌚𑌨𑌹𑌿𑌗𑍁𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌃॥”

பரிபூர்த்திஉடையவராயிருக்கையாலே எல்லாரும் ஆசார்யவரணம் பண்ணும்படி அத்யந்தயோக்யராயும் எழுந்தருளியிருக்கக்கண்டு அப்பிள்ளாரும் தூப்புற்பிள்ளைக்கு வ்ரதஸமாவர்த்தநாதிகளையும் செய்துவைத்தருளி (க) "துல்யஶீலவயோவ்ருத்தாம்" என்கிறபடியே இருந்துள்ள திருமங்கையாரென்கிற கந்யகையை திருக்கல்யாணம் செய்துவைத்தருளினார். (உ) "விம்ஶத்யப்தேவிஶ்ருதநாநாவிதவித்ய:" என்றும் (ந) "தர்கேஷு கர்கஶதியோவயமேவநாந்யே காவ்யேஷு கோமலதியோவயமேவநாந்யே- தந்த்ரேஷு நிஶ்சிததியோவயமேவநாந்யே க்ருஷ்ணேநிவேஶிததியோவயமேவநாந்யே" என்றும் (ச) "பர்யாப்தம்பர்யசைஷம்கணசரணகதாமாக்ஷபாதம்ஸ்ரிபிக்ஷு மீமாம்ஸாமாம்ஸளாத்மாஸமஜநிஷிமுஹு:ஸ்ஸாங்க்யயோகௌஸமாக்யம்" என்றும்தாமே அருளிச்செய்தபடியே (ரு) "அநந்தஸூரிஸூநவே பிநந்த்யமாநவைபவாத்திகந்தவாதிஹம்ஸஜைத்ரகாலமேகதேஶிகாத்- உபாத்தஸர்வஶாஸநாயஹந்தவர்ஷவிம்ஶதௌபுந:புநர்நமஸ்க்ரியாஸ்து வேங்கடேஶஸூரயே" என்று அண்ணனும் அருளிச்செய்தார்.

பின்பு கிடாம்பி அப்பிள்ளாரும் தூப்புற்பிள்ளை ஸாமர்த்யத்தைக்கண்டு அத்தலைக்குரக்ஷையாயும், பரமதநிரஸநபூர்வகமாக ஸ்வமதஸ்தாபநஸாமர்த்யமபிவ்ருத்தமாகுகைக்காகவும், ஸ்ரீவைநதேயமந்த்ரத்தை உபதேஶித்தருளிச் சிலவிஶேஷார்த்தங்களையும்ப்ரஸாதித்து "ராமாநுஜஸித்தாந்தஸ்தாபகராகக்கடவீர்" என்றுகுளிரக்கடாக்ஷித்து அநுக்ரஹித்தருளினார். ஆகையாலிறே

(க) [illegible] (உ) [illegible]

(ந) [illegible]

(ச) [illegible]

(ரு) [illegible]

(க) "இதியதிராஜமஹாநஸபரிமளபரிவாஹவாஸிதாம்பிபத - விபுதபரிஷந்நிஷேவ்யாம் வேதாந்தோதயநஸம்ப்ரதாயஸுதாம்" என்றும் " யதிவானுர் மடைப்பள்ளிவந்த மணமெங்கள்வார்த்தையுள் மன்னியதே" என்றும்(உ) "யோமாஹாநஸிகோமஹாந் யதிபதேர்நீதப்ஸதத்பௌத்ரஜாநாசார்யாநிதிரங்கதுர்யமயிதேஸ்வல்பாவஸிஷ்டோபர:" என்றும் தாமே அருளிச்செய்தார். பின்பு பெருமாள் கோயிலில் எழுந்தருளியிருந்துகொண்டு ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டு (ங) "ஸஶங்கசக்ரலாஞ்சநஸ்ஸதூர்த்வபுண்ட்ரமண்டித: ஸகண்டலக்நஸத்துலஸ்யநர்கபத்மமாலிக:-ஸிதாந்தரீயஸூத்தரீயயஜ்ஞஸூத்ரஶோபித: மமாவிரஸ்துமாநஸேகுருஸ்ஸவேங்கடேஶ்வர:" என்னும்படி நித்யகர்மாநுஷ்டாநங்களோடே பகவத்பாகவதாசார்யகைங்கர்யங்களையும் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார்.

பின்பு அப்பிள்ளாரும் நோவுசாத்திக்கொண்டு தூப்புற்பிள்ளையை அழைத்து வாரீர்! " உம்மாலே ராமாநுஜஸித்தாந்தம் தழைக்கும்படி உடையவர் திருவுள்ளமென்று நம்அம்மாள் அருளிச்செய்தபடியால் அவ்வழியால் வந்த உடையவர் திருவடிநிலைகளையும் திருவாழிதிருச்சங்குகளையும் உமக்குத்தருகிறோம்" என்றுஅருளிச்செய்து அவைகளையும் ப்ரஸாதிக்க, தூப்புற்பிள்ளையும் மிக்கபசியன் இன்னடிசிலைப்பெற்றாற்போலே அவைகளைச்சிரஸாவஹித்துத்தம்திருவாராதநத்தில்வைத்து அப்பிள்ளார்திருவடிகளைத் தம்கண்ணிலொத்திக்கொண்டு ஶிரஸாவஹித்திருக்க, அப்பிள்ளாரும்போரஉகந்தருளி, பிள்ளைமுதலானவர்களுக்கும்தீர்த்தம் ப்ரஸாதித்துத் தாமும் ஆசார்யர்கள் திருவடிநிலை தீர்த்தங்கொண்டருளி திருநாட்டுக்கெழுந்தருள, தூப்புற்பிள்ளைமுதலானவர்களும்

(க) 'இதியதிராஜமஹாநஸபரிமளபரிவாஹவாஸிதாம்விபுத । விபுதபரிஷந்நிஷேவ்யாம் வேதாந்தோதயநஸம்ப்ரதாய ஸுதாம்.' (உ) "யோமாஹாநஸிகோமஹாந் யதிபதேர்நீதப்ஸதத்பௌத்ரஜாநாசார்யாநிதிரங்கதுர்யமயிதேஸ்வல்பாவஸிஷ்டோபர:.' (ங) "ஸஶங்கசக்ரலாஞ்சநஸ்ஸதூர்த்வபுண்ட்ரமண்டித: ஸகண்டலக்நஸத்துலஸ்யநர்கபத்மமாலிக:। ஸிதாந்தரீயஸூத்தரீயயஜ்ஞஸூத்ரஶோபித: மமாவிரஸ்துமாநஸே குருஸ்ஸவேங்கடேஶ்வர:."

ஔரஸபுத்ரரான பத்மநாபாசார்யரைக்கொண்டு சரமகைங்கர்யங்களையெல்லாம் நடத்திப்போந்தார்கள். அப்பிள்ளார் திருநக்ஷத்ரம், சித்திரைமாஸம் திருவாதிரை.

பின்பு தூப்புற்பிள்ளையும் "காசிமுதலாகியநன்னகரியெல்லாம் கார்மேனியருளாளர் கச்சிக்கொவ்வா" என்கிறபடியே ப்ரஸித்தமான பெருமாள்கோயிலிலே "மாசில்மனந்தெளிமுனிவர் வகுத்தவெல்லாம்மாலுகந்தவாசிரியர் வாக்குக்கொவ்வா" என்கிறபடியே ப்ரஸித்தமான ஆசார்யனருளிச்செய்த ஸம்ப்ரதாயார்த்தத்தைக்கொண்டு ஸித்தாந்த ப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்கிறகாலத்திலே, கலியுகத்தில் - சஙஅஅ - ஆவதான வ்யபவர்ஷம் புரட்டாசிமாஸம் திருவோணநக்ஷத்ரத்தில் அவதரித்தவரும், வீரவல்லிப்பெருமாள் திருவம்ஶஸ்தருமான வீரவல்லிப்போருளாளய்யன் தூப்புற்பிள்ளைத்திருவடிகளிலே ஆஶ்ரயித்து(க)நம:பதமிதம்பூயாத்தஸ்மை வேங்கடஸூரயே - யத்வாகம்ருதஸேகேந ஸஞ்ஜீவிதமிதம்ஜகத்" என்கிற தனியனையும் விண்ணப்பஞ்செய்தார். இவருடன் வீரவல்லி க்ருஷ்ணமாசாரியர் முதலாக சிலர் ஆஶ்ரயித்து ஶாஸ்த்ராப்யாஸம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

தேஶிகன் வைநதேயனை ப்ரத்யக்ஷீகரித்தல்.

பின்பு தமக்கு அப்பிள்ளார்ப்ரஸாதித்தருளின பெரியதிருவடிநயினார் விஷயமான மந்த்ரத்தை ஆவர்த்திசெய்து ஸித்திபெறவேணுமென்று திருவுள்ளமாய் அதுசெய்யும்போது அவருக்கும்உகப்பிடமான, அடியவர்க்குமெய்யனாகிய தெய்வநாயகன் நித்யவாஸம் பண்ணுகிற மதகரிமருப்பொடு மலைவளரகிலுந்தித்திரைகொணர்ந்தணைசெய் செழுநதிவயல்புகுதிருவயீந்திரபுரத்தேற எழுந்தருளுவதாய் ஸ்ரீமதுராந்தகத்தில் ஏரிகாத்தபெருமாளைத் திருவடிதொழுது திருமகிழ்மரத்தடியையும் ஸேவித்துத் திருவஹீந்திரபுரத்தில் எழுந்தருளி கருடநதியில் நித்யகைங்கர்யங்களையுஞ் செய்து செங்கமலநாச்சியாரைமுன்னிட்டுத் தெய்வநாயகனைத்திருவடிதொழுது தீர்த்தாதிகளையும் நியமநத்தையும் பெற்றுக்கொண்டு ஔஷதாத்ரிஶிகரத்தில் அழகியசிங்கர்ஸந்நிதியிலே ஸோமஸவநதுல்யமான ஓர்அஶ்வத்தவ்ருக்ஷத்தின் கீழே இருந்துகொண்டு நியத

(க) "நமஃபதமிதம் பூயாத் தஸ்மை வேங்கடஸூரயே । யத்வாகம்ருதஸேகேந ஸஞ்ஜீவிதமிதம் ஜகத் ॥"

ராய் ஸதாசார்யோபதிஷ்டமான ஸ்ரீவைநதேயமந்த்ரத்தை ஆவ்ருத்திபண்ணிக்கொண்டிருக்க, வேதஸ்வரூபரானபெரிய திருவடிநயினாரும் அத்யந்தம்ப்ரஸந்நராய் ஸ்ரீமந்நாதமுநிகளுக்கு நம்மாழ்வார் திருமந்த்ராதிகளை யோகதசையிலே உபதேசித்தருளினாற்போலே தூப்புற்பிள்ளைக்கும் ஸ்ரீமத்பகவத் ராமாநுஜஸித்தாந்த ஸம்ருத்த்யர்த்தமாக ஸ்ரீ ஹயக்ரீவமந்த்ரத்தை உபதேசித்தருள, தூப்புற்பிள்ளையும் அத்தைஅதிகரித்து (க)"நம:பந்நகநத்தாயவைகுண்டவஶவர்த்திநே-ஶ்ருதிஸிந்துஸுதோத்பாதமந்த்ராயகருத்மதே" என்றுபெரியதிருவடிநயினர் திருவடிதொழுது(உ)"தத்பாதபக்திஜ்ஞாநாப்யாம் பலமந்யத்கதாசந-நயாசேத்புருஷோ நித்யம் யாசநாந்நஶ்யதித்ருவம்" என்றும் "ஞானக்கைதா காலக்கழிவுசெய்யேலே" என்றும்(ங)"பரபக்திபரஜ்ஞாநபரமபக்தியுக்தம்மாம்குருஷ்வ" என்றும் சொல்லுகிறபடியே ஷோடஶவர்ண ஸுவர்ணத்தோடொக்கும் பரமைகாந்திக்கும் அவஶ்யாபேக்ஷிதங்களான ப்ரயோஜநங்களையுங்கோலாதேபகவந்முகோல்லாஸார்த்தமாக ஸ்ரீ ஹயக்ரீவமந்த்ரத்தைஆவ்ருத்திசெய்துகொண்டு (ச) "வ்யாக்யாமுத்ராம்கரஸரஸிஜை: புஸ்தகம்ஶங்கசக்ரே பிப்ரத்பிந்நஸ்படிகருசிரேபுண்டரீகேநிஷண்ண: - அம்லாநஸ்ரீரம்ருதவிஶதைரம்ஶுபி: ப்லாவயந்மாமாவிர்பூயா தநகமஹிமாமாநஸேவாகதீஶ:" என்றுஸ்ரீ ஹயக்ரீவத்யாநமும் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

தேஶிகன் ஸ்ரீஹயக்ரீவனை ப்ரத்யக்ஷீகரித்தல்.

அப்போது "பன்னுகலைநால்வேதப் பொருளையெல்லாம் பரிமுகமாயருளிய வெம்பரமன்காண்மின்" என்கிறபடியே ஸர்வ

(க) "[illegible]" (உ) "[illegible]" (ங) "[illegible]" (ச) "[illegible]"

வித்யாதிதைவதமான ஸ்ரீ ஹயக்ரீவரும்(க)"தபஸாஸ்மிஸம்ஹோஷித:" என்கிறபடியே அத்யந்தம்ப்ரஸந்நராய் இவர்முன்னேஎழுந்தருளி தம்முடைய லாலாமயமான அம்ருதத்தைப்ரஸாதித்தருளி அந்தர்த்தாநம்பண்ண, இவரும்அவ்வம்ருதபாநம்பண்ண, ஸ்ரீ ஹயக்ரீவகடாக்ஷவிஶேஷத்தாலே ஸகலவித்யைகளும் (உ)"இமேஸ்மபரமோதாரகிங்கராஸ்தவராகவ" என்கிறபடியே ஒருகூட்டமாய்வந்து நிற்க, (ந)"வித்யாஸமுதிதோதாரமஸ்ஸம்ஸம்பேபுவிவிக்ரம:" என்கிறபடியே அதிதேஜிஷ்டராய்(ச)"தத்ஸர்வம்தர்மவீர்யேணயதாவத்ஸம்ப்ரபஶ்யதி" என்கிறபடியே யதார்த்ததர்ஶியாய்(ரு)"குருராமகதாம்திவ்யாம்" என்கிறபடியே வேதாந்தஸ்தாபநம்பண்ணுமென்று நியமிக்கப்பட்டவராய்(சு)"ஏஷபந்தாமயோத்திஷ்டோயேநயாந்திமஹர்ஷய:" என்கிறபடியே "இதுவழியாமலவென்றறிவாரெங்கள் தேசிகர்" என்னும்படியே ஸந்மார்க்கதர்ஶியாயும் இருந்துள்ளதாப் புற்பிள்ளை ப்ரதமம் ஸ்ரீ ஹயக்ரீவஸ்தோத்ரத்தையும் செய்தருளிப் பின்பு இம்மந்த்ரோபதேஷ்டாவான பெரிய திருவடிநயினர் விஷயமாகக் கருடபஞ்சாஶத்தையும்செய்தருளி, செங்கமலநாச்சியாரையும் தெய்வநாயகனையும் திருவடிதொழ, அடியவர்க்குமெய்யனாகிய தெய்வநாயகனும் போரஉகந்தருளித் தீர்த்தம் முதலானவைகளை ப்ரஸாதித்து "நம்விஷயமாக ப்ரபந்தங்களைச் செய்யக்கடவீர்" என்று அருளிப்பாடிட்டருள, இவரும் (எ) "தந்நியோஸ்ம்யநுக்ரஹீதோஸ்மி" என்று நியமநத்தைச் சிரஸாவஹித்துத் தேவநாயகபஞ்சாஶத்தையும், ப்ராக்ருதபாஷையாலே அச்யுதஶதகத்தையும், செந்தமிழாலே மும்மணிக்கோவை, பந்துப்பா, கழற்பா, அம்மானைப்பா, ஊசல்பா, ஏசல்பா, நவரத்நமாலை ஆக ஒன்பது ப்ரபந்தங்களைச்செய்து முடிவிலேயும் "முந்தைமறை மொய்யவழி மொழிநீயென்று முகுந்தனருள் தந்தபயன்பெற்றேன் நானே" என்று பகவந்நியமநத்தைத் தலைக்கட்டினதே பலமாக அநுஸந்திக்க, தெய்வநாயகனும் செங்கமலநாச்சியாரும் கேட்டு உகந்தருளி,

---

(க) "தபஸாஸ்மிஸம்ஹோஷித:" (உ) "இமேஸ்மபரமோதாரகிங்கராஸ்தவராகவ." (ந) "வித்யாஸமுதிதோதாரமஸ்ஸம்ஸம்பேபுவிவிக்ரம:" (ச) "தத்ஸர்வம் தர்மவீர்யேண யதாவத்ஸம்ப்ரபஶ்யதி." (ரு) "குருராமகதாம் திவ்யாம்." (சு) "ஏஷபந்தாமயோத்திஷ்டோயேநயாந்திமஹர்ஷய:" (எ) "தந்நியோஸ்ம்யநுக்ரஹீதோஸ்மி."

“நம்மிருவர்ப்ராதாந்யத்தை இப்ப்ரபந்தங்களாலே வெளியிட்டவும க்குப்பாரிதோஷிகமாக ஸ்ரீசடகோபனைப்ரஸாதித்தோம்” என்று ப்ரஸாதித்தருள, இவரும் “பண்டைநாளாலேநின் திருவருளும்பங்க யத்தாள் திருவருளுங்கொண்ட அடியேனுக்கு இப்போது விசேஷ கடாக்ஷம் செய்தருளின திவ்யதம்பதிகளான தேவரீர்களுடைய திருவுள்ளத்து உகப்பைக்காட்டிலும் பரமபலமுண்டோ?” என்று விண்ணப்பஞ் செய்ய, அந்தத்திவ்யதம்பதிகளும் (க) “அத்ரைவ ஸ்ரீ ரங்கேஸுகமாஸ்வ” என்றுநியமித்தருள, தூப்புற்பிள்ளையும் அப்ப டியே ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்க, ஒருநாள் பர மதவிலாஸங்கள் தம்திருவுள்ளத்தில் தோன்ற, அத்தைப்பரிஹரிக் கும்படி பரமதபங்கத்தைச் செய்தருளினர்.

பின்பு ஒருநாள் அங்குள்ளசக்ரவர்த்தித்திருமகனைத் திருவடி தொழுது ரகுவீரகத்யத்தையும், ஸ்ரீகோபாலனைத் திருவடிதொ ழுது கோபாலவிம்சதியையும் அருளிச்செய்தார்.

பின்பு ஒருநாள்தெய்வநாயகன்நியமநம்பெற்றுத் திருக்கோவ லூரில் ஆயனாரைத்திருவடிதொழுது அவர் விஷயமாகத் தேஹளீ ஸ்துதியும் செய்தருளி “முத்திதருநகரேழில்முக்கியமாங்கச்சி” என்கிற பெருமாள்கோயிலேற எழுந்தருளித்திருவநந்தஸரஸ்ஸில் நீராடிஸேவாக்ரமமாகப்பெருந்தேவியாரைமுன்னிட்டுப் பேரருளா ளரைத்திருவடிதொழுது, அப்தபூர்த்தியில் ப்ரதமகடாக்ஷம் செய் தருளின க்ருதஜ்ஞதையைமுன்னிட்டு உடையவர் கத்யத்தில்அரு ளிச்செய்த ப்ரபந்நார்த்தத்தைத் தமக்குஅப்பிள்ளார் ப்ரஸாதித் தருளினபடியாலே அப்படியே அங்கபஞ்சகஸம்பந்நமாக ஆத்ம ரக்ஷாபரஸமர்ப்பணத்தைப் பேரருளாளன் திருவடிகளிலே செய் தருளி நிர்பரராயிருக்க, பேரருளாளரும் (உ) “மத்ஜ்ஞாநதர்சநப்ரா ப்திஷு நிஸ்ஸம்சயஸ்ஸுகமாஸ்வ” என்றும் “நம்முடையவிஷயமா கப்ரபந்தங்களைச்செய்யக்கடவீர்” என்றும்அர்ச்சகமுகேந அருளிச் செய்ய, தூப்புற்பிள்ளையும் “நாயன்தே நாயன்தே” என்றுபகவந்நிய மநத்தைச் சிரஸாவஹித்துத் தீர்த்தம்முதலானவைகளையும்பெற்று விடைகொண்டு ஆழ்வார்கள் திருவீதிப்ரதக்ஷிணமாக ஆழ்வாராசார் யர்கள் திருவடிதொழுது திருத்தண்காஎன்கிற ஹிமோபவநதிவ்ய தேசத்தில்தம்திருமாளிகையேற எழுந்தருளி அருகே இருந்து

(க) “𑌅𑌤𑍍𑌰𑍈𑌵 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑍇 𑌸𑍁𑌖𑌮𑌾𑌸𑍍𑌵.” (உ) “𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑌰𑍍𑌶𑌨𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌷𑍁 𑌨𑌿𑌸𑍍𑌸𑌂𑌶𑌯𑌸𑍍𑌸𑍁𑌖𑌮𑌾𑌸𑍍𑌵.”

ள்ள விளக்கொளி எம்பெருமானைத் திருவடிதொழுது நித்யமாக பகவத்பாகவதாசார்ய கைங்கர்யங்களையும் ஸித்தாந்தப்ரவசநத்தையும்பண்ணிக்கொண்டுபேரருளாளன் திருவடிகளிலேதாம்பண்ணின பரஸமர்ப்பணப்ரகாரத்தை விவரிக்கிற ந்யாஸதஶகத்தையும், அப்படி பரஸ்வீகாரம்பண்ணினபேரருளாளன்விஷயமாக வரதராஜபஞ்சாஶத்தையும்,செந்தமிழாலே அடைக்கலப்பத்து,அர்த்தபஞ்சகம், ஸ்ரீவைஷ்ணவதிநசர்யை, திருச்சின்னமாலை, பன்னிருநாமம் என்கிற ஐந்து ப்ரபந்தங்களையும் செய்தருளி, முடிவிலும் "தித்திக்குமெங்கள் திருவத்தியூரரைச் சேர்பவர்க்கே" என்றுஅருளிச்செய்து இப்படித்தன்னை ஆட்படுத்தி உலகத்தைத்திருத்தும்படிசெய்து வைத்த அந்தக்ஷேத்ரத்தினுடைய வைபவத்தை ஸங்க்ரஹித்து ஹஸ்திகிரிமாஹாத்ம்யம் என்கிற க்ரந்தத்தையும்செய்தருளி, இப்படிக்கு அருகேஇருந்துகடாக்ஷித்தருளின விளக்கொளிஎம்பெருமான்விஷயமாக ஶரணாகதிதீபிகையையும், அஷ்டபுஜாஷ்டகத்தையும், யதோக்தகாரிஸ்தோத்ரத்தையும், காமாஸிகாஷ்டகத்தையும், செய்தருளி, அங்குள்ள வெஃகாமுதலான எம்பெருமான்களையும் திருவடிதொழுது, திருப்புட்குழியிலும் மரதகவல்லியாரை முன்னிட்டுவிஜயராகவனைத்திருவடிதொழுது,அவர்விஷயமாகப்பரமார்த்தஸ்துதியையும் செய்தருளி, தம்திருமாளிகையேற எழுந்தருளி, ஸுதர்ஶநாஷ்டகத்தையும், ஷோடஶாயுதஸ்துதியையும், அருளிச்செய்து, "உத்தமவமர்த்தலம்" என்கிற பாட்டின்படியே சக்ரவர்த்தித் திருமகனும்,கண்ணனும், இவருடைய அவதாரமே என்று சொல்லப்பட்ட பேரருளாளர் விஷயத்தில் (க)" ஸம்ஸாராவர்த்தவேகப்ரஶமநஶுபத்ருக் தேஶிகப்ரேக்ஷிதோஹம் ஸந்த்யக்தோந்யைருபாயை ரநுசிதசரிதேஷ்வத்யஶாந்தாபிஸந்தி: - நிஶ்ஶங்கஸ்தத்த்வத்ருஷ்ட்யாநிரவதிகதயம் ப்ராப்யஸம்ரக்ஷகந்த்வாம் ந்யஸ்யத்வத்பாதபத்மே வரதநிஜபரம் நிர்பரோ நிர்பயோஸ்மி" என்று அநுஸந்தித்துக்கொண்டு எழுந்தருளியிருக்குங்காலத்தில்,

---

(க) "संसारावर्तवेगप्रशमनशुभदृग्देशिकप्रेक्षितोऽहं संत्यक्तोऽन्यैरुपायैरनुचितचरितेष्वद्य शान्ताभिसन्धिः । निःशङ्कस्तत्त्वदृष्ट्या निरवधिकदयं प्राप्यसंरक्षकं त्वां न्यस्य त्वत्पादपद्मे वरद निजभरं निर्भरो निर्भयोऽस्मि."

தேசிகன் ஸ்ரீஹயக்ரீவ திவ்யமங்களவிக்ரஹம் பெறுதல்.

தமக்கு மாதுலராயும் ஆசார்யராயும் இருந்துள்ள கிடாம்பி அப்பிள்ளார் திருமகளாரான புண்டரீகாக்ஷர்தேவிகளுக்குக் கலியுகத்தில்-சசOரு-ஆவதான ஸோபக்ருத்வர்ஷம் புரட்டாஸிமாஸம் திருவோணநக்ஷத்ரத்தில்ஒரு குமாரருண்டாக அவருக்கு ஸ்ரீநிவாஸனென்கிறதிருநாமம் சாற்றி ரக்ஷார்த்தமாகத் திருவிலச்சினையும் ப்ரஸாதித்தருள, இந்தப்புத்ரோத்ஸவஸந்தோஷத்தை வடதேசத்தில் ஸிஷ்யனான ஸ்ரீக்ருஷ்ணராயனுடைய நகரத்தில் எழுந்தருளியிருக்கிற புண்டரீகாக்ஷரும் கேட்டருளி பெருமாள்கோயிலேற எழுந்தருளும்போது அன்றுராத்ரியில் ஸ்ரீபாஷ்யகாரராலே ப்ரஸாதிக்கப்பட்டுத்தம்கூடஸ்தரான பிள்ளான் ஆராதித்துவந்த ஸ்ரீஹயக்ரீவரும் "உம்முடையபுத்ரருக்கு ஸ்ரீநிவாஸனென்கிறதிருநாமத்தையும் ரக்ஷார்த்தமாகத் திருவிலச்சினையும் ப்ரஸாதித்தருளின தூப்புற்பிள்ளைக்கையில் நம்மை எழுந்தருளப்பண்ணிக்கொடுக்கக் கடவீர்" என்றுஸ்வப்நம்காட்டியருள, புண்டரீகாக்ஷரும் விடிவோரை இவ்வர்த்தத்தைராயனுக்கு அறிவிக்க, ராயனும் ஸமஸ்தபிருதுகளோடேபெருமாள்கோயிலேற எழுந்தருளப்பண்ணிவைக்க, பெருமாள்கோயிலிலும் ராயகுருஆகையாலே ஸமஸ்த ஸ்ரீகார்யதுரந்தரரானபுண்டரீகாக்ஷருக்குக்கோயிலில்அநந்தகொத்துபரிஜநங்களும் எதிர்கொண்டுபோக, தூப்புற்பிள்ளையும் தமக்கும் அப்படியேஸ்வப்நம்காட்டினபடியாலே இவர்களோடே எதிர்கொள்ள, புண்டரீகாக்ஷரும் தூப்புற்பிள்ளையைக்கண்டு தண்டன்ஸமர்ப்பித்துஸ்வப்நவ்ருத்தாந்தத்தையும் விண்ணப்பஞ்செய்து ஸ்ரீஹயக்ரீவரையும் எழுந்தருளப்பண்ணிக்கொடுக்க, தூப்புற்பிள்ளையும்(க) "லப்த்வாகுலதநம்ராஜா லங்காம்ப்ராயாத்விபீஷண:" என்கிறபடியே தமக்கும் ஸ்வப்நம்காட்டினதுபலித்ததென்றுமகிழ்ந்துகொண்டு "அப்போது தேவரீர்ப்ரத்யக்ஷமாகலாலாமயமான அம்ருதத்தைப்ரஸாதித்தது இப்போது இருவருக்கும் ஸ்வப்நம்காட்டியருளி திவ்யமங்களவிக்ரஹரூபேண எழுந்தருளித்து" என்று விண்ணப்பஞ்செய்து(உ) "ப்ரஹ்மாத்யாஸ்ஸகலாதேவாயம்நஸ்மர்துமபீஶ்வரா:-ஸஏஷபகவாநத்யமாந்தாரயிதுமாகத:" என்றநுஸந்தித்து ஸ்ரீஹயக்ரீவஸ்தோத்ர

(க) "லப்த்வா குலதநம் ராஜா லங்காம் ப்ராயாத் விபீஷண:." (உ) "ப்ரஹ்மாத்யாஸ் ஸகலா தேவா யம் ந ஸ்மர்துமபீஶ்வரா: । ஸ ஏஷ பகவாநத்ய மாம் தாரயிதுமாகத:."

த்தாலே திருவடிதொழுது தமக்குக் குலக்ரமாகதாராதநமானப் பேருளாளனோடேஸ்வப்நலப்தரான ஸ்ரீஹயக்ரீவரையும்நித்யமாக ஆராதித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

பின்பு ஒருநாள் திருமலையாத்ரையாகப் பெருங்கூட்டங்கள் போகக்கண்டுதூப்புற்பிள்ளையும் "கோனேரிவாழுங்குருகாய்ப்பிறப்பேனே" என்று ஆசைப்படும்படியையும்ஸ்வப்நகண்டாவ்ருத்தாந்தத்தாலே தம்முடைய அவதாரத்திற்கு முக்யஹேதுவாயும் இருந்துள்ள திருவேங்கடமுடையானைத் திருவடிதொழுதுவர த்வரித்து கடிகாசலத்தில் அக்காரக்கனிஅழகியசிங்கரைத் திருவடிதொழுது தீர்த்தம் முதலானவைகளைப்பெற்று ஸ்வர்ணமுகீநதியில் நீராடி திருச்சுகனூரில் அலர்மேல்மங்கையையும் திருவடிதொழுது திருமலைஅடிவாரத்திலேஉடையவராலே திருப்ரதிஷ்டைசெய்யப்பட்ட ஆழ்வாராசார்யர்களையும்ஸ்ரீகோவிந்தராஜனையும் திருவடிதொழுது (க)"ப்ரபத்யே தம்கிரிம்ப்ராயஸ்ரீநிவாஸாநுகம்பயா-இக்ஷுஸாரஸ்ரவந்த்யேவயந்மூர்த்யாஶர்கராயிதம்" என்கிறதனாலும் கண்ணனடியிணையெமக்குக் காட்டும்வெற்பு" என்கிறபாட்டாலும் திருமலையை ஸேவித்துத் திருமலையேறி வழியிலெம்பெருமானாரைத் திருவடிதொழுது திவ்யநகரத்தையும் திருக்கோபுரநயினாரையும் திவ்ய விமாநத்தையும் ஸேவித்துத் திருவீதிப்ரதக்ஷிணமாக எழுந்தருளி ஸ்வாமிபுஷ்கரிணியில்நீராடி(உ)"ரவிஸத்ருஶதநுஸ்ரீவேங்கடாசார்யபாத: கரகலிதபவித்ரஸ்ஸோத்தரீயஸ்வபாவ:- ஸரஸிஜமணிமாலாமூர்த்தபுண்ட்ராங்கதாநோ மமமநஸிவிபாதேஸந்ததம் ஸந்நிதத்தாம்" என்கிறபடியே வடிவழகையுடையராய் ஞாநப்பிரானைத்திருவடிதொழுது ப்ரதக்ஷிணமாகக் கோயிலிலேஎழுந்தருளி(ங)"ப்ரதக்ஷிணப்ரணாமம்ச யுக்மமேவஸமாசரேத்" என்கிறபடியே யுக்மமாயிருக்கும்படி தண்டன்ஸமர்ப்பித்துலக்ஷ்ம்யம்ஶமானசம்பகவ்ருக்ஷம் முதலானவைகளை ஸேவித்துக்கொண்டு ஸ்வாமிபுஷ்கரிணீ

(க) "𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 𑌤𑌂 𑌗𑌿𑌰𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌾𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌯𑌾। 𑌇𑌕𑍍𑌷𑍁𑌸𑌾𑌰𑌸𑍍𑌰𑌵𑌨𑍍𑌤𑍀𑌵 𑌯𑌨𑍍𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑌾 𑌶𑌰𑍍𑌕𑌰𑌾𑌯𑌿𑌤𑌮𑍍." (உ) "𑌰𑌵𑌿𑌸𑌦𑍃𑌶𑌤𑌨𑍁𑌶𑍍𑌰𑍀𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌪𑌾𑌦𑌃 𑌕𑌰𑌕𑌲𑌿𑌤𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌃 𑌸𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌃। 𑌸𑌰𑌸𑌿𑌜𑌮𑌣𑌿𑌮𑌾𑌲𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌤𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌾𑌙𑍍𑌕𑌦𑌾𑌨𑍋 𑌮𑌮 𑌮𑌨𑌸𑌿 𑌵𑌿𑌭𑌾𑌤𑍇 𑌸𑌨𑍍𑌤𑌤𑌂 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌤𑍍𑌤𑌾𑌂." (ங) "𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌪𑍍𑌰𑌣𑌾𑌮𑌂 𑌚 𑌯𑍁𑌗𑍍𑌮𑌮𑍇𑌵 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍."

ப்ரதக்ஷிணமாகஉள்ளேஎழுந்தருளி அங்குஸேவாக்ரமமாக(க)"பஶ்யேமலக்ஷ்மணமுநே:ப்ரதிபந்நஹஸ்தா முந்நித்ரபத்மஸத்ருஶகாமுபதேஶமுத்ராம்" என்று எம்பெருமானரைத் திருவடிதொழுது உள்ளேபுகுந்து "படியாய்க்கிடந்துன் பவளவாய்காண்பேனே" என்கிற குலசேகரன்படி அருகேநின்று "அகலகில்லேனிறையுமென்றலர்மேன்மங்கையுறைமார்பா" என்கிறபாட்டை அநுஸந்தித்துத் திருவடிதொழுது திவ்யமங்களவிக்ரஹத்தையும் திவ்யமஹிஷீபூஷணாயுதங்களையும் ஸேவித்துத் திவ்யகல்யாணகுணங்களை அநுஸந்தித்துநிற்க, திருவேங்கடமுடையானும் போரவுகந்தருளி தீர்த்தம்முதலானவைகளைப்ரஸாதித்து "நம்விஷயமாகஸ்தோத்ரத்தைச் செய்யும்" என்றுஅர்ச்சகமுகேந அருளிச்செய்ய, தூப்புற்பிள்ளையும் "நாயன்தீ" என்று நியமநத்தைச் சிரஸாவஹித்து இப்படிஏழையரிடத்தில் இரக்கம்செய்தருளின தயாகுணவிஷயமாக ஒருஶதகத்தை விண்ணப்பஞ்செய்யக் கோலி அதில் ப்ரதம தஶகத்தில் மோக்ஷப்ரதத்வத்தையும், த்விதீய தஶகத்தில்ஸர்வஜ்ஞத்வாதிகளையும், த்ருதீயதஶகத்தில் விரோதிநிவர்த்தகத்வத்தையும், சதுர்த்த தஶகத்தில் ப்ராபகத்வத்தையும், பஞ்சமதஶகத்தில் ப்ராப்யத்வத்தையும், ஷஷ்டதஶகத்தில் பகவத்ப்ராப்திக்கு ப்ரபத்தியொழிய உபாயாந்தரஶூந்யத்வத்தையும் அறுதி இட்டு, ஸப்தமதஶகத்தில் ஸௌஶீல்யகுணவஶ்யராய், அஷ்டமதஶகத்தில் அவன்பரத்வத்தை அநுஸந்தித்து, நவமதஶகத்தில் அவன் அவதாரக்ரமத்தையும் அநுஸந்தித்து, தஶமதஶகத்தில் அபேக்ஷிதப்ராப்தியையும் ப்ரதிபாதித்து,ஆக இந்த ஶதகத்தைஶரணாகதிமந்த்ரமான த்வயத்திற்கு விவரணரூபமாகத் தலைக்கட்டினார். இத்தைக்கேட்டருளின திருவேங்கடமுடையானும் தாம்செய்தக்ருஷிபலித்ததென்று போரவுகந்து குளிரக்கடாக்ஷித்தருள, தூப்புற்பிள்ளையும் க்ருதார்த்தராய் அங்குள்ளவர்களுக்கும் விஶேஷார்த்தங்களை ப்ரஸாதித்துக் கொண்டுசிலநாள்எழுந்தருளியிருந்து (உ)"ப்ரஶமிதகலிதோஷாம் ப்ராஜ்யபோகாநுபந்தாம் ஸமுசிதகுணஜாதாம் ஸம்யகாசாரயுக்தாம் - ஸ்ரீதஜநபஹுமாந்யாம் ஶ்ரேயஸீம் வேங்கடாத்ரௌ

(க) "பஶ்யேம லக்ஷ்மண முநே: ப்ரதிபந்ந ஹஸ்தாம் உந்நித்ர பத்ம ஸத்ருஶாம் உபதேஶ முத்ராம்." (உ) "ப்ரஶமித கலி தோஷாம் ப்ராஜ்ய போகாநுபந்தாம் ஸமுசித குண ஜாதாம் ஸம்யகாசார யுக்தாம். ஸ்ரீதஜந பஹுமாந்யாம் ஶ்ரேயஸீம் வேங்கடாத்ரௌ

(க) "ஸ்ரீயமுபசிநுநித்யம்ஸ்ரீநிவாஸத்வமேவ" என்கிற ஶ்லோகத்தாலே இச்செல்வம் நித்யமாகச்செல்லவேணுமென்றுப்ரபத்திரூபமான மங்களாஶாஸநம் செய்தருளினர்.

பின்பு தூப்புற்பிள்ளையும் வடமதுரைமுதலாகத்திவ்யதேஶங்களில் எம்பெருமான்களைத்திருவடிதொழுது அங்குள்ளார்களைத் திருத்தி அவர்களுக்கும் ஸம்ப்ரதாயார்த்தங்களையெல்லாம் ப்ரஸாதித்துக்கொண்டு, ஒருநாள் மார்க்கவஶமாகத் துங்கபத்ரைக்கரையில் ஒருநகரஸமீபத்தில் ஒருபகவத்ஸந்நிதியில்எழுந்தருளியிருக்க, அப்போது பால்யமேதொடங்கி ஸஹபாடியான வித்யாரண்யனும் வைராக்யத்தாலேஸந்யஸித்துக்கங்காயாத்ரைபண்ணுவதாகவந்து தூப்புற்பிள்ளையைக்கண்டு ஸல்லாபாதிகளைப் பண்ணிக்கொண்டிருக்க, அப்போது அந்தராஜாவின்பெண்ணை ப்ரஹ்மரக்ஷஸ்ஸு பிடித்து ஒருவராலும் போகாமல் இருக்க, ராஜாவும் "இப்படியோக்யர்கள் இருவர்வந்திருக்கிறர்கள்" என்று கேட்டு அங்கேறப்போய் ஸேவித்து "இந்தப்ரஹ்மரக்ஷஸ்ஸைப்போக்கவேணும்" என்று ப்ரார்த்திக்க, தூப்புற்பிள்ளையும் அநபிமுகராயிருக்க, வித்யாரண்யனும் 'ராஜாவைக்கடாக்ஷித்தருளவேணும்" என்ன, தூப்புற்பிள்ளையும் "அப்படிசெய்வதில்லை" என்றருளிச்செய்து, ப்ருந்தாவநம்முதலான திவ்யதேஶங்களில்எம்பெருமான்கள் திருவடிதொழுது, திருவயோத்யைவழியாய்க்காஶியில் எழுந்தருளி, கங்கையில்நீராடி, (உ) "இஹபுருஷமஜாநதாம்புராணம் நியதிவஶேநநிமீலதாம்தயாளு:- உபதிஶதிபதிஸ்ஸ்வயம் பஶூநா முபநிஷதாமபிதூரகம் ரஹஸ்யம்" என்று அநுஸந்தித்து, புருஷோத்தமம் ஸ்ரீகூர்மம் முதலான எம்பெருமான்களையும் ஸேவித்து, அஹோபிலத்தில்ஸ்ரீ அழகியசிங்கரையும் திருவடிதொழுது, திருமலையில்திருவேங்கடமுடையானையும்திருவெவ்வளூரில்ஸ்ரீவீரராகவனையும்திருவடிதொழுது, திருநின்றவூர், திருவல்லிக்கேணி, திருக்கடன்மல்லை முதலான திவ்யதேஶங்களில்எம்பெருமான்களைத்திருவடிதொழுது, ஸ்ரீபெரும்பூதூர் ஏற எழுந்தருளி, (௩) "வந்தேதம்யமிநாம்துரந்தரமஹம்மாநாந்த

(க) "ஶ்ரிய: ... ஸ்ரீநிவாஸத்வமேவ." (உ) "இஹ ... [illegible] ... ரஹஸ்யம்." (௩) "வந்தே ... [illegible]

(க) காரத்ருஹா பந்தாநம்பரிபந்திநாம் நிஜத்ருஶாருந்தாநமிந்தாநயா-தத்தம்பேநதயாஸாந்தாம்புநிதிநாபீத்வாவிஶாத்தம்பய: காலேந: கரிஶைலக்ருஷ்ணஜலத: காங்க்ஷாதிகம்வர்ஷதி" என்று எம்பெருமானைத் திருவடிதொழ, எம்பெருமானும்போர உகந்தருளி தீர்த்தம்முதலானவைகளைப்ரஸாதித்து "நம்அபிமதத்தைநிறைவேற்றக்கடவீர்" என்று அர்ச்சகமுகேந அருளிச்செய்ய, தூப்புற்பிள்ளையும் "ஆரணநூல்வழிச்செவ்வை யழித்திடுமைதுகர்க்கோர், வாரணமாயவர்வாதக்கதலிகள் மாய்த்தபிரான், ஏரணி கீர்த்தியிராமாநுசமுனிஇன்னுரைசேர், சீரணிசிந்தையினோஞ்சிந்தியோமினித்தீவினையே" என்றும் (உ) "ஶ்வஸிதாவதூத பரவாதிவைபவாநிகமாந்தநீதிஜலதேஸ்தலஸ்ப்ருஶ: - ப்ரதிபாதயந்தி கதிமாபவர்கிகீம் யதிஸார்வபௌமபதஸாத்க்ருதாஶயா:॥ த்வயா தர்ஶிதஸர்வார்தே த்வந்நிதேஶேவ்யவஸ்திதே- கதம்கதகமாநீஸ்யாத்கஶ்சிதந்யோமயிஸ்திதே" என்றும்விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானும் திருவுள்ள முகந்து குளிரக் கடாக்ஷித்தருளி விடைகொடுக்க, தூப்புற்பிள்ளையும் "காசிமுதலாகிய நன்னகரியெல்லாம் கார்மெனியருளாளர் கச்சிக்கொவ்வா" என்று அருளிச்செய்து பெருமாள்கோயிலில்ஸித்தாந்தப்ரவசநம்பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

அப்போது ஒருமாயிஸந்ந்யாஸி ப்ரபலனாய்வந்து வாதம்பண்ண, அவனைஜயிக்க, அவனும் க்ஷுத்ரமந்த்ரவாதியாகையாலே குளத்திலே முழுகித்தண்ணீரைக்குடிக்க, பிள்ளை திருவயிற்றில் உபாதியுண்டாக, பிள்ளையும் அதுக்ஷுத்ரமென்று அறிந்து, ஒருஸ்தம்பத்தைக்கீற, அதினின்றும்அவன்குடித்ததண்ணீரெல்லாம்பெருக, ஸந்ந்யாஸியும் அத்தை அறிந்து பிள்ளை திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்துப்போனான்.

(க) [illegible] (உ) [illegible]

பின்பு வித்யாரண்யன் அந்தராஜபுத்ரியைப் பிடித்த ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸைப்போக்கி விஜயநகரத்தையும்உண்டாக்கி அதில்ராஜவல்லபனுயிருக்கையாலே தூப்புற்பிள்ளை உபாதாநவ்ருத்திசெய்கிறார் என்றுகேட்டு, "உம்மை ராஜாவிடத்தில் அறிவித்து உமக்குராஜாவையும் பவ்யனாகும்படிபண்ணுகிறேன் இப்படிஶ்ரமப்படவேண்டுவதில்லை" என்று ஒருபத்ரிகையை அனுப்பிக்க, பிள்ளையும் அத்தைப்பார்த்தருளி, (க) "க்ஷோணீகோணஶதாம்ஶபாலநகலா துர்வாரகர்வாநல க்ஷுப்யத்க்ஷுத்ரநரேந்த்ரசாடுரசநா தந்யாந்நமந்யாமஹே - தேவம்ஸேவிதுமேவநிஶ்சிநுமஹே யோஸௌ தயாளு: புரா தாநாமுஷ்டிமுசேகுசேலமுநயே தத்தேஸ்மவித்தேஶதாம்" என்றுஒருஶ்லோகத்தைஅனுப்பியருள, வித்யாரண்யனும்அத்தை வாசித்துப்பிள்ளைவைராக்யத்தைக்கொலைக்கவேணுமென்றுபின்பு சிலநாள்கழிந்தவாறேமுன்புபோலேஒருபத்ரிகைஅனுப்பிக்க, பிள்ளையும்அதற்குஉத்தரமாக (உ) "ஶிலம்கிமநலம்பவேதநலமௌதரம் பாதிதும்பய:ப்ரஸ்ருதிபூரகம்கிமுநதாரகம்ஸாரஸம் அயத்நமலமல்ல கம்பதிபடச்சரம் கச்சரம்பஜந்திவிபுதாமுதாஹ்யஹஹகுக்ஷித:குக்ஷித: ||க|| ஜ்வலதுஜலதிக்ரோடக்ரீடத்க்ரிபீடபவப்ரபாபடுதரமஹா வாலாமாலாகுலோஜடராநல:- த்ருணமபிவயம்ஸாயம்ஸம்புல்லமல்லி மதல்லிகாபரிமளமுசாவாசாயாசாமஹேநமஹீஶ்வராந் ||உ|| தூரீஶ்வரத்வாரமஹிர்விதர்திகாதுராஸிகாயைரசிதோயமஞ்ஜலி:- ததஞ்ஜநாபம்நிரபாயமஸ்திமே தநஞ்ஜயஸ்யந்தநபூஷணம்தநம் ||௩|| ஶரீர

(க) "க்ஷோணீகோணஶதாம்ஶ பாலநகலா துர்வாரகர்வாநல க்ஷுப்யத்க்ஷுத்ரநரேந்த்ரசாடுரசநா தந்யாந்நமந்யாமஹே। தேவம்ஸேவிதுமேவநிஶ்சிநுமஹே யோஸௌ தயாளு: புரா தாநாமுஷ்டிமுசே குசேலமுநயே தத்தேஸ்ம வித்தேஶதாம்." (உ) "ஶிலம்கிமநலம்பவேதநலமௌதரம்பாதிதும் பய:ப்ரஸ்ருதிபூரகம் கிமுநதாரகம்ஸாரஸம்। அயத்நமலமல்லகம் பதிபடச்சரம் கச்சரம் பஜந்திவிபுதாமுதாஹ்யஹஹகுக்ஷித:குக்ஷித: ॥ க ॥ ஜ்வலதுஜலதிக்ரோடக்ரீடத்க்ருபீடபவப்ரபாப்ரதிபடபடுஜ்வாலாமாலாகுலோஜடராநல:। த்ருணமபிவயம்ஸாயம்ஸம்புல்லமல்லிமதல்லிகாபரிமளமுசாவாசாயாசாமஹேநமஹீஶ்வராந் ॥ உ ॥ துரீஶ்வரத்வாரபஹிர்விதர்திகாதுராஸிகாயைரசிதோயமஞ்ஜலி:। யதஞ்ஜநாபம் நிரபாயமஸ்திமே தநஞ்ஜயஸ்யந்தநபூஷணம் தநம் ॥ ௩ ॥ ஶரீர

பதநாவதிப்ரபுநிஷேவணோபாத்தநாத பிந்தநதநஞ்ஜயப்ரஶமதம் தநம் தந்தநம்-தநஞ்ஜயவிவர்தநம்தநமுதூடகோவர்தநம்| ஸுஸாதநமபாதநம்ஸுமநஸாம்ஸமாராதநம் ॥ஶ்ரீ॥ நாஸ்திபித்ரார்ஜிதம்கிஞ்சிந்நமயாகிஞ்சிதார்ஜிதம்–அஸ்திமேஹஸ்திஶைலாக்ரே வஸ்துபைதாமஹம்தநம்" என்று வைராக்யபஞ்சகஶ்லோகங்களைச் செய்தருளி அனுப்பியருள, வித்யாரண்யனும்தூப்புற்பிள்ளை திருவடிகளிலே ப்ரவணனாயிருந்தான்.

தேசிகன் அருளிச்செய்த ஸ்ரீஸ்துதி ப்ரபாவம்.

அப்போது அஸூயாளுக்களாலே ப்ரேரிதனானஒருப்ரஹ்மசாரி விவாஹார்த்தமாகத் தநத்தை ப்ரஸாதித்தருளவேணுமென்று தூப்புற்பிள்ளைத் திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து ப்ரார்த்திக்க, தூப்புற்பிள்ளையும் ஸ்ரீஸ்துதியாலே பிராட்டியை ப்ரார்த்திக்க,பிராட்டியும்அந்த ப்ரஹ்மசாரிக்குக்காங்க்ஷாதிகமான தநத்தைக் கநகதாராரூபமாக ப்ரஸாதித்தருள, அந்தப்ரஹ்மசாரியும் ஸம்பூர்ணமநோரதனாய்த் தூப்புற்பிள்ளைத்திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து விடைகொண்டுபோனான்.

இந்த வ்ருத்தாந்தத்தை வித்யாரண்யன் கேட்டு மிகவும்ப்ரவணனாயிருந்தான். அஸூயாளான அந்தரவிரோதிகளும் பக்நமநோரதர்களானார்கள்.

பின்பு,தென்னாடும்வடநாடுந்தொழநின்ற திருவரங்கத்திருப்பதியில் குத்ருஷ்டிவித்வான்கள் கூட்டமாகவந்து "இப்போது ராமாநுஜஸித்தாந்தத்தை நிர்வஹிக்கும்படிஶக்தியுள்ளவர்கள் நமக்கு உத்தரம்சொல்லிப்போகக்கடவர்கள்,இல்லாவிடில்நம்முடைய ஸித்தாந்தத்தில் சேரக்கடவர்கள்" என்று ப்ரபலநிர்ப்பந்தம்பண்ணிக்கொண்டிருக்க,அப்போது ஶ்ருதப்ரகாஶிகாசார்யரான ஸுதர்ஶநபட்டரைப் பெரியவாச்சான்பிள்ளை,பிள்ளைலோகாசார்யர் முதலானவர்கள் தண்டன்ஸமர்ப்பித்து,"இப்போதுசெய்யவடுப்பது என்?" என்றுகேட்க, ஸுதர்ஶநபட்டரும் "இஸ்ஸித்தாந்தத்திற்கு ப்ரவர்த்தகராகும்படி உடையவர் திருவுள்ளக்கருத்தறிந்து நம் அம்

𑌪𑌤𑌨𑌾𑌵𑌧𑌿 𑌪𑍍𑌰𑌭𑍁𑌨𑌿𑌷𑍇𑌵𑌣𑍋𑌪𑌾𑌤𑍍𑌤𑌨𑌾𑌤 𑌬𑌿𑌨𑍍𑌧𑌨𑌧𑌨𑌞𑍍𑌜𑌯𑌪𑍍𑌰𑌶𑌮𑌦𑌂 𑌧𑌨𑌂 𑌦𑌨𑍍𑌧𑌨𑌂 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌂 𑌧𑌨𑌮𑍁𑌦𑍂𑌢𑌗𑍋𑌵𑌰𑍍𑌧𑌨𑌂 । 𑌸𑍁𑌸𑌾𑌧𑌨𑌮𑌬𑌾𑌧𑌨𑌂 𑌸𑍁𑌮𑌨𑌸𑌾𑌂 𑌸𑌮𑌾𑌰𑌾𑌧𑌨𑌂 ॥𑌶𑍍𑌰𑍀॥ 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌪𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌮𑌯𑌾 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 । 𑌅𑌸𑍍𑌤𑌿 𑌮𑍇 𑌹𑌸𑍍𑌤𑌿𑌶𑍈𑌲𑌾𑌗𑍍𑌰𑍇 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌪𑍈𑌤𑌾𑌮𑌹𑌂 𑌧𑌨𑌂."

மாள் தூப்புற்பிள்ளையை அநுக்ரஹித்தருளினபடியாலே, அந்தத் தூப்புற்பிள்ளையும் நம்அம்மாள்அநுக்ரஹத்தாலே அபிவ்ருத்தராய் ஸித்தாந்த ப்ரவசநம் பண்ணிக்கொண்டு பெருமாள்கோயிலிலே எழுந்தருளியிருக்கிறபடியாலே அவரைக்கொண்டே ஸித்தாந்த நிர்வாஹகம் பண்ணிக்கொள்ளவேண்டும்" என்றருளிச்செய்து "பொங்கோதஞ்சூழ்ந்த" என்கிறபடியே செங்கோலுடைய திருவரங்கச் செல்வனாருடைய ஸேநாபதியாழ்வான் ஶாஸநமாக (க) "ஸ்ரீமச்ச்ரீரங்கநாதஸ்ய விஷ்வக்ஸேநஸ்ய ஶாஸநம்-தத்பக்தபக்த பக்தாநாம் ஶிரோபூஷண தாங்கதம்" என்று ஒருதிருமுகப்பட்டயத்தை அனுப்பியருள, தூப்புற்பிள்ளையும் அத்தைச் சிரஸாவஹித்துப் பெருமாள் கோயிலினின்றும் முதலிகளோடே கூட அதித்வரையாய் கோயிலேற வெழுந்தருளி, திருக்காவேரியில் நீராடிக் கரம்பனூருத்தமனைத் திருவடிதொழுது, வள்வாயலகால்புள்நந்துழாமே பொருநீர் திருவரங்கருடைய திவ்யதேஶமான திருவரங்கத் திருப்பதியைத் தண்டன் ஸமர்ப்பித்து, "ஆராதவருளமுதம் பொதிந்தகோயில்" என்கிற பாட்டை அநுஸந்தித்துநிற்க, கோயிலநந்தகொத்து பரிஜநங்களும் திருமாலை முதலான வரிசைகளைக்கொண்டு ஸகலவாத்யங்களோடே எதிர் கொண்டுவர, அத்திரளைக்கண்டு தூப்புற்பிள்ளையும் தண்டன்ஸமர்ப்பித்துநிற்க, ஸ்ரீதர்ஶநபட்டரும் திருமாலைமுதலானவைகளை ப்ரஸாதிப்பித்துப் பிள்ளையைக்கைபிடித்துக்கொண்டு "முன்பு எம்பெருமானாருக்கு அருளப்பாடிட்டாற்போலே இப்போது ராமாநுஜஸித்தாந்தத்தை நிர்வஹிக்கும்படி உமக்குஅழகியமணவாளன்அருளப்பாடிட்டருளினர்" என்று அருளிச்செய்ய, பிள்ளையும் "நாயின்தே" என்றுஅந்தநியமநத்தைச் சிரஸாவஹித்துப்ரதக்ஷிணமாகக்கோயிலிலேஎழுந்தருளி ஸ்ரீரங்கநாச்சியாரைத் திருவடிதொழுதுநிற்க, ஸ்ரீரங்கநாச்சியாரும் "ராமாநுஜஸித்தாந்தத்தை நிர்வஹிக்கக்கடவீர்" என்று திருமாலைமுதலானவைகளைப்ரஸாதிக்க, தூப்புற்பிள்ளையும் அவைகளைப்பெற்று உள்ளேபுகுந்து சந்த்ரபுஷ்கரிணீ ப்ரதக்ஷிணமாகப்பலிபீடத்தருகே தண்டன்ஸமர்ப்பித்து (உ) "அஸ்மத்தேஶிகமஸ்மதீய" என்கிற ஶ்லோகத்தாலே குருபரம்பராநுஸந்தாநம்

(க) "ஸ்ரீமச்ச்ரீரங்கநாதஸ்ய விஷ்வக்ஸேநஸ்ய ஶாஸநம் । தத்பக்தபக்தபக்தாநாம் ஶிரோபூஷண தாங்கதம்." (உ) "அஸ்மத்தேஶிகமஸ்மதீய."

பண்ணித் திருமணத்தூணருகேநின்று பெரியபெருமாளையும் அழகியமணவாளனையும் அமலனாதிபிரான்படியே கண்ணாரக்கண்டு உகந்து திருவடிதொழுது "ஈறிலின்பத் திருவெள்ளம் யாம்மூழ்கினம்" என்கிறபடியே அவசராய் எழுந்தருளியிருக்க, பெரியபெருமாளும் குளிரக்கடாக்ஷித்தருளி "நம்மிராமாநுஜனைப்போலேபரமதநிரஸந பூர்வகமாக ஸ்வஸித்தாந்த ஸ்தாபநம்பண்ணக்கடவீர்" என்றுஅர்ச்சகமுகேந அருளிச்செய்து தீர்த்தாதிகளை ப்ரஸாதிக்க, தூப்புற்பிள்ளையும் "நாயின்தே" என்று அவைகளைப்பெற்று பெரியதிருமண்டபத்தில் முதலிகளோடே எழுந்தருளியிருக்க, அந்தக்குத்ருஷ்டிவித்வான்களும் வந்து வாதம்பண்ணத்தொடங்கி ஏழுநாள்நடக்க, அந்த அந்தத்திநத்தில் நடக்கிறவாதங்களை ராத்ரியில்பேரருளாளனையன் பட்டோலை கொண்டிருக்க, எட்டாந்திநத்தில் அவர்களை ஜயித்து அந்தப்பட்டோலையைக் கடாக்ஷித்து ஶோதித்து க்ரந்தமாக்கி அதற்கு "ஶததூஷணி" என்று திருநாமம்சாற்றியருள, பெரியபெருமாளும் தம்முடைய ஸ்ரிய:பதித்வாதி குணநிரூபகமான ராமாநுஜஸித்தாந்தத்தை நிலைநிறுத்தி மித்யாவாதிகளையும் நிராகரித்தபடியாலே உபயவேதாந்தங்களையும் ப்ரவசநம் பண்ணிக்கொண்டு (க) "அத்ரைவஸ்ரீரங்கேஸுகமாஸ்வ" என்று நியமித்தருள, ஸுதர்ஶநபட்டர் முதலான பெரியோர்களும் பெரியபெருமாள்நியமநம் தலைக்கட்டவேண்டுமென்று அருளிச்செய்ய, தூப்புற்பிள்ளையும் அப்படியே வேதாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்க, ஒருநாள் ஸ்வப்நத்தில் உடையவர் எழுந்தருளி திருமந்த்ரமந்த்ரார்த்தங்களையும் ஸ்ரீபாஷ்யபகவத்விஷயங்களையும் ப்ரவசநம்பண்ணிக்கொண்டு இவ்வர்த்தங்களையெல்லாம் ஸுப்ரதிஷ்டிதமாகப் பெற்றுப் பின்னோர்கள் உஜ்ஜீவிக்கும்படிக்கும் ப்ரபந்தங்களைப் பண்ணக்கடவீர்என்று நியமித்தருளி, குளிரக்கடாக்ஷித்துத் தம்திருவடிகளைத் தூப்புற்பிள்ளைத்திருமுடியில் அமர்த்தியருள, பிள்ளையும் விடிவோரைஸ்வப்நத்தைநினைத்து விஸ்மிதராய் உடையவர்நியமநப்படிக்கு ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்க, ஒருநாள் பெரியபெருமாளும் அந்தஸ்ரீபாஷ்யப்ரவசநத்தைக்கண்டு உகந்து அருளப்பாடிட்டு "அநிதரஸாதாரணமாயும் நாமொருவர்க்கேஸாதாரணமாயுமிருந்துள்ள வேதாந்தாசார்யர் என்கிற திருநாமத்தைஉமக்கு ப்ரஸாதித்தோம்" என்றுஅர்ச்சகமுகேநஅருளிச்செய்து திருமாலை திருப்பரிவட்டம்முதலான வரிசைகளையும் ப்ர

(க) "அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ."

ஸாதித்தருள, தூப்புற்பிள்ளையும் அவ்வரிசைகளையும் பெற்றுநிற்க, ஸுதர்ஶநபட்டர் பெரியவாச்சான்பிள்ளை முதலானாரும் இதுவே ஒக்குமென்று அருளிச்செய்ய, வேதாந்ததேஶிகனும் அத்திரளோடே ஸ்ரீரங்கநாச்சியாரைத் திருவடிதொழ, ஸ்ரீரங்கநாச்சியாரும் இவருடையஸித்தாந்தநிர்வாஹத்தையும் பெருமாள்ப்ரஸாதித்தருளின திருநாமத்தையும்போரஉகந்தருளி "ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர்" என்கிற திருநாமத்தைத்தாமும் ப்ரஸாதித்தருள, அந்தத்திருநாமத்தையும்ஸுதர்ஶநபட்டர்முதலானார் உகந்தருள, வேதாந்ததேஶிகனும் "அங்கயல்பாய்வயற்றென்னரங்கம்" என்கிறபடியே உடையவர்கடாக்ஷம்பெற்றுப் பின்பு திவ்யதம்பதிகளுடைய கடாக்ஷத்தையும்பெற்று அவர்கள் நியமநப்படிக்கே ஸித்தாந்த ப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்க, அப்போது அங்குள்ளார்களும் தேஶாந்தரஸ்தர்களும் மதாந்தரஸ்தர்களும் வேதாந்த தேஶிகனுடைய ப்ரபாவத்தைப் பார்த்து, "இது லோகோஜ்ஜீவநார்த்தமான ஓரவதாரவிஶேஷம்" என்றுதெளிந்துஅவர் திருவடிகளிலே ஆஶ்ரயித்தார்கள். இவ்வர்த்தங்களை (க) "ஸ்ரீரங்கராஜதிவ்யாஜ்ஞாலப்தவேதாந்தாசார்யபத:" இத்யாதிகளாலே தாமேஅருளிச்செய்ததுமன்றிக்கே (உ) "ஜீவநம் ஜகதாம்ஜீயாத்கிமப்யபகதஸ்ப்ருஹம்-ஸ்வதந்த்ரம் ஸர்வதந்த்ரேஷு வேங்கடேஶாஹ்வயம் மஹ: ॥ ஸ்ரீபாஷ்யம் விரசய்யஸம்யமிவரோஜித்வாஸ்வயம்வாதிநோபாஹ்யாம்ஶாபிக்ருத்ருஷ்டிகாந் புவிபுநர்பாஷ்யப்ரதிஷ்டாஶயா - ஸ்ரீமத்வேங்கடநாததேஶிகஶிரோரத்நாத்மநாவிர்பபா வித்யேவஞ்சவதந்திஹந்தக்ருதிநஸ்த்ரைகாலிகஜ்ஞாநிந:॥ இஹரங்கபதிப்ரஸாதலப்தோபய வேதாந்ததுரந்தரத்வகீர்த்தி: - அபிதத்ஸஹதர்மிணீக்ருபாத் தாகிலதந்த்ரப்ரபுதாக ஏஷஸூரி:" என்று ப்ரதிவாதிபயங்கரம் அண்ணனும் பெரியபெருமாள் முன்பே ப்ரமாணமாக அருளிச்செய்தார்.

(க) "श्रीरङ्गराजदिव्याज्ञालब्धवेदान्तार्यपदः." (உ) "जीवनं जगतां जीयात्किमप्यपगतस्पृहम्। स्वतन्त्रं सर्वतन्त्रेषु वेङ्कटेशाह्वयं महः॥ श्रीभाष्यं विरचय्य संयमिवरो जित्वा स्वयं वादिनो बाह्यान्शापिकुदृष्टिकान्भुवि पुनर्भाष्यप्रतिष्ठाशया। श्रीमद्वेङ्कटनाथदेशिकशिरोरत्नात्मनाविर्बभौ विद्येवं च वदन्ति हन्त कृतिनस्त्रैकालिकज्ञानिनः॥ इह रङ्गपतिप्रसादलब्धोभयवेदान्तधुरन्धरत्वकीर्तिः। अपि तत्सहधर्मिणीकृपात्ताखिलतन्त्रप्रभुताक एष सूरिः॥"

பின்பு, வேதாந்ததேஸிகனும் பெரியபெருமாள்விஷயமாகப் பகவத்த்யாநஸோபாநத்தையும்,பூஸ்துதிநீளாஸ்துதிகளையும், திருமங்கையாழ்வாரைக் கடாக்ஷித்துக்கொண்டிருக்கிற தஸாவதாரப்பெருமாள்கள்விஷயமாகத் தஸாவதாரஸ்தோத்ரத்தையும் செய்தருளி,எம்பெருமானாருடைய சித்திரைத் திருவாதிரைத்திருநாளில் எம்பெருமானாருடைய திவ்யமங்களவிக்ரஹத்திலும்திவ்யகுணசேஷ்டிதங்களிலும் ஈடுபட்டுப்பரவஸராயிருக்க,அங்குள்ளபெரியோர்களும் "இப்படிக்கொத்த அநுபவம் அடியோங்கள் நெஞ்சிலும் பொருந்தும்படி ஒருஸ்தோத்ரத்தை அருளிச்செய்யவேணும்" என்று ப்ரார்த்திக்க, உடையவரும் யதிராஜஸப்ததியைச் செய்யும்படி அருளப்பாடிட்டருள,வேதாந்ததேஸிகனும் அப்படியே யதிராஜஸப்ததியைச் செய்தருளி விண்ணப்பஞ்செய்ய,உடையவரும் போரஉகந்தருளி தீர்த்தம்முதலானவைகளைப்ரஸாதிக்க,வேதாந்ததேஸிகனும் அவைகளைப்பெற்று உடையவர்நியமநப்படிக்குப் பரமதநிரஸநபூர்வகஸ்வமதஸ்தாபகங்களான தத்வமுக்தாகலாபத்தையும்,அதற்கு வ்யாக்யாநமான ஸர்வார்த்தஸித்தியையும், ந்யாயஸித்தாஞ்ஜநம், ந்யாயபரிஸுத்தி,ஸேஸ்வரமீமாம்ஸை, மீமாம்ஸாபாதுகை, ஸ்ரீபாஷ்யவிவரணமான தத்வடீகை, அதிகரணதர்பணம், அதிகரணஸாராவளி,ஸ்ரீகீதாபாஷ்யவிவரணமான தாத்பர்யசந்த்ரிகை, ஈஸாவாஸ்யோபநிஷத்வ்யாக்யாநம்,ஹரிதிநதிலகம்,பூகோளநிர்ணயம், தத்வ்யாக்யாநம் இந்தக்ரந்தங்களைச் செய்தருளி, உடையவர் திருவுள்ளக்கருத்தை ப்ரகாஸிப்பித்துக்கொண்டிருக்க,ஸுதர்ஸநபட்டர் முதலானார் கவிதையிலும், ஸாஸ்த்ரங்களிலும் இவருக்குள்ள அதிஸயத்தைப்பார்த்துக் "கவிதார்க்கிகஸிம்ஹர்" என்று அருளிச்செய்தார்கள்.

ஒருநாள் பெரியவாச்சான்பிள்ளை உபாதாநகாலத்தில் ந்யாஸவித்யாவிஷயத்தில் சில அர்த்தங்களை ஒருபடியாக அருளிச்செய்துகொண்டிருந்து இதனுடைய நிஷ்கர்ஷத்தைச் சொல்லுமென்று கேட்க, வேதாந்த தேஸிகனும் ந்யாஸவிம்ஸதியையும், ந்யாஸதிலகத்தையும் செய்தருளிக்கொடுக்க, பெரிவாச்சான்பிள்ளையும் அதைக்கடாக்ஷித்து"வறிதேயருள்செய்வர்' இத்யாதிகளான அருளிச்செயல்கள்பாதிதங்களாகாதோ?" என்றுகேட்க, வேதாந்ததேஸிகனும் சரமஸ்லோகத்தில்விஸேஷார்த்தத்தையும்அவ்வர்த்தங்களை ப்ரதிபாதிக்கிற"வேதநாவர்விரும்புந்திருக்கண்ணபுரத்தாதியானையடைந்தார்க்கல்லலில்லையே" என்றும் "திருமாலிருஞ்சோலைமலை யென்

றேனென்ன, திருமால்வந்தென்னெஞ்சு நிறையப்புகுந்தான்'' என்றும் ''சன்மசன்மாந்தரங்காத்தடியார்களைக்கொண்டுபோய்'' என்றும் ''கலியுகமொன்றுமன்றிக்கேதன்னடியார்க்கருள்செய்யும்'' என்றும் ''அடிக்கீழமர்ந்து புகுந்து அடியீர்வாழ்மினென் றருள்கொடுக்கும்'' என்றும், ''இத்தனையடியரானார்க்கிரங்கும் நம்மரங்கனாயபித்தனே'' என்றும், உபநிஷத்தான திருப்பாவையிலும் ''தூயோமாய்வந்து நாம் தூமலர்தூவித்தொழுது, வாயினாற்பாடி மனத்தினாற் சிந்திக்க, போயபிழையும்புகுதருவானின்றனவும், தீயினிற்றூசாகும்'' என்றும்சொல்லுகிற பாட்டுக்களையும், ஆழ்வார் அநுபவத்தையும், நாதமுனிகள், ஆளவந்தார், உடையவர், பிள்ளான், அம்மாள், அப்பிள்ளார் இவர்களுடைய அநுஷ்டாநத்தையும் ஆவாபோத்வாப புரஸ்ஸரமாக அருளிச்செய்ய, பெரியவாச்சான்பிள்ளையும் அத்தைக் கேட்டு உகந்து உடையவர் பரிபூர்ணகடாக்ஷத்திற்குப் பாத்ரரான உம்மை அதிஸயிப்பாரும் உண்டோ? என்று அருளிச்செய்து ப்ரபத்திக்ரமத்தையும் சொல்லீர் என்ன, வேதாந்ததேஸிகனும் தாம் முன்பு செய்தருளின ந்யாஸதஸகத்தைக் கொடுக்க, அத்தையும் பார்த்து உகந்தருள, வேதாந்ததேஸிகனும் ஸச்சரித்ரரக்ஷை, ஸ்ரீ பாஞ்சராத்ரரக்ஷை, ஆளவந்தாருளிச்செய்த ஸ்ரீகீதார்த்தஸங்க்ரஹத்திற்கு வ்யாக்யாநமான கீதார்த்தஸங்க்ரஹரக்ஷை, நிக்ஷேபரக்ஷை, கத்யத்ரயசதுஸ்ஸ்லோகீ, ஸ்தோத்ரரத்நபாஷ்யமானரஹஸ்யரக்ஷை இந்தக்ரந்தங்களையும் செய்தருளி ஸித்தாந்தப்ரவசநம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார். இவருடைய திருநாமப்ரபாவத்தைரஹஸ்யரக்ஷையினுடைய முடிவிலே(க)''ஸ்வகமிதிஹரிதத்தம்யாமுநஸ்தோத்ரவ்ருத்த்யா வ்யவ்ருணுத நிகமாந்தாசார்யகம் வேங்கடேஸ: - அகணிஸதஸிஸத்பிர் யஸ்ஸமாக்யாஸஹஸ்ரை: கவிகதகம்ருகேந்த்ரஸ் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர:'' என்று தாமே அருளிச்செய்தார்.

அப்போது, விஜயநகரத்தில்தத்த்வவாதியான அக்ஷோப்யமுனிக்கும் மாயாவாதியானவித்யாரண்யனுக்கும் வேதாந்தத்தில்வாதம் ப்ரவ்ருத்தமாக, இருவருடைய அபிப்ராயத்தையும்ராஜபத்ரிகாமூல

(க) ''𑌸𑍍𑌵𑌕𑌮𑌿𑌤𑌿 𑌹𑌰𑌿𑌦𑌤𑍍𑌤𑌂 𑌯𑌾𑌮𑍁𑌨𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑍍𑌯𑌵𑍃𑌣𑍁𑌤 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌕𑌂 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌃 । 𑌅𑌗𑌣𑌿 𑌸𑌦𑌸𑌿 𑌸𑌦𑍍𑌭𑌿𑌰𑍍𑌯𑌸𑍍𑌸𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌸𑌹𑌸𑍍𑌰𑍈𑌃 𑌕𑌵𑌿𑌕𑌥𑌕𑌮𑍃𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍 𑌸𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌃''

மாக வேதாந்ததேஸிகன் ஸந்நிதிக்கு அனுப்பித்து யாதார்த்யத்தை அறிந்துகொள்ளவேணுமென்று அனுப்பிக்க, வேதாந்ததேஸிகனும் (க)"அஸிநாதத்வமஸிநா பரஜீவப்ரபேதிநா வித்யாரண்யமஹாரண்யமக்ஷோப்யமுநிரச்சிநத்" என்றுஎழுதி அனுப்பியருள, ராஜாவும் வேதாந்ததேஸிகன் திருவடிகளிலே ப்ரவணனாயிருக்க வித்யாரண்யனும் அத்தைஸஹியாமல் ஶததூஷணியைத் தூஷிக்கிறேமென்றுசொல்லியனுப்ப, தேஸிகனும்ஶததூஷணியை அனுப்பியருள, வித்யாரண்யனும்பார்த்து ஒருசகாரத்தின்மேலே குத்திட்டு வரவிட, அத்தைத் தேஸிகனும் கடாக்ஷித்துச் சகாரஸமர்த்தநமென்று ஒருக்ரந்தம் செய்தருளி அந்தக் குத்தின்மேல் ஒருகுத்திட்டு அனுப்பியருள, வித்யாரண்யனும் பார்த்து, விஷ்ணுகண்டாவதாரரை நான் ஜயிக்கவல்லேனோ? என்று ஈடுபட்டு ப்ரவணனாயிருக்க, ராஜாவும் வேதாந்ததேஸிகனிடத்தில் அத்யந்தம் பக்தனாயிருந்தான்.

பின்பு, வேதாந்தாசார்யர் என்றும், ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர் என்றும், கவிதார்க்கிகஸிம்ஹர் என்றும் ப்ரஸித்தமான வைபவத்தைக் கேட்டு க்ருஷ்ணமிஶ்ரன் என்கிற ஒருவித்வான் வாதம் பண்ணவேணுமென்று வந்தழைக்க, வேதாந்ததேஸிகனும் மூன்று நாள் வாதம்பண்ணி அவனைஜயித்தருள, க்ருஷ்ணமிஶ்ரனும் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரிடத்தில் பக்நனாய்த் தான்பண்ணின ப்ரபோத சந்த்ரோதயத்தைப் பார்க்கவேண்டும் என்ன, தேஸிகனும் நாம்செய்த ஸங்கல்பஸூர்யோதயத்தை நீரும் பார்க்கக்கடவீர் என்று அருளிச்செய்ய, விடிவோரை க்ருஷ்ணமிஶ்ரனும் ப்ரபோத சந்த்ரோதயத்தைக்கொண்டுவர, நம்தேஸிகனும்அன்றுராத்ரியிலே ஸங்கல்பஸூர்யோதயத்தைச் செய்தருளி விடிவோரை நித்ய கைங்கர்யங்களையும் அநுஷ்டித்து ஸங்கல்பஸூர்யோதயத்தையும் அவன்கையில் கொடுக்க, அவனும்பார்த்து அதோமுகனாய் இருக்க, ஸுதர்ஶநபட்டர் முதலான பெரியோர்களும் இந்த இரண்டு க்ரந்தங்களையும் கடாக்ஷித்தருளி, அவன் க்ரந்தத்தைப் பாராமல் அத்தைக் கண்டிக்கும்படியான க்ரந்தத்தைப் பண்ணுவதும் ஓரவதாரவிஶேஷத்தாலே யன்றோ? என்று போர உகந்தருளி இவருக்கே கவிதார்க்கிகஸிம்ஹரென்கிற திருநாமம் அந்வர்த்தம் என்று அருளிச்செய்தார்கள்.

(க)" 𑌅𑌸𑌿𑌨𑌾 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿𑌨𑌾 𑌪𑌰𑌜𑍀𑌵𑌪𑍍𑌰𑌭𑍇𑌦𑌿𑌨𑌾 । 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌰𑌣𑍍𑌯 𑌮𑌹𑌾𑌰𑌣𑍍𑌯𑌮𑌕𑍍𑌷𑍋𑌭𑍍𑌯𑌮𑍁𑌨𑌿𑌰𑌚𑍍𑌛𑌿𑌨𑌤𑍍."

பின்பு, க்ருஷ்ணமிஶ்ரனும் பக்நனுய்த் தேஶிகன் திருவடிகளிலே பணிந்துநின்றுனென்று கேட்டுட் டிண்டிமகவியும் ராமாப்யுதயம் என்கிற காவ்யத்தைப்பண்ணித் தேஶிகன் ஸந்நிதியில் கொடுக்க, தேஶிகனும் யாதவாப்யுதத்தையும் ஹம்ஸஸந்தேஶத்தையும் செய்தருளி டிண்டிமகவிகையில் கொடுக்க, அவனும் அத்தைப்பார்த்து "கவிதார்க்கிகஸிம்ஹரென்கிறபிருதுஉமக்கேதகும்" என்று தண்டன்ஸமர்ப்பித்து (க)"த்விசதுஷ்பதபரிவர்தநகர்விதகரிஶரபகண்டபேருண்ட: - கண்டநகண்டநகவிரிஹ டிண்டிமகவிகண்டடிண்டிமோஜபது" என்கிறஶ்லோகத்தையும் விண்ணப்பஞ்செய்தான்.

பின்பு வேதாந்ததேஶிகனும் திருக்குடந்தைமுதலான திவ்யதேஶங்களில் எம்பெருமான் திருவடிதொழுது திருவணையாடி ஸ்ரீவில்லிபுத்தூரில் வடபெருங்கோயிலுடையானையும் சூடிக்கொடுத்தநாச்சியாரையும் திருவடிதொழுதுநிற்க, சூடிக்கொடுத்தநாச்சியாரும்"நாம்செய்தருளின உபநிஷத்தான திருப்பாவையில் விஶேஷார்த்தங்களையெல்லாம் ந்யாஸவிம்ஶதிமுதலான ஶரணாகதிப்ரதிபாதகக்ரந்தங்களாலே ப்ரகாஶிப்பித்தருளினீரே" என்றுபோர உகந்தருளி திருமாலைமுதலானவைகளை ப்ரஸாதிக்க, தேஶிகனும் அவைகளைப்பெற்று உள்மகிழ்ந்து, (௨)"ஸ்ரீவிஷ்ணுசித்தகுலநந்தநகல்பவல்லீம்" என்று தொடங்கி கோதாஸ்துதியை விண்ணப்பஞ்செய்ய, நாச்சியாரும் கேட்டு உகந்து குளிரக்கடாக்ஷித்தருள, பின்பு திருநகரியேற எழுந்தருளி, (௩)"நிரஞ்ஜநமயஞ்ஜந: கிமபிநேத்ரமுந்நித்ரயந் நமஸ்யதிஶடத்விஷோநரகவைரிஜீவாதவே - அகஸ்த்யகிரிநிம்நகாஸஹபகவீசிகாஸோதர ஸ்வலக்ஷணஸரஸ்வதீஸஹரபிஷேஸரஸ்லாகிநே" என்று ஆழ்வாரைத் திருவடிதொழுதுநிற்க, ஆழ்வாரும்"ஸ்வரூபோபாயபுருஷார்த்தங்களை விஶதமாகக்காட்டுகிற திருமந்த்ரார்த்தமான நம்திருவாய்மொழியிலுள்ள விஶேஷார்த்தங்களையெல்லாம் நிக்ஷேபரக்ஷை, ரஹஸ்யரக்ஷை முதலானவைக

(க) "த்விசதுஷ்பதபரிவர்தநகர்விதகரிஶரபகண்டபேருண்ட: - கண்டநகண்டநகவிரிஹ டிண்டிமகவிகண்டடிண்டிமோஜபது."
(௨) "ஸ்ரீவிஷ்ணுசித்தகுலநந்தநகல்பவல்லீம்." (௩) "நிரஞ்ஜநமயஞ்ஜந: கிமபிநேத்ரமுந்நித்ரயந் நமஸ்யதிஶடத்விஷோநரகவைரிஜீவாதவே। அகஸ்த்யகிரிநிம்நகாஸஹபகவீசிகாஸோதர ஸ்வலக்ஷணஸரஸ்வதீஸஹரபிஷேஸரஸ்லாகிநே."

ளாலே ப்ரகாசிப்பித்த உமக்குப்பாரிதோஷிகமாக ஒன்றும் அமை-
யாது" என்று போரஉகந்தருளி "நம் திருவாய்மொழிக்கு நாம்
உகந்தருளின வ்யாக்யாநமான ஆறுயிரப்படிக்கு வ்யாக்யாநரூப
மாகச் சிலக்ரந்தங்களைச் செய்யக்கடவீர்" என்று அர்ச்சகமுகேந
அருளிச்செய்து திருமாலைமுதலானவைகளையும் ப்ரஸாதிக்க, வே
தாந்ததேசிகனும் ஆழ்வார்நியமநத்தைச் சிரஸாவஹித்து வரிசை
களையும்பெற்றுப் பொலிந்துநின்றபிரான் முதலான எம்பெருமான்
களையும் திருவடிதொழுது திருவண்பரிசாரம்முதலாகத் திவ்ய
தேசங்களிலும் எம்பெருமான் திருவடிதொழுது கோயிலேற
வெழுந்தருளி மீண்டு திருவெள்ளறை ஸ்ரீமுஷ்ணம் முதலாகத்
திவ்யதேச யாத்ரைபண்ணிப் பெருமாள்கோயிலேற எழுந்தருளி
பெருந்தேவியாரையும் பேரருளாளனையும் திருவடிதொழுது முத
லிகளோடே வேதாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளி
யிருக்கிற காலத்திலே,

ஒருமஹாஸமர்த்தனான பாம்பாண்டிவந்து சிலதுஷ்டர்களு
டைய துர்ப்போதநத்தாலே அட்டஹாஸம் பண்ணிக்கொண்டு
இந்தமந்த்ரவாதத்தில் என்னைஜயித்தீராகில் ஸர்வதந்த்ரஸ்வதந்த்
ரர்என்கிறபிருது உமக்குத்தகுமென்ன, தேசிகனும் அஸமாநனோ
டே ஸம்வதிக்கவேண்டுவதே என்று வெறுத்திருக்க, அவனை
ஜயிக்கும்படி முதலிகள் ப்ரார்த்திக்க, தேசிகனும் தம்முடைய
முன்பே ஏழுகீற்றையெழுதி, பாம்பாண்டியைப் பார்த்து இனி
வேண்டினபடி செய்யக்கடவை யென்றருளிச்செய்ய, அந்தப்
பாம்பாண்டியும் மஹாஸர்ப்பங்களையேவ, அவைகளும் சிலகீற்றுக்
களைக் கடக்கமாட்டாமலிருக்க, பின்னையும் சில மஹாநாகங்களை
யேவ, அவைகளும் இரண்டு மூன்று கீற்றுக்குள்ளேயே இருக்க,
பின்னையும் க்ருத்தனாய் சங்கபாலனென்கிற மஹாநாகத்தை
யேவ, அதுவும் ஏழுகீற்றையும்கடந்து கிட்டிவர, தேசிகனும்கருட
தண்டகத்தைஅருளிச்செய்ய, பெரியதிருவடிநயினாரும்அந்தமஹா
நாகத்தை எடுத்துக்கொண்டுபோக, பாம்பாண்டியும் தேசிகன்
திருவடிகளிலே விழுந்து அந்தமஹாநாகத்தைக் கொடுக்கவேண்
டும்என்று ப்ரார்த்திக்க...

க்கொள்கிறஸமபத்தில் முன்பு மாயிஸந்ந்யாஸி செய்தாற்போலே பாம்பாண்டியும் ஒருகுளத்திலேமுழுகித் தண்ணீரைக் குடிக்க, க்ஷுத்ரவிஶேஷத்தாலே தேஶிகன் திருவயிறு வெடித்துப்போகும்படி உபாதியுண்டாக, அந்த க்ஷுத்ரத்தை அறிந்து தேஶிகனும்முன்புபோலே ஒருஸ்தம்பத்தில் கீறிவிட்டு அத்தாலே அந்த ஜலங்களையெல்லாம் பெருக்க, அத்தைக்கேட்டுப் பாம்பாண்டியும் தேஶிகன் திருவடிகளிலே விழுந்து க்ஷாமணம் பண்ணிக்கொண்டுபோனான்.

பின்பு வேதாந்ததேஶிகனும் ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டு(க)"வாதவிரசயத்வம் வாரிதாஶேஷதோஷாம் புநருபசித புண்யாம் பூஷிதாம்புண்யகோட்யா - ஸிதமுதிதமநோபிஸ்தாவகைர்நித்யஸேவ்யாம் ஹதரிபுஜநயோகாம் ஹஸ்திதாம்நஸ்ஸம்ருத்திம்" என்று மங்களாஶாஸநம் செய்தருளிச் சிலகாலம் எழுந்தருளியிருந்து திருமலைமுதலான திவ்யதேஶங்களிலும் மங்களாஶாஸநம்பண்ணி, எம்பெருமானாரையும் திருவடிதொழுது கோயிலேற எழுந்தருளும்போது திருக்கோவலூரருகே மஹாரண்யத்தில் ஒருநாள் தளிகைமுதலானவைகளுக்கு விரோதம் உண்டாய் ஸ்ரீஹயக்ரீவருக்குத் தீர்த்தத்தைக் கண்டருளப்பண்ணி உபவாஸத்துடனே ஒரு த்ரைவர்ணிக ஸ்ரீவைஷ்ணவனுடைய க்ருஹத்திலே ஒருராத்ரி தங்கியிருக்க, அந்த த்ரைவர்ணிகனும் அந்த ராத்ரியிலே தேஶிகனை யெழுப்பி"ஒரு வெள்ளைக்குதிரை எங்கள் கடலையையெல்லாம்தின்கிறது அத்தைத் தின்னாமலிருக்கும்படி கட்டவேணும்" என்ன, தேஶிகனும் அவனைப்பாலமுது கொண்டுவரும்படி நியமிக்க, அவனும் கொண்டுவந்து கொடுக்க, அத்தை ஸ்ரீஹயக்ரீவனுக்குக் கண்டருளப்பண்ணித் தாமும்முதலிகளும் ஸ்வீகரித்து"இனிஉன்கடலையைத் தின்னாது"என்றருளிச்செய்ய, த்ரைவர்ணிகனும் ஸ்வாமி திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து "ஆரோஎன்றிருந்தேன்? இப்படிக்கொத்த பாக்யம் அடியேனுக்குலபித்ததே" என்று உள்மகிழ்ந்து மறுநாளில் ஸ்ரீஹயக்ரீவருக்கு விஶேஷாராதநம் பண்ணுவித்தான்.

(க) "𑌵𑌾𑌤𑌵𑌿𑌶𑍍𑌰𑌾𑌣𑌯𑌤𑍍𑌵𑌂 𑌵𑌾𑌰𑌿𑌤𑌾𑌶𑍇𑌷𑌦𑍋𑌷𑌾𑌂 𑌪𑍁𑌨𑌰𑍁𑌪𑌚𑌿𑌤𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌂 𑌭𑍂𑌷𑌿𑌤𑌾𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌕𑍋𑌟𑍍𑌯𑌾 । 𑌸𑌿𑌤𑌮𑍁𑌦𑌿𑌤𑌮𑌨𑍋𑌭𑌿𑌸𑍍𑌤𑌾𑌵𑌕𑍈𑌰𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍇𑌵𑍍𑌯𑌾𑌂 𑌹𑌤𑌰𑌿𑌪𑍁𑌜𑌨𑌯𑍋𑌗𑌾𑌂 𑌹𑌸𑍍𑌤𑌿𑌧𑌾𑌮𑍍𑌨𑌸𑍍𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌿𑌂."

பின்பு வேதாந்ததேஸிகனும் திருக்கோவலூராயனுரைத்திரு வடிதொழுது திருவஹீந்திரபுரத்திற் சிலநாள்ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்க, அங்குச் சிலதுஷ்டர்கள்பாம்பாண்டியைப் போதித்தாற்போலே ஒரு கொத்தனையேவிக் கிணறுகட்டும்படி பண்ணுவிக்கச்சொல்ல, அந்தக்கொத்தனும்தேஸிகன்முன்பேவந் து செவ்வையாய்ஒருகிணற்றைக் கட்டினீராகில் உம்மை ஒருவரும் ஜயிக்கமாட்டார்கள், இல்லாவிடில் உமக்கிந்தபிருது தகாது; என்று சொல்ல, தேஸிகனும் இதபரிஹார்யமில்லாவிடிலும் துர்போதநத் தாலே இவன்வந்து இப்படிக்குச்சொல்லுகிறுனகையால்இத்தைச் செய்துஇவனை நிரஸித்தால் இனிஒருதுஷ்டருக்கும்அவகாஸமுண் டாகாதென்றும், துர்போதகர்களுக்கும்சொன்னத்தைச்செய்யும் வல்லமைஇவருக்கேஉண்டென்று அறிவிக்கைக்காகவும் தாமே தம்திருமாளிகையில் ஸ்ரீஹயக்ரீவருக்கென்று ஒருகிணற்றை அந் தக்கொத்தன் கொடுத்த கற்களாலே கட்டிக்காட்ட, கொத்தனும் பக்நனுய்த் திருவடிகளிலேவிழுந்து துர்ப்போதநத்தாலேகெட்டு ப்போன அடியேனை அடிமைகொள்ளவேணும்என்றுவிண்ணப்பஞ் செய்ய, தேஸிகனும் அவனுக்குத்திருவிலச்சினையும்ப்ராஸாதித்தரு ளி இனிஸாஸ்த்ரவிஷயம்தவிர மற்றவிஷயங்களில் வந்ததுஷ்டர் களை ஸிக்ஷித்து அடிமைப்படும்படிபண்ணக்கடவை என்று நியமி த்தருளிச் சிலநாள் கழிந்தவாறே தெய்வநாயகன் நியமநம்பெற்று விடைகொண்டு வீரநாராயணபுரத்தில் (க) "நாதேந முநிநாதேந பவேயம் நாதவாநஹம் - யஸ்ய நைகமிகந்தத்வம் ஹஸ்தாமலக தாங்கதம்" என்று ஸ்ரீமந்நாதமுநிகளைத் திருவடிதொழுதுநிற்க, நாதமுநிகளும் நாம்யோகதஸையில்ஆழ்வாரை ஸாக்ஷாத்கரித்துப் பெற்ற திருமந்த்ரமந்த்ரார்த்தங்களையும் திருமந்த்ரார்த்தங்களான வேதாந்தங்களையும் ஸதாசார்ய ஸம்ப்ரதாயத்தாலே நீரும்பெற்று அந்த விஸேஷார்த்தங்களையும் இப்போது ப்ரவசநம்பண்ணிக்கொ ண்டு பின்னோர்களும் உஜ்ஜீவிக்கும்படிக்கு க்ரந்தங்களைச் செய்து மஹோபகாரம் பண்ணினீர்" என்றுபோரஉகந்தருளி "நம்மாழ்வார் நியமநத்தைத் தலைக்கட்டக்கடவீர்" என்று அர்ச்சகமுகேந அரு ளிச்செய்து திருமாலை முதலானவைகளையும் ப்ராஸாதித்தருள,

---

(க) "நாதேந முநிநாதேந பவேயம் நாதவாநஹம் । யஸ்ய நைகமிகம் தத்த்வம் ஹஸ்தாமலகதாம் கதம்."

தேஶிகனும் அந்தவரிசைகளைப்பெற்று (க)“அத்ரபரத்ரசாபித்யம்யதீயசரணௌஶரணம் மதீயம்” என்று அநுஸந்தித்துக் கண்ணையும் திருவடிதொழுது விடைகொண்டு தோரும்நெடுவீதித் திருவாலிநகராளும் எம்பெருமானையும் திருமங்கையாழ்வாரையும் திருவடிதொழுதுநிற்க, திருமங்கையாழ்வாரும் “திருமந்த்ரத்தில் நமஶ்ஶப்தார்த்தமான த்வயத்தில் ஶரணாகதியை ப்ரகாஶிப்பிக்கிற விஶேஷார்த்தங்களையெல்லாம் ப்ரபந்தங்களாலே வெளியிட்ட நம்மைக்காட்டிலும் அவ்வர்த்தங்களையெல்லாம் கத்யரூபேண அருளிச்செய்த உடையவருடைய திருவுள்ளப்படிக்கு அவர் நியமநத்தாலே பல க்ரந்தங்களைச்செய்து உலகத்தையும் திருத்தி ஶரணாகதிஶாஸ்த்ரத்தை ப்ரகாஶிப்பித்த உமக்குத் தகுந்த பாரிதோஷிகம் ஒன்றுமில்லை” என்று போரஉகந்தருளி திருமாலை முதலானவைகளையும் ப்ரஸாதிக்க, தேஶிகனும் அவைகளைப் பெற்று க்ருதார்த்தராய் விடைகொண்டு கோயிலேறஎழுந்தருளி ஸ்ரீரங்கநாச்சியாரையும் பெரியபெருமாளையும் திருவடிதொழுது பெருங்கூட்டத்து முதலிகளோடே ஸித்தாந்த ப்ரவசநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்கிற நாளையிலே தேஶாந்தரத்தில் அநேக ஸ்ரீவைஷ்ணவர்கள் இந்த வைபவத்தைக்கண்டும் கேட்டும் வந்து ஆஶ்ரயித்து ஸ்ரீபாஷ்யாதிகளை அதிகரித்தார்கள்.

சிலமிதஜ்ஞஸாதுக்கள் தங்களுக்கு ஸுலபமாய் அறியும்படி தத்வஹிதபுருஷார்த்தங்களை ஸங்க்ரஹித்து ப்ரஸாதித்தருளவேணும் என்று ப்ரார்த்திக்க, தேஶிகனும் அப்படியே திருவுள்ளம்பற்றிப் புருஷார்த்தத்தை அடைகைக்கு உபாயம் வேண்டுகையாலும், உபாயத்தைஅறிகைக்குத் தத்வஜ்ஞாநம் வேண்டுகையாலும், தத்வஜ்ஞாநம் உண்டாகைக்கு ஸதாசார்யன்வேண்டுகையாலும், ஸதாசார்யனென்று அறிகைக்கு ஶாஸ்த்ரமூலத்வ ஸம்ப்ரதிபத்தியுண்டான ஸம்ப்ரதாயஶுத்தி அறியவேண்டுகையாலும்(உ) “ஆபாதசூடமநபாயி நிதர்ஶநேஸ்மிந்” என்கிறபடியே கோதற்ற ஸம்ப்ரதாயப்ரகாஶகமாக ஸம்ப்ரதாயபரிஶுத்தியென்கிற ரஹஸ்யத்தை முன்புசெய்தருளி, பின்புக்ரமமாக ரஹஸ்யங்களைச்செய்யக்கோலித்தத்வபதவி, ரஹஸ்யபதவி, தத்வநவநீதம், ரஹஸ்ய

(க) “அத்ர பரத்ர சாபி நித்யம் யதீய சரணௌ ஶரணம் மதீயம்.”
(உ) “ஆபாதசூடமநபாயி நிதர்ஶநேஸ்மிந்.”

நவநீதம், தத்வமாத்ருகை, ரஹஸ்யமாத்ருகை, தத்வரத்நாவலி, தத்வரத்நாவலீப்ரதிபாத்யஸங்க்ரஹம், ரஹஸ்யரத்நாவலி, ரஹஸ்யரத்நாவலீஹ்ருதயம், தத்வத்ரயசுளகம், ஸாரஸங்க்ஷேபம், ஸாரஸாரம், அபயப்ரதாநஸாரம், தத்வசிகாமணி, ரஹஸ்ய சிகாமணி, அஞ்ஜலிவைபவம், ப்ரதாநசதகம், உபகாரஸங்க்ரஹம், ஸாரஸங்க்ரஹம், பரமபதஸோபாநம் ஆகிய இந்த ரஹஸ்யங்களைச்செய்தருளி அவர்களுக்கு ப்ரஸாதித்தருளி, உடையவர் திருவுள்ளக்கருத்தைப் பலப்ரபந்தங்களாலும் வெளியிட்டுக்கொண்டு ராமாநுஜஸித்தாந்தம் இவராலே ஸுப்ரதிஷ்டிதமாயிற்று என்று ஸத்துக்களாலே கொண்டாடப்பட்டு ஜ்ஞாநபக்திவைராக்யங்கள் இப்படி ஒரு வடிவு கொண்டிருக்கிறதென்று எல்லாரும் அறியும்படி அபிகமநோபாதாநேஜ்யா ஸ்வாத்யாயயோகரூபபகவத்கைங்கர்யங்களையும் பாகவதாசார்யகைங்கர்யங்களையும் க்ரமமாக அநுஷ்டித்துக்கொண்டு தம்மைப்போலே தம் அடியார்களையும் திருத்தி அநுஷ்டிப்பித்துக்கொண்டு இவை ஸுப்ரதிஷ்டிதமாகும்படி பரமதநிரஸந புரஸ்ஸரமாக ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார். இவ்வர்த்தங்களை (க)"ஸர்வார்த்தஸித்திஸ்ஸததூஷணீச த்வேகேடஸ்த்ரேகதகாக்ரகாநாம் - ஆத்யேந தத்க்ரியதே ஸ்வரக்ஷா ப்ரத்யர்திபங்க: கலஹேஂந்யதஸ்ஸ்யாத் ॥ அநந்யஸாதாரண சாதுரீச காவ்யாதிஷுப்ரஹ்மவிதக்ரணீத்வம் - ததாஷ்டபாஷா கவிதாபடுத்வம் ஸங்கல்பஸூர்யோதய த்ருஶ்யமஸ்ய ॥ அஹஹஶங்கராயாதவபாஸ்கரக்ரதிததுர்மததுர்மதவாதிநாம் - கலகல: கவிதார்கிக கேஸரி ப்ரதிததூஷணிகாஶ்ரவணாவதி: ॥ யதுக்தயோ யதிபதி தந்த்ரதீபிகா: ஸலக்ஷணாஸ்ஸரஸதமாஸ்ஸதாம்மதா:-ஸமத்ஸரை

(க) [illegible]

(க)“ரபி ஸததம்பரோக்ஷத:ப்ரஶம்ஸிதா:பரிகலயே தஸ்யஶ்ரியம்॥ தாந்திஶ்ஶாந்திஶ்ஶுசித்வம் விஷயவிஜயிதாதீரதாநிஸ்ஸ்ப்ருஹத்வம் ஶேஷத்வம்ஶ்ரீஶதத்தாஸஜநவிஷயகம் பாரதந்த்ர்யஞ்சதத்ர-அக்ஷோபத்வம்படுத்வம் ம்ருதுஸமவஸிதா நிர்பரத்வாநஸூயே யஸ்மிந்நாஜாநஸித்தம்ஸகலுவிஜயதேவேங்கடாசார்யவர்ய:॥ யதீய சரிதம்ஸதாம்ஸஞ்சரிதவ்யவஸ்தாபகம்யதீயவசநம்பரம்ஸகலஸம்ஶயோந்மூலநம் - யதீயகருணாகதிஸ்ஸகலதர்மஸந்த்யாத்மநாம்ஸந ஶ்ஶரணமஸ்த்வஸௌஸகலதந்த்ர நிர்வாஹக:” என்றுப்ரதிவாதி பயங்கரம்அண்ணன் அருளிச்செய்தார்.

பின்புவேதாந்ததேஶிகன் திருவடிகளிலே (உ)“அத்யம்யதீந்த்ரஶிஷ்யாணாம்” என்கிறகூரத்தாழ்வானைப்போலே முதலிலேஆஶ்ரயித்து ஸகலஶாஸ்த்ரங்களையும் அதிகரித்து அதிஸமர்த்தராய்(ங) “ஹஸ்தீஶம்லோகவிக்யாதம் கௌண்டிந்யம்விதுஷாம்வரம்-ராமாநுஜார்யஸித்தாந்தஸ்தாபநாசார்யமாஶ்ரயே” என்னும்படி இருந்துள்ள வீரவல்லிப்பேருளாளையன் அதிவிரக்தராய் ஸந்ந்யஸிக்கவேணும் என்று ப்ரார்த்திக்க,வேதாந்ததேஶிகனும் ப்ரேஷமந்த்ரோபதேஶபுரஸ்ஸரமாக ஸந்ந்யஸிப்பித்துப் பேருளாளஜீயர் என்று திருநாமம்ப்ராஸாதித்தருளினார். வீரவல்லிக்ருஷ்ணமாசார்

(க)“𑌰𑌪𑌿 𑌸𑌤𑌤𑌂 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌤𑌃 𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌿𑌤𑌾𑌃 𑌪𑌰𑌿𑌕𑌲𑌯𑍇 𑌤𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑌿𑌯𑌂 ॥ 𑌦𑌾𑌂𑌤𑌿𑌶𑍍𑌶𑌾𑌂𑌤𑌿𑌶𑍍𑌶𑍁𑌚𑌿𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌷𑌯𑌵𑌿𑌜𑌯𑌿𑌤𑌾𑌧𑍀𑌰𑌤𑌾 𑌨𑌿𑌸𑍍𑌸𑍍𑌪𑍃𑌹𑌤𑍍𑌵𑌂 𑌶𑍇𑌷𑌤𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍀𑌶𑌤𑌦𑍍𑌦𑌾𑌸𑌜𑌨𑌵𑌿𑌷𑌯𑌕𑌂𑌪𑌾𑌰𑌤𑌂𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌚 𑌤𑌤𑍍𑌰 । 𑌅𑌕𑍍𑌷𑍋𑌭𑌤𑍍𑌵𑌂𑌪𑌟𑍁𑌤𑍍𑌵𑌂 𑌮𑍃𑌦𑍁𑌸𑌮𑌵𑌸𑌿𑌤𑌾 𑌨𑌿𑌰𑍍𑌭𑌰𑌤𑍍𑌵𑌾𑌨𑌸𑍂𑌯𑍇 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌾𑌜𑌾𑌨𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌸 𑌖𑌲𑍁 𑌵𑌿𑌜𑌯𑌤𑍇 𑌵𑍇𑌂𑌕𑌟𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌰𑍍𑌯𑌃 ॥ 𑌯𑌦𑍀𑌯𑌚𑌰𑌿𑌤𑌂𑌸𑌤𑌾𑌂 𑌸𑌂𑌚𑌰𑌿𑌤𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑌕𑌂 𑌯𑌦𑍀𑌯𑌵𑌚𑌨𑌂𑌪𑌰𑌂 𑌸𑌕𑌲 𑌸𑌂𑌶𑌯𑍋𑌨𑍍𑌮𑍂𑌲𑌨𑌂 । 𑌯𑌦𑍀𑌯𑌕𑌰𑍁𑌣𑌾𑌗𑌤𑌿𑌸𑍍𑌸𑌕𑌲𑌧𑌰𑍍𑌮𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌂𑌸𑌨𑌶𑍍𑌶𑌰𑌣𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑌸𑍌𑌸𑌕𑌲𑌤𑌂𑌤𑍍𑌰 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌹𑌕𑌃.” (உ)“𑌅𑌤𑍍𑌯𑌂𑌯𑌤𑍀𑌂𑌦𑍍𑌰𑌶𑌿𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂.” (ங)“𑌹𑌸𑍍𑌤𑍀𑌶𑌂𑌲𑍋𑌕𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌕𑍌𑌂𑌡𑌿𑌨𑍍𑌯𑌂𑌵𑌿𑌦𑍁𑌷𑌾𑌂𑌵𑌰𑌂 । 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌂𑌤𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇.”

யருக்கும் ஸந்ந்யாஸம்ப்ரஸாதித்து வெண்ணெய்க்கூத்தஜீயர் என்றும் கொமாண்டூரேப்பைக்கும் ஸந்ந்யாஸம்ப்ரஸாதித்து ப்ராபாகரஜீயர்என்றும் திருநாமம் ப்ரஸாதித்தருளினர்.

பின்புபேரருளாளஜீயர் முதலானஜீயர்களாயும்,க்ருஹஸ்தர்களாயுமிருந்துள்ளமுதலிகளுக்கு வேதாந்தங்களையும்ரஹஸ்யங்களையும் ப்ரஸாதித்துக்கொண்டிருக்கும்போது இவருடைய ஆசார்யத்வபூர்த்தியைக்கண்டு (க)“ஸ்ரீபாஷ்யம்விரசய்யஸம்யமிவர:” என்கிறபடியே,உடையவரவதாரமன்றோ?இவர் என்றறிந்துபிள்ளைலோகாசார்யரும் ஸ்ரீபாஷ்யத்தை அதிகரித்து ரஹஸ்யார்த்தங்களையும் பல்காலங்கேட்டு அந்தப்ரபாவத்தை ‘சீரொன்றுதூப்புல் திருவேங்கடமுடையான்,பாரொன்றச்சொன்ன பழமொழியுள்—ஓரொன்று, தானேயமையாதோ தாரணியில்வாழ்வார்க்கு,வானேறப்போமளவும்வாழ்வு” என்று அருளிச்செய்தார். இப்படி அநவரதபாஷ்யப்ரவசநத்தை (உ)“த்ரிம்ஶத்வாரம்ஶ்ராவிதஶாரீரகபாஷ்ய:”என்று தாமேஅருளிச்செய்தார். இப்படிக்கு வேதாந்தாசார்யராயும் ஸர்வதந்த்ரராயும் கவிதார்க்கிகஸிம்ஹராயும் கொண்டாடும்படியிருக்கையாலேயன்றோ பிள்ளைலோகாசார்யர் ஸ்ரீபாஷ்யத்தை அதிகரித்தார்! அப்படியிருக்க,இவருக்கு ஒரு குறைவுண்டாக்கவேண்டும் என்று அழகியமணவாளப்பெருமாள்நயினர் முதலான சில அஸூயர்கள் நம்தேசிகனை வாதத்துக்கழைக்க,தேசிகனும்(ங) “யதீஶ்வரஸரஸ்வதீஸுரபிதாஶயா நாம்ஸதாம் வஹாமிசரணாம்புஜம்ப்ரணதிஶாலிநாமௌளிநா” என்றும் ஸ்ரீவைஷ்ணவர்களோடே வாதம்பண்ணுவதில்லையென்றும் அருளிச்செய்து வாராமலிருக்க, அஸாமர்த்யத்தாலே வாராமல்இருக்கிறார் என்று தேசிகன்திருமாளிகைவாசலில் தங்கள் பாதரக்ஷைகளைக்கட்டி அருகேபார்த்துக்கொண்டிருக்க,தேசிகனும் கார்யவஶத்தாலே புறப்படும்போது அந்தப்பாதரக்ஷைகள் தம்ஶிரஸிலேபட,தேசிகனும் (ச)“கர்மாவலம்பகா:கேசித் கேசிஜ்ஜ்ஞாநாவலம்பகா:- வயந்துஹரிதாஸாநாம் பாதரக்ஷாவலம்பகா:”என்றுஅநுஸந்தித்தருளி நிர்மலராயிருக்க,

---

(க)“ஶ்ரீபாஷ்யம் விரசய்ய ஸம்யமிவர:” (உ)“த்ரிம்ஶத்வாரம் ஶ்ராவித ஶாரீரகபாஷ்ய:” (ங)“யதீஶ்வர ஸரஸ்வதீ ஸுரபிதாஶயா நாம் ஸதாம் வஹாமி சரணாம்புஜம் ப்ரணதிஶாலிநா மௌளிநா.” (ச)“கர்மாவலம்பகா: கேசித் கேசிஜ்ஜ்ஞாநாவலம்பகா: । வயந்து ஹரிதாஸாநாம் பாதரக்ஷாவலம்பகா:.”

அவர்களும் இந்தஆஜ்ஞாநஸித்தமான ஆத்மகுணத்தில் ஈடுபட்டு அபராதக்ஷாமணம்பண்ணிக்கொண்டார்கள்.

பின்பு, ஒருநாள் பிதாவான அநந்தஸூரிகளுடைய திருவத்யயநத்தில் உடையவருக்குவிஷஸஹிதமான பிக்ஷை யிட்டாற்போலவும், சக்ரவர்த்தித்திருமகனுக்குக் கூனி தீங்குநினைத்தாற்போலவும், கண்ணனுக்குக் கம்ஸன் தீங்குநினைத்தாற்போலவும் தேசிகனுடைய வைபவம் ப்ரஸித்தமாகும்படிச் சிலஅஸூயர்கள் தீங்கு உண்டாக்கவேண்டுமென்று துராலோசனைபண்ணி நிமந்த்ரிதஸ்ரீவைஷ்ணவர்களைச் சிலத்ரவ்யங்களைக்கொடுத்தும் அதற்கு அங்கீகாரமில்லாமலிருக்க, ப்ரமமுண்டாகும்படி சிலமாயப்பொடிகளைத்தூவி அவர்கள்புஜிக்கும்படிக்கும்பண்ணுவித்துப்பேரருளாளசீயர் முதலான பெருங்கூட்டத்துமுதலிகளுக்குத் தேஹோபாதிகளும்ப்ரமமும் உண்டாகும்படிக்கும் பண்ணுவித்து, அருகேஇருந்து, என்செய்கிறார்? என்று பார்த்துக்கொண்டிருக்க, வேதாந்ததேசிகனும் (க)"பயம்பயாநாமபஹாரிணிஸ்திதே மநஸ்யநந்தேமமகுத்ர திஷ்டதி" என்றும் (உ)"ஸத்வாஸக்தமதி:க்ருஷ்ணே தஸ்யமாநோமஹோரகை:-நவிவேதாத்மநோகாத்ரம் தத்ஸ்ம்ருத்யாஹ்லாதஸம்ஸ்தித:" என்றும்சொல்லுகிற ப்ரஹ்லாதாழ்வானுடைய அத்யவஸாயவிசேஷத்தையுடையவராகையாலும்ஸதாசார்யப்ரஸாதத்தாலே மஹாமந்த்ரம் கையுந்திருக்கையால்க்ஷுத்ரமந்த்ரங்களுக்கு ஒருகாலும் ப்ரவேசம் கொடாமலிருக்கும்படிபண்ணின ஸ்ரீஹயக்ரீவப்ரஸாதத்தாலும் எப்போதும் தெளிந்தவராயிருக்கையாலே மத்யாஹ்நஸமயத்தில் ஶ்ராத்தவிக்நம் பண்ணிவைத்து எம்பெருமான்சோதிக்கநினைத்தான்" என்று அறிந்து தாமும்நீராடி, நித்யகைங்கர்யங்களையும் செய்து குலாராதநமான பேரருளாளனையும் ஸ்வப்நலப்தரான ஸ்ரீஹயக்ரீவரையும் விசேஷாராதநம் கொண்டருளப்பண்ணுவித்து ஶ்ராத்தஹோமாதிகளையும் செய்தருளி இலைத்தளிகையில் இன்னடிசில் கறியமுது திருப்பண்ணியாரம் முதலானவைகளையும் பரிமாறிக் கூர்ச்சாவாஹிதர்களான தேவபித்ரு விஷ்ணுக்களுக்குத் தாநாதிகளைப் பண்ணி தேவபித்ரு வைஷ்ணவஸூக்தங்களையும் ஜபித்துக்கொண்டிருந்தபின்பு, இலை

(க)"ഭയംഭയാനാമപഹാരിണിസ്ഥിതേ മനസ്യനന്തേ മമ കുത്ര തിഷ്ഠതി." (உ)"സ ത്വാസക്തമതിഃ കൃഷ്ണേ ദശ്യമാനോ മഹോരഗൈഃ നവിവേദാത്മനോ ഗാത്രം തത്സ്മൃത്യാഹ്ലാദസംസ്ഥിതഃ."

த்தளிகைகளை மாற்றும்போது இன்னடிசில் முதலானவைகளை ஸாவஶேஷங்களாக அமுதுசெய்திருக்கக்கண்டு, பகவதநுக்ரஹத்தை ஸந்தோஷித்துக்; கூர்ச்சாவாஹிததேவபித்ருவிஷ்ணுத்வாஸநத்தையும் பிண்டதாநங்களோடே ஶ்ராத்த ஸமாப்தியையும் பண்ணி தீர்த்தாதிகளை ஸ்வீகரித்துக்கொண்டிருக்க, அருகேபார்த்துக்கொண்டிருந்த அஸூயையர்களும் மூன்று ஸ்ரீவைஷ்ணவர்கள் அபூர்வமாய்வந்து மத்யாஹ்நத்தில் எழுந்தருளி எண்ணெய்க்காப்புச்சாத்திக்கொண்டுநீராடிஶ்ராத்தத்தில்வரிக்கப்பட்டுஅமுதுசெய்து உத்வாஸநம்பண்ணினவாறே வாசலிலே அடைக்காயமுதுசெய்து கோயிலைப்ரதக்ஷிணமாகஎழுந்தருளிப் போகக்கண்டு தேஶிகன்ஸந்நிதியில்வந்து இப்படிமூன்றுதிருநாமங்கள் எழுந்தருளி நடத்திப்போந்தமையை விண்ணப்பஞ்செய்துஅவர்களார்? என்று கேட்க, அப்படியோ? கோயிற்றிருமலைபெருமாள்கோயில்எம்பெருமான்கள் விஶேஷகடாக்ஷம்பண்ணினார்கள் என்றுஉள்மகிழ்ந்துதாமும்நடத்திப்போந்தவ்ருத்தாந்தத்தையும் அருளிச்செய்ய, அவர்களும், ஆஶ்சர்யப்பட்டு அபசாரக்ஷாமணம்பண்ணிக்கொண்டு உள்நடுங்கியிருக்க, அந்தக்ஷேத்ரமும்நிவ்ருத்தமாய் நிமந்த்ரிதஸ்ரீவைஷ்ணவர்களும்உள்நடுங்கிக்ஷாமணம்பண்ணிக்கொள்ள, முதலிகளும் ஸ்வஸ்தர்களாகத்தெளிந்து தீர்த்தாதிகளைஸ்வீகரிக்க, வேதாந்ததேஶிகனும், இன்புறுமிவ்விளையாட்டுடையான், எம்பெருமான் என்றுவிஸ்மிதராய் நித்யகைங்கர்யங்களையும்ஸித்தாந்தப்ரவசநத்தையும்பண்ணிக்கொண்டெழுந்தருளியிருந்தார்.

பின்பு, ஒருநாள் வேதாந்ததேஶிகனும் ஏகாதஶியில் பெரியபெருமாளைத்திருவடிதொழுது நிற்கும்போது சிலர் அர்ச்சகருக்கு த்ரவ்யங்களைக்கொடுத்துத் தீர்த்தாதிகளுடன் முத்காந்நத்தையும் கொடுக்கும்படிசெய்விக்க, அர்ச்சகரும் அப்படியேசெய்ய, தேஶிகனும் தீர்த்தாதிகளைஸ்வீகரித்து முத்காந்நத்தையும் ஶிரஸாவஹித்து(க) "ஶ்ருதிஸ்ஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்யவர்ததே- ஆஜ்ஞாச்சேதீமமத்ரோஹீமத்பக்தோபிநவைஷ்ணவ:" என்று முற்காலத்தில் நியமித்தருளித்து, இப்போது அதற்கு விருத்தமாக இப்படிக்குநியமித்தருளித்துஎன்செய்யக்கடவது? என்றுவிண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் ஓரர்ச்சகனிடத்தில் ஆவேசித்துஇப்படிச்செய்த அர்ச்சகரைச் சிக்ஷித்து நாமிப்படிக்குநியமிக்கவில்லை என்

(க) "ஶ்ருதிஸ்ஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்ததே। ஆஜ்ஞாச்சேதீ மமத்ரோஹீ மத்பக்தோபி நவைஷ்ணவ:."

றருளிச்செய்ப, அந்த அர்ச்சகரும் த்ரவ்யலோபத்தாலே செய்தேன் என்று க்ஷாமணம்பண்ணிக்கொள்ள, இத்தையெல்லாரும்பார்த்து இத்தேஸிகன் அநுஷ்டாநமே பெரியபெருமாள் திருவுள்ளம் என்றறிந்து ப்ரவணராய்ப்போந்தார்கள்.

பின்பு ஒருநாள் சிலர் பக்தியாலே அமுதுபடியோடே பணங்களைக்கலந்து உபாதாநமாகஸமர்ப்பிக்க, அவைகளைத் தேவிகள் ஸோதித்துஎடுக்கும்போது, இதென்ன? என்றுகேட்க, தேஸிகனும் அவைகளைப் புழுக்கள்என்று கோலாலே தள்ளிவிட, அத்தைப்பார்த்து இது அவதார விஸேஷமாகையாலே இப்படிக் கிருப்பது என்று போரஉகந்தார்கள்.

பின்பு (உ)“யஸ்யவிக்ரமமாஸாத்ய ராக்ஷஸாநிதநங்கதா: தம்மந்யேராகவம்வீரம் நாராயணமநாமயம்” என்றுபுடையுண்ட காலத்திலறிந்து பின்புமறந்த ராவணாதிகளைப்போலே இருந்துள்ள மதாந்தரஸ்தர்களோடேவாசியற இந்தஸ்ஸித்தாந்தத்திலே ஜ்ஞாதாக்களாயிருக்கிற அழகிய மணவாளப்பெருமாள் நயினார் முதலானாரும் நம்தேஸிகன் வைபவத்தை ஸஹியாமல் அழகிய மணவாளன் திருவோலக்கத்தில் இன்று ராத்ரியில் ஆயிரம் ஸ்லோகம் பண்ணினவர்களுக்கே, கவிதார்க்கிகஸிம்ஹ ரென்கிற பிருதுசொல்லக்கடவது, என்றுதேஸிகரைநோக்கிச்சொல்ல, அழகியமணவாளனும் ஓரர்ச்சகனிடத்தில் ஆவேசித்து “இன்றுராத்ரியில் ஆயிரம்ஸ்லோகம் பண்ணினவரைக் கவிதார்க்கிகஸிம்ஹரென்று சொல்லக்கடவது” என்று இருவருக்கும் நியமித்தருள, அழகியமணவாளப்பெருமாள்நயினாரும், பதகமலஸஹஸ்ரம் பண்ணுகிறோம் என்றுசொல்லிப்போய் முன்னூறுஸ்லோகம்பண்ண, போது விடிந்தது; தேஸிகனும், பாதுகாஸஹஸ்ரம் விண்ணப்பஞ்செய்கிறேன், என்று திருமாளிகையில்எழுந்தருளி ப்ரதமயாமத்தில்நித்ய கைங்கர்யங்களையும் செய்தருளி த்விதீயயாமத்தில் பாதுகாஸஹஸ்ரத்தைத்தலைக்கட்டி த்ருதீயயாமத்தில் திருக்கண்வளர்ந்தருளி சதுர்த்தயாமம்முதலாக நித்யகைங்கர்யங்களையும் செய்து அழகிய மணவாளனைத் திருவடிதொழுது திருவோலக்கத்தில்நிற்க, அழகிய மணவாளப்பெருமாள்நயினாரும் வந்துநிற்க, ஆயிரம் ஸ்லோகங்களையும்விண்ணப்பஞ்செய்யும்படி இருவருக்கும் அருளப்பாடிட்டருள,

---

(உ) “𑌯𑌸𑍍𑌯𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑌿𑌧𑌨𑌂𑌗𑌤𑌾𑌃 । 𑌤𑌂𑌮𑌨𑍍𑌯𑍇 𑌰𑌾𑌘𑌵𑌂𑌵𑍀𑌰𑌂 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌮𑌨𑌾𑌮𑌯𑌂.”

தேசிகனும் பாதுகாஸஹஸ்ரத்தை விண்ணப்பஞ்செய்ய, அழகிய மணவாளப்பெருமாள்நயினாரும் ஆயிரம் தலைக்கட்டாமையாலே அதோமுகராயிருக்க, பெருமாளும் “கவிதார்க்கிகஸிம்ஹர்” என்று அருளிப்பாடிட்டருளிவரிசைகளையும்ப்ரஸாதிக்க, தேசிகனும் அவ்வரிசைகளைப்பெற்று உள்மகிழ்ந்தும் நயினார் திருவுள்ளமுகக்கும்படி (க) “ஸந்தேஸந்தகராயுவதிஸ்ஸா தஸுதமத்யந்ததுர்பரம்சடிதி-கரிணீசிராயஸந்தே ஸகலமஹீபாலலாளிதம்களபம்” என்று நைச்யாநுஸந்தாநம்பண்ண, அத்தைக்கண்டு பெருமாளும் பெரியோர்களும் திருவுள்ளமுகந்தருள, தேசிகனும் ராமாநுஜஸித்தாந்தத்தில்அஸந்தியையாலே ஒருவரும் கெடலாகாதுஎன்று திருவுள்ளம் பற்றி (உ) “ஆபாதசூடமநபாயிநிதர்ஸநேஸ்மிந் நாஸாஸநீயமபரம் நவிபக்ஷஹேதோ:- ஆபாதஸாந்திமதுராந்புநரஸ்மதீயா நந்யோந்யவைரஜநநீவிஜஹாத்வஸந்த்யா” என்று விண்ணப்பஞ்செய்து ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்க நயினார்முதலானாரும் தேசிகன்திருவடிகளிலே ப்ரவணராயிருந்தார்கள்.

பின்பு ஒருராத்ரியில் நம்நியமநத்தைத் தலைக்கட்டக்கடவீர் என்று நம்மாழ்வார் ஸ்வப்நம்காட்டியருள, தேசிகனும் திருக்குருகைப்பிரான்பிள்ளான் உடையவர்நியமநத்தாலே செய்தருளின பகவத்விஷயமான ஆறாயிரப்படிக்கு அப்பிள்ளார் உபந்யாஸத்தைக்கொண்டு வ்யாக்யாநமாக எழுபத்துநாலாயிரப்படி செய்யக்கோலி அவதாரிகையில் ஆநுஷங்கிகமாகத் திருமந்த்ரார்த்தமான நாலாயிரப்ரபந்தங்களுடைய தாத்பர்யத்தை ஸங்க்ரஹமாக உபபாதித்துப் பின்பு ஆறாயிரப்படி வ்யாக்யாநமாகத்திருவாய்மொழி அர்த்தத்தைப்ரதிபாதித்து எழுபத்துநாலாயிரப்படியைத்தலைக்கட்டி அதற்கு நாலாயிரக்கருத்து என்று திருநாமம் சாற்றி, அமலநாதிபிரானுக்கு முநிவாஹநபோகம் என்று ஒருவ்யாக்யாநமும், கண்ணிநுண்சிறுத்தாம்புக்கு மதுரகவிஹ்ருதயம்என்று ஒருவ்யாக்யாநமும்செய்தருளி, ஸம்ஸ்க்ருதத்தால்த்ரமிடோபநிஷத்ஸாரமும்,

---

(க) “𑌸𑌂𑌧𑌤𑍍𑌤𑍇 𑌕𑌲𑌭𑌯𑍁𑌵𑌤𑌿𑌸𑍍𑌸𑍁𑌤𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌦𑍁𑌰𑍍𑌭𑌰𑌂 𑌝𑌟𑌿𑌤𑌿 । 𑌕𑌰𑌿𑌣𑍀 𑌚𑌿𑌰𑌾𑌯 𑌸𑌂𑌧𑌤𑍍𑌤𑍇 𑌸𑌕𑌲𑌮𑌹𑍀𑌪𑌾𑌲𑌲𑌾𑌲𑌿𑌤𑌂 𑌕𑌲𑌭𑌂.” (உ) “𑌆𑌪𑌾𑌦𑌚𑍂𑌡𑌮𑌨𑌪𑌾𑌯𑌿𑌨𑌿 𑌦𑌰𑍍𑌶𑌨𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌨𑌾𑌶𑌾𑌸𑌨𑍀𑌯𑌮𑌪𑌰𑌂 𑌨 𑌵𑌿𑌪𑌕𑍍𑌷𑌹𑍇𑌤𑍋𑌃 । 𑌆𑌪𑌾𑌤𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌧𑍁𑌰𑌾𑌨𑍍 𑌪𑍁𑌨𑌰𑌸𑍍𑌮𑌦𑍀𑌯𑌾𑌨𑍍 𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌵𑍈𑌰𑌜𑌨𑌨𑍀 𑌵𑌿𑌜𑌹𑌾𑌤𑍍𑌵𑌸𑌂𑌧𑍍𑌯𑌾.”

த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளியும் செய்தருளி, செந்தமிழ்ப் பாட்டுக்களால் திருமந்த்ரச்சுருக்கு, த்வயச்சுருக்கு, சரமஶ்லோகச்சுருக்கு, கீதார்த்தஸங்க்ரஹச்சுருக்கு, கீதையில் சொன்ன ஆஹாரஶுத்தியைச் சொல்லுகிற ஆஹாரநியமப்பாட்டுக்களையும் செய்தருளி, அவைகளை முதலிகளுக்கு ப்ரஸாதித்துக்கொண்டு, நம்மாழ்வார் நாதமுநிகள் நியமநத்தைத்தலைக்கட்டி, அவர்கள் திருவுள்ளத்தை உகப்பித்து எழுந்தருளியிருக்கிற காலத்திலே வடதேஶத்திலே தேஶிகன் திருவடிகளாலே திருத்தப்பட்டவனாய்ப் பாரமைகாந்த்யதர்மத்தில் ஊற்றமுடையவனாயிருக்கிற ஸர்வஜ்ஞஸிங்கப்பநாயகன் சில ஸ்ரீவைஷ்ணவர்களை அனுப்பித்தனக்கு விஶேஷார்த்தங்களை ப்ரஸாதித்தருளவேணும் என்று ப்ரார்த்திக்க, தேஶிகனும் அவனுடையசித்தஶுத்தியையும் அறிந்து ஹிதோபதேஶமாக ஸுபாஷிதநீவியையும், தத்வஸந்தேஶத்தையும், ரஹஸ்யஸந்தேஶத்தையும், ரஹஸ்யஸந்தேஶவிவரணத்தையும் செய்தருளி அவைகளைப்ரஸாதித்து (க)"ஸத்வஸ்தாந்நிப்ருதம்ப்ரஸாதயஸதாம்வ்ருத்திம்வ்யவஸ்தாபய த்ரய்யப்ரஹ்மவிதாகஸஸ்த்ருணமிவ த்ரைவர்கிகாந்பாவய- நித்யேஶேஷிணிநிக்ஷிபந்நிஜபரம் ஸர்வம்ஸமீஹ ஸ்ரீஸகேதர்மம்தாரயசாதக ஸ்வகுஶலிந்தாராதரைகாந்திந:" என்றுநியமித்தருளி அனுப்பிக்க, ஸர்வஜ்ஞஸிங்கப்பநாயகனும் ஸமஸ்தபிருதுகளோடே எதிர்கொண்டு ஸ்ரீமுகத்தை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு பாரமைகாந்த்யநிஷ்டனாய் க்ருதக்ருத்யனாய் தேஶிகன் திருவடிகளிலே நித்யபக்தனாயிருந்தான்.

இப்படிக்கொத்த தேஶிகன்விஷயத்தில் நயினார்முதலானார் பண்ணின அதிக்ஷேபாதிகளை (உ)"ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரஸ்யவேங்கடேஶஸ்ய தீமத: குர்வதேவமாநநாந்துகேசநாதுநோத்பவா:- ஹந்த ஹந்தாரமக்ருஷ்ணதூஷணாபிதாயிநாம் கிந்நுசித்ரமத்ரசைத்யராவணாநுஸாரிணாம்" என்றுப்ரதிவாதிபயங்கரம் அண்ணனும்அருளிச்செய்தார்.

(க) "सत्त्वस्थान्निभृतं प्रसादय सतां वृत्तिं व्यवस्थापय त्रय्यन्तब्रह्मविदागसस्तृणमिव त्रैवर्गिकान्भावय। नित्ये शेषिणि निक्षिपन्निजभरं सर्वंसहः श्रीसखे धर्मं धारय साधक स्वकुशलिन् धाराधरैकान्तिनः॥"

(உ) "सर्वतन्त्रस्वतन्त्रस्य वेङ्कटेशस्य धीमतः। कुर्वतेऽवमाननां तु केचनाधुनोद्भवाः। हन्त हन्त रामकृष्णदूषणाभिधायिनां किं नु चित्रमत्र चैद्यरावणानुसारिणाम्॥"

தேஶிகன் நயினாராசார்யர் வைபவங்கள்.

(க) ஶ்ராவணே மாஸி ரோஹிண்யாம் ஜாதம் வேங்கடதேஶிகாத்|
விஶ்வாமித்ராந்வயாப்தீந்தும் வரதார்யமஹம் பஜே.

இப்படி ஆஸேதுஹிமாசலம் ப்ரஸித்தராய் பகவத்பாகவதாசார்ய பரிபூர்ணகடாக்ஷபாத்ரராயிருக்கிற வேதாந்ததேஶிகனுக்குப் பேரருளாளர் உமக்கு நம்முடைய அம்ஶமாய் ஒருபுத்ருண்டாவர் அவருக்கு நம்முடைய திருநாமத்தைச் சாற்றும் என்றும் (உ) "தர்மப்ரஜார்த்தம் வ்ருணீமஹே" என்று வரித்தத்தை ஸபலமாக்கக்கடவீர் என்றும் ஸ்வப்நம் காட்டியருள, தேஶிகனும் தம் திருவுள்ளத்திற்கநுகுணமாயில்லாத பத்நியை த்யஜித்து ஸந்ந்யஸித்தருளின உடையவர் போலன்றிக்கே தமக்கு ஸமாநாத்மகுணபௌஷ்கல்யமுடைய தர்மபத்நியினிடத்திலும் முப்பத்திரண்டு ஸம்வத்ஸரம் விஷயவிரக்தராயிருக்கையாலே பின்பு பேரருளாளர் நியமநப்படிக்கு ஒரு ஶுபதிநத்தில் நிஷேகம் செய்தருள, தேஶிகன் தேவிகளும் அன்று முதல் கர்பத்தைத் தரித்துக்கொண்டிருக்க, கலி நாலாயிரத்து நானூற்றுப்பதினெட்டாவதான நளவர்ஷத்தில் ஆவணி மாஸத்தில் ரோஹிணீ நக்ஷத்ரத்தில் ஒரு குமாரரவதரிக்க, அவருக்குத் தேஶிகனும் ஜாதகர்மம் பண்ணி வரதனென்று திருநாமம் சாற்றியருளி அக்ஷராரம்பம் முதலாக வேதவேதாந்தங்களோடே திருமந்த்ரமந்த்ரார்த்தங்களையும் ஸகலஶாஸ்த்ரங்களையும் தாமே ப்ரஸாதித்தருள, அந்த வரதாசார்யரும் பேரருளாளர் அம்ஶமாகையாலே (ந) "பிதுஶ்ஶதகுணம் புத்ர:" என்னும்படி அதிமேதாவியாயும் ஸாராம்ஶவேதநத்தில் அதிநிபுணராயுமிருந்துகொண்டு ஸமஸ்தவிஶேஷார்த்தங்களையும் பெற்றுக் கலியுகத்தில், நாலாயிரத்து நானூற்று முப்பதாவதான விபவவர்ஷம் சித்திரைமாஸம் புநர்வஸு நக்ஷத்ரத்தில் ஸ்ரீபாஷ்யத்தை அதிகரிக்கும்போது முன்பு பேரருளாளஜீயர் விண்ணப்பஞ்செய்த (ச) "நம: பதமிதம் ப்ரூயாத்" என்கிற தனியனோடே தாமும் (ரு) "ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்கிககேஸரி வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நி

(க) ஶ்ராவணே மாஸி ரோஹிண்யாம் ஜாதம் வேங்கடதேஶிகாத் | விஶ்வாமித்ராந்வயாப்தீந்தும் வரதார்யமஹம் பஜே. (உ) "தர்மப்ரஜார்த்தம் வ்ருணீமஹே." (ந) "பிதுஶ்ஶதகுணம் புத்ர:." (ச) "நம: பதமிதம் ப்ரூயாத்." (ரு) "ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்கிககேஸரீ | வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நி

(க)தத்தாம்ஸதாஹ்ருதி" என்றுஒருதனியனை விண்ணப்பஞ்செய்து சேர்த்து அநுஸந்திக்க, அத்தை ஸுதர்ஶநபட்டர் முதலானபெரியோர்கள் இனிஇத்தனியனையே அநுஸந்தித்து விஶேஷார்த்தங்களைக்கேட்கவேண்டும் என்றுநியமித்தருள, தேஶிகனும்இதுபேரருளாளன்நியமநவிஶேஷமன்றோ?என்றுஸுதர்ஶநபட்டர்நியமநத்தையும் வரதாசார்யரையும்போர உகந்தருள, இத்தைக் கண்டுபேரருளாளஜீயர் முதலான முதலிகளும் கூரத்தாழ்வான் முதலானோர் உடையவருக்கு ஜ்ஞாநபுத்ரரான திருக்குருகைப்பிரான்பிள்ளானிடத்தில்போலே ஔரஸபுத்ரரான வரதாசார்யரிடத்தில்அதிப்ரவணராயிருந்தார்கள்.

பின்பு ஒருகால் தேஶிகனும் தம் திருமாளிகைவாசலில் க்ரந்தாவலோகநம் பண்ணிக்கொண்டிருக்க, கந்தாடை லக்ஷ்மணாசார்யரும் பஹுஶிஷ்யர்களுடனே தேஶிகன் எழுந்தருளியிருக்கிற திருவீதிவழியாக எழுந்தருள, க்ரந்தாவலோகநத்வரையாலே தேஶிகனும் பாராமலிருக்க, அவர்ஶிஷ்யர்களான சாற்றுதவைஷ்ணவர்கள் தேஶிகன்திருவடிகளைப்பிடித்து இழுத்துவிட, தேஶிகனும் (உ)"க்நந்தம்ஶபந்தம் பருஷம்வதந்தம் யோப்ராஹ்மணம் நப்ரணமேத்யதாவத் - ஸபாபக்ருத்ப்ரஹ்ம தவாக்நிதக்தோ வத்யஶ்ச தண்ட்யஶ்சநசாஸ்மதீய:" என்கிற பகவத் வாக்யத்தை நினைத்து அருகே இருந்த எம்பார்திருமாளிகையைக்கடந்து எழுந்தருளுகிற கந்தாடைலக்ஷ்மணாசார்யரை, அஜ்ஞாநத்தால்வந்த அடியேன் அபராதத்தை க்ஷமித்தருளவேணும் என்று தண்டன் ஸமர்ப்பித்து நிரபராதியை இப்படிக்குச் செய்யலாமோ? என்று வந்த அஹந்தையைக் குறித்து (ங)"அஹந்தேநாஹந்தே விஹாரணபதம் தேஶிகஶிரஸ்ஸ்வதந்தேநஸ்ஸ்வாந்தே ஸபதி கதலந்தேஹவிஷயா:- அநாயாஸாயாஸாமஹிபதிஶயாஸாபகவதீ தராதாராதாராதரநிகரஸாதாரணருசி:" என்று தந்திருவுள்ளத்

(க)𑌤𑌤𑍍𑌤𑌾𑌂 𑌸𑌦𑌾 𑌹𑍃𑌦𑌿." (உ)"𑌘𑍍𑌨𑌨𑍍𑌤𑌂 𑌶𑌪𑌨𑍍𑌤𑌂 𑌪𑌰𑍁𑌷𑌂𑌵𑌦𑌨𑍍𑌤𑌂𑌯𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌨𑌪𑍍𑌰𑌣𑌮𑍇𑌦𑍍𑌯𑌥𑌾𑌵𑌤𑍍। 𑌸𑌪𑌾𑌪𑌕𑍃𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌦𑌵𑌾𑌗𑍍𑌨𑌿𑌦𑌗𑍍𑌧𑍋 𑌵𑌧𑍍𑌯𑌶𑍍𑌚 𑌦𑌣𑍍𑌡𑍍𑌯𑌶𑍍𑌚𑌨𑌚𑌾𑌸𑍍𑌮𑌦𑍀𑌯𑌃." (ங)"𑌅𑌹𑌨𑍍𑌤𑍇𑌨𑌾𑌹𑌨𑍍𑌤𑍇𑌵𑌿𑌹𑌾𑌰𑌣𑌪𑌦𑌂 𑌦𑍇𑌶𑌿𑌕𑌶𑌿𑌰𑌃𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑍇𑌨𑌃𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑍇𑌸𑌪𑌦𑌿𑌕𑌦𑌲𑌨𑍍𑌤𑍇𑌹𑌵𑌿𑌷𑌯𑌾𑌃 । 𑌅𑌨𑌾𑌯𑌾𑌸𑌾𑌯𑌾𑌸𑌾𑌮𑌹𑌿𑌪𑌦𑌿𑌶𑌯𑌾𑌸𑌾𑌭𑌗𑌵𑌤𑍀𑌤𑌰𑌾𑌤𑌾𑌰𑌾𑌤𑌾𑌰𑌾𑌤𑌰 𑌨𑌿𑌕𑌰𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌰𑍁𑌚𑌿𑌃."

தைப் பார்த்து அருளிச்செய்து முன்புபட்டர் முனிந்து கோயிலை விட்டுத் திருக்கோட்டியூரில் எழுந்தருளினாற் போலே, தேஶிக னும் ஸகுடும்பமாக முதலிகளுடனே கோயிலினின்றும் புறப் பட்டு மேனாட்டிலே முன்பு உடையவர் திருநாராயணபுரத்தை ப்ரதிஷ்டிப்பிக்கைக்காக எழுந்தருளினாற்போலே, ஒருவிஶேஷத் தை உண்டாக்குகைக்காக அந்தத்திருநாராயணனைச் செல்வப் பிள்ளையோடேகண்டு திருவடிதொழப்போவதாக எழுந்தருளி, ஸத்யமங்கலத்தில் நித்யவாஸம்பண்ணிக்கொண்டு, அவ்வூர் திருக் காவேரிக்கரையில் எழுந்தருளியிருக்கிற வரதராஜப்பெருமாள் ஸந் நிதியில் முதலிகளுக்கு ஸ்ரீபாஷ்யாதிகளை ப்ரஸாதித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

கந்தாடைலக்ஷ்மணாசார்யரும் தம்ஶிஷ்யர்களாலே பரிபவப் பட்ட தேஶிகன் தன்னை க்ஷாமணம்பண்ணிக்கொண்டது முத லானவைகளை அறியாமையாலே சிலநாள் கழிந்தவாறே தந்திரு மேனியில் வைவர்ண்யம்பிறந்து புத்ரோத்பத்தி இல்லாமலிருக்க, அவர்தேவிகள் "இந்தத் திருமேனியில் வைவர்ண்யம் வரும்படி பாகவதாபசாரம்புகுந்ததோ?" என்று கேட்க, அவரும் "ஒன்றும் அறியேன்" என்றுசொல்ல, "ஶிஷ்யர்களாலேவந்ததோ?" என்று விசாரிக்க, அவர்களும் "நம்மாசார்யர்பக்கல் ப்ரத்யுத்தாநாதிகளைப் பண்ணுமலிருந்த தேஶிகனுக்குப் பரிபவம் பண்ணினோம்" என்ன, ஆத்மாபஹாரஶ்ரேபமமான அந்தவார்த்தையைக்கேட்டுத் தம்பதி கள்இருவரும் மூர்ச்சித்துத்தாங்களே தெளிந்து "இதுமூலமாகத் தேஶிகன் மேனாட்டுக்கெழுந்தருளினார்" என்றுகேட்டு அத்யந்த மநுதப்தர்களாய் ஸத்யமங்கலத்தைச்சென்று தேஶிகனை முதலி களோடேகண்டு பரவஶர்களாய்த் தண்டன்ஸமர்ப்பித்து, (க) "அக் ருதஸாக்ருத கஸ்ஸாதுஷ்க்ருத்தர: ஶாபகுணலவலேஶ தேஶா திக:- அஶாபகுணபரஸ்ஸஹஸ்ராவ்ருத:வரதமுருதயங்கதிந்த்வாம் வ்ருணே" என்றுஶரணமடைந்துநிற்க, தேஶிகனும் இதென்ன? என் றுகேட்க, லக்ஷ்மணாசார்யரும்இந்தவ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ் செய்து ஒருஸம்வத்ஸரம் நித்யமாகத் தேஶிகன் ஸ்ரீபாததீர்த்தத் தைஸ்வீகரித்துக்கொண்டிருக்க, தீர்த்தவைபவத்தாலே தந்திரு

(க) "𑌅𑌕𑍃𑌤𑌸𑌾𑌕𑍃𑌤𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌤𑌰𑌃 𑌶𑌾𑌪𑌗𑌣𑌲𑌵𑌲𑍇 𑌶𑌦𑍇𑌶𑌾𑌧𑌿𑌕𑌃। 𑌅𑌶𑌾𑌪𑌗𑌣𑌵𑌰𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌵𑍃𑌤𑌃 𑌵𑌰𑌦𑌾𑌧𑍍𑌯𑌯𑌜𑍍𑌞𑍀𑌂 𑌕𑍍𑌷𑌾𑌂 𑌵𑍃𑌣𑍇."

மேனிவைவர்ண்யமும் தீர்ந்து தேவிகளும் கர்ப்பம்தரிக்க, தம்பதிகளிருவரும் ஸந்துஷ்டாளாய்க்கோயிலேற வெழுந்தருளவேணும் என்று ப்ரார்த்திக்க, தேஶிகனும் திருநாராயணபுரத்தில் சிலநாளிருக்கவேணும் என்றருளிச்செய்ய, தம்பதிகளும் தேஶிகன்நியமநம்பெற்றுக் கோயிலேறவெழுந்தருளி தேஶிகன் திருவடிகளிலே அத்யந்தப்ரவணாளாய் இவ்வருத்தாந்தங்களையெல்லாம் அங்குள்ளவர்களுக்கு அறிவிப்பித்துக்கொண்டிருக்கிறகாலத்தில் ஒருகுமாரரவதரிக்க, தேஶிகன் ஸ்ரீபாததீர்த்தப்ரபாவத்தாலே அவதரித்த அந்தக்குமாரருக்குத் தீர்த்தப்பிள்ளை என்று திருநாமம் சாற்றினதோடே தந்திருத்தமப்பனாருடைய திருநாமத்தையும் தேஶிகன் திருநாமத்தையும் சேர்த்து ஆயியாழ்வான்பிள்ளையென்றும் திருநாமம் சாற்றினார்.

தேஶிகன் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் வைபவங்கள்.

பின்பு, தேஶிகனும் கோயிலேறமரித்து (க) "ஸத்த்வே திவ்யே ஸ்வயமுதயதஸ் தஸ்ய தாம்ந:ப்ரஸங்காந் மஞ்ஜூஷாயாம்மரதகமிவப்ராஜமாநம்ததந்த:-சேதோதாவத்யுபஹிதபுஜம்ஶேஷபோகேஶயாநம் தீர்காபாங்கம்ஜலதிதநயாஜீவிதம்தேவமாத்யம்" என்னும்படி த்யானித்துச் சிலமுதலிகளுடனே தேவியையும் குமாரரையும் ஸத்யமங்கலத்திலிருக்கும்படி நியமித்தருளிப் பேருளாள ஜீயர் முதலான முதலிகளோடே தாம் கோயிலேறவெழுந்தருளி (உ) "ப்ராய:ப்ரபதநேபும்ஸாம்பௌந:புந்யம்நிவாரயந்- ஹஸ்தஶ்ரீரங்கபர்துர்மாமவ்யாதபயமுத்ரித:" என்று அநுஸந்தித்து ஸ்ரீரங்கநாச்சியாரையும் அழகியமணவாளனையும் திருவடிதொழுது ஸித்தாந்தப்ரவசநம்பண்ணிக்கொண்டிருக்க, வடதேஶத்தினின்றும் ஒரு மஹாவித்வான்வந்து, வேதாந்தத்தில் வாதம்பண்ணவேணும்என்ன, தேஶிகனும் பேருளாளஜீயரைநியமித்தருள, அவரும்ஶததூஷணியைக்கொண்டு மற்றும் அநேகப்ரமாணங்களாலும் யுக்திகளாலும் வேதாந்தத்தில் த்ரிராத்ரம் வாதம்பண்ணி அவனைஜயித்துத்

(க) "ஸத்த்வே திவ்யே ஸ்வயமுதயதஸ் தஸ்ய தாம்ந: ப்ரஸங்காந் மஞ்ஜூஷாயாம் மரதகமிவ ப்ராஜமாநம் ததந்த:। சேதோ தாவத் யுபஹிதபுஜம் ஶேஷபோகே ஶயாநம் தீர்காபாங்கம் ஜலதிதநயாஜீவிதம் தேவமாத்யம்." (உ) "ப்ராய: ப்ரபதநே பும்ஸாம் பௌந:புந்யம் நிவாரயந் । ஹஸ்தஶ்ரீரங்கபர்துர் மாம் அவ்யாத் அபயமுத்ரித:."

தேஸிகன்திருவடிகளிலேதண்டன்ஸமர்ப்பிக்கும்படிபண்ணுவிக்க தேஸிகனும் அந்தவாதக்ரமத்தைக் கேட்டருளி "நீர்ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரர்" என்றுஅருளிச்செய்து குளிரக்கடாக்ஷித்தருள, ஸு தர்ஶநபட்டர்முதலானோரும்அதுஒக்குமென்றுகந்தருள, தேஸிகனு ம்இப்படிப்ரஸித்தஸிஷ்யர்களோடேஇருக்கிறரென்றுசிலர் அஸூ யையாலே வெறுத்திருந்தார்கள். இவ்வர்த்தத்தை (க)"கலபதாங் கவிதார்கிககேஸரி ப்ரகடிதாம்ஶததூஷணிகாம்ஹ்ருதி- மஶகவத் ஸ்ரஜயா:கலுமாயிந: ப்ராணிபதந்திபரம்பதயோர்முஹு:॥அபிகாம மதலோபஶடாதிரஹிதா அபிநீதிப்ருதிஶாந்தி மதிதாந்திஸஹி தா: - யதிராஜமததுர்யபதபத்மவிமுகா அவலோகநதிமாந நதிபா ஹ்யவிஷயா:" என்றுப்ரதிவாதிபயங்கர மண்ணனருளிச்செய்தார்.

பின்பு எம்பெருமானார் அருளிச்செய்த கத்யத்தில் ப்ரஸாதி த்த ஶரணாகதியை ஸத்துக்கள் அநுஷ்டிக்கும்படி பண்ணிவைத்த நம் தேஸிகனுடைய வைபவத்தை ஸஹிக்கமாட்டாதகலிபுருஷன் சிலஅஸூயாளுக்களிடத்தில் ப்ரவேஸித்து ஸத்துக்களை பரிபவப் படுத்தினன்.

பின்புகலியுகத்தில் நாலாயிரத்துநானூற்றுமுப்பத்தெட்டாவ தான தாதுவர்ஷம் பங்குனிமாஸம் ப்ரஹ்மோத்ஸவத்தில்ஒருநாள் அழகியமணவாளன் திருக்காவேரிக்கரையில் ஒருதிருமண்டபத்தி லெழுந்தருளியிருக்கும்போது ஒருஸ்ரீவைஷ்ணவர் "இப்படி ஸ்ரீவை ஷ்ணவஸமூஹத்தோடே தன்னுடைச்சோதியில் அடியேனுக்கு இப்போதே தேவரீர் ஸேவைஸாதித்தருளவேணும்" என்று அங்க பஞ்சகஸம்பந்நமாக ஆர்த்தப்ரபதநஞ்செய்தருள, அழகியமணவாள னும்(உ)"கௌந்தேயப்ரதிஜாநீஹிநமேபக்த:ப்ரணஶ்யதி" என்றரு ளிச்செய்தவனுகையாலே ப்ரணதபாரதந்த்ரனுய் அவன்சொன்ன படி செய்யாவிடில் ஸகலபலஸாதநமான ப்ரபத்தியையே பரமபுரு ஷார்த்தத்திற்கு முக்யோபாயமாக சரமஶ்லோகத்தில் அறுதி

(க) "கலயதாம் கவிதார்க்கிககேஸரி ப்ரகடிதாம் ஶததூஷணிகாம் ஹ்ருதி । மஶகவத்ஸ்ரஜயா: வயமாஸ்தாயி ந: ப்ராணிவதந்திவஶம் வத யோக்யமஹோ: ॥ அபிகாமமதலோபஶடாதிரஹிதா அபி நீதிப்ருதிஶாந்திமதிதாந்திஸஹிதா: । யதிராஜமததுர்யபதபத்மவிமுகா அவலோகநதிமாநநதிவாஹ்யவிஷயா:." (உ) "கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணஶ்யதி."

யிட்ட விஶேஷார்த்தத்தை (க) "'உதாராஸ்ஸர்வஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவமேமதம்' என்கிறமுக்யாதிகாரிகளும் விஶ்வஸிக்கமாட்டார்கள்" என்றுஅந்த ஆர்த்தப்ரபதநத்தைத் திருவுள்ளம்பற்றியருள, அவ்வளவில் துருஷ்கஸேனைகள் அத்தேஶஹிம்ஸார்த்தமாக வந்து ஜயத்வஜம்போட்டிருக்க, அத்தைக்கண்டு அதிகாரியும்பெரிய பெருமாளுக்குக் கல்லாலேதிருத்திரைசாத்தி ஒருவிக்ரஹத்தை முன்னேவைத்து அழகியமணவாளனுக்கும் பெரியதிருத்திரைபரிமாறி பெருமாளையும் நாச்சிமாரையும் திருப்பெட்டகத்தில் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு காடேறப்போக,

தேஶிகன் ஶ்ருதப்ரகாஶிகையை ஶோதித்து ப்ரவர்த்திப்பித்தல்.

துருஷ்கஸேனையும் பஹுஶ்ரீவைஷ்ணவர்களை ஹிம்ஸிக்க, பெருமாளைப் பின்தொடர்ந்துபோகிற தேஶிகனை ஸுதர்ஶநபட்டரும்கைபிடித்துக்கொண்டு 'இந்தஶ்ருதப்ரகாஶிகையை ஶோதித்து ப்ரவர்த்திப்பிக்கவேணும்' என்றும் 'இதுஉம்மாலே தழைக்கும்படி நம்அம்மாள் திருவுள்ளமாகையால் இந்தஸமயத்தில் உம்மைக்கண்டேன்' என்றும் அருளிச்செய்து, தாம்எழுதியருளின பட்டோலையையும் தம்குமாரரையும் தேஶிகன் கையில் ப்ரஸாதித்தருளி, "பெருமாளைக் கூடத்தொடர்ந்து ஸம்ரக்ஷிக்குமதைக்காட்டிலும் இந்த ஶ்ருதப்ரகாஶிகையை ஶோதித்து ப்ரவர்த்திப்பிக்குமது முக்யகைங்கர்யம்" என்றும் "இந்தப்பாலர்களை ரக்ஷித்துக்கொள்ளும்" என்றும்அருளிச்செய்தார். அப்படியேதேஶிகனும் ஶ்ருதப்ரகாஶிகையினுடைய பட்டோலையையும் மணலிலே புதைத்து அந்தக்குமாரரும் தாமும் சவத்தின் நடுவே ஒளிந்திருந்து அஸ்தமித்தவாறே அந்தப்பட்டோலையையு மெடுத்துக்கொண்டுஅந்தக்குமாரருடனே ஸத்யமங்கலமேற எழுந்தருளுவதாய் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர்முதலானமுதலிகளைப் பறிகொடுத்தோமே என்று திரும்பிப்பார்த்துக்கொண்டுஒருமஹாரண்யத்தில் எழுந்தருள, ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் சிலமுதலிகளுடனே பெருமாளைப் பின்தொடர்ந்து காடேறப்போய் அங்குத் தேஶிகனைக்காணமையாலே திரும்பவும் கோயிலேறப்போக, ஶோகார்த்தராகையாலே வழிதிகைத்து அந்த மஹாரண்யத்தில்தேஶிகன்எழுந்தருளியிருக்கிற இடத்தில்வந்துசேர, இருவரும்கண்டோமேஎன்றுமகிழ்ந்துகொண்டு, ஸுதர்ஶநபட்டர்நியமநத்தைத் தலைக்கட்டுவதாய் ஸத்யமங்கலமேறவெழுந்தருளி, ஶ்ருதப்ரகாஶிகையையும்ஶோதித்துப்ரவர்த்தி

(க) "உதாராஸ்ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்."

ப்பித்துக்கொண்டு, அந்தக்குமாரர்கள் இருவருக்கும் உபாயநாதியாய் ஶாஸ்த்ரங்களையும் விஶேஷார்த்தங்களையும் ப்ரஸாதித்துக்கொண்டு ஸத்யமங்கலத்தில் எழுந்தருளியிருந்தார்.

அழகியமணவாளனும் அழகர்திருமலையில் எழுந்தருளியிருந்து மேல்நாட்டுவழியாய்த் திருமலையில் எழுந்தருளி திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் நித்யாராதநோத்ஸவாதிகளையும் கொண்டருளிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

ஸுதர்ஶநபட்டர் முதலான முதலிகள் துருஷ்கஹிம்ஸையில் திருநாட்டுக்கு எழுந்தருளினார்கள். அழகியமணவாளப்பெருமாள் நயினார் முதலானாரும் துருஷ்கஹிம்ஸையில் தேஹாவஸாநத்தை யடைந்தார்கள். பிள்ளைலோகாசார்யரும் பெருமாளுடனே சில தூரம் பின்தொடர்ந்து மார்க்கமத்தியில் துருஷ்கஹிம்ஸோபத்ரவத்தாலே மறுநாள் திருநாட்டுக்கெழுந்தருளினார்.

பின்பு தேஶிகனும் உடையவருக்கு அத்யந்தாபிமதமாயிருந்துள்ள திருநாராயணபுரத்தேற எழுந்தருளி ஸகுடும்பமாக முதலிகளுடனே திருக்கல்யாணதீர்த்தத்தினீராடிக் கோயிலுக்குள்ளே புகுந்து (௧) "கபர்திமதகர்தமம்கபிலகல்பநாவாகுராம் துரத்யயமதீத்யதத்த்ருஹிண தந்த்ரயந்த்ரோ தரம்- குத்ருஷ்டிகுஹநாமுகேநிபதத:பரப்ரஹ்மண: கரக்ரஹவிசக்ஷணோஜயதிலக்ஷ்மணோயம்முநி:" என்று அநுஸந்தித்து உடையவரைத்திருவடிதொழுது(௨) "லக்ஷ்மீகௌஸ்துபலக்ஷணைநவபுஷாவாசம் விநைவஸ்வயம் ஶ்வேதத்வீபநிவாஸிநாமிவ திஶந்ஸந்தோஷமந்தர்முகம்- வித்யாவீசிஸஹஸ்ரஸம்ப்ரமமிளத்துக்தார்ணவாடம்பரே ஸ்தாநம்ஸம்யமிஸார்வபௌமவிஜயஸ்தாநேவிதத்தேஹரி:" என்றுசொல்லப்படுகிற திருநாராயணனையும், செல்வப்பிள்ளையையும், யதுகிரிநாச்சியாரையும் திருவடிதொழுது

---

(௧) [illegible] (௨) [illegible]

நிற்க, திருநாராயணனும் "நம்மை பாஷ்யமுகத்தாலும் ஸாக்ஷாத் தாகவும் ஸ்வரூபம் நிலைநிற்கும்படிபண்ணின ராமாநுஜனுடைய ஸித்தாந்தத்தை அவ்யாஹததமாயிருக்கும்படி க்ரந்தமுகத்தாலும் வாதமுகத்தாலும் நிலைநிறுத்தினீரே" என்று போரஉகந்தருளி திருமாலை முதலானவரிசைகளையும் ப்ரஸாதிக்க, தேஸிகனும்அவை களைப்பெற்று உள்மகிழ்ந்து உடையவராலே அவ்விடத்தில் ஸ்தா பிக்கப்பட்ட மூலபேரத்தையும், திருநாட்டுக்கெழுந்தருளும்போது ஆலிங்கநம்பண்ணிக்கொண்டு கிடாம்பியாச்சானுக்கு ப்ரஸாதித் தருள, அந்தஆச்சானாலே பின்பு ப்ரதிஷ்டிதமான உத்ஸவபேரத் தையும் ஒருசேர்த்தியிலே கண்டு, திருவடிதொழுதுநிற்க, உடைய வரும், "இப்படி திவ்யதம்பதிகளாலே கொண்டாடப்பட்டு நம்மு டைய ஸித்தாந்தத்தை நிலைநிறுத்தினவராக இருந்துள்ள உமக்குத் தகுந்த பாரிதோஷிகம் ஒன்றும் இல்லை" என்றும், "உமக்குப்பின்பு உம்மையும் அதிஸயித்து இந்தஸ்ஸித்தாந்தத்தை இந்த வரதா சார்யர் ப்ரவசநம்பண்ணுவர்" என்றும் அர்ச்சகமுகேந அருளிச் செய்து திருமாலைமுதலானவரிசைகளையும் ப்ரஸாதிக்க, தேஸிகனும் உள்மகிழ்ந்து அந்தவரிசைகளையும் பெற்று, வரதாசார்யரையும் குளிரக்கடாக்ஷித்து அவருக்கும் ப்ரஸாதித்து விடைகொண்டு, அவ் விடத்திலேயே நித்யகைங்கர்யங்களையும் திருநாராயணன் மங்களா ஸாஸநத்தையும் பண்ணிக்கொண்டு, சிலநாளெழுந்தருளியிருக்க,

தேஸிகன்நயினாராசார்யர்ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் வைபவங்கள்.

அப்போது வரதாசார்யரும் பகவத்விஷயமான ஆறாயிரப்படி யைத்தேஸிகன் செய்தருளின வ்யாக்யாநத்தோடே அதிகரித்த ருள, ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் அத்தை அதிகரியாமலிருக்க, தேஸிகனும் "நீர் அதிகரிக்கலாகாதோ?" என்றருளிச்செய்ய ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் "வரதாசார்யரிடத்தில் உடைய வர் விஸேஷகடாக்ஷம் பண்ணியிருப்பதால் அவரிடத்தில் ஸதீர்த் த்யபுத்திபண்ணாமல் ஆசார்யத்வத்தை வஹிக்கவேண்டும் என் று அபிஸந்தி பண்ணின அடியேனுக்கு, அவஸிஷ்டமான பகவத் விஷயத்தை அவரிடத்தில்அதிகரிக்கும்படிநியமித்தருளவேணும்" என்று ப்ரார்த்திக்க, அத்தைக்கேட்டு வெண்ணெய்க்கூத்தஜீயர் முதலானவர்களும் அப்படியே ப்ரார்த்திக்க, தேஸிகனும்அத்தைத் திருவுள்ளம்பற்றி அவர்களுக்குப் பகவத்விஷயத்தை ப்ரஸாதிக் கும்படி வரதாசார்யருக்கு நியமித்தருள, அவரும் அப்படியே கலியுகத்தில் நாலாயிரத்துநானூற்றுநாற்பதாவதான பஹுதாந்ய

வர்ஷம் ஆவணிமாஸம் ஶுக்லத்விதீயைகூடின ஹஸ்தநக்ஷத்ரத்தில் பகவத்விஷயத்தை அவர்களுக்கு ப்ரஸாதிக்கும்போது ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் (க) "ஸ்ரீ மல்லக்ஷ்மணயோகிந்த்ரஸித்தாந்த விஜயத்வஜம்-விஶ்வாமித்ர குலோத்பூதம் வரதார்யமஹம்பஜே" என்று அவர்விஷயமாக ஒருதனியனே அநுஸந்தித்துப் பின்பு (உ) "ஸ்ரீமாந்வேங்கடநாதார்ய:" என்கிறதனியனையும் அநுஸந்தித்துப் பின்பு உடையவர் பரிபூர்ணகடாக்ஷபாத்ரராயும் அப்பிள்ளார்பரிபூர்ணகடாக்ஷபாத்ரராயு மிருந்துள்ள வேதாந்ததேசிகன் விஷயமாக(ங) "ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்யபூஷணம்-ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம்" என்று ஒருதனியனே விண்ணப்பஞ்செய்து அநுஸந்தித்துப்பின்புள்ளகுருபரம்பராநுஸந்தாநத்தையும் செய்து பகவத்விஷயத்தை அதிகரித்தருள, இவ்வ்ருத்தாந்தத்தை முதலிகள்தேசிகன் ஸந்நிதியில்விண்ணப்பஞ்செய்ய, தேசிகனும்அத்தைக்கேட்டு(ச)'ஸ்ரீமாந்வேங்கடநாதார்ய:' என்கிறது தம்முடைய பெருமையைச் சொல்லிற்று என்றும் (ரு) "ராமாநுஜதயாபாத்ரம்"என்கிறது, ஸதாசார்யகடாக்ஷத்தின்பெருமையைச் சொல்லிற்று ஆகையாலே இதுமிகவும் கொண்டாடத்தக்கது என்றும் அருளிச்செய்ய, முதலிகளும் ஆகில் எத்தைஅநுஸந்திக்கவேண்டுவது? என்று கேட்க, தேசிகனும் அத்தைஸுதர்ஶநபட்டர் திருவுள்ளம்பற்றி நியமித்திருக்கையாலும் ஸ்ரீபாஷ்யாதிகரணதஶையில் உண்டானதாகையாலும் இது ஆசார்யர்கள் திருநாமம் பொருந்தியிருக்கையாலும் பகவத்விஷயாதிகரணதஶையில் உண்டானதாகையாலும் முன்புற்ற (சு) "ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:"என்கிறதனியனே ஸ்ரீபாஷ்யாதிஸம்ஸ்க்ருதக்ரந்தங்களை அதிகரிக்கும்போது அநுஸந்திக்கும்படிக்கும், பின்புற்ற(எ)"ராமாநுஜதயாபாத்ரம்"என்கிற தனியனே ஆறாயிரப்படி முதலான நாலாயிரப்ரபந்த வ்யாக்யாநங்களை அதிகரிக்கும்போது அநுஸந்திக்கும்படிக்கும், ஒரு விபாகம்செய்து நியமித்தருள, அத்தை அங்குள்ள

(க) "ஸ்ரீமல்லக்ஷ்மணயோகீந்த்ர ஸித்தாந்தவிஜயத்வஜம் । விஶ்வாமித்ரகுலோத்பூதம் வரதார்யமஹம்பஜே." (உ) "ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:." (ங) "ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்யபூஷணம் । ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம்." (ச) "ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:." (ரு) "ராமாநுஜதயாபாத்ரம்." (சு) 'ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய:." (எ) "ராமாநுஜதயாபாத்ரம்."

பெரியோர்களும் 'ஒக்கும் ஒக்கும்' என்று உகந்தருள, வரதாசார்யர் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் முதலான முதலிகளும் அப்படியே அநுஸந்தித்து ஸ்ரீபாஷ்யபகவத்விஷயாதி விஸேஷார்த்தங்களையும் ப்ரவசநம்பண்ணிக்கொண்டிருக்க, தேஸிகனும் உடையவரை முன்னிட்டு யதுகிரிநாச்சியார் திருநாராயணன் செல்வப்பிள்ளை அழகிய சிங்கர் திருவடிதொழுது(க) "நவநவபஹுபோகாம்நாதநாராயணத்வம் விரசயதுரிதௌகை ஸ்தாமநாக்ராந்தகாந்தாம் - ஸஹஜஸரஸபாவஸ்நேஹஸத்ப்ரப்யர்தநீயாம் யதிபரிப்ருடஹ்ருத்யாம் யாதவாத்ரேஸ்ஸம்ருத்திம்" என்று அந்தத் திவ்யதேஸத்திற்கு மங்களாஸாஸநம்செய்தருளிவிடைகொண்டு, ஸத்யமங்கலமேறவெழுந்தருளி, முதலிகளுக்கு விஸேஷார்த்தங்களை ப்ரஸாதித்துக்கொண்டிருக்கிறகாலத்தில், ஒருநாள் "திருவரங்கப்பெருநகருள் தெண்ணீர்பொன்னித் திரைக்கையாலடிவருடப்பள்ளிகொள்ளும், கருமணியைக்கோமளத்தைக்கண்டுகொண்டென்கண்ணிணைகளென்றுகொலோ களிக்குநாளே?" என்று விரஹாஸஹிஷ்ணுதையாலே அபீதிஸ்தவரூபமான ப்ரபத்திபண்ணி "அழகிய மணவாளன்கோயிலேற எழுந்தருளி முன்புபோலே குறைவற வாழ்ந்தருளவேணும்" என்று ப்ரார்த்தித்துக் கொண்டு எழுந்தருளியிருந்தார்.

அப்போது அந்தப்ரபத்தியாலே ப்ரபந்நனுப் அழகிய மணவாளனும் கோயிலேற எழுந்தருளும்படி திருவுள்ளம்பற்றியருள, அவ்வளவில் கோபணராயன்என்கிற ஒரு ப்ரபுவானவன் திருமலையினின்றும் அழகியமணவாளனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோய் செஞ்சியில் சிங்கபுரத்தில் சிலநாள் ஆராதிப்பித்துக்கொண்டிருந்து கலியுகத்தில்-சசரு௦-ஆவதான ஸர்வதாரிவர்ஷத்தில் கோயிலேறப்போய் அந்தத்துருஷ்கரைஜயித்து அழகிய மணவாளனையும் நாச்சிமார்களோடேகூட கோயிலேற எழுந்தருளப் பண்ணிப் பெரியபெருமாளையும் அழகியமணவாளனையும் ஒருசேர்த்தியாக்கி நித்யோத்ஸவாதிகளையெல்லாம் நடப்பிக்க, அழகியமணவாளனும் (உ) "க்ருதக்ருத்யஸ்ததாராமோ விஜ்வர:ப்ரமுமோதஹ" என்கிற

(க) "𑌨𑌵𑌨𑌵𑌬𑌹𑍁𑌭𑍋𑌗𑌾𑌂 𑌨𑌾𑌥 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌰𑌚𑌯 𑌧𑍁𑌰𑌿 𑌧𑍌𑌰𑍇𑌯 𑌧𑌾𑌮𑍍𑌨𑌾𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌂 । 𑌸𑌹𑌜𑌸𑌰𑌸𑌭𑌾𑌵𑌸𑍍𑌨𑍇𑌹𑌸𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌨𑍀𑌯𑌾𑌂 𑌯𑌤𑌿𑌪𑌰𑌿𑌬𑍃𑌢𑌹𑍃𑌦𑍍𑌯𑌾𑌂 𑌯𑌾𑌦𑌵𑌾𑌦𑍍𑌰𑍇𑌸𑍍𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌿𑌂." (உ) "𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑌦𑌾𑌰𑌾𑌮𑍋 𑌵𑌿𑌜𑍍𑌵𑌰𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌮𑍋𑌦 𑌹."

படியே அதிஸந்துஷ்டரா யெழுந்தருளியிருந்துகொண்டு தேசிகனுக்கு "உம்முடைய ப்ரபத்தியை ஸபலமாக்கின நம்மைச் சடக்கெனவந்து காணீர்" என்று ஸ்வப்நம்காட்டியருள, விடிவோரைத் தேசிகனும் இந்த ஸ்வப்நத்தை முதலிகளுக்கருளிச்செய்ய, அவ்வளவில் கோபணராயன் கோயிலிலே துருஷ்கரைஜயித்து அழகிய மணவாளப்பெருமாளையும் எழுந்தருளப் பண்ணுவித்து நித்யோத்ஸவாதிகளையும் நடப்பிவிக்கிறுரென்று வருவார் செல்வார்கள் சொல்லிக்கொண்டுபோக அத்தையும்கேட்டருளி, ஆநந்தபாஷ்பங்கள் பெருக்கி, முதலிகளோடே ஸகுடும்பமாக ஸத்யமங்கலத்தில் பேரருளாளன் திருவடிதொழுது விடைகொண்டு (க) "கதாத்ரக்ஷ்யாமஹேராமம் ஜகதஸ்ஸோகநாஸநம்" என்கிறபடியே பேரவாபிறந்து கோயிலேறச் சடக்கெனஎழுந்தருள, பெரியபெருமாளும் அநந்திகொத்து பரிஜநங்களையும் திருமாலே ஸ்ரீஸடகோபன் முதலானவரிசைகளுடனே எதிர்கொண்டுபோகும்படி அர்ச்சகமுகேந அருளிச்செய்ய, அவர்களும் அப்படியே செய்ய, தேசிகனும் அவ்வரிசைகளையெல்லாம் பெற்று உள்மகிழ்ந்து கோயிலிலேஎழுந்தருளி ஸ்ரீரங்கநாச்சியாரைத் திருவடிதொழுதுநிற்க, நாச்சியாரும் குளிரக்கடாக்ஷித்தருள, தேசிகனும் தீர்த்தாதிகளைப்பெற்று விடைகொண்டு திருமணத்தூணருகேசென்று பெரியபெருமாளையும் அழகியமணவாளனை நாச்சிமார்களுடனே ஒருசேர்த்தியில் கண்டு திருவடிதொழுது (உ) "க்ஷணேபிதேயத்விரஹோதிதுஸ்ஸஹ:" என்றிருக்கிற அடியேனை, இத்தனைநாள் பிரித்ததே' என்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் (ந) "ஸோகஸ்தேவிஹதஸ்ஸர்வ: கல்யாணம்த்வாமுபஸ்திதம்" என்கிறபடியே உமக்கு இனி ஒருகுறையும் இல்லை;' என்று அர்ச்சகமுகேந அருளிச்செய்து தீர்த்தம் முதலானவைகளை ப்ரஸாதித்தருள, தேசிகனும்அவைகளைப் பெற்று (ச) "யாவதாவர்த்ததேசக்ரம்" என்கிறபடியே "இனிகாலதத்வமுள்ளத்தனையும் ஒரு குறையுமன்றிக்கே பெருஞ்செல்வத்தோடே வாழ்ந்தருளவேணும்" என்று மங்களாஸாஸநரூபமாக

(க) "𑌕𑌦𑌾 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌹𑍇 𑌰𑌾𑌮𑌂 𑌜𑌗𑌤𑌶𑍍𑌶𑍋𑌕𑌨𑌾𑌶𑌨𑌂." (உ) "𑌕𑍍𑌷𑌣𑍇𑌽𑌪𑌿 𑌤𑍇 𑌯𑌦𑍍𑌵𑌿𑌰𑌹𑍋𑌽𑌤𑌿𑌦𑍁𑌸𑍍𑌸𑌹𑌃." (ந) "𑌶𑍋𑌕𑌸𑍍𑌤𑍇 𑌵𑌿𑌹𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌃 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌂 𑌤𑍍𑌵𑌾𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌂." (ச) "𑌯𑌾𑌵𑌦𑌾𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌚𑌕𑍍𑌰𑌂."

(க) "விதிவிஹிதஸபர்யாம்வீததோஷாநுஷங்கா முபசிததநதார்யா முத்ஸவைஸ்த்யாகஹர்ஷாம் - ஸ்வயமுபசிநுநித்யம் ரங்கதாமங்ளா ரக்ஷாம்ஶமிதவிமதபக்ஷாம்ஶாஸ்வதீம்ரங்கலக்ஷ்மீம்" என்கிறஶ்லோகத்தை விண்ணப்பஞ்செய்து அழகிய மணவாளனை எழுந்தருப்பண்ணுவித்த கோபணராயர்விஷயத்தில் க்ருதஜ்ஞதையாலே(உ) "ஆநீயாநீலஶ்ருங்கத்யுதிரசிதஜகத்ரஞ்ஜநாதஞ்ஜநாத்ரேஶ்சஞ்ஜ்யாமாராத்யகஞ்சித்ஸமயமதநிஹத்யோத்தநுஷ்காந்துருஷ்காந்-லக்ஷ்மீக்ஷ்மாப்யாமுபாப்யாம் ஸஹநிஜநிலயேஸ்தாபயந்ரங்கநாதம் ஸம்யக்சர்யாம்ஸபர்யாமக்ருதபுவியஶ: ப்ராபணோகோபணார்ய:" என்கிறஶ்லோகத்தையும் அருளிச்செய்து பெருங்கூட்டத்துமுதலிகளோடே ஸித்தாந்தப்ரவசநம்பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

அப்போது சித்ரகூடத்தில் ஒரு ஸ்ரீவைஷ்ணவதாஸிவந்து ஒருவர் முகமாக இப்போது தில்லையார் பரஸ்பர ஸ்பர்த்திகளாயிருக்கையாலே ராஜாவலம்பநமுண்டாகில் பகவத்ப்ரதிஷ்டை செய்யலாம்என்று அறிவிப்பிக்க, தேஶிகனும் அச்செய்தியை கோபணராயனுக்குத் தெரியப்படுத்தி அவனைக்கொண்டு சித்ரகூடத்தில் கோவிந்தராஜனை "திறல்* விளங்குமாருதியோடமர்ந்தான்றன்னை" என்கிறபடியே திருவடிமுதலான பரிவாரங்களோடே திருப்ரதிஷ்டை செய்துவைத்து (ங) "யாவதாவர்ததேசக்ரம்" என்கிறஶ்லோகத்தாலே மங்களாஶாஸநம்செய்தருளிக் கோபணராயனுக்கு விடைகொடுத்துக் கோயிலேறஎழுந்தருளினார்.

அப்போது திருமலைஸ்ரீநிவாஸாசார்யரும் பெருமாள்கோயினின்றும் வந்து ஸாமாந்யஶாஸ்த்ரங்களில் ஸமர்த்தராகையாலே தேஶிகன் திருவடிகளிலே ஆஶ்ரயித்து விஶேஷஶாஸ்த்ரங்களையெல்லாமதிகரித்தருளினர்.

(க) "விதிவிஹிதஸபர்யாம் வீததோஷாநுஷங்கா முபசித [illegible] | ஸ்வயமுபசிநுநித்யம் [illegible] ஶாஶ்வதீம்ரங்கலக்ஷ்மீம்." (உ) "ஆநீயாநீலஶ்ருங்க [illegible] ஜநாதஞ்ஜநா [illegible] | லக்ஷ்மீக்ஷ்மாப்யா [illegible] ஸஹநிஜநிலயே [illegible] ப்ராபணோ கோபணார்ய:." (ங) "யாவதாவர்ததேசக்ரம்." * விளங்கு

பின்புசித்ரகூடத்தில் விஷ்ணுப்ரதிஷ்டைசெய்துவைத்தாரென்று அஸூயையாலே இந்தத்தேஸிகனை வாக்பந்தநம் பண்ணிவைத்து நிர்ப்பந்திக்கக்கடவோமென்று நிஸ்சயித்து,பின்பு அந்த ஸர்வதாரிவர்ஷத்தில் அழகியமணவாளனுக்குத் திருவத்யயநோத்ஸவம் வந்தவாறே சில குமதிகள் கோபணராயன் ஸ்வதேஸம்போனபின்பு அங்குள்ள அதிகாரியைச் சிலயுக்திகளாலும் பூர்வபக்ஷங்களான ஸ்ம்ருதிவாக்யங்களாலும் ப்ரமிப்பித்து,இப்போது திவ்யப்ரபந்தப்ராமாண்யாதிகளையும் ஸ்வஸித்தாந்தத்தையும் தேஸிகன்நிர்வஹித்தாராகில் திருவத்யயநோத்ஸவத்தை நடப்பிக்கத்தகும்என்றும், இல்லாவிடில் ப்ரபந்தாநுஸந்தாநம் தத்கர்த்தாக்களுடைய விக்ரஹங்கள் மர்யாதைகள் ஒன்றும்கூடாதுஎன்றும், நிர்ப்பந்திக்கும்படி பண்ணுவிக்க, அந்த அதிகாரியும் உள்பட்டு உத்ஸவத்தை நிறுத்த, கோயிலநந்தகொத்து பரிஜநங்களும் அப்போதுள்ளபெரியோர்களும்“இப்படி பகவத்ராமாநுஜஸித்தாந்தநிர்த்தாரணஸார்வபௌமரான தேவரீர் எழுந்தருளியிருக்கச் செய்தேயே உத்ஸவத்திற்கு விரோதம்வருமோ!” என்று ப்ரார்த்திக்க, தேஸிகனும்முதலிகளோடே கோயிலிலேஎழுந்தருளித்திருமண்டபத்தில் இருந்துகொண்டு அந்தக்குமதிவித்வான்களையும் அதிகாரியுடனே அழைப்பிக்க, அவர்களும் வந்து வாதம் ப்ரவ்ருத்தமாக, அந்தக் குமதிகள் கொடியதான க்ஷுத்ரமந்த்ரத்தாலே தேஸிகன் மௌநியாயெழுந்தருளியிருக்கும்படி பண்ணுவிக்க,தேஸிகனும் அத்தை அறிந்து மாநஸமாக மஹாமந்த்ரத்தை ஸ்மரித்து த்வயத்தை அநுஸந்தித்து“ஸ்ரீமதேராமாநுஜாயநம:” என்றருளிச்செய்து வாதம் பண்ண,அப்போதி குமதிகள்பண்ணின க்ஷுத்ரம் ப்ரஹ்லாதாழ்வான் விஷயத்தில் செய்த க்ஷுத்ரம்போலே பண்ணினவர்களையே பாதிக்க, அந்தக்குமதிகளும் தேஸிகன் திருவடிகளிலே காகாஸுரனைப்போலே விழுந்து ப்ராண பிக்ஷையைக்கேட்க,தேஸிகனும் (க) “ரிபூணமபிவத்ஸல:” என்கிற கணக்காய்ச் சரணாகதிபண்ணின அந்தக்குமதிகளுக்கும் க்ஷுத்ரவிமோசநம் பண்ணுவித்து வாதத்தாலேயும் அவர்களை நிராகரித்து அவர்களையும் தமக்கு ஆட்படுத்திக்கொண்டு அதிகாரிக்கும் வாதிகள் வந்தால் வாதம் பண்ணவேண்டுமத்தனைபோக்கி உத்ஸவவிரோதம்கூடாதென்று நியமித்தருளி அப்படிக்கு ஆஜ்ஞாரூபமான ப்ரஸித்தபத்ரமும் கல்வெட்டுமுண்டாக்கித் திருவத்யயநோத்ஸவத்தையும் நடப்பித்து ஸகல

என்றும் பாடம். (க)“ஶிவஷுணாசவிவதஜஷு:”

வேதாந்தஸாரமானவ்யாஸஸூத்ரத்திற்கும்நாலாயிரப்ரபந்தங்களுக்கும்முக்யப்ரமாணமான திருமந்த்ரத்தில்ப்ரதிபாதிக்கிறவிஶேஷார்த்தங்களையெல்லாம் பரமைகாந்திகளறிந்துஉபாயாநுஷ்டாநம்பண்ணிப்புருஷார்த்தத்தை அடையும்க்ரமத்தைக் குறைவற ப்ரதிபாதிக்குமதான திருமந்த்ரார்த்தம்என்கிற திருநாமத்தையுடையஸ்ரீரஹஸ்யத்ரயஸாரத்தையருளிச்செய்து(க) "அங்கீக்ருத்யஸதாம்ப்ரஸத்திமஸதாகர்ம் வோபிநிர்வாபித:" என்றருளிச்செய்து ஸாரதீபத்தையும்விரோதபரிஹாரத்தையும் செய்தருளிஒருநாள் திருவோலக்கத்தில் ப்ரபந்தாநுஸந்தாநம் பண்ணியிருக்கும்போது ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர்(உ) "பூர்வந்தத்பரகாலநாத யதிராடாசார்யஸித்தாந்திதம் ஸ்ரீரங்கேசய்யநோத்ஸவம்ப்ரதிஹதம்பூய: ப்ரதிஷ்டாபயந்-வேதாந்தத்வய பாஷ்யமப்யகலுஷம் பக்தார்யஸத்விக்ரஹாம்ஶ்சாகல்பம்நிகமாந்ததேஶிகமணிர்ஜீயாதஜய்யாத்மதீ:" என்றருளிச்செய்ய,வெண்ணெய்க்கூத்தஜீயரும்(ங) "பாஷாகீதிர்நகார்யாநசபஹூமதிரப்யத்ரதத்கல்பகாநாம் நாபிஸ்தாப்யாஸ்ததர்சா இதிததீக்ருதாமாயிதுர்போதிதேந-யத்யத்ரோக்தம் ப்ரமாணம் நஹிவிஹ திரிஹேத்யுக்த ஆக்ஷிப்யபக்ஷாந் யஶ்சிச்சேதாரமேனக்தை ஶ்ருதிஶிகரயுகாசார்யவர்யஸ்ஸஜீயாத்" என்கிறஶ்லோகத்தைஅருளிச்செய்யஅங்குள்ளபெரியோர்களும்கைங்கர்யபரர்களும் அந்தஶ்லோகார்த்தத்தைத் தெளிந்து அவ்வர்த்தங்களையெல்லாம் ஸாக்ஷாத்தாகக் கண்டவர்களாகையாலே தேஶிகனைத் தண்டன் ஸமர்ப்பித்து இஸ்ஸித்தாந்தத்தை வாதத்தாலும்க்ரந்தங்களாலும் ஸ்தாபித்துக்கொண்டுபெரியோர்களுக்குவந்த அவத்யங்களையெல்லாம் தீர்த்துஅதெல்லாம் ஒருதட்டாய் இப்போதுதிருவத்யயநோ

(க) "அங்கீக்ருத்ய ஸதாம் ப்ரஸத்திமஸதாம் கர்வோபி நிர்வாபித:."

(உ) "பூர்வம் தத்பரகாலநாத யதிராடாசார்ய ஸித்தாந்திதம் ஸ்ரீரங்கேஶய ஸத்வ(ம்) ப்ரதிஹதம் பூய: ப்ரதிஷ்டாபயந் । வேதாந்தத்வய பாஷ்யமப்யகலுஷம் பக்தார்ய ஸத்விக்ரஹாம்ஶ்சாகல்பம் நிகமாந்ததேஶிகமணிர்ஜீயாதஜய்யாத்மதீ:."

(ங) "பாஷாகீதிர்ந கார்யா ந ச பஹுமதிரப்யத்ர தத்கல்பகாநாம் நாபி ஸ்தாப்யாஸ்ததர்சா இதி தததிக்ருதாம் மாயி துர்போதிதேந । யத்யத்ரோக்தம் ப்ரமாணம் நஹி விஹதிரிஹேத்யுக்தமாக்ஷிப்ய பக்ஷாந் யஶ்சிச்சேதாரமேநம் ஶ்ருதிஶிகரயுகாசார்யவர்யஸ்ஸ ஜீயாத்."

த்ஸவ ப்ரதிஷ்டையைத்தீர்த்து முன்புபோலக் குறைவறநடப்பிவித்துத் திவ்யப்ரபந்தப்ராமாண்யத்தையும் ஆழ்வாராசார்யர்களுடைய அர்ச்சா ஸ்தாபநத்தையும் செய்தருளி ஆஜ்ஞா ப்ரஸித்திபத்ரமும் கல்வெட்டுமுண்டாக்கினபடியாலே இஸ்ஸித்தாந்த நிர்வாஹகரான தேவரீர்விஷயமான(க)“ராமாநுஜதயாபாத்ரம்” என்கிற பகவத்விஷயத்தனியனை அநுஸந்தித்துப் பின்பு உடையவர் நியமநப்படிக்கு(உ)“லக்ஷ்மீநாதஸமாரம்பாம்” முதலான ப்ரபந்தாநுஸந்தாநம் பண்ணும்படி நியமித்தருளவேணும் என்று ப்ரார்த்திக்க,தேசிகனும் அழகியமணவாளனை ஸேவித்து நிற்க, அழகியமணவாளனும் நம்முடையமதமான ராமாநுஜஸித்தாந்தமாகிற பயிரை நிரவஶேஷமாய்க் களையெடுத்து விளைப்பித்த நம்வேதாந்ததேசிகன் விஷயமான (௩) “ராமாநுஜதயாபாத்ரம்” என்கிற ஶ்லோகத்தை அநுஸந்தித்து(ச)“லக்ஷ்மீநாதஸமாரம்பாம்”முதலாகப்ரபந்தாநுஸந்தாநம் பண்ணக்கடவது, என்று அர்ச்சகமுகேந அருளிச்செய்ய, அரையரும்அப்படியே அநுஸந்திக்க, தேசிகனுக்குவரிசைகளையும் ப்ரஸாதித்தருள,தேசிகனும் ப்ரபந்தமுடிவிலேஉடையவர்நியமநப்படிக்கு(௫)“ஸ்ரீமந்ஸ்ரீரங்கஸ்ரிய மநுபத்ரவா மநுதிநம்ஸம்வர்தய” என்று அநுஸந்திக்கும்போது அத்தை த்விராவ்ருத்தி அநுஸந்தித்துநிற்க,பெருமாளும் குளிரக் கடாக்ஷித்தருள,தேசிகனும் இது அப்பிள்ளார் கடாக்ஷவிஶேஷமன்றோ? என்று (௬) “நமோராமாநுஜார்யாயவேதாந்தார்த்தப்ரதாயிநே-ஆத்ரேயபத்மநாபார்யஸுதாய குணஶாலிநே” என்கிறஶ்லோகத்தையும் அநுஸந்திக்க, அங்குள்ளவர்களும் “முடிவிலேயும் ஆசார்யவந்தநம் செய்தருளவேணும்?” என்று காட்டியருளினதாய் (௭) “ராமாநுஜதயாபாத்ரம்” என்கிற ஶ்லோகத்தையும் அநுஸந்திக்க, பெருமாளும் “இதுஸம்புடகாயத்ரீபோலே இருந்ததுகாண்” என்றுகந்தருளி தீர்த்தாதிகளை ப்ரஸாதித்தருள, தேசிகனும் அவைகளைப்பெற்றுத் திருவோலக்கம்பெருக்கி ஸ்ரீரங்கநாச்சியாரைத்திருவடிதொழுதுநிற்க,ஸ்ரீரங்க

(க) “𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂.” (உ) “𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌥𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂.”
(௩) “𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂.” (ச) “𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌥𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂.”
(௫) “𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌶𑍍𑌰𑌿𑌯 𑌮𑌨𑍁𑌪𑌦𑍍𑌰𑌵𑌾𑌮𑌨𑍁𑌦𑌿𑌨𑌂𑌸𑌂𑌵𑌰𑍍𑌧𑌯.”
(௬) “𑌨𑌮𑍋𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑌾𑌯 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌿𑌨𑍇 । 𑌆𑌤𑍍𑌰𑍇𑌯𑌪𑌦𑍍𑌮𑌨𑌾𑌭𑌾𑌰𑍍𑌯 𑌸𑍁𑌤𑌾𑌯𑌗𑍁𑌣𑌶𑌾𑌲𑌿𑌨𑍇.” (எ) “𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂.”

நாச்சியாரும் (க) “ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே” என்று “நம்மிருவருடைய ஸ்வரூபத்தை வெளியிட்டு உடையவர் கடாக்ஷத்திற்கு முக்ய பாத்ரரானநீர், நம்முடையவைபவங்களையெல்லாம் வெளியிட்டபடியாலே உமக்கு நம்பெருமாள் ப்ரஸாதித்தவரிசைகள் தரும்” என்றும் “எப்போதும் நம்முடையஸந்நிதிமுன்பேகாலக்ஷேபம்பண்ணிக்கொண்டிரும்” என்றும் அர்ச்சகமுகேந அருளிச்செய்து தீர்த்தாதிகளையும் ப்ரஸாதிக்க, தேசிகனும் அவைகளைப் பெற்று க்ருதார்த்தராய் ஸ்ரீரங்கநாச்சியார் ஸந்நிதி முன்னமே காலக்ஷேபம் செய்துகொண்டிருக்க, வரதாசார்யரும் அந்தப் பெருமைக்கு மங்களாஶாஸநமாய் “வாழியிராமாநுசப் பிள்ளான்” என்றும் “வஞ்சப்பலசமயம்மாற்றவந்தோன்வாழியே” என்றும் இரண்டுபாட்டுக்களை அருளிச்செய்ய, ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் “நானிலமுந்தான்வாழ” என்கிறபாட்டை விண்ணப்பஞ்செய்ய, அங்குள்ளவர்களும் (உ) “ஸர்வதேஶதஶாகாலேஷு” என்று தொடங்கி, “வேதாந்ததேசிகனே இன்னமொருநூற்றாண்டிரும்” என்னும் அளவாக உள்ள இதற்கு “வாழித்திருநாமம்” என்று திருநாமம்சாற்றி ப்ரபந்தாநுஸந்தாநத்துக்கு ஆரம்பத்தில் (ங) “ராமாநுஜதயாபாத்ரம்” முதலானவைகளையும்முடிவிலே (ச) “ஸர்வதேஶதஶாகாலேஷு” இத்யாதியான வாழித்திருநாமத்தையும் அநுஸந்திக்கும்படி அழகியமணவாளன் ஸ்ரீரங்கநாச்சியார் நியமநமாகையாலே அப்படிக்கே திவ்யதேஶங்களிலும் திருமாளிகைகளிலும் அநுஸந்திக்கும்படி நியமித்தருள, அந்தப் பெரியோர்கள் நியமநப்படிக்கு அங்குள்ளவர்களும் அநுஸந்தித்துப்போந்தார்கள்.

இவ்வர்த்தங்களைப் பன்னீராயிரப்படி குருபரம்பராப்ரபாவத்தில் (ரு) “கல்பப்தே த்ஷூசதுஸ்ஸஹஸ்ரஶதபங்க்த்யப்தேயதுக்ஷ்மாதரே ஹஸ்தர்க்ஷே பஹுதாந்யவத்ஸரபஶூக்லத்விதீயாயுதே- ஸ்ரீஶஶ்ரீஶடஜித்யதிஶநிகமாந்தார்யப்ரபாவோஜ்ஜ்வல: ஸூஸ்லோகோவததாரதிவ்யமஹிமா ராமாநுஜோக்த்யாதிம: ॥ வர்ஷேதத்பர

(க) “ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே.” (உ) “ஸர்வதேஶதஶாகாலேஷு
(ங) ‘ராமாநுஜதயாபாத்ரம்’ (ச) “ஸர்வதேஶதஶாகாலேஷு.”
(ரு) “கல்பாப்தே த்ஷூசதுஸ்ஸஹஸ்ரஶதபங்க்த்யப்தேயதுக்ஷ்மாதரே ஹஸ்தர்க்ஷே பஹுதாந்யவத்ஸரபஶூக்லத்விதீயாயுதே ஸ்ரீஶஶ்ரீஶடஜித்யதிஶநிகமாந்தார்யப்ரபாவோஜ்ஜ்வல: ஸூஸ்லோகோவததாரதிவ்யமஹிமா ராமாநுஜோக்த்யாதிம: ॥ வர்ஷேதத்பர

(க)ஸர்வதாரிணிதநுர்மாஸே,துரங்கஸ்தலே ஸம்ப்ராப்தாத்ययநோத்ஸவப்ரதிஹதிம் ஸம்மோசயந்தம்குரும் - ஸம்மாந்யாநகஹ்ருத்ய லக்ஷ்மணதயாபாத்ராக்யபத்யோத்தமம் ஸ்ரீ ஸ்ரீரங்கபதீச்சபாநியமிதம் திவ்ய ப்ரபந்தாத்யயே ॥ தத்பஸ்சாத் புவிதிவ்யதேஸபடலே ஸ்ரீவைஷ்ணவாநாம்க்ருஹே ஸர்வத்ரத்ரமிடாகமப்ரவசநம்ஸ்ரீரங்கராட்சாஸநாத்- தத்பத்யோத்தம பூர்வமேவஸூதியஸ்ஸந் தஸ்ததா குர்வதே தத்ஸந்துஷ்டமநாஸ்ஸதிஷ்டபலதஸ் ஸ்ரீஸஸ்ஸதாமோததே" இந்த ஸ்லோகத்ரயத்தாலே நம்மாசார்யரான த்விதீயப்ராஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் அருளிச்செய்தார்.

பின்பு,சித்ரகூடவ்ருத்தாந்தத்தாலும் அத்யயநோத்ஸவவ்ருத்தாந்தத்தாலும் அதிகுபிதர்களாய்ச்சிலகுமதிகள் காஸீதேஸத்தில் ஒரு மஹாஸமர்த்தனை வித்வானைப் பத்ரிகாமுகமாக அறிவித்து அழைப்பிக்க, அந்த மஹாவித்வானும் அதிதநிகனுகையாலே அநேக கோஸங்களையும் எடுத்துக்கொண்டு பஹூவித்யார்த்திகளோடே பெருமாள்கோயிலிலேவந்து விஸிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைத் தூஷித்துக்கொண்டு ஸ்ரீவைஷ்ணவர்களையும் அதிக்ஷேபம்பண்ணிக்கொண்டிருக்க, கடிகாஸதம் அம்மாள், கிடாம்பி நயினர் முதலானவர்கள் ஸாமாந்யஸாஸ்த்ரங்களில் அதிஸமர்த்தர்களாயிருக்கிலும் ஸ்ரீபாஷ்யாத்யயனவ்யமில்லாமையாலே சில ஸ்ரீவைஷ்ணவர்கள் முகமாகக் கோயிலிலே தேஸிகன் ஸந்நிதியிலே அறிவிப்பிக்க, தேஸிகனும் ப்ராஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரைச் சில முதலிகளோடேபோய் அவனைஜயிக்கும்படி நியமித்தருள, ப்ராஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் திருமலை ஸ்ரீநிவாஸாசார்யர் முதலான முதலிகளோடே பெருமாள்கோயிலேற எழுந்தருளி, பெருந்தேவியாரையும் பேரருளாளனையும் திருவடிதொழுது திருமண்டபத்தில் அந்தவித்வானை அழைப்பித்து வேதாந்தத்தில் ஸப்தராத்ரம்

(க) [illegible]

வாதம்பண்ணி அவனை ஜயித்தருள, அவனும் பக்நனாய் "ப்ரஹ்ம தந்த்ரஸ்வதந்த்ரர் என்கிற திருநாமத்தை இங்குள்ளார்காணும்படி அந்வர்த்தமாக்கினீர்" என்றுசொல்லி "உங்கள் ராமாநுஜஸித்தாந்தம் மிகவும் ப்ரமாணம்உள்ளதுதான், ஆகிலும் (௧) "ஸிகீசத்ரீ உபாஹீ" என்கிறபடியே ஸீதாபஹரண ப்ரவ்ருத்தனான ராவணனும், ஸுபத்ராபரிணய ப்ரவ்ருத்தனான அர்ஜுநனும், அங்கீகரித்த கபடஸந்ந்யாஸிவேஷத்தைத் தரித்திருக்கையொன்றே தூஷ்யமாயிருப்பது" என்று லௌகிகவாக்யத்தாலே பரிபவப்படுத்த, ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் (௨) "லௌகிகஜ்ஞாநஹீநஸ்ய வைதிகந்துநஸித்த்யதி" என்கிறபடியே "லௌகிகவ்ருத்தாந்தத்தையே அறியாதஉமக்கு அதிகஹநவைதிக மார்க்கமான வேதாந்தவிஷயத்தில் ஸூக்ஷ்மார்த்தங்களை அறியும்படி ஶக்தியுண்டோ?" என்றும், "ஶிகாயஜ்ஞோபவீத த்ரிதண்டங்களோடே கூடின ஸந்ந்யாஸம் ப்ரபத்தியைப்போலே ஸகல பலஸாதநமாகையாலே அல்பபலரூப ஸீதாபஹரண ஸுபத்ராபரிணயாதிகளைச் செய்துவைத்த ஸந்ந்யாஸம் பரமபலத்தையும் கொடுக்கும் என்று கைமுத்யஸித்தம் அன்றோ?" என்றும், "முண்ட ஸந்ந்யாஸம் ஓர் அல்பபலத்தைக்கூடவும் கொடுக்கமாட்டாது அன்றோ?" என்றும் அருளிச்செய்ய, அவரும் "பாஷ்யகாரர் பௌத்தர்களைக்கற்காணத்தில்வைத்தார், இவர்கள் ராமாநுஜஸித்தாந்தவிரோதிகள் எல்லாரையும் அப்படிச்செய்யவல்லவர்கள்" என்று தேபிகன் வைபவத்தில் ஈடுபட்டு ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரிடத்தில் பரதந்த்ரராயிருக்க, பேரருளாளன் ஸ்ரீகார்யதுரந்தரரான திருமலை ஸ்ரீநிவாஸாசார்யரும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயருக்குத் திருமாலைமுதலான வரிசைகளையும் ப்ரஸாதிக்க, ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் அவைகளைப் பெற்று க்ருதார்த்தராயிருக்க, கடிகாஶதம் அம்மாள், கிடாம்பி நயினார் முதலான சில முதலிகளும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் திருவடிகளிலே ஆஶ்ரயித்து ஸ்ரீபாஷ்யாதிகளை அதிகரித்தருளி (௩) "ஹஸ்தீஶம்லோகவிக்யாதம் கௌண்டிந்யம்விதுஷாம்வரம்-ராமாநுஜார்யஸித்தாந்த ஸ்தாபநாசார்யமாஶ்ரயே" என்று அநுஸந்தித்துநிற்க, ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் பேரருளாளனையும்

---

(௧) "ஶிகீ ஶத்ரீ உபாநஹீ." (௨) "லௌகிகஜ்ஞாநஹீநஸ்ய வைதிகந்துநஸித்த்யதி." (௩) "ஹஸ்தீஶம்லோகவிக்யாதம் கௌண்டிந்யம்விதுஷாம்வரம்। ராமாநுஜார்யஸித்தாந்த ஸ்தாபநாசார்யமாஶ்ரயே."

திருத்தண்காவிளக்கொளி எம்பெருமானையும் திருவடிதொழுது தேசிகன் திருமாளிகையைத் தண்டன் ஸமர்ப்பித்து விடைகொண்டு அத்திரளோடே சித்ரகூடத்தில் கோவிந்தராஜனைத் திருவடிதொழுது கோயிலேற எழுந்தருளித் தேசிகனைத் திருவடிதொழுது அந்தவித்வானையும் திருவடிகளிலே சேர்த்துநிற்க, தேசிகனும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரைக் குளிரக்கடாக்ஷித்தருளி அந்தவ்ருத்தாந்தங்களையெல்லாம் முதலிகள்சொல்லக்கேட்டருளி, நீர் "பர்யாயபாஷ்யகாரர்" என்றும் "யுக்திகல்பநத்திலும்ப்ரஹ்மஸ்ருஷ்டிபோலே வேண்டினபடி சொல்லவல்லீர்" என்றும் அருளிச்செய்து போரஉகந்தருள, கடிகாஶதம் அம்மாளும் தேசிகன் அருளிச்செயலைக்கேட்டு (க) "பர்யாயபாஷ்யகாராய ப்ரணதார்திம் விதுந்வதே - ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ராய த்விதீயப்ரஹ்மணே நம:" என்று ஒருதனியனைச்செய்து அநுஸந்திக்க, தேசிகனும் அத்தை உகந்தருளி ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயருக்குத் திருவாழி திருச்சங்குகளை ப்ரஸாதித்து ஆள்பட்டிருக்கிற அந்த வித்வானுக்குத் திருவிலச்சினை முதலாக ஸமஸ்த விஶேஷார்த்தங்களையும் ப்ரஸாதிக்கும்படி நியமித்து அந்த வித்வானுக்கு ஜீயர்திருநாமமாகப் பேரருளாளய்யனப்பை என்று தாஸ்யநாமமும் ப்ரஸாதிப்பித்துப் பெருங்கூட்டத்துமுதலிகளுக்கு ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயங்களையும் மற்றுமுள்ள விஶேஷார்த்தங்களையும் ஸ்திரீகரிப்பித்துக் கொண்டிருக்க, திவ்யப்ரபந்தார்த்தங்களில் ஈடுபட்டிருக்கிற ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் (உ) "ஸ்ரீமத்வேதாந்தஸித்தாந்த ஸ்தாபநாநித்யதீக்ஷிதம்-ஸ்ரீமந் நாராயணம்வந்தே பாந்தம்ஸூரிகுரூத்தமை:" என்று ப்ரதமாசார்யன் விஷயத்திலும் ஆழ்வார்கள் தர்மிக்ராஹகப்ரமாணாநுஸாரமாக (ங) "துலாயாம் ஶ்ரவணேஜாதம்" என்றுதொடங்கி திவ்யஸூரிகளிடத்திலும் சில ஆசார்யர்களிடத்திலும் க்ருதஜ்ஞதையாலே "திவ்யஸூரிஸ்தோத்ரம்" என்று ஒரு ஸ்தோத்ரத்தைச்செய்து தேசிகன் ஸந்நிதியில் ஸமர்ப்பிக்க, தேசிகனும் குளிரக்கடாக்ஷித்தருளி "இது செவிக்கினிய செஞ்சொல்லாயிருந்தது" என்று அருளிச்செய்து "ஆழ்வார்

(க) "பர்யாயபாஷ்யகாராய ப்ரணதார்திம் விதுந்வதே। ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ராய த்விதீயப்ரஹ்மணே நம:." (உ) "ஸ்ரீமத்வேதாந்தஸித்தாந்தஸ்தாபநாநித்யதீக்ஷிதம்। ஸ்ரீமந்நாராயணம்வந்தே பாந்தம் ஸூரிகுரூத்தமை:." (ங) "துலாயாம் ஶ்ரவணேஜாதம்."

களவதரித்த நாளூர்திங்க ளடைவுதிருநாமங்களவர்தாஞ்செய்த, வாழ்வான திருமொழிகளவற்றுள்பாட்டின் வகையான தொகையிலக்கம் மற்றுமெல்லாம்” என்றுதொடங்கி “வேதாந்தகுருமொழிந்தப்ரபந்தசாரம் சிந்தையிலனுதினமுஞ் சிந்திப்போர்க்குச் சேமமதாந்திருமாறன் கருணையாலே” என்று பதினெட்டுப்பாட்டுக்களை முடித்து அதற்கு“ப்ரபந்தஸாரம்”என்று திருநாமம்சாற்றி முதலிகளுக்கு ப்ரஸாதித்தருள, அவர்களும் காயத்ரீதிருமந்த்ரங்கள்போலே நித்யமாக அநுஸந்தித்துக்கொண்டு (௧) “அஶீதிலகுருபக்திஸ்தத்ப்ரஸம்ஸாதிஶீல:- ப்ரசுரபஹுமதிஸ்தத் வஸ்துவாஸ்த்வாதிகேபி” என்கிறபடியே ஆசார்யபக்தி மேலிட்டவர்களாய் இருந்தார்கள்.

வேதாந்ததேஶிகன் திருவடிகளிலே ஆஶ்ரயித்த முதலிகளில் தேஶிகன் உகந்து ஸித்தாந்தப்ரவர்த்தகர்கள் ஆவர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் பன்னிருவர்கள். அவர்களாகிறார்:—

௧. வரதாசார்யர்	௭. திருமலை ஸ்ரீநிவாஸாசார்யர்
௨. ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர்	௮. திருமலைநல்லான்
௩. வெண்ணெய்க்கூத்தஜீயர்	௯. தீர்த்தப்பிள்ளை
௪. ப்ராபாகரஜீயர்	௧௦. கிடாம்பிப்பிள்ளை
௫. குஞ்சப்பூர்ராமாநுஜாசாரியர்	௧௧. கொமாண்டூர்பிள்ளை
௬. கந்தாடை எம்பார்	௧௨. தூப்புலப்பை. ஆகபன்னிருவர்கள்.

இப்படித் தேஶிகனும் பெருங்கூட்டத்து முதலிகளோடே உபயவேதாந்தப்ரவசநத்தையும்பாஞ்சகாலிகநித்யநைமித்திககைங்கர்யங்களையும் மற்றுமுள்ள அநுஜ்ஞாகைங்கர்யங்களையும் செய்துகொண்டு(௨)“ஸ்ரீரங்கத்விரதவ்ருஷாத்ரி பூர்வகேஷு ஸ்தானேஷு ஸ்திரவிபவாபவத் ஸபர்யா - ஆகல்பம்வரதவிதூதவைரிபக்ஷா பூயஸ்யாபவதநுகம்பயைவபூயாத்” என்று கோயில் முதலான திவ்யதேஶங்களெல்லாம் நித்யமாகவாழும்படி மங்களாஶாஸநம் செய்தருளி“இதுவழியாமறையோரருளால் யாமிசைந்தனமே”என்றும் “வெள்ளைப்பரிமுகர் தேஶிகராய்விரகாலடியோ முள்ளத்தெழுதிய தோலையிலிட்டனம்யாமிதற்கென்” என்கிறபடியே ஸ்ரீஹயக்ரீவ

(௧) [Grantha verse, partly illegible] ... கெபி.” (௨) “ஸ்ரீ[Grantha verse, partly illegible] ... ”

திவ்யஸூக்திபாஷையாலே (க) "அஸ்மத்தேஸிக ஸம்ப்ரதாய ரஹிதைரத்யாபிநாலக்ஷித:" என்றும் "பொறைநிலத்தில்மிகும்புனி தர்காட்டுமெங்கள் பொன்ரு தநன்னெறியில்புகுதுவாரே" என்றும் சொல்லுகிறபடியே இவ்வழிதப்பினர்கள் "காடுபாய்வர்கள்" என்றும், "வீடுசேருமவர்களெல்லாரும் இவ்வழியே வருவர்கள்" என்றும் அருளிச்செய்து, க்ரந்தங்களாலும் ஸிஷ்யர்களாலும் திவ்ய தேஸங்கள்தோறும் ராமாநுஜஸித்தாந்தாபிவ்ருத்தியைப்பண்ணிக் கொண்டிருக்க. அந்த வேதாந்ததேஸிகனைக்கோயில்திருமலைபெருமாள்கோயில் முதலான இடத்து எம்பெருமான்களும் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் உள்மகிழ்ந்து குளிரக்கடாக்ஷித்தருளினர்கள்.

பின்பு ஒருமஹாஸில்பன்வந்து "அதிவ்ருத்தராயெழுந்தருளியிருக்கிற தேஸிகனை ஸில்பஸாஸ்த்ரத்தில் ஜயித்துத் தான் மாயியாகையாலே ஸுதநூஷண்யாதிகளாலே தங்களுக்குச்செய்த குறையைத் தீர்த்துக்கொள்ளவேண்டும்" என்று துரபிஸந்திபண்ணி அந்தத் தேஸிகனைப்பார்த்து "இப்போது இந்த ஸில்பஸாஸ்த்ரார்த்தத்தை அறிந்தவரேயானல் ஒருவிக்ரஹத்தைப் பண்ணக்கடவீர்" என்றுசொல்ல, தேஸிகனும் "கடலைக்கடந்தவனுக்குக் குளப்படியில் குளிருண்டோ?" என்றுகேட்க, "ஸில்பனும் உம்மைப்போலேயே ஒருவிக்ரஹத்தை ஸலக்ஷணமாகச்செய்யக்கடவீர்" என்றுசொல்ல, தேஸிகனும் அப்படியே திருவுள்ளம்பற்றி அன்று ராத்ரியில் திருக்கண்வளர்ந்தருள, பெரியபெருமாளும் "வலதுகையில் ஜ்ஞாநமுத்ரையும் இடதுகையில் ஸ்ரீகோஸமும் இருந்ததிருக்கோலமாக உம்முடைய விக்ரஹத்தைப்பண்ணக்கடவீர்" என்று ஸ்வப்நம் காட்டியருள, விடிவோரைத் தேஸிகனும் நித்யகைங்கர்யங்களைச்செய்து அந்தச்சில்பனை அழைத்து ஸ்வப்நத்தையும் அருளிச்செய்து அவன் முன்னமே மழுகாமலே விக்ரஹத்தைப்பண்ணி லோஹத்தையும் உருக்கிவிட, ஸில்பனும் கட்டியை உடைத்துப்பார்க்க, அதிஸுந்தரமாய் யதோக்தலக்ஷணமாயிருக்கக்கண்டு ஆஸ்சர்யப்பட்டுப் பக்நனுயிருக்க, தேஸிகனும் "இதற்குப்பீடத்தைப்பண்ணிசேர்க்கக் கடவை" என்று அருளிச்செய்ய, ஸில்பனும் அப்படியேசெய்து அந்தப்பீடத்தில் சேர்க்கும்போது அதிஸௌந்தர்யத்தாலே கபோலத்தில் அதிகாம்ஸம் இருப்பதாக ப்ரமித்து ஆயுதத்தாலேதொட்டவாறே தேஸிகன்திவ்யகபோலத்தில் ரக்ததாரை உண்டாக, அத்

(க) "அஸ்மத்தேஸிகஸம்ப்ரதாயரஹிதைரத்யாபிநாலக்ஷித:"

தைக்கண்டு ஶில்பனும் ஶில்பஶாஸ்த்ரஸாரம் தெரியாமையாலே இப்படிப்ரமித்துக்கெட்டேன் என்று திருவடிகளிலே விழுந்து "ரக்ஷித்தருளவேணும்" என்று ஶரணாகதிபண்ண, தேஶிகனும் அவனுக்குத் திருவிலச்சினையும் ப்ரஸாதித்து ஆட்கொண்டு அந்தவிக்ரஹத்தையும் யதோக்தலக்ஷணமாயிருக்கையாலே "அது இருக்கக்கூடாது" என்று திருவுள்ளம்பற்றி அப்ரகாஶம்பண்ணிவைத்து "ஶில்பார்த்தஸாரம்" என்கிற க்ரந்தத்தையும் செய்தருளிப்பெரியபெருமாளைத் திருவடிதொழுதுநிற்க, பெருமாளும் "இனி நம் இருவர்களுக்கும் ஒருகுறையும் இல்லை" என்று அருளிச்செய்து தீர்த்தாதிகளையும் ப்ரஸாதித்தருள, தேஶிகனும் தீர்த்தாதிகளைப் பெற்றுத் தம் திருமாளிகையில் எழுந்தருளி முதலிகளுடனே ஸித்தாந்தப்ரவசநம்பண்ணிக்கொண்டெழுந்தருளியிருக்க, (க) "ஶதாயு:புருஷ:" என்கிறபடியே நூறு திருநக்ஷத்ரம் பூர்ணமானபின்பு ஸௌம்யவர்ஷத்தில் கார்த்திகைமாஸத்தில் பூர்ணிமைத்திநத்தில் பெரியபெருமாளைத் திருவடிதொழுது நிற்க, பெரியபெருமாளும் "ராமாநுஜஸித்தாந்தத்தை விளைப்பித்து நம்முடைய குறைதீர்த்துப் பரிபூர்ணரான நீரும் சடக்கென நம் பெரியவீடுசேரக்கடவீர்" என்று திருமாலை முதலானவைகளையும் ப்ரஸாதிக்க, வேதாந்த தேஶிகனும் "அம்மாவடியேன் வேண்டுவதீதே" என்று விண்ணப்பஞ்செய்து, வரிசைகளையும் பெற்றுப் பெருங்கூட்டத்து முதலிகளோடே ஸந்நிதிப்ரதக்ஷிணமாக ஆழ்வார்கள் ஆசார்யர்களையும் திருவடி தொழுது வரும்போது, உடையவரும் வரதாசார்யருக்கு "நம் தூப்புனயினருக்கு அருளிப்பாடு" என்றும், "இனி இஸ்ஸித்தாந்தத்திற்கு ப்ரவர்த்தகராகும்படி முன்பே நியமித்ததும் அன்றியில் இப்போதும் விஶேஷமாக அறுதி இடுகிறோம்" என்றும், அர்ச்சகமுகேந அருளிச்செய்து திருமாலை முதலானவைகளையும் ப்ரஸாதித்தருள, அந்தநயினாராசார்யரும் அவைகளைப் பெற்றுத் தேஶிகன் ஸந்நிதியில் நிற்க, தேஶிகனும் குளிரக்கடாக்ஷித்தருளி முதலிகளோடே ஸ்ரீரங்கநாச்சியாரைத் திருவடிதொழுது நிற்க, ஸ்ரீரங்கநாச்சியாரும் "பெரியபெருமாள் நியமநத்தை அறிந்த பெருங்கூட்டத்து முதலிகள் தேஶிகன் திருநாட்டுக்கு எழுந்தருளின பின்பு என்செய்யக்கடவோம்?" என்று உள்நடுக்கத்துடனே இருக்கக்கண்டு, உடையவர் திவ்யதம்பதிகளான நம் இருவர்களுடைய ஸ்வரூபத்தை ப்ரகாஶிப்பித்தாற்போலே திவ்யதம்பதிகளான

(க) "ஶதாயுர்வை புருஷ:."

நம் இருவருடைய வைபவத்தையும் ப்ரகாஶிப்பித்த ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான வேதாந்ததேஶிகனை நம்பெருமாள்நியமநப்படிக்கு ஸ்ரீகோஶமும் ஜ்ஞாநமுத்ரையுமாய் ஒரு திவ்யமங்களவிக்ரஹம் பண்ணிவைத்துப் பெரியவீட்டுக்கு எழுந்தருளின பின்பு நம் ஸந்நிதிக்கு முன்பே ப்ரதிஷ்டை பண்ணிவைத்து ஆராதியுங்கோள்" என்று அர்ச்சகமுகேந அருளிச்செய்து திருமாலை முதலானவைகளையும் ப்ரஸாதித்தருள, தேஶிகனும் அவைகளைப் பெற்றுக்ருதார்த்தராய்த்திருமாளிகையில்எழுந்தருளித்திருமேனியில் நோவு சாத்திக்கொண்டிருக்க, நயினாராசார்யர் முதலான முதலிகளும் ஆளவந்தார் சரமதஶையில் நியமநத்தையும் எம்பெருமானார் சரமதஶையில் நியமநத்தையும் விஶேஷார்த்தங்களோடே பல்கால் கேட்டிருக்கையாலே துணிவதும், ப்ராக்ருதஸம்பந்தத்தாலே கரைவதும் உண்டாய்க் கண்ணும்கண்ணீருமாய் நிற்க, தேஶிகனும் "நயினார் இருக்க உங்களுக்குக் குறைவு உண்டோ?" என்று முதலிகளுக்கும் அருளிச்செய்து, நயினாராசார்யரையும்அழைத்து, "ஸ்ரீரங்கநாச்சியாரும் அழகியமணவாளனும் அவர்களை ப்ரஸாதித்தருளுகிற உடையவரும் இருக்க உமக்கு என்ன குறை?" என்று அருளிச்செய்ய, நயினாராசார்யரும் ஶாஸ்த்ரார்த்தத்தையும் தேஶிகன் நியமநத்தையும் நெஞ்சிற்கொண்டு தெளிந்து முதலிகளையும் தெளிவித்தருள, தேஶிகனும் தஶாவதாரப் பெருமாள்களையும் திருமங்கையாழ்வாரையும் திருவடிதொழுது நிற்க, திருமங்கையாழ்வாரும் "நம்முடைய ப்ரபந்தத்திற்கு முக்யதாத்பர்யமான ஶரணாகதியை எல்லாரும் அறிந்து உஜ்ஜீவிக்கும்படி மஹோபகாரம்பண்ணினீரே" என்று போர உகந்தருளித்தீர்த்தாதிகளை ப்ரஸாதிக்க, தஶாவதாரப் பெருமாள்களும் "நம்முடைய அவதாரங்கள் எல்லாவற்றிலும் உம்முடைய அவதாரத்தில் உண்டான ப்ரயோஜநத்தில் ஏகதேஶமும் இல்லை" என்று போரஉகந்தருளி வரிசைகளையும் ப்ரஸாதிக்க, தேஶிகனும் அவைகளைப் பெற்று க்ருதார்த்தராய் முதலிகளுடனே திருமாளிகையில் எழுந்தருளி பேரருளாளருக்கும் ஸ்ரீஹயக்ரீவருக்கும் திருக்கார்த்திகைத்திநத்தில் விஶேஷ ஆராதநம் செய்தருளி உடையவர் திருவடி நிலைகளிலும் அப்பிள்ளார் திருவடிநிலைகளிலும் தீர்த்தங்கொண்டு ஸ்வீகரித்தருளி முதலிகளுக்கும் ப்ரஸாதித்தருள, முதலிகளும் தேஶிகன் ஸ்ரீபாத தீர்த்தத்தையும் திருவடி நிலைகளையும் ப்ரார்த்திக்க, தேஶிகனும் திருவுள்ளமுகந்து அப்படியே ப்ரஸாதித்தருளி பகவத்ப்ரஸா

தாதிகளைத் தாமும் அமுதுசெய்து முதலிகளுக்கும் "அந்தப் போனகம் செய்தசேடமான இன்னடிசில், கறியமுது, திருப்பண்ணியாரம், முதலானவைகளையும் ஸ்வீகரிக்கும்படி ப்ரஸாதித்தருளி திருக்கல்யாணத்திற்குப் புறப்படுமாபோலே மிகவும் உள்மகிழ்ந்து எழுந்தருளியிருக்க, நயினாராசார்யரும்(க) "ரவிஸத்ருஶதநு: ஸ்ரீவேங்கடாசார்யபாத: கரகலிதபவித்ர ஸ்ஸோத்தரீயஸ்வபாவ:- ஸரஸிஜமணிமாலா மூர்த்வபுண்ட்ராந்ததாரோ மமமநஸிவிபாதே ஸந்ததம் ஸந்நிதத்தாம் ॥ நமோவேதாந்த குரவே நமோ பூயோ நமோநம: - ஸஞ்ஜீவநாயஸர்வேஷாம் யேநந்யாஸ:ப்ரகாஶித:" என்று தண்டன் ஸமர்ப்பித்து நிற்க, ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் (உ) "நம:பதமிதம் பூயாத் தஸ்மைவேங்கடஸூரயே - யத்வா கம்ருதஸேகேந ஸஞ்ஜீவிதமிதம் ஜகத் ॥ பகவந்தமிவாநந்த கல்யாணகுணஸாகரம் - வேதாந்ததேஶிகம் நௌமி வேங்கடேஶகுரூத்தமம்:" என்று தண்டன் ஸமர்ப்பிக்க, திருமலை ஸ்ரீநிவாஸாசார்யரும்(ந) "வேதாந்ததேஶிகபதாம்புஜ மேவநித்யம் மத்தைவதம்கிமபிகாங்க்ஷிதஸர்வதாயி- யத்வைபவஸ்யலவலேஶவிசிந்தநேந புத்தி: ப்ரஸீததிவிபூதியுகாவலம்பா ॥ ஸ்ரீமத்வேங்கடநாதார்யாத் வேதாந்தாசார்யவர்யத: - நமேகதிர்பவேதந்யா ஜந்மஜந்மாந்தரேஷ்வபி" என்று தண்டன் ஸமர்ப்பித்து நிற்க, தேஶிகனும் அவர்களைப் போரஉகந்தருளித் தம் திருவாராதநமான பேரருளாளரை

(க) [illegible]

(உ) [illegible]

(ந) [illegible]

யும் அப்பிள்ளார் ப்ரஸாதித்த திருவாழி திருச்சங்குகளையும் நயினாராசார்யருக்கும், ஸ்ரீஹயக்ரீவரையும் ஒரு திருவாழி திருச்சங்குகளையும் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஜீயருக்கும் ப்ரஸாதித்தருளி, திருமலை ஸ்ரீநிவாஸாசார்யருக்கு "'ப்ரபத்தியே உபாயம்" என்று அருளிச்செய்த பேரருளாளர் தம் திருவுள்ளத்தை நம்மைக் கொண்டு நிறைவேற்றினபடியாலே அந்தப் பேரருளாளருக்கு ஸ்ரீகார்யதுரந்தரரான நீர் குறைவறக் கைங்கர்யங்களை யெல்லாம் நடத்தக்கடவீர்' என்று நியமித்தருளி, உடையவர் திருவடிநிலைகளைத் தம் திருமுடியில் ஒத்திக்கொண்டு, "உடையவர் திருவாராதநமான ஸ்ரீஹயக்ரீவர் பிள்ளான்வழியாய் உம்முடைய குலத்தில் வந்து ஸ்வப்நம்காட்டி நம்மிடத்தில் எழுந்தருளினபடியாலே இந்த உடையவர் திருவடிநிலைகளை ஆராதியும்" என்று ப்ரஸாதித்தருளி, முதலிகள் எல்லாருக்கும் விசேஷார்த்தங்களை அருளிச்செய்து, அப்பிள்ளார் திருவடிநிலைகளைத் தம் திருமுடியிலும் கண்ணிலும் ஒத்திக்கொண்டு, முதலிகளுக்கும் உபநிஷதநுஸந்தாநமும் திருவாய்மொழி அநுஸந்தாநமும் பண்ணும்படி நியமித்தருள, அவர்களும் அப்படியே அநுஸந்திக்க, வேதாந்ததேசிகனும் ஸ்ரீரங்கநாச்சியார் ஸந்நிதிக்குநேரே வடக்குத் திருவீதியில் தம் திருமாளிகையில் தென்புறத்தில் நயினாராசார்யர் மடியில் திருமுடியும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர்மடியில் திருவடிகளுமாய் அப்பிள்ளார் திருவடிகளை த்யானித்துக்கொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினார். (க)"அப்தே ஸௌம்யே ஸவாரே கதவதி தரணௌ வ்ருஸ்சிகம்க்ருத்திகர்க்ஷே ராகாயாம்வேங்கடேஸோ யதிந்ருபதிமதம்ஸர்வதஸ்ஸ்தாபயித்வா - வேதாந்தாசார்யவர்யோவிரசிதவிவிதாநேகதிவ்யப்ரபந்த: ஸ்ரீஶைலாதீஶகண்டாக்ருதிவபு* ரஜஹத்தேசிகேந்த்ரோதயாளு:॥ ஸ்ரீதியோக்யேஸகேஸாக்லெ உச பூச்வேங்கடேஶ்வர: - லப்தப்ராயேஸகேப்ராயாத் ஸௌம்யேநபரமம்பதம்" என்றுஅநுஸந்திக்கப்பட்டதிறே.

(க) "अब्दे सौम्ये सवारे गतवति तरणौ वृश्चिकं कृत्तिकर्क्षे राकायां वेङ्कटेशो यतिनृपतिमतं सर्वतस्स्थापयित्वा । वेदान्ताचार्यवर्यो विरचितविविधानेकदिव्यप्रबन्धः श्रीशैलाधीशवर्णाकृतिवपुरजहद्देशिकेन्द्रो दयालुः ॥ [illegible] वेङ्कटेशः । लब्धप्राये शके प्रायात् सौम्ये [illegible]." * அபவத் என்றும் பாடம்.

பின்பு நயினாராசார்யரும் முதலிகளோடே போரஸோகார்த்தராய்த் தாமேமேதேறி (க)"கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணஶாலிநே-ஸ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்தகுரவே நம:" என்று அந்தச்சரமத் திருமேனியைத் தண்டன்ஸமர்ப்பித்து நீராட்டி ஸ்ரீசூர்ணபரிபாலநம் முதலான ப்ரஹ்மமேத கைங்கர்யங்களை யெல்லாம் செய்தருளி, த்வாதஶாஹாந்தத்தில் உடையவர் நியமநப்படிக்குப் பரக்கத் திருவத்யயநத்தையும் செய்தருளி, முதலிகளையும் தேற்றிக் கொண்டு, ஸ்ரீரங்கநாச்சியார் நியமநப்படிக்கு அந்தஸந்நிதிமுன்பே ஒரு தேஶிகதிவ்யமங்களவிக்ரஹத்தைத் திருப்ரதிஷ்டைசெய்து வைத்து, ஆராதித்துக்கொண்டு, நாச்சியாரும் பெருமாளும் ப்ரஸாதித்தருளின வரிசைகளையெல்லாம் பெற்று, உடையவர் நியமநப்படிக்குப்பெருங்கூட்டத்து முதலிகளோடே ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

திருமலை ஸ்ரீநிவாஸாசார்யரும் பெருமாள்கோயிலேற எழுந்தருளித் தேஶிகன் நியமநப்படிக்குப் பேரருளாளருக்கு ஸ்ரீகார்யதுரந்தரராய்க் கைங்கர்யங்களை நடத்திக்கொண்டிருந்தார்.

அண்ணன்(உ)"நிகமாந்த தேஶிகபதாம்புஜத்வயம் நிரவத்ய வைஷ்ணவஜநப்ரியம்நயம்-குலதைவதம்மமகுத்ருஷ்டிமஸ்தக க்ஷிதிப்ருத்விபேதிகுலிஶாயுதாயிதம்॥ஶ்ருதிஶீர்ஷதேஶிகஶிரோமணிநா ஜநகேநயேநஹிஸமீக்ஷிததீ: -வரதோகுருஶ்சயதிராஜமத ப்ரதிவாதிகோடிஶதகோடிரபூத்" என்கிற ஶ்லோகங்களாலே இவ்வர்த்தங்களை அருளிச்செய்தார்.

நயினாராசார்யர் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் வைபவங்கள்.

பின்பு நயினாராசார்யரும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் முதலானமுதலிகளோடே ஒருஸம்வத்ஸரம் கோயிலிலேயே ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டிருந்து, திக்விஜயம் செய்தருளத்

(க) "𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌸𑌿𑌂𑌹𑌾𑌯 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌶𑌾𑌲𑌿𑌨𑍇 । 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌾𑌯 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃." (உ) "𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌶𑌿𑌕𑌪𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌦𑍍𑌵𑌯𑌂 𑌨𑌿𑌰𑌵𑌦𑍍𑌯𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌜𑌨𑌪𑍍𑌰𑌿𑌯𑌂𑌨𑌯𑌮𑍍। 𑌕𑍁𑌲𑌦𑍈𑌵𑌤𑌂𑌮𑌮 𑌕𑍁𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌮𑌸𑍍𑌤𑌕 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌭𑍃𑌦𑍍𑌵𑌿𑌭𑍇𑌦𑌿 𑌕𑍁𑌲𑌿𑌶𑌾𑌯𑍁𑌧𑌾𑌯𑌿𑌤𑌂 ॥ 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑍀𑌰𑍍𑌷𑌦𑍇𑌶𑌿𑌕𑌶𑌿𑌰𑍋𑌮𑌣𑌿𑌨𑌾 𑌜𑌨𑌕𑍇𑌨𑌯𑍇𑌨 𑌹𑌿 𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌧𑍀𑌃। 𑌵𑌰𑌦𑍋𑌗𑍁𑌰𑍁𑌶𑍍𑌚𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌮𑌤 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌾𑌦𑌿𑌕𑍋𑌟𑌿𑌶𑌤𑌕𑍋𑌟𑌿𑌰𑌭𑍂𑌤𑍍."

திருவுள்ளம்பற்றி, ஸ்ரீரங்கநாச்சியார் பெரியபெருமாள் திருவடி தொழுது, விடைகொண்டு, திருப்பேர்முதலான திவ்யதேசங்களில் எம்பெருமான்களைத் திருவடிதொழுது அங்குள்ள மதாந்தரஸ்தர்களை ஜயித்துக்கொண்டு, ஸர்வஜ்ஞசிங்கப்பநாயகன் ஸமர்ப்பித்த திருப்பல்லக்கு முதலானஸகலபிருதுகளோடே (க)"ஸ்ரீமத்ராமாநுஜார்யப்ரகடிதபதவீதாவிமேதாவிவித்வத்ஸேநாநாஸீரவீரோவரதகுருராஹம்வாதிநோவாரயந்து- ஆலோகாலோகஶைலாதகிலநரபதித்வாரிபத்நாமிபத்ரம் மாயாஸித்தாந்தமாயாவிகடிதகடநாயந்த்ரமந்த்ரஸ்வதந்த்ர:" என்றுகட்டியம்கூறிதவளஶங்கம்முதலானவைகளை ஊதுவித்துக்கொண்டு கங்கைகொண்டசோழபுரம் முதலான ராஜஸ்தாநங்களிலே ஸந்மாநங்களையும் பெற்று, அங்குள்ள மதாந்தரஸ்தர்களையும் ஜயித்துக்கொண்டு "எம்பிரானெந்தை யென்னுடைச் சுற்றம்"என்கிறபாட்டின்படியே திருமங்கையாழ்வார் திருவுள்ளம் குடிபுகுந்த தஞ்சைமாமணிக்கோயிலேற எழுந்தருளி, அங்குள்ள எம்பெருமான்களையும் திருவடிதொழுது, அங்குள்ள மாயிகளையும் ஜயித்து, அந்த ராஜாவிடத்தில் ஸந்மாநங்களையும் பெற்று, எழுந்தருளியிருக்கிற காலத்தில், ஒருஸ்ரீவைஷ்ணவர் திருநாட்டுக்கெழுந்தருள, அவருக்கு த்வாதஶாஹக்ருத்யத்தைச்செய்து, நயினாராசார்யர் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் ஸந்நிதியில், அவர் ஸம்பந்திஒருவர் வந்து, தண்டன்ஸமர்ப்பித்து, "இப்போது திருக்கார்த்திகைக்கும் திருவத்யயநோத்ஸவத்திற்கும் மத்யகாலமாகையாலே ப்ராயஶ்சித்தரூபமான திருவத்யயநமில்லையே, என்செய்யக்கடவது?" என்று விண்ணப்பஞ்செய்ய, நயினாராசார்யரும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் ஆலோசித்து, "அப்படிச்செய்யவேண்டுவதில்லை; திருக்குருகைப்பிரான்பிள்ளான் நியமநப்படிக்கு நாலாயிரத்தனியன்களைமாத்ரம் ஸேவித்து, பின்பு தேஶிகப்ரபந்தங்களையும் ஸேவித்து, ப்ராயஶ்சித்தரூபமான திருவத்யயநத்தை முடிக்காலம்" என்று அருளிச்செய்து, தேஶிகன் அருளிச்செய்த க்ரந்தங்களையெல்லாம் ஒரு ஸந்தர்பவிஶேஷமடியாக ஒரு கோவையாக்கி (உ) "பரஶ்ஶதம்வாபி பரஸ்ஸஹஸ்ரம் ஸ்ரீவேங்கடாசார்யக்ருதா: ப்ரபந்தா: -

(க) "ஸ்ரீமத்ராமாநுஜார்யப்ரகடிதபதவீதாவிமேதாவிவித்வத்ஸேநாநாஸீரவீரோவரதகுருரஹம்வாதிநோவாரயந்து। ஆலோகாலோகஶைலாதகிலநரபதித்வாரிபத்நாமிபத்ரம் மாயாஸித்தாந்தமாயாவிகடிதகடநாயந்த்ரமந்த்ரஸ்வதந்த்ர:." (உ) "பரஶ்ஶதம்வாபி பரஸ்ஸஹஸ்ரம் ஸ்ரீவேங்கடாசார்யக்ருதா: ப்ரபந்தா:

(க)தத்ராலமேக:க ஞுடுக்திமுக்த்யோ: கார்த்ஸ்ந்யேநகஸ்தாந்கண யேத்ஸமஸ்தாந்" என்கிறபடியே, ப்ரக்ருதாநுகுணமாக அநேகக்ரந்தங்களிருக்கச்செய்தேயும் அவைகளில் நூற்றிருபத்தொரு க்ரந்தங்களையெடுத்து ப்ரவசநம்பண்ணவேணுமென்றும் இவைகள் அவஶ்ய வேத்யங்களென்றும் நியமித்தருளினார்கள். எங்ஙனேயென்னில்:—

(க) ஸ்தோத்ரங்கள் ௩௨.	(ச) ரஹஸ்யங்கள் ௩௨.
(உ) காவ்யாதிகள் அ. [உசு.	(ரு) ப்ரபந்தங்கள் உச.
(௩) அநுஷ்டாநாதிஶாஸ்த்ரங்கள்	(கூ) பகவத்விஷயம் க. ஆக. கஉக

அவைகளின் விவரங்களாவன:—

ஸ்தோத்ரங்கள்:—ஹயக்ரீவஸ்தோத்ரம், தேவநாயகபஞ்சாஶத், அச்யுதஶதகம், கோபாலவிம்ஶதி, தேஹளீஶஸ்துதி, (ரு) வரதராஜபஞ்சாஶத், யதோக்தகாரிஸ்தோத்ரம், காமாஸிகாஷ்டகம், அஷ்டபுஜாஷ்டகம், ஶரணாகதிதீபிகை, (க௦) பரமார்தஸ்துதி, தயாஶதகம், பகவத்யாநஸோபாநம், தஶாவதாரஸ்தோத்ரம், அபீதிஸ்தவம், (கரு) ந்யாஸதஶகம், ந்யாஸவிம்ஶதி, ந்யாஸதிலகம், பாதுகாஸஹஸ்ரம், ஸ்ரீஸ்துதி, (உ௦) பூஸ்துதி, நீளாஸ்துதி, கோதாஸ்துதி, ஸுதர்ஶநாஷ்டகம், ஷோடஶாயுதஸ்துதி, (உரு) கருடதண்டகம், கருடபஞ்சாஶத், த்ரமிடோபநிஷத்ஸாரம், த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி, யதிராஜஸப்ததி, (௩௦) தாடீபஞ்சகம், திவ்யதேஶமங்களாஶாஸநபஞ்சகம் ஆகமுப்பத்திரண்டு.

காவ்யாதிகள்:—யாதவாப்யுதயம், ஹம்ஸஸந்தேஶம், ஸுபாஷிதநீவி, வைராக்யபஞ்சகம், ரகுவீரகத்யம், (ரு) ஸங்கல்பஸூர்யோதயம், பூகோளநிர்ணயம், தத்வ்யாக்யாநம் ஆக எட்டு.

அநுஷ்டாநாதிஶாஸ்த்ரவிஷயங்கள்: — யஜ்ஞோபவீதப்ரதிஷ்டை, ஆராதநக்ரமம், ஹரிதிநதிலகம், தத்வ்யாக்யாநம், ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷை (ரு) ஸச்சரித்ரரக்ஷை, ரஹஸ்யரக்ஷை, கீதார்தஸங்க்ரஹரக்ஷை, நிக்ஷேபரக்ஷை, ந்யாஸவிம்ஶதிவ்யாக்யாநம், (க௦) ந்யாயஸித்தாஞ்ஜநம், ந்யாயபரிஶுத்தி, தத்வமுக்தாகலாபம், ஸர்வார்தஸித்தி, அதிகரணதர்பணம், (கரு) அதிகரணஸாராவலி, தாத்பர்யசந்த்ரிகை, தத்வடீகை, ஸேஶ்வரமீமாம்ஸை, மீமாம்ஸாபாதுகை, (உ௦) ஶததூஷணி, ச(வ)காரஸமர்தநம், ஈஶாவாஸ்யோபநிஷத்வ்யாக்யாநம், ஶில்பார்தஸாரம் ஆக இருபத்துநாலு.

(க) தத்ராலமேக: ஸகலஹுக்திமுக்த்யோ: கார்த்ஸ்ந்யேந கஸ்தாந் கணயேத் ஸமஸ்தாந்."

ரஹஸ்யங்கள்:—ஸம்ப்ரதாயபரிஶுத்தி, தத்வபதவி, ரஹஸ்ய பதவி, தத்வநவநீதம், ரஹஸ்யநவநீதம், (௫)தத்வமாத்ருகை, ரஹஸ்யமாத்ருகை, தத்வஸந்தேஶம், ரஹஸ்ய ஸந்தேஶம், ரஹஸ்யஸந்தேஶவிவரணம், (௧0) தத்வரத்நாவலீ, தத்வரத்நாவலீப்ரதிபாத்ய ஸங்க்ரஹம், ரஹஸ்யரத்நாவலீ, ரஹஸ்யரத்நாவலீஹ்ருதயம், தத்வத்ரயசுளகம், (௧௫) ஸாரஸங்க்ஷேபம், ஸாரதீபம், ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரம், ஸாரஸாரம், அபயப்ரதாநஸாரம், (௨0) தத்வஶிகாமணி, ரஹஸ்யஶிகாமணி, அஞ்ஜலிவைபவம், ப்ரதாநஶதகம், உபகாரஸங்க்ரஹம், (௨௫) ஸாரஸங்க்ரஹம், விரோதபரிஹாரம், முநிவாஹநபோகம், மதுரகவிஹ்ருதயம், பரமபதஸோபாநம், (௩0) பரமதபங்கம், ஹஸ்திகிரிமாஹாத்ம்யம் ஆக முப்பத்திரண்டு.

ப்ரபந்தங்கள்:— ஸம்ப்ரதாயபரிஶுத்தி முதலாய் ஸாரதீபமளவாகரஹஸ்யங்கள். ௧௭.க்கு அம்ருதாஞ்சனிபாட்டு. ௩௯. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் ரஹஸ்யம். ௧.க்கு அதிகாரஸங்க்ரஹம் பாட்டு. ௫௯. ஸாரஸாரம்முதலாய் மதுரகவிஹ்ருதயமளவாக ரஹஸ்யங்கள். ௧௧. க்கு அம்ருதாஸ்வாதிநிபாட்டு. ௩௭. ரஹஸ்யம். ௧. க்கு பரமபதஸோபாநம் பாட்டு. ௨௧ (௫) ரஹஸ்யம். ௧-க்கு பரமதபங்கம் பாட்டு.௫௪. ரஹஸ்யம். ௧. க்கு ஹஸ்திகிரிமாஹாத்ம்யம். பாட்டு.௨௯. இவை ரஹஸ்யப்ரபந்தங்கள். அடைக்கலப்பத்து. பா. ௧௧. அர்த்தபஞ்சகம். பா. ௧௧. ஸ்ரீவைஷ்ணவதிநசர்யை. பா. ௧0. (௧0) திருச்சின்னமாலை. பா. ௧௧. பன்னிருநாமம் பா. ௧௩. திருமந்த்ரச்சுருக்கு. பா. ௧0. த்வயச்சுருக்கு. பா. ௧௨. சரமஶ்லோகச்சுருக்கு. பா. ௧௧. (௧௫) கீதார்த்தஸங்க்ரஹம். பாட்டு. ௨௧. மும்மணிக்கோவை. பா. ௧0. பந்துப்பா. பா. ௧0. கழற்பா. பா. ௧0. அம்மானைப்பா. பா. ௧0. (௨0) ஊசற்பா. பா. ௧0. ஏசற்பா. பா. ௧0. நவரத்நமாலை. பா. ௧0. ஆஹாரநியமம். பா. ௨௧. ப்ரபந்தஸாரம். பா. ௧௮. இவைகேவலப்ரபந்தங்கள். ஆக ப்ரபந்தங்கள் இருபத்துநாலுக்குப்பாட்டு.* ௪௫௫. பகவத்விஷயம் நாலாயிரக்குருத்து என்கிற எழுபத்து நாலாயிரப்படி. ஆகக்ரந்தங்கள், நூற்றிருப்பத்தொன்று. இந்த க்ரந்தங்களில் பெரியாழ்வார்திருமொழி முதலாய் நூற்றந்தாதி அளவாக இருபத்துநாலு ப்ரபந்தங்களைப்

* சரமஶ்லோகச்சுருக்கம் பாட்டு ௧0 ஆனால் மொத்தப்பாட்டு ௪௫௪ ஆகும்.

போலே, அம்ருதரஞ்சனி முதலாக ப்ரபந்தஸாரமளவாக இருபத்துநாலு ப்ரபந்தக்களாக்கி, தேஶிகன் விஷயமாக நயினாராசார்யர் அருளிச்செய்த பிள்ளையந்தாதியையும் இயல் ஸேவைக்காக நியமித்து, தஞ்சைமாமணிக்கோயில் எம்பெருமானுன நீலமேகப்பெருமாள் ஸந்நிதியில் நாலாயிரத்தனியன்களையும், தேஶிகப்ரபந்தங்கள் இருபத்துநான்கையும், பிள்ளையந்தாதியையும் முன்னம் அநுஸந்தித்து, அவர் நியமநத்தாலே அந்த ஸ்ரீவைஷ்ணவருக்குத் திருவத்யயநத்தையும் நடப்பித்து, மற்றுமுள்ள திவ்யதேஶங்களிலும் இப்படி அநுஸந்திக்கும்படி நியமித்தருள, அங்குள்ளவர்களும் அப்படியே நடப்பிக்க, திருப்பல்லாண்டு தொடக்கமானவாறே அங்கங்குள்ளவர்களும் வந்து, "வரும் திருவத்யயநோத்ஸவத்திற்குப் பின்பன்றோ தேஶிகப்ரபந்தங்களை ஸேவிப்பது? இப்போது என்செய்யக்கடவது?" என்று கேட்க, நயினாராசார்யரும் எம்பெருமானார் நியமநப்படிக்கு நாலாயிரக்ரமத்தை அநுஸந்தித்துத் தேஶிகப்ரபந்தங்களையும் ஸேவிக்கும்படிக்கும், திருமாளிகைகளில் ப்ரபந்தாநுஸந்தாநம் பண்ணும்போது ஆழ்வார் எம்பெருமானாரோபாதி வேதாந்த தேஶிகனுக்கும் ஸம்பாவநாரூபமாக அடைக்காய் ஸமர்ப்பிக்கும்படிக்கும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரோடே நியமித்தருள, பெருங்கூட்டத்து முதலிகளும் அங்கங்குள்ளவர்களும் போரவுகந்து அப்படியே நடத்திப்போந்தார்கள்.

பின்பு ஆழ்வார்விஷயமான கண்ணிநுண் சிறுத்தாம்பு ப்ரபந்தத்தை முதலாயிரத்தின் முடிவில் ஸ்ரீமந்நாதமுநிகள் சேர்த்தாற்போலவும், எம்பெருமானார் விஷயமான நூற்றந்தாதி ப்ரபந்தத்தை இயற்பா ஆயிரத்தின் முடிவில் எம்பெருமானார் சேர்த்தாற்போலவும், நயினாராசார்யரும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஜீயரும் தேஶிகன் விஷயமான பிள்ளையந்தாதி ப்ரபந்தத்தைத் தேஶிகப்ரபந்தத்தின் முடிவில் சேர்த்து அநுஸந்தித்து, அந்த நீலமேகப்பெருமாள் ஸந்நிதியில் அந்த ஆழ்வார் எம்பெருமானார் தேஶிகர்கள் திவ்யமங்களவிக்ரஹங்களைத் திருப்ரதிஷ்டை செய்து வைத்தார்கள். அந்த எம்பெருமானார் திவ்ய மங்களவிக்ரஹத்திலும் அலங்காராஸநத்தில் ஒரு திருமேனியாயிருக்கும்படி ஒரு தேஶிகதிவ்யமங்களவிக்ரஹத்தையும் செய்துவைத்தார்கள்.

பின்பு நயினாராசார்யரும் முதலிகளுடனே திருக்கோட்டியூர் திருமாலிருஞ்சோலை முதலாக திவ்யதேஶயாத்ரை பண்ணும்

போது ஸ்ரீமதுரையில் பரதத்வநிர்ணயோத்ஸவத்தை அங்குள்ள குமதிகள் நிரோதித்திருக்க, அவர்களை வாதத்தால் ஜயித்து, அந்த உத்ஸவத்தை அவ்யாஹதமாய்நடக்கும்படிபண்ணுவித்துஅத்திவ்யதேஶத்தில் தேஶிகன்திருப்ரதிஷ்டைசெய்துவைத்து, கேரளதேஶத்தேற எழுந்தருளுவதாய்த் திருநகரிமுதலான திவ்யதேஶங்களிலும் எம்பெருமான் திருவடிதொழுது, ஸ்ரீவில்லிபுத்தூரிலும் திருநகரியிலும் தேஶிகன் திருப்ரதிஷ்டை செய்துவைத்து, கேரளதேஶத்திலும் எம்பெருமான்களைத் திருவடிதொழுது, அந்தத்தேஶாதிபதியாலே பூஜிக்கப்பட்டிருக்க, அங்குள்ள க்ஷுத்ரர்கள் சில குண்டுக்கல்லுகளைத் திருமடைப்பள்ளி பரிஜநங்களுக்குத் தலைச்சுமையாயிருக்கும்படி க்ஷுத்ரமந்த்ரத்தாலே பண்ணுவிக்க, நயினாராசார்யரும் அத்தையறிந்து, இரண்டு தேங்காய்களை மஹாமந்த்ரத்தைஜபித்து, அவர்களிடத்தில் போகும்படிவிட்டு, ஒருத்ருணத்தைத் தம்திருமுடியில் வைத்துக்கொள்ள, அந்தக்குண்டுக்கல்லுகள் விட்டவர்கள் தலைகளிலே இருக்க, தேங்காய்களும் அவர்களை ப்ரஹரிக்க, அவர்களும் நயினாராசார்யர் திருவடிகளிலே விழுந்து ஸேவித்துப்போக, நயினாராசார்யரும் திருநாராயணபுரமேற எழுந்தருளி, தம்மிடத்தில் விஶேஷகடாக்ஷம் செய்தருளின உடையவர் திருவடிதொழுது, யதுகிரி நாச்சியாரையும் திருநாராயணனையும் செல்வப்பிள்ளையையும் திருவடிதொழுது, வரிசைகளையும்பெற்று, அந்தத்திவ்யதேஶங்களில் தேஶிகப்ரதிஷ்டையும்செய்துவைத்துக்கொண்டு, கோயிலேற எழுந்தருளி, ஸ்ரீபாஷ்யாதிப்ரவசநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்க, அப்போது ஒரு பங்குனியுத்திரத் திருநாளில் பெருமாளும் நாச்சிமாரும் திருமஞ்சநம்கொண்டருளி ஒருசேர்த்தியிலேயெழுந்தருளியிருக்க, நயினாராசார்யரும் முதலிகளுடனே மங்களாஶாஸநம் செய்தருளி "என்னது யான் செய்கின்றேன்" என்கிற பாட்டையும், "நின்னருளாங்கதியன்றி மற்றொன்றில்லேன்' என்கிற பாட்டையும், ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரசீயரும் தாமுமநுஸந்தித்து நிற்க, பெருமாளும் நாச்சிமாரும் "இந்தப்பங்குனி உத்திரத்திருநாளிலேஉடையவர்அருளிச்செய்தகத்யத்ரயத்தினுடைய அர்த்தத்தை வெளியிடுகிற பாட்டுக்களை அநுஸந்தித்த உங்களுக்கு என்னவேண்டுவது?" என்று அர்ச்சகமுகேந கேட்டருள, அவர்களும், "இந்தத்திருநாளிலே தேவரீர் உகந்தருளின பாட்டுக்களை உள்கொண்டிருக்கிற தேஶிகப்ரபந்தங்களைத்திருச்செவிசாத்தியருளவேணும்" என்று ப்ரார்த்திக்க, பெரு

மாளும் நாச்சிமாரும் அப்படியே திருவுள்ளம்பற்றி அந்தத்தேஶி கப்ரபந்தங்களை அநுஸந்திக்கும்படி அரையருக்கு அருளப்பாடு இட்டருள, அரையரும் "தம்பரமென்றிறங்கி" என்று தொடங்கி "என்னது யான்செய்கின்றே னென்னுதார்க்கும்" என்கிறபாட் டையும், "நின்னருளாங்கதியன்றி மற்றொன்றில்லேன்" என்கிற பாட்டையும், ஆழ்வார் "எத்திறம்" என்று மோஹித்தாற்போலே மோஹித்துப் பத்துவாரம் அநுஸந்தித்துக் கொண்டிருக்க, பெரு மாளும் நாச்சிமாருடனே திருவுள்ளம் உகந்தருளி, நம்வேதாந்த தேஶிகனுக்கு அருளிப்பாடிட்டருள, நயினாராசார்யரும்முதலிகளு டனே நம்தேஶிகனை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோக, அரையரும் மோஹந்தெளிந்து ப்ரபந்தத்தைச் சாத்தினவாறே, பெருமாளும் நாச்சிமாரும் ""உம்பர்தொழுந்திருமாலுகந் தேற்கு முபாயமொன்றால், நம்பிறவித் துயர்மாற்றிய ஞானப்பெருந்தக வோர், சம்பிரதாயம்" என்றதனால், நம்மிருவர்களுடைய ப்ராதாந் யத்தையும், ப்ரபத்தி ப்ராதாந்யத்தையும், ஆகிய இவையிரண் டையும் அறிந்தவர்களுக்கே ப்ரதிபந்தக நிவ்ருத்திபூர்வகமாகப் பரமபுருஷார்த்தம் கைபுகுருமென்றும், " என்னது யான்செய் கின்றேன்" என்கிற பாட்டாலே, பரத்வாதிகளை விட்டு ஸர்வ ஸுலபனுப்வந்து காலதத்வமுள்ளத்தனையும் எல்லாரும் காணும் படியாக இருந்துகொண்டு, தாம் சொன்ன உபாயத்தில் எல்லாரும் ப்ரவர்த்திக்கும்படி பண்ணி, அவர்களை அடிமைகொண்டு, புரு ஷார்த்தத்தைக் கொடுக்கிற திவ்யதம்பதிகளான நம்மிருவர்களு டைய மஹோபகாரத்தைக் காட்டியும், "நின்னருளாங்கதியன்றி மற்றொன்றில்லேன்" என்கிறபாட்டாலே, கத்யத்ரயத்தில் நிஷ்க்ருஷ் டமான அங்கபஞ்சக ஸம்பந்நாத்ம ரக்ஷாபரஸமர்ப்பண க்ரமத்தைக் காட்டியும், 'இப்படி ஸர்வவேதாந்தஸாரமான திருமந்த்ரார்த்தத் தைப் பொதித்துக் கொண்டிருக்கிற இப்ப்ரபந்தங்களை அதிகரித்த வனுக்கு, நம்மிருவர்கருணையாலே நித்யமான ப்ரஹ்மாநந்தமுண் டாகுமென்று முடிவிலே "சேமமதாந்திருமாறன் கருணையாலே" என்கிறதால் சொல்லுகையாலும், இப்ப்ரபந்தங்களைக்கேட்ட நாங்க ளிருவரும் இனியென்றும் குறைவற்றிருப்போம்' என்றும்அர்ச்சக முகேந அருளிச்செய்து, திருமாலை முதலான வரிசைகளையும் ப்ரஸாதிக்க, அரையரும் "மாமலர்மன்னிய மங்கை" என்று தொடங்கி "தொண்டருகக்குந்துணையடிவாழி" என்று மங்களா ஶாஸநமாகப் பிள்ளையந்தாதியை அநுஸந்திக்க, அத்தைப் பெரு

மாளும் நாச்சிமாரும் கேட்டுகந்து அரையருக்கும் திருமாலை முதலானவைகளையும் ப்ரஸாதிக்க, அப்போது ஓர் ஆசுகவி தேஸிகன்விஷயமாக ஒருகாதாஸ்ருதகத்தைப் பண்ணித் திருவோலக்கத்திற் பாடவேணு மென்று ப்ரார்த்திக்க, அத்தைக்கேட்டுப் பெருமாளும் நாச்சிமாருடனே "இராமாநுசஸித்தாந்தத்தை யென்றும் குறையற்றிருக்கும்படி பல க்ரந்தங்களாலே ஸ்தாபித்தருளின வேதாந்ததேஸிகனுடைய ப்ரபந்தங்களைக்கேட்ட எங்களுக்கு, இனி ஒன்றையும் கேட்கருசிபிறவாது" என்றும் "நம்முடைய ஸந்நிதியில் நம்வேதாந்ததேஸிகனுக்குப் பிற்பட்டவரை அர்ச்சையாக வைத்து வரிசைகளை நடத்தவேண்டுவதில்லை" என்றும், "இந்த நியமநத்தை அதிக்ரமித்தால் (க)"மயா சஸீ தயாசைவஸப்தோஸி" என்கிறபடியே, (உ) "ஏதத்த்ரைலோக்ய நிர்மாண த்ராண ஸம்ஹாரகாரணம் - ஆவயோரபராதூதம் ஸாஸநம் ஸாஸ்வதம்பரம்" என்றும் அர்ச்சகமுகே நஅருளிச்செய்து, நயினாராசார்யருக்கும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரசீயருக்கும் தீர்த்தம் திருமாலை முதலானவைகளை ப்ரஸாதித்தருள, அவர்களும் அவைகளைப் பெற்று க்ருதார்த்தர்களாய்த் திருவோலக்கத்தைப் பெருக்கி, தேஸிகனையும் ஸந்நிதியில் எழுந்தருளப் பண்ணுவித்து, பெருமாள் நாச்சிமார் நியமநப்படிக்கு அங்கங்குள்ளார்களும் தேஸிகப்ரபந்தங்களை அநுஸந்திக்கும்படிக்குக் கட்டளையிட்டு, ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளி யிருந்தார்கள்.

பின்பு ஒருபுரட்டாசித்திருவோணத்திருநாளில்தேஸிகனுக்குப் பெரியபெருமாளும் ஸ்ரீரங்கநாச்சியாரும் திருமாலைத் திருப்பரிவட்டம் முதலான வரிசைகளையும், பொற்றளிகைத் திருப்பண்ணியாரம் முதலானவைகளையும் ப்ரஸாதித்தருள, அவைகளைத் தேஸிகனுக்கு அமுதுசெய்யப்பண்ணுவித்துத் திருமாலைமுதலானவைகளையும் சாத்தி நாலாயிரப்ரபந்தங்களையும் தேஸிகப்ரபந்தங்களையும் முன் நியமநப்படிக்குச் சாத்திப் பிள்ளையந்தாதியையும் விண்ணப்பஞ்செய்து, தேஸிகன் அருளிச்செய்த பகவத்த்யாநஸோபாநாதிஸ்தோத்ரங்களை (ங) "ஸ்ரீமாந்வேங்கடநாதார்ய:" என்கிறதனி

(க) "ಮயா ஶப்தோ தயா சைவ ஶப்தோஸி." (உ) "ஏதத் த்ரைலோக்ய நிர்மாண த்ராணஸம்ஹாரகாரணம் । ஆவயோரபராதூதம் ஶாஸனம் ஶாஶ்வதம்பரம்." (ங) "ஸ்ரீமான் வேங்கடநாதார்ய:."

யனேடே அநுஸந்தித்து, ஸ்தோத்ரம் முடிவிலும்(க)“கவிதார்கிக ஸிம்ஹாய” என்கிற தனியனை அநுஸந்தித்துநிற்க; பெரியோர்களும் (உ)““ராமாநுஜதயாபாத்ரம்” என்கிறதனியனைப்ரபந்தத்தொடக்கத்திலும் சாத்திலும் அநுஸந்திக்கும்படி பெருமாள் நியமநமாகையால் இந்தத்தனியன்களையும் ஸம்ஸ்க்ருதஸ்தோத்ரங்களுக்கு ஆத்யந்தங்களிலே அநுஸந்திப்பது ஒத்திருக்கும்' என்று அருளிச்செய்ய, நயினாராசார்யரும் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரசீயரும் அத்தை உள்மகிழ்ந்து அங்கீகரித்து அப்படியே அநுஸந்திக்கும்படிக்கும் நியமித்தருள, அத்திரளுக்கு மங்களாஶாஸநமாய்“வாழியணிதூப்புல்” என்கிற பாட்டை ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரசீயரும் அருளிச்செய்ய,பின்பு“மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்” என்கிறபடியே அந்தப்புரட்டாசித் திருவோணத்திருநாளின் பெருமையை, நயினாராசார்யரும், “வாதாசன வரிவரெனவரும் மாபாஷ்யம் வகைபெறுநாள்” என்கிற பாட்டால்அருளிச்செய்ய, வெண்ணெய்க்கூத்தசீயரும் “செங்கமலத்தயனன்னவனென்றுபுகழ்ந்துமகிழ்ந்திடுநாள்” என்கிறபாட்டை அருளிச்செய்ய,அங்குள்ளவர்களும் அத்தைஉகந்து, “இம்மூன்று பாட்டுக்களைவாழித்திருநாமம் முடிவில் அநுஸந்தித்தால் அது ஒக்கும்” என்று விண்ணப்பஞ்செய்ய,அவர்களும் அப்படியே திருவுள்ளம்பற்றி, அங்கங்குள்ளவர்களுக்கும் அப்படி அநுஸந்திக்கும்படி நியமித்தருளினார்கள்.

பின்பு நயினாராசார்யரும் முதலிகளுடனே வடதேஶத்தில் எம்பெருமான்களைத்திருவடிதொழுது, அங்கங்குள்ள குத்ருஷ்டிகளைஜயிக்கத்திருவுள்ளமாய்த் திருவஹீந்திரபுரத்தில்எழுந்தருளி செங்கமல நாச்சியாரையும் தெய்வநாயகனையும் திருவடிதொழுது, திருமலையில் பெரியதிருவடிநயினாரும் ஸ்ரீஹயக்ரீவரும் தேஶிகனுக்கு விஶேஷகடாக்ஷம் செய்தருளின இடத்தில் ஸ்ரீஹயக்ரீவ ப்ரதிஷ்டையும் பண்ணிவைத்து, (ந)“அபாஸ்யதுதம:பும்ஸா மநபாயப்ரபாந்வித: - அஹீந்த்ரநகரேநித்ய முதிதோயமஹஸ்கர:” என்னும்படி ப்ரகாஶித்துக்கொண்டிருக்கிற தெய்வநாயகன் ஸந்நிதியில் தேஶிகப்ரதிஷ்டையும் செய்துவைத்து, திருக்கோவலூர் ஸ்ரீமதுராந்தகம் எம்பெருமான்களையும் திருவடிதொழுது, பெருமாள்கோயிலேற எழுந்தருள, திருமலை ஸ்ரீநிவாஸாசார்யரும்

(க)“கவிதார்கிகஸிம்ஹாய.” (உ) “ராமாநுஜதயாபாத்ரம்.”
(ந)“அபாஸ்யதுதம:பும்ஸா மநபாயப்ரபாந்வித:। அஹீந்த்ரநகரே நித்யமுதிதோயமஹஸ்கர:.”

அநந்தகொத்து பரிஜநங்களோடே திருமாலை முதலானவரிசைகளையும் எதிர்கொண்டுவந்து ப்ரஸாதிப்பிக்க, நயினாராசார்யரும் அவைகளைப் பெற்றுப் பெருந்தேவியாரையும் பேரருளாளனையும் திருவடிதொழுது நிற்க, பேரருளாளனும் "நாம் காட்டின ஸ்வப்நம்பலித்தது" என்று போரஉகந்தருளி வரிசைகளையும்ப்ரஸாதிக்க, நயினாராசார்யரும் அவைகளைப்பெற்று க்ருதார்த்தராய்த் திருமாளிகையிலெழுந்தளித் திருத்தண்கா விளக்கொளி யெம்பெருமான் ஸந்நிதிமுன்பே, தம் திருமாளிகைக்கருகே, ஒருஸந்நிதி உண்டாக்கித் தேசிகனைத் திருப்ரதிஷ்டை செய்துவைத்து ஆராதித்துக்கொண்டு வரும்போது, பேரருளாளன் திருவைகாசி கோத்ஸவத்தில் சில குமதிகள் வந்து "கச்சித்திருவீதியில் ப்ரபந்தாநுஸந்தாநத்தைச் செய்யக்கூடாது" என்று நிர்பந்திக்க, அப்போது அவர்களை சாஸ்த்ரங்களாலும் ந்யாயங்களாலும் நிரஸித்து, ப்ரபந்தங்களைக் கச்சிதிருவீதியில் அநுஸந்திக்கும்படி இரண்டாமுத்ஸவத்தன்று நிர்வஹிக்க, பின்பு பெரியதிருவடிநயினார் மேலே ஏறி யருளிவருகிற பேரருளாளரும் "நம்தூப்புல் நயினாருக்கு அருளிப்பாடு" என்று அர்ச்சகமுகேந திருவாய்மலர்ந்தருளி ஸ்ரீசடகோபனையும் ப்ரஸாதிக்க, நயினாராசார்யரும் "தம்பரமென்றிரங்கி" என்கிறபாட்டின்படியே "நம்தேசிகன் வைபவம் அன்றோ? இது" என்று தேசிகன் ஸந்நிதியில் பாதந்த்ரராய்நிற்க, பேரருளாளரும் அவைகளை அர்ச்சையாக எழுந்தருளியிருக்கிற நம் தேசிகனுக்கு ப்ரஸாதித்தருள, அத்தைப் பெரியோர்களும் மகிழ்ந்திட, நயினாராசார்யரும் பேரருளாளர் ஸந்நிதியில் தேசிகன் திருப்ரதிஷ்டை செய்தருளி, உத்ஸவாநந்தரம் பேரருளாளன் திருவடிதொழுது, விடைகொண்டு, ஸ்ரீபெரும்பூதூர் முதலான திவ்யதேசங்களிலும் தேசிகன் திருப்ரதிஷ்டை செய்துவைத்துத் திருமலையேற எழுந்தருளிக் கோவிந்தராஜனைத் திருவடிதொழுது திருச்சுகனூரில் அலர்மேல்மங்கைநாச்சியாரையும் திருவடிதொழுது திருமலையிலும் திருவேங்கடமுடையானைத் திருவடிதொழுது நிற்க, திருவேங்கடமுடையானும் போர உகந்தருளி வரிசைகளையும் ப்ரஸாதிக்க, அவைகளையும் பெற்று முதலிகளோடே அன்று இராத்திரியில் திருக்கண்வளர்ந்தருள,

ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரசீயர் வைபவம்.

திருவேங்கடமுடையானும் அப்போது திருமலைஜீயர் திருநாட்டுக்கெழுந்தருளினபடியாலே, தம் ஸந்நிதியில் ஸ்ரீகார்யம்

பார்த்துக்கொண்டு ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்கும்படி ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஜீயருக்கு ஸ்வப்நம் காட்டியருளி, அங்குள்ள அதிகாரிக்கும், "இந்த ஜீயரைக்கொண்டு ஸ்ரீகார்யம் முதலானவைகளை நடத்தும்படி நாம் நியமித்திருக்கிறோம், அந்த ஜீயர் நியமநப்படிக்கு நம்கைங்கர்யங்களையெல்லாம் நடத்திப்போருங்கள்" என்றும், "திறவுகோல்முத்ரை முதலானவைகளை அந்த ஜீயரிடத்தில் கொடுத்துவிடுங்கள்" என்றும் ஸ்வப்நம் காட்டியருள, விடிவோரை ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் அந்த ஸ்வப்நத்தை நயினாராசார்யர் ஸந்நிதியில் விண்ணப்பஞ்செய்ய, கோயிலதிகாரியும் கோயிலநந்தகொத்து பரிஜநங்களோடே திறவுகோல் முதலானவைகளை யெடுத்துக்கொண்டு வந்து, தன் ஸ்வப்நத்தையும் விண்ணப்பஞ்செய்து, அவைகளையும் ஸமர்ப்பிக்க, நயினாராசார்யரும் "ஸித்தாந்தப்ரவசநம்போலே கைங்கர்ய நிர்வாஹமும் பண்ணும்படி உம்மிடத்தில் இதொருகடாக்ஷவிஶேஷம்இருந்தது" என்றும், "இத்தையே நடத்திப்போரவேணும்" என்றும் அருளிச்செய்ய, ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் கோயிலேறெ எழுந்தருளித் திருவேங்கடமுடையானைத் திருவடிதொழுது நிற்க, திருவேங்கடமுடையானும் "நம் ஸ்ரீகார்யதுரந்தரராய்க் கைங்கர்யங்களையும் நடத்திக்கொள்ளக்கடவீர்" என்று அர்ச்சகமுகேந அருளிச்செய்து வரிசைகளையும் ப்ரஸாதிக்க, ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஜீயரும் அவைகளைப்பெற்று அப்படியே ஸ்ரீகார்ய துரந்தரராய்க்கைங்கர்யங்களை நடத்திக்கொண்டிருக்க,

அப்போது ஒரு புரட்டாசித் திருநாள்வர, நயினாராசார்யரும் அந்தத்திருநாளில் மங்களாஶாஸநம் செய்தருளித் திருவேங்கடமுடையானிடத்தில் விடைகொண்டு, வடதேஶத்தில் அஹோபிலம் முதலான திவ்யதேஶங்களில் எம்பெருமான்களைத் திருவடிதொழுது, ஸர்வஜ்ஞ சிங்கப்பநாயகன் எதிர்கொண்டு வந்து தம் திருவடிதொழுது நிற்க, அவனை உகந்தருளி, சில விஶேஷார்த்தங்களையும் ப்ரஸாதித்து, அங்குள்ள குத்ருஷ்டிகளையும் ஜயித்துத் தம் திருப்பல்லக்கைப் போகவொட்டாமல் பண்ணின ஶாகல்யமல்லன் ஏவிவிட்ட ப்ரஹ்மரக்ஷஸ்ஸைத்தானே தம் திருப்பல்லக்கைத் தாங்கிக்கொண்டு போகும்படி பண்ண, அவனும் பக்நனுயாஶ்ரயிக்க, பின்பு அந்தக் கோதாவரீதீரத்தில் தாஶராஜா என்கிற ப்ராஹ்மணனை ஸ்ரீவைஷ்ணவனுக்கித் தாஶரதி ராஜா என்கிற திருநாமத்தையும், ஆராதநமாகத் தேஶிகவிக்ரஹத்தையும் ப்ரஸாதித்

தருள, அவரும் "விஶேஷார்த்தங்களை ப்ரஸாதிக்கவேணும்" என்று ப்ரார்த்திக்க, அவைகளையும் ப்ரஸாதித்து, ஸம்ஸ்க்ருதரூபமாக ஸாரார்த்தஸங்க்ரஹம் முதலான க்ரந்தங்களையும் செய்தருளி, ப்ரஸாதித்துப் பின்பு வடதேஶத்திலுள்ள திவ்யதேஶங்களையெல்லாம் ஸேவித்து அங்கங்குள்ள குத்ருஷ்டிகளையும்ஜயித்து அங்கங்குள்ள ராஜாக்களாலே பஹுமதிபண்ணப்பட்டு மீண்டுபெருமாள் கோயிலேற எழுந்தருளி அக்நிஷ்டோமாதி க்ரதுக்களையும் செய்தருளி முதலிகளோடே ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் திருவேங்கடமுடையான் நியமநப்படிக்குத் திருமலையில் ஒருமடம்கட்டுவித்து அதில் தேஶிகனைத் திருப்ரதிஷ்டை செய்துவைத்து ஆராதித்துக்கொண்டுதிருமலை அடிவாரத்தில் கோவிந்தராஜன்ஸந்நிதியிலும் தேஶிகன் திருப்ரதிஷ்டைசெய்துவைத்துத் தம் திருவடிகளிலே ஆஶ்ரயித்தகடிகாஶதம்அம்மாள், கிடாம்பிநயினார், கொமாண்டூரச்சான் பிள்ளையப்பை, பேரருளாளய்யனப்பை, கந்தாடையாண்டான், வீரவல்லிப்பிள்ளை, இவர்களோடே ஸித்தாந்தப்ரவசநத்தையும் திருவேங்கடமுடையான் ஸ்ரீகார்யங்களையும் செய்துகொண்டிருந்து, பின்புதிருவேங்கடமுடையான் "நம்பெரியவீடு பெறக்கடவீர்" என்று நியமித்தருளினவாறே, ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் ஆசார்யபக்திபூர்ணராயும் வேதாந்தாதி ஸகலஶாஸ்த்ரஸமர்த்தராயுமிருந்துள்ள பேரருளாளய்யனப்பையை ஸந்ந்யஸிப்பித்து, அந்த ஸ்ரீகார்யநிர்வாஹத்தையும் ஸ்ரீஹயக்ரீவாராதநத்தோடு ஸித்தாந்த ப்ரவசநத்தையும் பண்ணிக்கொண்டிருக்கும்படி நியமித்தருளி, கடிகாஶதம் அம்மாள், கிடாம்பிநயினார் இவர்களையும் போரஉகந்தருளி சில விஶேஷார்த்தங்களை அருளிச்செய்து நிற்க, அப்படியே நம்மாசார்யரான த்விதீய ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரசீயரும் ஸ்ரீஹயக்ரீவரை ஆராதித்துக்கொண்டு திருவேங்கடமுடையான் ஸ்ரீகார்ய துரந்தராயிருக்க, திருவேங்கடமுடையான் நியமநத்தாலே ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும் தேஶிகன் ஸ்ரீபாததீர்த்தம் ஸ்வீகரித்து முதலிகளுக்கும் தம் திருவடிநிலை ஸ்ரீபாததீர்த்தங்களையும் ப்ரஸாதித்தருளி, உபநிஷத்து, திருவாய்மொழிஅநுஸந்தாநத்தோடே ப்ரஹ்மரந்த்ரம் திறந்து, திருநாட்டுக்கு எழுந்தருள, சரமகைங்கர்யங்களையெல்லாம் வீரவல்லிப்பிள்ளையைக் கொண்டு நடத்தி நயினாராசார்யர் நியமநப்படிக்குப் பரக்கத் திருவத்யயநத்தையும்

செய்துவைத்து பர்யாய வேதாந்ததேஶிகனைப் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஜீயர்போரஉகந்தருளி ப்ரஸாதித்தருளின ஸ்ரீ ஹயக்ரீவாராதநத்தையும் திருவேங்கடமுடையான் ஸ்ரீகார்யத்தையும் செய்துகொண்டிருக்கிற நம்மாசார்யரான த்விதீயப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் நியமநத்தாலே கடிகாஶதம் அம்மாள் கிடாம்பி நயினார் முதலான முதலிகளும் பெருமாள்கோயிலேற எழுந்தருளி நயினாராசார்யர் ஸந்நிதியில் இருந்தார்கள். ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் திருநக்ஷத்ரம், புரட்டாசித் திருவோணம்.

நயினாராசார்யர் ப்ரதிவாதிபயங்கரம்அண்ணன் வைபவங்கள்.

பின்பு நயினாராசார்யரும் அதிகரணசிந்தாமணி முதலானக்ரந்தங்களைச் செய்தருளி, தேஶிகன் அருளிச்செய்த க்ரந்தங்களைக் கொண்டு ஸித்தாந்தப்ரவசநம்பண்ணிக்கொண்டிருக்க, ஶாகல்யமல்லனாலே துர்போதனை செய்யப்பட்ட ஒரு மாயிஸந்ந்யாஸி நயினாசார்யருடைய வைபவத்தை ஸஹியாமல் பெருமாள்கோயிலிலே வந்து "என்னை ஜயித்து ஸித்தாந்தத்தைநிர்வஹித்துக்கொள்ளும்" என்று சொல்லியனுப்ப, நயினாராசார்யரும் ஶிஷ்யர்களை அவனை ஜயித்து வரும்படி நியமித்தருள, அவர்களும் அவனுடைய கர்வோக்தியாலே பீதர்களாயிருக்க, நயினாராசார்யரும் தமக்குத்திருவுள்ளமுகக்கும்படிபரிசர்யைபண்ணிக்கொண்டிருக்கிறஅண்ணனை அழைத்து, ஸ்ரீ ஹயக்ரீவமந்த்ரத்தை அபிமந்த்ரித்து, அந்தத்தீர்த்தத்தாலே ப்ரோக்ஷித்து, அந்தத் தீர்த்தத்தை ஸ்வீகரிக்கும்படி பண்ணுவித்து, தம்திருக்கைகளாலே அவர்முதுகைத்தட்டியருளி, தம்முடைய திருப்பவித்ரத்தை ப்ரஸாதித்து, அடைக்காய்கொடுத்தருளி "அவனைஜயித்துவாரும்" என்று திருப்பல்லக்கிலேற்றி, முதலிகளோடே அனுப்பியருள, அண்ணனும் அந்தஅநுக்ரஹவிஶேஷத்தாலே ப்ரத்யக்ஷிதாகிலவித்யராய்(க) "அநேநைவஹிவேகேந கமிஷ்யாமிஶ்வஶுராலயம்" என்னுமாபோலே, ஸர்வஶாஸ்த்ரஸமர்த்தர்களான குமதிகளெல்லாரையும் ஒருமுஹூர்த்தத்தில்ஜயிப்போம்' என்று திருஉடம்புதடித்துத் திருமண்டபத்திலெழுந்தருளியிருந்து அந்த மாயிஸந்ந்யாஸியை அழைப்பிக்க, அவனும்வந்து அண்ணனைப் பார்த்து கர்வோக்தியாலே அட்டஹாஸம் பண்ணிக்கொண்டு (உ) "காபூர்வ:" என்றுகேட்க, அண்ணனும் ஸிம்ஹநாதம் போலே, (ங) "காஞ்சீபூர்ண:" என்றருளிச்செய்ய, அவனும்

(க) "அநேநைவ ஹிவேகேந கமிஷ்யாமி ஶ்வஶுராலயம்." (உ) "காபூர்வ:." (ங) "காஞ்சீபூர்ண:."

வேதாந்தத்தில்வாதம்பண்ண, அண்ணனும்அநேகவிதமாக அவன் வாதத்தை ஜயித்துக்கண்டிக்க, அவனும்பயப்பட்டு ப்ரத்யுத்தரம் சொல்லாமல் அண்ணன் திருவடிகளிலே ஸேவித்து அவர் முகமாக நயினாராசார்யரைத் தண்டன் ஸமர்ப்பித்துப் போக, நயினாராசார்யரும், ''ப்ரதிவாதிபயங்கரம் அண்ணனே! வாரும்'' என்று அருளிச்செய்து, அவருக்கு ஸ்ரீபாஷ்யம் ஆறாயிரப்படி முதலாகத் தேசிகன் அருளிச்செயல்களை யெல்லாம் ப்ரஸாதித்தருளி, கோயிலிலே இருந்துகொண்டு ஸித்தாந்த ப்ரவசநம் பண்ணுமென்று நியமித்தருள, ப்ரதிவாதிபயங்கரம் அண்ணனும் கோயிலேற எழுந்தருளித் தேசிகனைத் திருவடிதொழுது, தன்முகமாக ஸ்ரீரங்கநாச்சியாரையும் அழகிய மணவாளனையும் திருவடிதொழுது தேசிகன் ஸந்நிதியிலிருந்துகொண்டு ராமாநுஜஸித்தாந்தத்தைத் தேசிகதிவ்யஸூக்திகளாலே நிர்வஹித்துக்கொண்டிருக்கிற காலத்தில்,

ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன்வைபவம்.

மணவாளமஹாமுநியும் சிலசிஷ்யர்களோடே ஒருமண்டபத்திலிருந்துகொண்டு, பகவத்விஷயம் காலக்ஷேபம் பண்ணிக்கொண்டிருக்க, அவர்களில் ஒருவருக்கும் ஸ்ரீபாஷ்யாநுபவமில்லாமையாலேப்ரதிவாதிபயங்கரம்அண்ணனிடத்தில் ஸ்ரீபாஷ்யாதிகளை அதிகரிக்கும்படி சிஷ்யர்களுக்கு நியமிக்க, அவர்களும்அப்படியே அதிகரித்து மணவாளமாமுநிகளிடத்தில் தாங்கள் நாலாயிரப்ரபந்தங்களைஅதிகரிக்கும்போது ப்ரதிவாதிபயங்கரம் அண்ணனையும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டிருக்க, சிலநாள் கழிந்தவாறே அவர்கள் ''நயினாரிடத்தில் கேட்ட அர்த்தம் ஆசார்யர்கள் திருவுள்ளத்திற்குப்பொருந்தியிருக்குமோ? இவ்விடத்தில் சொல்லுகிற அர்த்தம் பொருந்தியிருக்குமோ?'' என்றுகேட்க, அண்ணனும் ''இரண்டுமேயோஜனையாயிருக்கும்'' என்ன, அவர்களும் ''நயினாரிடத்தில் கேட்டது தான்றோன்றியன்றோ, நம்மணவாளமாமுநியிடத்தில் கேட்டதன்றோஸம்ப்ரதாயாகதமாயிருப்பது?'' என்ன, அண்ணனும், மாறனடி பணிந்து ''இந்தஉடையவர் திருவுள்ளப்படிக்கு வெள்ளைப்பரிமுகர் தேசிகராயுள்ளத்தெழுதிய அர்த்தங்களையெல்லாம் அருளிச்செய்யும் தேசிகனுடைய திவ்யஸூக்திகளில் சில விசேஷார்த்தங்கள் உண்டு. இவ்விடத்தில் சில விருத்தார்த்தங்கள் உண்டு. ஆகிலும் பேதஶ்ருத்யபேதஶ்ருதி ந்யாயத்தாலே தாத்பர்யம் கொள்ளவேணும்'' என்றுஅருளிச்செய்ய, எறும்பியப்பா முதலானாரும் மிகவும் கோபித்துக்கொண்டு தேசிகதிவ்யஸூக்திகளையும் தேசிகனையும் அதிக்ஷேபித்து, '' இப்படி ப்ரபந்தார்த்தங்களை அருளிச்செய்கிற

நம் மணவாளமாமுநியைப் பெரியபெருமாள் உகந்தருளினர்" என்று சொல்ல, அண்ணனும் அந்தத்தூஷணத்தை ஸஹியாமல் பரவஶராய் வ்யாஸபகவான்(க) "ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யமுத்ருத்யபுஜமுச்யதே - வேதஶாஸ்த்ராத் பரம்நாஸ்தி நதைவம்கேஶவாத்பரம்" என்று அறுதி இட்டாற்போலே, பெரியபெருமாள் முன்பே தண்டன் ஸமர்ப்பித்துக் கையெடுத்துக் கொண்டு "இப்போது நாம் சொல்லுகிற அர்த்தத்தில் விருத்தாம்ஶம் உண்டேயாகில் ஶிக்ஷிக்கக்கடவர், இல்லாவிடில் க்ருபைசெய்தருளக்கடவர்" என்று தேஶிகதிவ்யஸூக்திகளில் முக்யங்களான (உ) "அத்யந்தாகிஞ்சநோஹம்" "நின்னருளாங்கதியன்றிமற்றொன்றில்லேன்" என்கிற அர்த்தங்களையும் பகவத்குணங்கள் தமக்குத்தோன்றின க்ரமப்படி ஆழ்வார்கள் அருளிச்செய்தாற்போலே தமக்கு உபஸ்திதமான க்ரமமாகவே தாந்தேஶிக ப்ரபாவத்தை "ஸப்ததிரத்நமாலிகை" என்கிற க்ரந்தத்தாலும் ப்ரமாணமாக அறுதியிட, அத்தைப்பெரியபெருமாள் கேட்டு உகந்து அந்தத்தூஷகர்முன்பாகவே யதார்த்தத்தை அறுதியிட்ட அண்ணனுக்குத் திருமாலை முதலான வரிசைகளை ப்ரஸாதித்தருள, அண்ணனும் அவைகளைப் பெற்று "கூனுளநெஞ்சுகளால் குற்றமெண்ணி யிகழ்ந்திடினும், தேனுளபாதமலர் திருமாலுக்குத் தித்திக்குமே" என்கிற பாட்டை அநுவர்த்தமாகக்கண்டு உள்மகிழ்ந்து ஸ்ரீரங்கநாச்சியாரையும் திருவடி தொழுது தேஶிகன் ஸந்நிதியில் காலக்ஷேபம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார்.

தூஷகரதிக்ஷேபத்திற்காகப்ரத்யுத்தரங்களான, ஸப்ததிரத்நமாலிகாஶ்லோகங்கள்:-(ங) "ஸர்வோஜ்ஜீவநசிந்தயா கடகதாபாவேந தாநாத்க்ருதிஶ்ரேஷ்டாநாம் பஹுஶஸ்ததுத்தாரணதஸ்த்ரய்யந்த ஸம்ரக்ஷணாத் - ஸ்ரீமச்ச்ரீஶடகோப முக்யதிவிஷந் நாதார்யராமாநுஜா சார்யாநப்யநுயாதி ஹந்த நிகமாந்தாசார்ய சூடாமணி: ॥

(க) "ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யமுத்ருத்ய புஜமுச்யதே। வேதஶாஸ்த்ராத் பரம் நாஸ்தி ந தைவம் கேஶவாத்பரம்." (உ) "அத்யந்தாகிஞ்சநோஹம்." (ங) "ஸர்வோஜ்ஜீவநசிந்தயா கடகதாபாவேந தாநாத்க்ருதிஶ்ரேஷ்டாநாம் பஹுஶஸ்ததுத்தாரணதஸ்த்ரய்யந்தஸம்ரக்ஷணாத்। ஸ்ரீமச்ச்ரீஶடகோப முக்யதிவிஷந்நாதார்யராமாநுஜாசார்யாநப்யநுயாதி ஹந்த நிகமாந்தாசார்யசூடாமணி:॥

(க) ஸமாரூதவேதாளஸாரஸ்வதாநாம் ஶடத்விட்கவித்வஸ்ஸி முக்யோதிதாநாம்- அவிச்சிந்ந ஸத்ஸம்ப்ரதாயார்த்தவேதீ குருர்வேங்கடேஶோ குருக்திஷ்வதுல்ய: ॥ யுக்தா அநூக்ஷா அபிதர்மகாமாஸ் ஸம்மர்ஶிநோ யுக்தி ஸமந்விதாஸ்ச- ஸத்ப்ராஹ்மணமேவதர்ஶிர:ப்ரஸித்தா: ஸ்ரீவேங்கடாசார்யமுகாஹி நூநம்॥ விமதிரதவாதேஷாம் யுக்தாயதீஸ்வர ஜீவநேகவிகதகபஞ்சாஸ்யே தேவேஸதாஞ்சதுரந்தரே- பரிசிதிரஹோதந்மாஹாத்ம்ய ப்ரகாஶகதத்க்ருதிஷ்வபிலவமிதாஸ்வப்நேப்யேஷாம் யதோநஹிவித்யதே॥ நத்ரஷ்டாரோவைபவஸ்யாஸ்ய ஸாக்ஷாந்நைவாப்யாஸன் தத்க்ருதிஷ்வஸ்திவேஷாம் - யேஷாம் நித்யம் மாநஸம் ஸாப்யஸூயம் தேஷாம் பக்திஸ்ஸ்யாத் கதம் வேங்கடேஶே ॥ குமேளவாதிஹம்ஸாம்பு தாசார்யஶிஷ்யே ஜநாபக்திஹீநா யதீந்த்ராப்ரியாஸ்ஸ்யு: - யதீந்த்ராப்ரியாவிஷ்ணு காருண்யதூரா: குதோமுக்திவார்தா ஹிதாத்ருக்விதாநாம் ॥ அபிகாமமதலோபஶடதாதி ரஹிதா அபிநீதி த்ருதிஶாந்திமதிதாந்திஸஹிதா: - யதிராஜ மததுர்ய பதபத்மவிமுகா அவலோகநதி மாநநுதிபாஷ்யவிஷயா:.” இத்யாதிகள்.

---

(௧) [illegible]

பின்பு இவ்வ்ருத்தாந்தங்களை விஶதமாகக் கேட்டருளின நயினாராசார்யரும் ப்ரதிவாதிபயங்கரம்அண்ணனுக்கு இருந்துள்ள ஆசார்யபக்தியைப் போரஉகந்தருளி (க) "நமே஽மோக்ஷம்வஶோப வேத்" என்றும் "தம்மையுகப்பாரைத்தாமுகப்பரென்னுஞ்சொல்தம்மிடையேபொய்யானல் சாதிப்பாராரினியே" என்றும்சொல்லுகிற மெய்ம்மைப்பெருவார்த்தையை முதலிகளுக்கு அருளிச்செய்தார்.

பின்பு மணவாளமாமுனிக்கு எறும்பியப்பாவும்(உ) "கண்டாஶ்ஶ்லேஷவாகமஶ்ஶேஷகாரார்யோநோசேத்ததுக்தம் நிகமாந்தபாவம்-மந்த்ரார்தமப்யத்யவதந்தமேநம் கதம்ஸரங்கீபஹுமாநயேத்தம்" என்று பெருமூச்சுவிட்டுச்சொல்ல, மணவாளமாமுனியும் அத்தைக்கேட்டு, பின்னும் சிலஸ்வப்நாதிகளாலேயும் தேஶிகதிவ்ய ஸூக்திகளில் ப்ரதிபந்நராயிருந்தார். அவர் ஶிஷ்யர்களில் சிலர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன்ஸந்நிதியில் ஆஶ்ரயித்துஆறாயிரப்படியைஎழுபத்துநாலாயிரப்படியோடே அதிகரித்தார்கள். சிலர் பெருமாள் கோயிலேறப்போய் நயினாராசார்யர் திருவடிகளில் ஆஶ்ரயித்து விஶேஷ அர்த்தங்களை அதிகரித்தார்கள்.

ப்ரதிவாதிபயங்கரம் அண்ணனும் பெருமாள் கோயிலேற எழுந்தருளிநயினாராசார்யர்திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து இச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய, நயினாராசார்யரும்(ங) "யஸ்ய தேவேபராபக்திர் யதாதேவேததாகுரௌ - தஸ்யைதேகதிதாஹ்யர்தா:ப்ரகாஶந்தேமஹாத்மந:." (ச) "ஸ்வமதஸ்தாபநாபூர்வமதாந்தரநிராஸநே-ஸமர்தங்குருதேஶிஷ்யம்ஸதாசார்யஸமாஶ்ரய:" என்று சொல்லுகிற ப்ரமாணங்களை உம்மிடத்தில் அந்வர்த்தமாகக்கண்டோம் என்றுஅருளிச்செய்ய, அண்ணனும்(ரு) "அநப்யஸ்தஸமஸ்தார்த்தா அப்யஸ்தா இவபூரிஶ: - ஸ்வவஶா மமஸம்ஸித்தாஸ்ஸதாசார்யபரிக்ரஹாத்" என்று விண்ணப்பஞ்செய்தார்.

(க) [illegible] (உ) [illegible] (ங) [illegible] (ச) [illegible] (ரு) [illegible]

நயினாராசார்யர் திருவடிகளிலே ஆஸ்ரயித்தவர்கள்:—

(க) ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன்	(சு) கிடாம்பியப்பர்
(உ) கந்தாடையண்ணன்	(எ) நடாதூராழ்வான்
(ங) கொமாண்டூராச்சான்	(அ) அநந்தப்பன்
(ச) போளிபாக்கம்நயினர்	(கூ) கந்தாடையப்பன்
(ரு) திருமலையப்பர்	(க0) எம்பெருமானாரப்பன்

இவர்முதலானவர்கள்.

நயினாராசார்யர் அருளிச்செய்தக்ரந்தங்கள்:—தேஸிகன் விஷயமாக மங்களாஸாஸநம், ப்ரார்தநாஷ்டகம், ப்ரபத்தி, திநசர்யை, விக்ரஹத்யாநம், (செந்தமிழில்) பிள்ளையந்தாதி ஆகிய ஆறு.

மற்றக்ரந்தங்கள்:—ஸாரார்த்தஸங்க்ரஹம், அபயப்ரதாநஸாரம், விரோதிபஞ்ஜநி, ப்ரபந்தஸாரம், தத்வத்ரயசுளகம், (ரு) ரஹஸ்யத்ரயசுளகம், ஆஹாரநியமம், ந்யாஸதிலகவ்யாக்யாநம், ஸகுணப்ரஹ்மஸமர்த்தநம், ஸங்காகதகம், (க0) அபேதகண்டநம், அவித்யாகண்டநம், த்யாகஸப்தார்த்த நிர்ணயம், தத்வமுக்தாகலாபஸாந்தி, அதிகரணசிந்தாமணி, (கரு) மீமாம்ஸாபாதுகாபரித்ராணம், ஹரிணஸந்தேஸம், கோகிலஸந்தேஸம் ஆகிய இவைபதினெட்டு. மற்றுமுள்ள வடதேஸத்தில் ப்ரக்ருதாநுகுணமாக அருளிச்செய்த க்ரந்தங்கள் பலவுமுண்டு.

பின்பு நயினாராசார்யரும் முதலிகளை அழைத்துச் சில விஸேஷார்த்தங்களை அருளிச்செய்து "ஈஸ்வரேஸ்வரிகளான திவ்யதம்பதிகளுடையபாரம்யத்தையும், அவர்களுடைய உபாயத்வோபேயத்வங்களையும், அவர்களுடையப்ரபதநார்த்தமாகச் செய்யவேண்டுமதானப்ரபத்தியையும், ப்ரபத்தி பண்ணினார்க்குத் தாயவிபாகம் போலேவருகிற பரமபுருஷார்த்தத்தையும், ஸங்க்ரஹமாக ப்ரகாஸிப்பிக்கிற திருமந்த்ரத்தினுடைய அர்த்த விஸேஷங்களையெல்லாவற்றினையும், விஸதமாகத் திருவிருத்தம் முதலாகத் திருவாய்மொழி அளவாகவுள்ளப்ரபந்தங்களாலும் வேதார்த்தஸங்க்ரஹம் முதலாகநித்யக்ரமமளவாகவுள்ளக்ரந்தங்களாலும், பண்டிதர்களும் மிதஜ்ஞர்களும் தம்அதிகாராநுகுணமாக அறிந்து உஜ்ஜீவிக்கும்படி விஸதமாகப்ரகாஸிப்பித்தருளின ஆழ்வார் எம்பெருமானார் திருவுள்ளக் கருத்தை உள்ளபடி வெளியிட்டருளின வேதாந்த தேஸிகனுடைய ஸம்பந்தத்தையும், திவ்யஸூக்திகளையும் அடைந்து உஜ்ஜீவிக்குமவர்களே நித்யஸூரிதுல்யர்கள். இப்படிச் செய்யாதிருக்குமவர்களே நித்யஸம்ஸாரிகள் ஆவர்களென்கிற பெரிய

பெருமாள் திருவுள்ளத்தை ப்ரதிவாதிபயங்கரம்அண்ணன் வெளியிட்டருளினர்" என்று அருளிச்செய்து,கிடாம்பிநயினர், ப்ரதிவாதிபயங்கரமண்ணன், எம்பெருமானரப்பன் இவர்களை ஸித்தாந்தப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்கும்படி விசேஷமாக நியமித்தருளி பேரருளாளனைத் திருவடிதொழுதுநிற்க, பேரருளாளனும்"நம் பெரியவீடு சேரக்கடவீர்" என்று தீர்த்தாதிகளை ப்ரஸாதித்தருளி அனுப்புவிக்க,நயினராசார்யரும் தேசிகன் திருவடிநிலையில் ஸ்ரீபாததீர்த்தம் ஸ்வீகரித்து, தம்முடைய திருவடிநிலைகளையும் ஸ்ரீபாததீர்த்தத்தையும் முதலிகளுக்கு ப்ரஸாதித்தருளி, ஜயவர்ஷம் பங்குனிமாஸம் க்ருஷ்ணஸப்தமியில் வேதாந்ததேசிகன் திருவடிகளை த்யாநித்துக்கொண்டு, தம் திருவாராதநமான பேரருளாளரை எம்பெருமானரப்பனுக்கு ப்ரஸாதித்தருளி உபநிஷதநுஸந்தாநமும் திருவாய்மொழி அநுஸந்தாமும் பண்ணும்படியருளிச்செய்ய, முதலிகளும்அப்படியே அநுஸந்திக்க,ப்ரஹ்மரந்த்ரம் திறந்து திருநாட்டுக்கு எழுந்தருளினர். இத்தை (க)"அஷ்டநகேதிக ஸ்ரீகேஶவேகவரததேசிக:- ஸிதபாதேஶகேப்ராயாஜ்ஜயேநாரமம்பதம்" என்று சிலர் அநுஸந்தித்தார்கள்.

பின்பு திருமலைஸ்ரீநிவாஸாசார்யர் குமாரராயும் அப்போது பேரருளாளன் ஸ்தாநஸமயாதிகாரியுமான திருமலையப்பர் முதலான முதலிகளும் எம்பெருமானரப்பனைக்கொண்டு நயினராசார்யருக்கு ப்ரஹ்மமேதாதி சரமகைங்கர்யங்களையெல்லாம் நடத்தி நயினராசார்யர் ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர சீயர் நியமித்தருளின க்ரமத்தைக்கொண்டு பரக்கத் திருவத்யயநத்தையும் செய்தருளினர்கள்.

கிடாம்பிநயினர் மணவாளமாமுநிகள் வைபவங்கள்.

பின்பு நயினராசார்யர் நியமநப்படிக்கு முதலிகளும் ஸம்ப்ரதாயப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்கிற நாளையிலே, மணவாளமாமுநியும் வேதாந்ததேசிகனிடத்தில் க்ரமமாக ப்ரதிபத்திதலையெடுத்து,பெருமாள்கோயிலேற எழுந்தருளி புருஷோத்தமதேசிகரென்கிற கிடாம்பிநயினர் திருவடிகளிலே ஆஸ்ரயித்து,ஸ்ரீபாஷ்யம் ஆறுயிரப்படி முதலான விசேஷார்த்தங்களைத் தேசிக திவ்யஸூக்திகளைக்கொண்டு அதிகரித்துத் தெளிந்து, தம் சரமதசையிலும்

(க)"ஹஸ்தஶைலேதிக ஸ்ரீ கேஶவேகவரததேஶிக: ஸிதபாதே ஶகே ப்ராயாஜ்ஜயேநாப்ரமம்பதம்."

பெரியபெருமாள் ஸ்ரீரங்கநாச்சியார் நியமனப்படிக்கு ஸ்ரீமத்வே
தாந்ததேஶிகனுக்குப் பிற்பட்ட தமக்கு அர்ச்சாதிகள் வேண்டுவ
தில்லையென்று தம்மையாஶ்ரயித்த முதலிகளுக்கும் நியமித்தருளி
வேதாந்ததேஶிகன் ஸம்ப்ரதாயமே ஸத்ஸம்ப்ரதாயமென்றுகாட்டி
யருளினர்.

கடிகாஶதம் அம்மாள் ஆதிவண்ஶடகோபஸ்வாமி வைபவங்கள்.

பின்பு கிடாம்பி கேஶவாசார்யர் ஸந்நிதியில் பகவத்ஸம்பந்
தத்தைப் பெற்றவரான ஶடகோபர், கடிகாஶதம் அம்மாள் ஸந்
நிதியில் ஶாஸ்த்ராப்யாஸம் பண்ணித் திருமந்த்ரார்த்தத்தையும்
ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயங்களையும் அதிகரித்து, அதிஸமர்த்தராய்
ஆசார்யபக்திதலையெடுத்திருக்க, அவருக்கு ஸமஸ்த விஶேஷார்த்
தங்களையும்கடிகாஶதம்அம்மாள்ப்ரஸாதித்தருள,

ஸ்ரீமத் ஆதிவண் ஶடகோபஸ்வாமி வைபவம்.

அவரும் வடதேஶத்தில் திக்விஜயம் பண்ண, அஹோபிலம்
அழகியசிங்கரும் அவருக்குஒருதிருவாராதநத்தையும்ப்ரஸாதித்து
ஸந்ந்யஸிப்பித்துக் கொள்ளும்படியும் ஸ்வப்நம் காட்டியருள,
அப்படியே ஸந்ந்யஸித்தருளின வண்ஶடகோபஜீயரும் அழகிய
சிங்கரை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு கடிகாஶதம்அம்மாள்
ஸந்நிதியில் தண்டன் ஸமர்ப்பித்து அச்செய்தியை விண்ணப்பஞ்
செய்ய, அம்மாளுமுகந்தருளித்திவ்யதேஶங்களில் ஜீர்ணோத்தா
ரணங்களையும் ஸித்தாந்தப்ரவசநத்தையும் பண்ணிக்கொண்டிருக்
கும்படி நியமித்தருள, வண்ஶடகோபஜீயரும்அப்படியே ஆழ்வார்
திருநகரிமுதலான திவ்யதேஶங்களில் ஜீர்ணோத்தாரணங்களையும்
ஸம்ப்ரதாய ப்ரவர்த்தநத்தையும் செய்துகொண்டு எழுந்தருளி
யிருந்தார்.

பெருமாள்பிராட்டியார் தேஶிகஸம்ப்ரதாயத்தை அநுக்ரஹித்தல்.

ஸ்ரீமத்வேதாந்ததேஶிக ஸம்ப்ரதாயத்தில் ஆஶ்ரயித்திருக்
கிற ஜீயர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள் திவ்யதேஶங்கள் தோறும்
நிறைந்து குடிகொண்டு பகவத்பாகவதாசார்ய கைங்கர்யங்களை
யும் ராமாநுஜஸித்தாந்த ப்ரவசநஶீலராய் தேஶிகதிவ்யஸூக்தி
ப்ரவசநத்தையும் செய்துகொண்டிருக்க, திவ்யதேஶங்கடோறும்

எழுந்தருளியிருக்கிற திவ்யதம்பதிகளான பெருமாள் பிராட்டியாரும் உள்மகிழ்ந்து "தம்முடைய ஸித்தாந்தமான வேதாந்த தேஶிக ஸம்ப்ரதாயமே எங்கும் தழைக்கவேணும்" என்று அநுக்ரஹித்தருள, அப்படியே வேதாந்ததேஶிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் திவ்யதம்பதிகள் திருவுள்ளமுகக்கும்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்வர்த்தங்களையெல்லாம் நம்மாசார்யரான த்விதீயப்ரஹ்ம தந்த்ரஸ்வதந்த்ரஜீயர் செய்தருளின பன்னீராயிரப்படி குருபரம் பராப்ரபாவத்திலும் திருமலை ஸ்ரீநிவாஸாசார்யர்செய்தருளின ப்ரபந்தநிர்வாஹத்திலும் பரக்கக்கண்டுகொள்வது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

நாந்யம்மந்யே குருஶ்ரேஷ்டம் ஸ்ரீமத்வேதாந்த தேஶிகாத்
தத்ஸம்ப்ரதாயிதந்யேப்யோ நாந்யாந் தந்யாம்ஶ்சஸஜ்ஜநாந்।
தார்தீயிகப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரேண யதீந்துநா
குருபங்க்திப்ரபாவோயம் ஸங்க்ரஹ்ணப்ரதர்ஶித: ॥

[illegible]
[illegible]
ஸந்தஶ்ஶாஸ்த்தாந்தஸித்தாந்தாஸ் ஸந்துஷ்டாஸ்ஸந்துஸந்ததம்।
அஸந்தஶ்சபலாயந்து நிந்தந்தஶ்ஶாதஸந்ததிம்॥

ஆதிமறை யோதிமகி ழுயக்ரீவர் தம்மருளா
லன்புடனே தூப்புனக ரவதரித் திங்குவந்து
வாதியரை வென்றுவந்து வண்புவிமே லெதிராசர்
வாழ்வுறுநற் றர்சனத்தை வண்மையுட னேவளர்த்து-
நீதிநெறி தவராம னிறுத்தியிடும் வேங்கடவா
நேசமுட னாழ்வார்க ளிலைகளெல் லாமுணர்ந்து
சாதுசனம் வாழவென்று சாற்றியநல் ப்ரபந்தசாரந்
தனையுரைத்து வாழுமனந் தந்தருளா யென்றனுக்கே.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அஸ்மத்தேஶிகபங்க்தி வைபவமிமம் யேவாபடந்த்யந்வஹம்
ஶ்ருண்வந்தோ விபவைகதேஶமபிவா ஸத்ய: புநீதாஸ்ஸ்வயம்।
தேஶாந்வாந்புவிமாநவாநபிபுநந்த் யந்யேசதத்ஸம்ஶ்ரயா:
ப்ராயஶ்சித்தமிதம்பவேத்புவிந்ருணாம் நாநாம்ஹஸாம்பாப்மநாம் ॥

[illegible]
[illegible]

பர்யாயபாஷ்யகாராய பணதார்த்திம் விதுந்வதே
ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ராய த்விதீயப்ரஹ்மணேநம:

ஸ்ரீமத்த்ருதீய ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி

அருளிச்செய்த

குருபரம்பராப்ரபாவம்.

ஸம்பூர்ணம்.

“வாழி யணிதூப்புல் வருநிகமாந் தாசிரியன்
வாழியவன் பாதார விந்தமலர்—வாழியவன்
கோதிலாத் தாண்மலரைக் கொண்டாடிக் கொண்
டீதிலா நல்லோர் திரள்.” [டிருக்கும்

ஸ்ரீமதே
ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர பரகாலயதீந்த்ர
மஹாதேஶிகாயநம:.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௨௫	௧௯	விதிவாய்க்கென்று	விதிவாய்க்கின்று
௨௬	௧௩	பெண்ணே	பெண்ணை
௨௮	௨௬	கடாஷித்தருள	கடாக்ஷித்தருள
௪௩	௧௪	திவருடி	திருவடி
௬௨	௧௩	தேஹவஸாநத்தில்	தேஹாவஸாநத்தில்
௭௬	௨௪	வைபம்	வைபவம்
௯0	௨௮	எழுபத்திநாலு	எழுபத்துநாலு
௯௧	௩௨	ஸிம்ஹாநாதிபதி	ஸிம்ஹாஸநாதிபதி
௯௨	௨௫	வல்லுயர்	வல்லுயிர்
௯௩	௮	திருவுள்ளபற்றி	திருவுள்ளம்பற்றி
௯௩	௧௬	தொழுதேற்றும்படி	தொழுதேத்தும்படி
௧0௭	௩௨	அநுக்ஹி	அநுக்ரஹி
௧௪௨	௭	எழுந்தருயிருக்கிற	எழுந்தருளியிருக்கிற
௧௪௫	௨௯	லஹ்மணாசார்யரும்	லக்ஷ்மணாசார்யரும்
௧௬௯	௨௭	முடிக்காலம்	முடிக்கலாம்

பிரகடனபத்திரம்.

ஸ்ரீபகவத்கீதை [கீதாச்லோகங்களுக்குப் பதவுரை, ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்த பாஷ்யம், ஷைபாஷ்யத்திற்கு ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த தாத்பர்ய சந்த்ரிகை, கீதார்த்தஸங்க்ரஹரக்ஷை, ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த கீதார்த்தஸங்க்ரஹச்லோகங்கள் ஆகிய இவைகளுக்குச் சரியான தமிழ் மொழிபெயர்ப்பும், ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த கீதார்த்தஸங்க்ரஹப் பாட்டுக்களுக்குப் பொழிப்புரையு முள்ளது] இது திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம் நரஸிம்மாசாரியர் ஸ்வாமியால் மொழிபெயர்க்கப்பெற்றது. முதல் [ஆறு அத்தியாயம்] ஷட்கம் உயர்ந்தகடிதமும் பைண்டும் உடையது. விலை. ரூ 5—0—0

ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனால் கொண்டாடப்பட்ட ஸ்ரீப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி அருளிச்செய்த திவ்யஸூரிஸ்தோத்ரச்லோகத்தைத் தலைப்பாக உடைய, ஸ்ரீமத் த்விதீய ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி அருளிச்செய்த பன்னீராயிரப்படிஸங்க்ரஹமான ஸ்ரீமத் த்ருதீயப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி அருளிச்செய்த மூவாயிரப்படி குருபரம்பராப்ரபாவம். விலை. ரூ.1—8—0

பின்பழகிய பெருமாள் சீயர் அருளிச்செய்த ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் (திருத்தமான புதிபதிப்பு) உயர்ந்தகடிதத்தில் குருபரம்பரா விவரணமென்கிற அருமையான க்ரந்தத்துடன் தமிழ்ப்பண்டிதர். ஸ்ரீமான். சேட்லூர். கிருஷ்ணமாசாரியராலும், தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான். வை. மு. கோபாலக்ருஷ்ணமாசாரியராலும் அச்சிடப்பட்டது. விலை. ரூ. 2—0—0

திவ்யஸூரி ஸ்தோத்ரம், வேதாந்ததேசிகவைபவப்ரகாசிகாஸ்தோத்ரம், ஸப்ததிரத்நமாலிகா ஸ்தோத்ரம், யதிராஜவைபவம் இவை அடங்கிய க்ரந்த எழுத்தில் அச்சிட்ட புஸ்தகமும், தேசிகப்ரபந்தமூலமும் சீக்கிரம் வெளியாகும்.

ஸ்ரீமத்ராமாயணம் கிரந்தஎழுத்தில் கோவிந்தராஜீய, மஹேசுவரதீர்த்தீய, ராமாநுஜீய, திலகவ்யாக்யாந ஸஹிதம் ஆறுகாண்டங்கள், விலை. ரூ. 16-0-0 ஷை ஸுந்தரகாண்டமும் உத்தரகாண்டமும் நான்கு வியாக்யானங்களுடன் தனித்தனி. விலை ரூ.2-8-0

இவைகள் திருவல்லிக்கேணி சிங்கராசாரியர் வீதி. 16.ந கிருஹம்- தமிழ்ப்பண்டிதர். கெ-அநந்தாசார்யரிடத்தில்கிடைக்கும்.